# சிவாநந்தன்

இதழ்
4









AIM AT EXCELLENCE
R.K.M SHIVANANDA VIDYALAYA



**மட் / சிவாநந்த வித்தியாலயம்**
**தேசிய பாடசாலை**
**கல்லடி உப்போடை**
**மட்டக்களப்பு**

Mr.K.MANORAJ
Principal
BT/ Shivananda Vidyalaya
(National School)
Kallady-Uppodai
Batticaloa.

# சிவாநந்தன்

## இதழ் 04

மட்/சிவாநந்த வித்தியாலயம்
தேசிய பாடசாலை
கல்லடி உப்போடை,
மட்டக்களப்பு.

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வன்மொழி வாழியவே!

ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானமறிந்த தனைத்தும் அளந்திடும்
வளர் மொழி வாழியவே!



# ஈசன் உவக்கும் இன்மலர்

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளலடியிணைக்கு வாய்த்த மல ரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்தமலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது

காப்பவிழ்ந்த தாமரையோ. கழுநீர்மலர்த் தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த்தொடையுமல்ல
கூப்பிய கைக்காந்தளடி கோமகனார் வேண்டுவது

பாட்டளி சேர் பொற்கொன்றையோ பாரில்லாக் கற்பகமோ
வாட்டமுறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டளி சேர் கொன்றையல்ல பாரில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

– சுவாமி விபுலாநந்தர் –

# பாடசாலைக் கீதம்

ஆனந்தமான சிவாநந்தசாலை
அன்புடன் வாழ்த்தி வணங்குதுமே

தானமறங்கலை ஞானமுயர்க
சாதனவாழ்வு தலைநிமிர்க


மானமுயர்ந்து நம் மாணவர்கள் தாம்
வானமுயர்ந்து புகழ் பெறுக

இராமகிருஷ்ண மணிமொழி வழியே
சகல மதம் புகழ் ஒன்றிணையே

பராவி வளரும் நம் பல்கலை நிலையே
பாரினில் ஓங்கிட வாழியவே

வாழ்க! வாழ்க! பாரினில் ஓங்கிட வாழியவே!

- பண்டிதர் வீ. சி. கந்தையா -



# SCHOOL PRAYER

*Where the mind's without fear*
*And the head is held high*
*Where knowledge is free,*
*Where the world has not been broken up into fragments*
*By narrow domestic walls,*
*Where words come out from the depth of truth,*
*where tireless striving stretches its arms*
*Towards perfection,*
*Where the clear stream of reason has not lost its way*
*Into the dreary desert sand of dead habit,*
*Where the mind is led forward by thee*
*Into ever widening thought and action*
*Into that heaven of freedom*
*My father let my country awake.*

**- Raveenranath Tagore -**
(Gitanjali)

# பாடசாலைப் பிரார்த்தனையின் தமிழாக்கம்

எங்கு மனம் அச்சமற்றிருக்கின்றதோ
எங்கு தலை நிமிர்ந்தேயுள்ளதோ
எங்கு அறிவுக்குத் தடையில்லையோ
எங்கு குறுகிய சுவர்களால் உலகம்
துண்டாடப் படவில்லையோ
எங்கு சத்தியத்தின் ஆழத்திலிருந்து
சொற்கள் ஊற்றெடுக்கின்றனவோ
எங்கு சலியாத முயற்சி செம்மையை நோக்கித்
தன்கைகளை நீட்டுகின்றதோ
எங்கு பகுத்தறிவு என்னும் தெளிந்த நீரோடை
உயிரற்ற பாரம்பரியம் என்ற பாடலை மணலுள்
வழிதவறிப் போகவில்லையோ
எஞ்ஞான்றும் விரிந்து செல்லும்
சிந்தனையையும் செயலையும் நோக்கி
எங்கு மனம் உன்னால் வழிநடத்தப்படுகின்றதோ
அந்த விடுதலைச் சுவர்க்கத்தினுள்
என் ஆண்டவனே!
என் நாடு விழிப்படைவதாக!

- இரவீந்திரநாத்தாகூர் -

# Motto - மகுட வாக்கியம்

*"AIM AT EXCELLENCE"*

**"உன்னத நோக்கிய உயர் குறிக்கோள்"**

# Vission - வித்தியாலய நோக்கு

சிறந்த அறிவும், விரிந்த மனப்பாங்கும் வியத்தகு ஆற்றலும் பெற்று, உலக மாற்றத்திற்கு ஏற்ப உயர்குறிக்கோளும், சமநிலை ஆளுமையும், சேவையில் அர்ப்பணிப்பும் கொண்ட உன்னத பிரஜைகளை நற் சமூகம் போற்றும் வகையில் உருவாக்குதல்.

# Mission Statement - வித்தியாலய பணிக்கூற்று

விரைவாக மாறிவரும் உலகின் சவால்களுக்கு தற்துணிவுடன், தனித்தும் ஒருமித்தும் முகங்கொடுத்து சமய சமூக கலாசாரப் பண்பாடுகளை மதித்தும் பேணியும், உடல், உள விருத்தி பெற்று **"மாணவனில் புதைந்துள்ள பரிபூரணத்தை வெளிக்கொணர்தல்"** எனும் சுவாமி விவேகானந்தரின் கூற்றுக்கு அமைவாக சமூகத்திற்கு பொருத்தமுடையவனாக ஆக்கும் வகையில் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்க கோட்பாடுகளுக்கும், தேசிய கல்வி இலக்குகளுக்கும் அமைவாக இலங்கை கல்வியமைச்சினதும் கல்வித் திணைக்களகங்களினதும் வழிகாட்டல்களுக்கும் உதவியும் பெற்று ஒழுங்கமைக்கப்பட்ட பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடுகளினூடாக ஆசிரியர் குழாத்தின் நவீன உத்திகளின் துணையுடன் பாடசாலையில் கிடைக்கும் வளங்களின் உச்ச பயன்பாட்டினூடாக கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லல்.

# மலர்க்குழு

| | | |
|---|---|---|
| காப்பாளர் | - | திரு. K. மனோராஜ் (அதிபர்) |
| ஆலோசகர் | : | திரு. S. தயாபரன் (பிரதி அதிபர்) |
| இதழாசிரியர் | : | திருமதி. V. ரவீந்திரன் |
| உதவி இதழாசிரியர் | : | திருமதி S. மகேந்திரன் |
| உறுப்பினர்கள் | : | திருமதி. H. நவரெட்ணம் |
| | | திருமதி. C. A. ஜெபரெட்ணம் |
| | | செல்வி. L. M. பாத்லெட் |
| | | திரு. S. மணிவண்ணன் |
| | | திரு. M. அகிலேஸ்வரன் |
| | | திரு. S. கதாரதன் |
| | | திருமதி. P. ஜெயக்குமார் |
| | | திருமதி. N. சுபாகரன் |
| | | திரு. N. செந்தூரன் |
| | | திரு. A. F. ஆனந்தராஜா |
| | | திரு. S. சாந்தகுமார் |
| | | திரு. T. நாகநாதன் |
| | | செல்வன். N. நவநீதன் (2014 கணிதம்) |
| | | செல்வன். N. கிஷோத் (2014 வர்த்தகம்) |
| | | செல்வன். V. இனோஜன் (2013 உயிரியல்) |
| | | செல்வன். R. ஜெயச்சந்திரன் (2013 கலை) |
| | | செல்வன். P. புருசோத்மன் (2013 உயிரியல்) |
| கணனி வடிவம் | : | திருமதி. P. வரதகுமார் |

**கல்லடி இராமகிருஷ்ண மிஷன் தலைவர் வணக்கத்துக்குரிய சுவாமி கபாலீசானந்தா மகராஜ் அவர்களினால் வழங்கப்படும்**

# ஆசிச்செய்தி



பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண குருதேவரின் திருவருளால் தாங்கள் அனைவரும் நலமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க எல்லாம் வல்ல பகவான் துணைபுரிவாராக.

ஈழமணித்திருநாட்டின், பாடும் மீன்களின் நகரம் என்று அழைக்கப்படும் மட்டக்களப்பு மாநகரத்தில், பாரம்பரிய பண்பாட்டு மரபுகள் கொண்ட முதிர்ந்த தமிழ்ப் பிரதேசமான கல்லடி இராமகிருஷ்ணபுரத்தில் அமைந்துள்ள, மட்/ சிவாநந்த வித்தியாலய தேசியப் பாடசாலை தனது வருடாந்த வெளியீடான **"சிவாநந்தன்"** மலர் வெளியீட்டை நீண்ட காலத்தின் பின்னர் இவ்வருடம் சிறப்பான முறையில் வெளிக்கொணரவிருப்பது பாராட்டுதலுக்குரியதாகும்.

எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை. - சுவாமி விவேகானந்தர் -

சுவாமிஜியின் மேற்படி கருத்திற்கமைய பல துறையிலும் முன்னோக்கி நகரும் சிவாநந்த தேசிய பாடசாலையின் வளர்ச்சி முன்னேற்றகரமானதாகும்.

கல்வியை கண்ணெனப் போற்றி வளர்த்தவர்கள் நம் மூதாதையர். அந்தப் பாரம்பரியத்தின் வழி நின்று, கல்வியொளி மங்கிவிடாது, மாணவர்கட்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும், மட்/சிவாநந்த வித்தியாலய தேசியப் பாடசாலை இவ்வருடத்தில் விளையாட்டுத்துறையிலும், கல்வித்துறையிலும் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றிருப்பது பாராட்டத்தக்கது.

இராமகிருஷ்ண மிஸனின் சமூகப்பணி, கல்விப்பணி ஆகியவற்றின் மையக்கேந்திரமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை அரசு பொறுப்பேற்கும் வரை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஸனின் நேரடி நிர்வாகத்தின் கீழிருந்து இறுதியில் கையளிக்கப்பட்ட பின்பும் தொடர்ந்தும் காலங்காலமாக ஆன்மீக, கலாசார தொடர்புகளைக் கட்டிக்காத்து வரும் இவ்வித்தியாலயத்தின் **"சிவாநந்தன்"** மலர், சிறப்பாக வெளியீடு செய்வதற்கு ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டுள்ள, இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் முதலான அனைவரையும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஸன் நன்றியுடன் நினைவு கூருகின்றது.

அனைத்து நிகழ்வுகளும் இனிதே நிறைவேறிச் சிறப்படைய வாழ்த்துவதுடன் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய தெய்வத்திருமூவரின் பேரருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

இறைபணியில்,
**சுவாமி கபாலீசானந்தா**
**Swami incharge**
**Ramakrishna Mission,**
**Ramakrishnapuram,**
**Batticaloa.**

# ஆசிச்செய்தி



பார்க்குமிடமெங்கனும் நீக்கமற நிறைகின்ற பரமானந்தப் பொருளாகிய இறைவனின் திருவடியை சிரமேல் தாங்கி எனது நல்லாசிதனை வழங்கு கின்றேன். எக்காரியத்தை நாம் தொடங்கும் போதும் அவற்றுக்கு இறைவனின் நல்லாசி வேண்டும். அந்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

தமிழ் மக்களுக்கே உரித்தான கலைகளையும், பண்பாட்டினையும் பேணிப் பாதுகாப்பதிலும், அதனை மேம்படுத்துவதிலும் கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகள் ஆற்றிவரும் பணிகள் அளப்பரியது. அந்தவகையில் எல்லோருமாக ஒன்றிணைந்து ஊக்குவித்து ஆக்கபூர்வமாக ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து இவ்வருடம் வெளியிடும் சஞ்சிகை **"சிவாநந்தன்"** என்ற நூலுக்கு ஆசி வழங்கி வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று இளம் தலைமுறையினிடையே இலைமறை காயாக மறைந்து கிடக்கும் விடயங்களையெல்லாம் வெளிக்கொணரும் முகமாக பாடசாலை மாணவர்களிடையே இவ்வகையான நூல்கள் வெளியிடுதல் மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். நாகரீகமான ஒரு சமூகத்தின் பண்பாடு, கலைப்பாரம்பரியம், விழுமியங்கள் காணப்படுகின்றன. அவை இன்றைய அவசரமான உலகில் மிகவும் முக்கியமானதொன்றாகும். அந்த வகையில் பழையன கழிதலும், புதியன புகுதலுமாக கலை, கலாச்சார, பண்பாடு என்பவற்றை மையமாகக்கொண்டு இந்நூல் வெளியாவதையிட்டு மிகவும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**"பேணிய மாணவர் தம் பெருமை**
**தனை மறைவோம், வாணிபுகழ்**
**சேர்த்து வாழ்நாள் முழுவதுமே**
**பேணிய நலங்களைப் பெருமையுடன்**
**காத்திடுவோம்"**

ஆலமரமாய், அடர்ந்த கிளை நிழல் பரப்பி,
வானத்து வண்ண நிலா ஒளி சிமிட்டி நிற்பது போல,
எமது நூலானது பிரகாசித்து சிறப்புற விளங்க எனது நல்லாசிகள்.

வாழ்க ஆசிரியர்கள்,
வாழ்க மாணவர்கள்
வாழ்க பாடசாலை என்றும் வாழியவே.

**சோ. கிரிதரசர்மா**
சரஸ்வதி ஆலய பிரதமகுரு,
மட்/சிவாநந்த வித்தியாலயம்.

**கௌரவ மீள் குடியேற்றப் பிரதி அமைச்சர்**

**விநாயகமூர்த்தி முரளிதரன் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



மீன்பாடும் தேனாட்டின் ஓடக்கரையினிலே கவிபாடி கலை வளர்த்திடும் கல்லடியினியிலே காலத்தால் முதுமையடையாது, கல்வியால் இளமைபெற்று தமக்கென ஒரு தனிச்சிறப்பு பெற்று விளங்கும் அதி உன்னத பாடசாலை சிவாநந்த வித்தியாலயம். இப்பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களால் வெளியிடப்படவிருக்கும் **"சிவாநந்தன்"** எனும் சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பாடப் புத்தகங்களை படிப்பதால் மட்டும் ஒரு மாணவன் சிறந்த மாணவன் என்று சொல்லிவிட முடியாது. அம்மாணவனின் சிந்தனையின் வெளிப்பாடாய், கற்பனையின் வெளிப்பாடாய், அனுபவத்தின் வெளிப்பாடாய் கொண்டு வரப்படும் கருத்துக்களும், அம் மாணவனின் திறமைகளை எடுத்துக் காட்டும் கருவிகளாகின்றன. அந்த வகையிலே மாணவர்களின் அறிவும், ஆற்றலும் கவிதைகளாகவோ, கட்டுரைகளாகவோ வெளிக்காட்டப்படும் போது அவர்களது திறமையும், அறிவும் மென்மேலும் விருத்தியடைவதற்கு சஞ்சிகை ஊன்றுகோலாக அமைகின்றது. தமது ஆக்கங்கள், சஞ்சிகை மூலம் வெளிக்காட்டப்படும் போது வாசிப்பதில் ஆர்வமற்ற மாணவனை வாசிக்க தூண்டும் ஓர் ஊடகமாகவும் சஞ்சிகை அமைகின்றது.

மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் தமது உள்ளக்கிடக்கையில் பொதிந்து கிடக்கும் கருத்துக்களை, சிந்தனை வடிவங்களை எழுத்து வடிவில் சஞ்சிகையில் வெளியிடும் போது அவர்களது ஆக்கபூர்வமான பல கருத்துக்கள் சஞ்சிகை மூலம் பலரையும் சென்றடையவொரு சந்தர்ப்பமாகின்றது.

சிவாநந்த வித்தியாலயத்திற்கு உருவகம் கொடுத்து ஆரம்பித்து வைத்த சுவாமிஜியை கௌரவித்து அவரது பெயரிலே இச் சஞ்சிகை வெளியிடப்படுவதையிட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன். இதற்காக நான் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன். இச்சஞ்சிகை மாத்திரமல்ல மேன்மேலும் பல சஞ்சிகைகள் இப்பாடசாலை மூலம் வெளியிடப்பட வேண்டும் என்றும், பாடசாலையின் வளர்ச்சியும் பன்முகப்படுத்த வேண்டும் என்றும், மாணவர்களின் அறிவும், ஆற்றலும் மேலும் மேலும் வளர வேண்டும் என்றும், அதிபர், ஆசிரியர்களின் அயராத உழைப்பு உறங்காதிருக்க வேண்டுமென்று எனது மன நிறைவான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விநாயகமூர்த்தி முரளிதரன்** (பா.உ)
மீள்குடியேற்ற பிரதி அமைச்சர்,
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உப தலைவர்.

**கௌரவ மாகாண சபை உறுப்பினரும், ஜனாதிபதியின் விசேட ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



இயற்கை எழில் கொஞ்சும் இறை சிந்தனையும் ஒருங்கே அமைந்த பிரதேசமான கல்லடி உப்போடையின் மத்தியில் "குன்றிலிட்ட தீபம் போல" விளங்கி இந்த கிழக்கு மாகாணத்துடன் நின்றுவிடாது ஏனைய மாகாண மக்களுக்கும் கல்வியினை வழங்கி வரும் மட்/சிவாநந்த வித்தியாலய மானது பல கல்வியாளர்களையும் பல மேதாதைகளையும் சிறந்த ஒழுக்க சீலர்களையும் நீண்ட காலமாக உருவாக்கி வருகின்றது. இவ்வாறு சிறப்பு வாய்ந்த பாடசாலையிலிருந்து வெளியேறும் **சிவாநந்தன் சஞ்சிகைக்கு** வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உளமாற மகிழ்வடைகின்றேன்.

இன்று உலகமே எம் கையில் சுருங்கி விட்ட காலகட்டத்தில் வகுப்பறை கற்பித்தல் மட்டும் ஒரு மாணவனுக்கு போதுமானதாக அமையாது. எமது பாரம்பரிய கலைகலாச்சாரத்தையும் சமூக விழுமியங்களையும் பேணிப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கும் கையளிப்பதற்கு அவை வழிகாட்டியாக நெறிப்படுத்தும் பாரிய பொறுப்பு ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் உள்ளது. இந்த சஞ்சிகை வெளியீடு அவ்வாறு அமைய வேண்டும் என நான் அவாவுறுகின்றேன். இச் சஞ்சிகையானது மாணவர்களுக்கு சகல வகைகளிலும் கூடியதுமான ஆக்க திறன்களை கொண்டு மிளிர்வதற்கும், இம் முயற்சியானது வெற்றிகரமாக அமைவதற்கும் ஊக்கமளித்த பாடசாலை அதிபர் திரு.க. மனோராஜ் தலைமையிலான நிர்வாகத்தினரையும், மலர் குழுவினரையும், பிரதேச மக்களையும் மன நிறைவுடன் பாராட்டுகின்றேன். இச் சஞ்சிகையானது இதழ் நான்கோடு நின்றுவிடாது தொடர்ந்து மலர்ந்து எம் மண்ணின் சிறார்களின் அறிவு வளர்ச்சிக்கும் ஒழுக்க மேம்பாட்டுக்கும் உறுதுணையாக திகழ வேண்டும் என இறைவனை வேண்டி மனநிறைவுடன் வாழ்த்துகின்றேன்.

- நன்றி -

**சிவநேசதுரை சந்திரகாந்தன், (மா.ச.உ),**
ஜனாதிபதியின் விசேட ஆலோசகர்.

# வாழ்த்துச் செய்தி



கிழக்கிலங்கையின் புகழ் பூத்த பழம்பெரும் கல்விக் கூடத்திலிருந்து வெளிவரும் **"சிவாநந்தன்"** சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் ஆனந்தமடைகிறேன்.

மாணவர்களிடம் அளவு ரீதியாக மட்டுமன்றி பண்பு ரீதியாகவும் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துவது கல்வியின் நோக்கங்களில் குறிப்பிடத்தக்கதொன்றாகும். சம காலத்தின் பூகோள மாற்றங்கள், நவீன தொழினுட்ப யுகத்தை நோக்கியதான பெயர்வு மட்டுமல்லாது புதிய கல்விச் சீர்திருத்தங்களின் விளைவாகவும் மாணவர்கள் மத்தியில் தேடலும், சிந்தனைப் பாங்கும் புதிய பரிமாணத்தை அடைந்துள்ளன. இது ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.

இந்த வகையில் நாளாந்த கல்விச் செயற்பாடுகளுக்கு மேலாக மாணவர்கள், ஆசிரியர்கள் என்ற இருசாராரதும் அறிவின் எல்லை விரிவடைந்து, ஆக்க சிந்தனைகள் எழுத்துருவாவதற்குக் களம் அமைத்துக் கொடுக்க வேண்டியது ஒரு பயனுறுதி வாய்ந்த பாடசாலைச் சமூகத்தின் பொறுப்பும், கடமையுமாகும்.

இந்தப் பொறுப்பையும்,கடமையையும் சிவாநந்த வித்தியாலயமானது செவ்வனே நிறைவேற்றுவது குறித்து மனமுவந்து பாராட்டுகிறேன்.

எனவே **"சிவாநந்தன்"** சஞ்சிகை வெளியீட்டின் நோக்கங்கள் நிறைவு பெறவேண்டும், மாறிவரும் உலகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் சாதனை படைக்க வேண்டும், எதிர்காலச் சந்ததிக்காக பாடசாலை வரலாற்றையும், சாதனைகளையும் பதிவு செய்யும் ஆவணமாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்காக உழைத்த அதிபர் உட்பட்ட சஞ்சிகைக்குழுவினருக்கு எனது நல்லாசிகளைத் தெரிவிக்கிறேன். சிவாநந்த வித்தியாலயம் சகல துறைகளிலும் மென்மேலும் வளர வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**A.M.E. போல்**
கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்.

# வாழ்த்துச் செய்தி



எமது வலயத்திற்குட்பட்ட மட்/சிவாநந்த வித்தியாலயம் இவ்வருடமும் **"சிவாநந்தன்"** எனும் சஞ்சிகையை வெளியிட இருப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**"மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரண தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்"** என்று சுவாமி விவேகானந்தர் கல்விக்கு சிறந்த வியாக்கியானம் கொடுக்கின்றார்.

வாழ்க்கையை உருவாக்கக்கூடிய மனிதனை மனிதனாக்கக் கூடிய நல்லொழுக்கத்தை வளர்க்கக்கூடிய கருத்துக்களை கிரகித்து அவற்றை நாம் நம்முடையவையாக்கிக்கொள்ள வேண்டும்.

பள்ளிப் பருவத்தில் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளுடன் மட்டும் நின்று விடுவது இன்று போதாமல் உள்ளது. சவால்கள் நிறைந்த உலகில் அவர்களை தயார்படுத்த வேண்டியது பாடசாலைகளின் பாரிய பொறுப்பாக உள்ளது.

மனிதனை மனிதனாக மாற்றுவதில் இணைப்பாட விதான செயற்பாடுகள் முக்கிய பங்கெடுப்பதனை நாம் அறிவோம். இன்றைய நவீன கால கல்விமுறை மாணவர்கள் தாமாகவே சுயமாக தேடிக்கற்கும் ஆற்றலையும் தமக்குள்ளே அடங்கிக்கிடக்கின்ற திறன்களையும் வெளிக்கொணர்வதற்கு வழிவகுக்கின்றது.

அந்த வகையிலே ஒரு பாடசாலையின் சஞ்சிகை வெளியீடு என்பது பல சுமைகளை சுமந்துவரும் பிரசவமாகும். எதிர்கால பாடசாலை சந்ததியினர் இதனை ஒரு வரலாற்று நூலாக ஆய்வுக்குப் பயன்படுத்தும் காலம் வரும்.

இச்சஞ்சிகை வெளிவர உழைத்த சஞ்சிகை குழுவினருக்கும், ஆக்கங்களை தந்துதவிய மாணவச் செல்வங்கள், ஆசிரியர்கள், ஏனைய கல்வி புலத்தினர் அனைவருக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும். இவைகளை நெறிப்படுத்தி முகாமைசெய்து வருகின்ற அதிபருக்கும், முகாமைத்துவக் குழுவினருக்கும் என் வாழ்த்துக்கள்.

தொடர்ந்தும் **"சிவாநந்தன்"** வெளி வர வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**திருமதி. S. பவளகாந்தன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

# வாழ்த்துச் செய்தி



மட்டக்களப்பு மாநகரத்தில் புகழ்பூத்த பாடசாலையான மட்/சிவாநந்த தேசிய பாடசாலை **"சிவாநந்தன்"** எனும் சஞ்சிகையை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடைசி நாட்களில் அறிவு பெருகிப்போம் என்ற பதத்துக்கமைய இன்று உலகத்தின் அறிவாற்றலின் பாதைதான் வளர்ந்து பரந்து செல்கின்றன. புத்தியும், தேர்ச்சியும் நல்லொழுக்க விழுமியமுள்ள சரத்தினை உருவாக்க தேசங்கள் கர்ப்பவேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இயற்கைச் சீற்றங்களும், சூழ்நிலை மாற்றங்களும் மனித குலத்திற்கெதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் அதனை மேற்கொண்டு வெற்றியீட்டி சாதனை படைக்கும் சமூகத்தை நாடுகள் தேடிக்கொண்டிருக்கின்றன.

சவால்களுக்கு முகம் கொடுத்து சவால்களைச் சந்திக்கும் சந்ததிக்கு பாடசாலை ஒன்றே ஆரம்ப களமமைத்துக் கொடுக்கின்றது. எனவே இக்கால கட்டத்தில் பாடசாலைகளின் பங்களிப்பு காத்திரமானதாக இருக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

மட்/சிவாநந்த தேசிய பாடசாலை பல சாதனைகளைப் படைத்த வரலாற்றைக் கொண்டதொரு பாடசாலையாகும். சாதி, இன, மத, பேதமின்றி உலகிற்கு உவப்புடன் கல்விமான்களை ஈந்த பெருமை இப்பாடசாலைக்குண்டு. இதன் வளர்ச்சிப் பாதையில் காணி வழங்கியவர்கள், பாடசாலை கட்ட உதவியவர்கள் என்றும் நினைத்துப் பாக்கப்பட வேண்டிய பண்பாளர்களாவர்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் மாறாத தரிசனம் நிலையாக நிலைத்திருக்க நாம் ஒருபடி மேலே செல்ல வேண்டியது அவசியமாயுள்ளது. அந்த வகையில் புதிதாக தலைமையேற்றுள்ள திரு. க. மனோராஜ் அதிபர் கையில் பாரிய வகை கூறும் பொறுப்புண்டு. அவரது அர்ப்பணிப்பு, தன்னலமற்ற உயிரோட்டமுள்ள சேவை, இதன் வளர்ச்சிக்கு வித்திடுமென்பதில் சந்தேகமில்லை. கடந்த கால அதிபர்கள் இதன் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் நின்றது எவராலும் மறந்து விடமுடியாததொன்றாகும்.

பலமுள்ள ஆசிரியர் குழாம், அவர்களது ஒத்துழைப்பு பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்சங்கம், தன்னார்வலர்கள் தம்மாலான முழு ஒத்தாசைகளையும் வழங்கி வருவது இதற்கோர் முன்னுதாரணமாகும்.

மாணவர்கள் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும். சமூகம் முழு அக்கறையுடனும், விழிப்புடனும் செயற்பட்டால் அதன் அறுவடை அபாரதமாக இருக்கும்.

இந்நாளில் வெளிவர இருக்கும் சிவாநந்த சஞ்சிகைக்கு உழைத்த அதிபர், ஆசிரியர் குழாத்தினரை மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன். இது ஒரு கலைப் பொக்கிஷமாக அனேகரின் தேடலுக்கு விருந்தாகவும், விடையாகவும் இருக்க வாழ்த்துகின்றேன்.

**க. டேவிட்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
மண்முனை வடக்கு,
மட்டக்களப்பு.

# அதிபரின் ஆசிச்செய்தி



முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின் எண்ணங்கள் உருவான இந்தப் பாடசாலை மீன்பாடும் தேனாடாம் மட்டுமாநகரில் தலைசிறந்து தலை நிமிர்ந்து நிற்கும் ஓர் முன்னணிப் பாடசாலையாகும்.

தகவல் தொழில்நுட்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் விரும்பியோ விரும்பாமலோ எதிர்கால அறைகூவல்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய மாணவரை வெளிக்கொணர வேண்டிய கட்டாயத்திலிருக்கின்றோம். நவீன கல்விமுறையில் புதிய புதிய அணுகுமுறைகளைக் கண்டறிதலும், பழையவற்றை மீள் பரிசீலனை செய்தலும் தவிர்க்க முடியாத தேவைகளாக மேலோங்கியுள்ளன.

இந்த ரீதியில் கல்விச் செயற்பாட்டிலும், இணைப்பாடவிதான செயற்பாட்டிலும் எம் பாடசாலை மேலான நிலையிற் பேணிவருகின்றது. இந்தவகையில் எமது மாணவரினும் உள்ளார்ந்த ஆக்கத்திறன்களை, ஆற்றல்களை வெளிக்கொணரச் செய்வதற்கான களம் அமைத்துக்கொடுப்பது இன்றியமையாததாகும். எனவே புத்துயிர் பெற்று புதுப்பொலிவுடன் வெளிவரும் சிவாநந்த வித்தியாலய "**சிவாநந்தன்**" இதற்கெல்லாம் அடித்தளம் அமைந்து நிற்பதனை காணமுடிகின்றது.

ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரினும் சிந்தனை திறனை விருத்தி செய்வதற்கும் எழுத்தாற்றலை மேம்படுத்துவதற்கும் இச்சஞ்சிகை ஒரு தளமாக அமைவதையிட்டு பெருமைப்படுகின்றேன். மேலும், இச்சஞ்சிகை வெளிவருவதற்கு காரணமாய் இருந்த ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அனைவருக்கும் எனது இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். மேலும் சிவாநந்தன் தொடர்ந்து வெளிவர வாழ்த்துவதோடு இறையாசியையும் வேண்டி வாழ்த்துகிறேன்.

**திரு. க. மனோராஜ்** (அதிபர்)
மட்/சிவாநந்த வித்தியாலயம் (தேசிய பாடசாலை)
மட்டக்களப்பு.

# வாழ்த்துச்செய்தி



மட்/சிவாநந்த வித்தியாலயத்தின் வெளியீடான **"சிவாநந்தன்"** சஞ்சிக்கைக்கு வாழ்த்துஞ் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். சிவாநந்த வித்தியாலயமானது இலங்கையிலே உள்ள முக்கிய பாடசாலைகளில் ஒன்று என்பதுடன், இராமக்கிருஷ்ண மிஷன் சுவாமிகளால் ஆசீர்வதிக்கப்பட்டு இறை போதனையும், இந்து சமய பாரம்பரியங்களும் கட்டிப்பாதுகாக்கப்பட்டுவரும் இப்பாடசாலையின் பாரம்பரியங்களை மீண்டும் சமூகத்திற்கு வெளிப்படுத்த சிவாநந்தன் இதழ் வருடாந்த பரிசளிப்பு விழாவில் இம்முறை வெளிவருவது சிறப்பானதாகும்.

கடந்த 2001, 2002, 2003 ஆகிய வருடங்களில் வெளிவந்து எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்திய சிவாநந்தன் ஒன்பது வருடங்களின் பின்னர் புதிய அதிபர் திரு. க.மனோராஜ் அவர்களின் அயராத முயற்சியால் மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விமான்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் ஆகியோரின் சிறப்பான ஆக்கங்களுடனும், பங்களிப்புடனும் வெளிவருகின்றது.

இம்முயற்சிக்கு அயராது பாடுபடும் அதிபர், மலர்குழுவினர், இதழாசிரியர், ஆசிரியர், மாணவர் ஆகியோருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**திரு. ச. தயாபரன்** (பிரதி அதிபர்)
மட்/சிவாநந்த வித்தியாலயம்,
மட்டக்களப்பு.

# வாழ்த்துச்செய்தி



கிழக்கிலங்கையின் மாபெரும் கல்விக்கூடமாம் எமது சிவாநந்த வித்தியாலயம் ஆண்டுதோறும் வெளியிட்டு வந்த சிவாநந்தன் என்னும் இச்சஞ்சிகை மீண்டும் ஒரு சிறிய இடைவெளியின் பின் வெளியிடப் படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்கள் தான் எமது திறமைகள் வெளிக்கொணரப்படுவதற்கு காரணமாகின்றன. இந்தவகையில் எமது மாணவச் செல்வங்களின் பல்வேறுபட்ட திறமைகளும் வெளிக்கொணரப்படுவதற்கு நல்லதொரு களமாக இச்சஞ்சிகை விளங்குவது பாராட்டப்படக்கூடியதாகும்.

மேலும் இந்த வகையில் இச்சஞ்சிகையினை மீண்டும் வெளியிடுவதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்ட இப்பாடசாலையின் அதிபர், முகாமைத்துவக் குழுவினர், மற்றும் சஞ்சிகைக் குழுவினருக்கும், நிதியுதவியை வழங்கிய எமது பாடசாலை பழைய மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. க. ரவீந்திரன்**
பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்
சிவாநந்த வித்தியாலயம்

# வாழ்த்துச்செய்தி...



சிறிய இடைவெளிக்குப் பின் **சிவாநந்தன்** மலர் மீண்டும் மலர்வதையிட்டு பெருமையும், மகிழ்ச்சியும் கொள்கின்றேன்.

இம்மலர் நிச்சயமாக பாடசாலைப் பணிகளின் உரைக்கல்லாகவும், வரலாற்றுப் பதிவாகவும், மாணவச் செல்வங்களின் மத்தியில் புதைந்து கிடக்கும் ஆற்றல்களையும் வெளிக்கொணர்ந்து மெருகூட்டி வளர்க்க வாய்ப்பளிப்பதுடன், கல்விமான்களாலும், ஆசிரியப்பெருந்தகைகளாலும், நலன்விரும்பிகளாலும் வரையப்பட்ட ஆக்கங்கள் அனைவருக்கும் பெரும் பயன்பாடாக அமையும் என்பதை எண்ணும் போது பெருமை கொள்கிறேன்.

"கல்வி என்பது வெறும் ஏட்டுப்படிப்பு மட்டுமல்ல, அது மனிதனை பூரண மனிதனாக்கும் ஓர் ஏதுவாக அமைய வேண்டும்" என்பது மகான் விவேகானந்தரின் கல்வித் தத்துவமாகும்.

இந்தச் சிறந்த இலட்சணத்தின் எடுத்துக்காட்டாக நமது பிரதேசத்தின் இல்லங்கள் தோறும் விளக்கேற்றி வைத்து எதிர்கால சமுதாயத்தை ஒளிமயமான ஒரு புது யுகத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டிய தலையாய பணியை நமது பாடசாலை ஆற்றுவதற்கு ஒன்றுபட்டு நமது முழுப்பங்களிப்பையும் நாம் செய்ய வேண்டும்.

இத்தருணத்தில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர், இப்பாடசாலை உருவாக சுவாமி விபுலானந்தர் அடிகளாரை கல்லடிப் பிரதேசத்திற்கு அழைத்துவந்து நிதி, நிலம் வழங்கி கால்கோளிட்ட கதிர்காமத்தம்பி உடையார், வேலுப்பிள்ளை, இராமகிருஷ்ணமிசன், அதனைச் சார்ந்த துறவிகள், அர்ப்பணிப்பு சேவை புரிந்த அதிபர்கள், ஆசிரியர்பெருந்தகைகள், பக்கபலமாக நின்று செயற்பட்ட பழைய மாணவர்கள், பெற்றார்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் நன்றியுடன் நினைவுகொள்வோமாக.

**சிவாநந்தன்** மலரின் மலர்ச்சிக்காக முன்னின்று உழைத்த அனைவருக்கும் பாடசாலை அபிவிருத்திக் குழு சார்பாக இனிய நன்றிகளை தெரிவிப்பதுடன் மனம் கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டாக்டர். த. கேதீசன்**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திக் குழு.

# வாழ்த்துச் செய்தி



**"சிவாநந்தன்"** என்ற சிறப்பு மலருக்கு சிவானந்த வித்தியாலயத்தின் பழைய மாணவ மன்றத்தின் தலைவரான நான் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டிலா மகிழ்ச்சி கொள்கிறேன்.சொற்களை விட செயல்களே உரத்த குரலில் பேசும் ஒருவரது பணி அவரால் சிந்தித்து வெளியிட்ட ஆக்கங்களை விட உரத்த குரலில் ஒலிப்பது அவர் சமூகத்துக்கு ஆற்றிய செயல்களே.

கல்லடி உப்போடை என்னும் திருப்பதியிலே ஆங்கிலப் பாடசாலை ஒன்றை அமைக்க வேண்டும் அதன் மூலம் எமது ஏழைமக்களும் கல்வியில் எழுச்சி பெறவேண்டும், சகலருக்கும் உயர்ந்த கல்வி கிடைக்கவேண்டும் என்ற உயரிய தீர்க்கதரிசனமான சிந்தனை அன்று அமரர்களான திரு. கந்தப்பெருமாள் கதிராமத்தம்பி உடையார் அவர்களுக்கும் திரு. தோ. கு. சபாபதிப்பிள்ளை உடையார் அவர்களுக்கும் உதயமாகியது. அதனை தமது வாழ்நாளில் காணாவிட்டாலும் எதிர்காலத்தில் நனவாக்க வேண்டும் என்ற உயரிய இலட்சியத்தை அவர்களின் புத்திரர்களான திரு. வேலுப்பிள்ளை, திரு. இரத்தினசிங்கம் ஆகியோருக்கும் கூறிச் சென்றனர். இவ் இலட்சியக்கனவைநனவாக்க திரு. வலுப்பிள்ளை அவர்களும், திரு. இரத்தினசிங்கம் அவர்களும் தந்தைமார் கொடுத்த நிதியை பாகாத்து வந்ததோடு, திரு. வேலுப்பிள்ளை அவர்கள் தனது சொந்த நிலமான 15 ஏக்கரையும் வழங்கி இவ்வித்தியாலயத்தை உருவாக்க செயலாற்றினார். 1925 ஆம் ஆண்டு சந்நியாசியாகி மட்டுநகருக்கு வாகைதந்த சுவாமி விபுலானந்த அடிகளாரை இவ்வூருக்கு பெருவரவேற்புச் செய்து அழைத்து வந்து 26-11-1925 ஆம் திகதி இப்பாடசாலைக்கான அடிக்கல் நட்டு வைத்துச் செயலாற்றினார்.

1929-05-01 முறையான வகுப்பு 27 மாணவருடன் ஆரம்பித்த இச் சிவாநந்த வித்தியாலயம் ஆல் போல் தழைத்து அறுகு போல் வே ன்றி நிற்கின்றது. திக்கெட்டும் திசையெல்லாம் உலகம் முழுக்க சிவாநந்த வித்தியாலய பழைய மாணவனின் மணம் வீசி நிற்கின்றது.

உயர்ந்த சிந்தனையை செயல்வடிவம் கொடுக்க கதிராமத்தம்பி உடையார் திரு. தோ. கு. சபாபதிப்பிள்ளை, வேலுப்பிள்ளை, சுவாமி விபுலானந்தரின் அற்புத எண்ணங்களை செயல்வடிவாக்கி உரத்த குரலில் இச் சிவாநந்த வித்தியாலயம் பேசிநிற்கின்றது. இச்சிவாநந்த வித்தியாலயம் பல்வேறு காலகட்டங்களில் நல்ல ஆசிரிய குளாத்துடனும் நல்ல கல்விசாரா ஊழியர்களுடனும் தலை நிமிர்ந்து நிற்கின்றது. இந்த மனோரம்மியமான நிலையை ஏற்படுத்த எமது பழைய மாணவர் மன்றம் பல்வேறு வழிகளிலும் பாடுபட்டு உழைத்திருக்கிறது. இன்றும் இபபாடசாலை வளர்ச்சியில் மாணவர் கல்வி மேம்பாட்டில் உறுதுணையாக நின்றுகொண்டிருக்கின்றது என்பதில் பெருமை கொள்கிறது. எமது மன்றம், பாடசாலை வளர்ச்சியில் உமது மன்ற உறுப்பினர்கள், லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, பழைய மாணவர் மன்றங்களும் மிகவும் தோழோடு தோழ் நின்று எம்மன்றம் ஊடாக ஒத்துழைப்பு நல்கின்றமை பாராட்டுக்குரியது.

இவ் **"சிவாநந்தன்"** என்னும் மலர் சிறக்க, வெளியிட அரும்பாடுபட்ட நூல் வெளியிட்டுக் குழுவினருக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கினறேன்.
வாழ்க **"சிவாநந்தன்"**

**K.O.V.K. குருநாதன்**
பழைய மாணவர் மன்றத் தலைவர்
முன்னாள் காணி ஆணையாளர்

# வாழ்த்துச் செய்தி

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரது அருளாசியினால் மலர்ந்த மாபெரும் கலாநிலையமாக விளங்கும் சிவாநந்த வித்தியாலயம் வெளியிடும் "**சிவாநந்தன்**" சஞ்சிகைக்கு இப்பாடசாலையில் கல்வி கற்று இன்று பல்வேறு வகைகளில் சிறந்து விளங்கும் பழைய மாணவர்களாகி நாங்கள் வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் கல்விப் பயணத்தின் காத்திரமான ஒரு திருப்பு முனையாக அமைவதுடன் கல்வித் துறைக்கும் காத்திரமான பங்களிப்புச் செய்துவருகின்ற சாதனைக் கூடமாகவும், உலகெங்கும் சிவாநந்தியன்களை உருவாக்கியுள்ள கலாசாலையாகவும் விளங்கும் இப்பாடசாலையில் நீண்டகாலமாக இருந்த தடைகளின் பின்பு புதிய அதிபர் திரு. க. மனோராஜ் அவர்களின் முயற்சியுடனும் எங்களுடைய ஒத்துழைப்புடனும் இச்சஞ்சிகையின் 4வது மலர் வெளிவருவது கண்டு எமதுள்ளம் பூரிப்படைகின்றது.

பாடசாலையில் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களது வேலைப்பளுவின் மத்தியிலும் இவ்வாறு கலை, கலாசார விழுமியங்களையும், மாணவர்களது திறமைகளையும் ஆவணப்படுத்தும் முயற்சியாகவும், அடுத்த பரம்பரைக்கு எடுத்துச் செல்வதாகவும் அமைவதற்கு அரும்பாடுபட்ட மலர்க்குழுவுக்கு சிவாநந்தியன்கள் என்ற வகையில் எமது நன்றியினையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவாநந்தன் மலர் தொடர்ந்து வெளிவர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.



**பழைய மாணவர் மன்றம்**
**கனடா கிளை**

# வாழ்த்துச்செய்தி



கல்வி உலகில் நீண்ட வரலாற்றைக் கொண்ட பாடசாலைகளுள் ஒன்றான மட்/சிவாநந்த வித்தியாலயம், வருடத்திற்கொருமுறை வெளியிடும் **"சிவாநந்தன்"** சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

கல்வி வரலாற்றில் தனக்கென்று ஒரு தனியான இடத்தை வகிக்கின்ற இப்பாடசாலை காலங் காலமாக கல்வி வளர்ச்சிக்கென அரும்பணி ஆற்றிவருவது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். முறைசார் கல்வி நிலையிலும் சரி, இணைப்பாட விதான நிலையிலும் சரி முனைப்புடன் செயற்படும் இப்பாடசாலை சஞ்சிகை வெளியிடும் நற்பணியையும் செய்துவருகின்றது.

மாணவரின் படைப்பாற்றல் திறனுக்குக் களம் கொடுத்து அவர்தம் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவர்களை எழுத்தாற்றல் கொண்டவர்களாக ஆக்கிவிடுவதற்கு இச்சஞ்சிகை பெரும் உந்துசக்தியாக அமைந்து வருகின்றது. இச்சஞ்சிகையை வெளிக்கொணர முயன்றவர்கட்கும், வழிகாட்டியோர்க்கும் என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதோடு வரும் காலத்தில் கல்வியில் தீவிர வளர்ச்சியடைந்து எமது தாயகத்தின் தனித்துவமான பாடசாலையாக மிளிர வேண்டுமென எல்லாம் வல்ல ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானையும், ஸ்ரீ பேச்சியம்மனையும் வேண்டி வாழ்த்துகிறேன்.

**தியாகராஜா ஸ்ரீஸ்கந்தராஜா** (தலைவர்)
(ஸ்ரீ சித்திவிநாயகர் - ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயம்)

# இதழாசிரியரின் செய்தி



பாரினில் எங்கு சென்றாலும் **"சிவாநந்தன்"** என்றவுடன் சீரும் சிறப்பும் பெற்றிடுவர் என்பது உலகறிந்த உண்மை. இத்தகைய பாடசாலையில் மலரும் சிவாநந்தன் சஞ்சிகையானது சில ஆண்டுகளாக உள்ள தனது பிரசவத்தடைகளைத்தாண்டி இதழ் 4 புதுப்பொலிவுடன் மீண்டும் வெளிவருகின்றது.

எழுத்தறிவித்தலுடன் எமது பணியினை நிறுத்திவிடாது மாணவர்களது ஏனைய திறமைகளையும் வெளியுலகுக்கு எடுத்துக் காட்டும் நோக்கில் இச்சஞ்சிகை வெளியிடப்படுகின்றது.

**"இன்றைய மாணவர்களே எமது நாளைய உலகின் பிரதானமான மனித வளமாகும்"** கல்வியின் பூரணத்துவமானது வகுப்பறைக்கற்றலுடன் நின்றுவிடாது அவர்களது இணைப்பாடச் செயற்பாடுகளிலும் தங்கியுள்ளது.

எனவே எமது இந்த மாணவச் சமுதாயத்தின் தேவையறிந்து மாணவரிடம் பல்லாண்டு காலமாக முடங்கிக் கிடந்த ஆற்றல்களையும், திறமைகளையும் வெளிக்கொணரும் வகையில் எமது புதிய அதிபர் திரு. க மனோராஜ் ஐயா அவர்களின் முயற்சியின் விளைவாக இந்த இதழ் நான்கினை ஒன்பது வருடங்களின் பின்பு வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

சிவாநந்தன் சஞ்சிகையானது அழகியதேர் போன்றது. அதனை வடம் பிடித்துச்செல்பவர்களாக அர்ப்பணிப்புமிக்க ஆசிரியர்களும், ஆற்றல்மிக்க மாணவர்களும், மட்டுமன்றி பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்தி மேம்பாட்டுச்சங்கம் ஆகியனவும் உள்ளன. எனவே மாணவர்களது, ஆசிரியர்களது ஆக்கங்களுடன் அவர்களது இணைப்பாடச் செயற்பாட்டில் பதித்த வெற்றிப்பதிவுகள் என்பனவற்றுடன் பெற்றோர், பழைய மாணவர் நலன்விரும்பிகளது ஆக்கங்களையும் இச் சஞ்சிகை தன்னுள் சேர்த்துக் கொண்டதில் பெருமிதம் அடைகின்றது.

இந்த விடயமானது இப்பாடசாலைக்கும் இப்பிரதேசத்துக்கும், பழைய மாணவர்களுக்கும் இடையிலான பாரம்பரியமான ஆத்மார்த்தமான உறவினை வெளியுலகுக்குக் காட்டுவதாக உள்ளது.

நீண்டகாலமாக பிரசவ வசதியின்றி இருந்த சிவாநந்தன் சஞ்சிகையானது தனது நான்காவது குழந்தையாக எமது கைகளில் தவழ்வதற்கு நிதி உதவியினை வழங்கிய பழைய மாணவர் சங்கம் கனடாக்கிளைக்கு நாங்கள் என்றென்றும் நன்றியுடையவர்களான இருக்கின்றோம்.

இந்த சஞ்சிகையானது சிறப்பாக வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்த இவ் வித்தியாலய அதிபர், பிரதி அதிபர், மலர்க்குழுவினர், விசேடமாக எமது பிரதேச கலை, கலாசார அம்சங்களை ஓவிய வடிவில் அட்டைப்படமாக வடிவமைத்துத் தந்த திரு. S. கதாரதன் ஆசிரியருக்கும், எப்பொழுதும் முகம் சுழிக்காது சிவாநந்தன் சஞ்சிகை எழுத்துருப்பெற அச்சுப்பொறுப்பினை தனதாக்கிக் கொண்ட கல்வி அணிசாரா ஊழியர் திரு. M. அகிலேஸ்வரனுக்கும், ஆசிச்செய்தி வழங்கியவர்களுக்கும், தமது வேலைப்பழுக்கள் மத்தியிலும் மாணவரது நன்மைகருதி பயனுள்ள கட்டுரைகளை வழங்கியவர்களுக்கும் இச்சஞ்சிகையை அச்சடித்த எவகிறீன் அச்சகத்தினருக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த சிவாநந்தன் சஞ்சிகையானது ஒவ்வொரு ஆண்டும் தனது வெளியீட்டை தொடரவேண்டும் என்பதே எமது ஆவல். இது மாணவர்களாகிய உங்களின் கைகளில்தான் உள்ளது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், சினிமா கலாசாரங்களிலும் உங்களைத் தொலைத்துவிடாது நல்ல நூல்களைக் கற்று உங்களது திறமைகளை எழுத்துலகில் வளர்த்து சிவாநந்தன் சஞ்சிகையினையும் புதுப்பொலிவுடன் வளரச்செய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**திருமதி. விஜயகுமாரி ரவீந்திரன்**
மட்/சிவாநந்த வித்தியாலயம்,
மட்டக்களப்பு.

## பொருளடக்கம் .... பக்கம்


| | |
|---|---|
| 1) பாடசாலை வரலாறு | 1 - 2 |
| 2) ஆசிரியர் மாணவர் வெற்றிக்குத் தேவையான சில அடிப்படையான நம்பிக்கைகள் | 3 - 4 |
| 3) புகழ்மிகு மட்டுநகர் | 5 |
| 4) வேண்டாம் இந்தப்போர் | 6 |
| 5) புதிய நட்பு (சிறுகதை) | 7 - 10 |
| 6) Kallady Bridge | 11 |
| 7) செழுந்தமிழ்ச் சிகரம் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி | 12 - 14 |
| 8) பாடசாலை மாணவர்களிடையே காணப்படும் பொதுவான தோல் நோய்கள் | 15 - 17 |
| 9) கண்டுபிடிப்பும் கண்டுபிடிப்பாளரும் | 18 |
| 0) பாடலை நடிப்பாக்கிய மகாகலைஞன் நடிகைமணி வைரமுத்து | 19 - 20 |
| 11) Elizabethan Poetry A view | 21 - 23 |
| 12) குடியைக் கெடுத்த குடி (சிறுகதை) | 24 - 25 |
| 13) பதின்வயதில் உளநலம் | 26 - 29 |
| 14) ஆசிரியரை விட்டுப் பிரியும் தருணம் | 30 |
| 15) இசையின் சிறப்பும் நாட்டியத்தில் இதன் முக்கியத்துவமும் | 31 - 33 |
| 16) வாய் பல் சுகாதாரம் | 34 - 37 |
| 17) சிவாநந்த வித்தியாலய சரஸ்வதி ஆலயம் | 38 - 39 |
| 18) சான்றிதழுக்கு படித்தாலும் சான்றோனாகிச் சீர்பெறு | 40 - 42 |
| 19) What is Cyber Crime? | 43 - 44 |
| 20) புதிர்கள் | 45 |
| 21) மெய்ப்படும் கனவு (சிறுகதை) | 46 - 47 |
| 22) குழந்தைப் பருவப் பார்வைக் குறைபாடுகள் | 48 - 49 |
| 23) சிவாநந்தாவில் படித்த காலத்தில் .. | 50 - 51 |
| 24) எனது வீட்டுத்தோட்டம் | 52 |
| 25) வன்முறை ஒழிப்போம் வளநாடு காண்போம். | 53 - 54 |
| 26) ஒளியாண்டு | 55 |
| 27) வித்தியின் விடிவானம் சிவாநந்தா | 56 |
| 28) மருந்தாகும் இசை | 57 |
| 29) சுமை (சிறுகதை) | 58 - 62 |
| 30) கற்றிடுவோம் நாம் | 63 |
| 31) ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற இடங்கள் | 64 |
| 32) தலைமைத்துவம் | 65 - 66 |
| 33) Science & Technology | 67 |
| 34) இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் சுற்றுலாத்துறையின் பங்கு | 68 - 72 |
| 35) பொன்மொழிகள் | 73 |
| 36) புதிர்ப்பயணம் | 74 |
| 37) மலர்கள் | 75 |

| | |
|---|---|
| 38) கர்மவிதி | 76 |
| 39) பொதுநடத்தையும் ஒழுக்கமும் | 77 - 82 |
| 40) குறித்த ஆண்டில் கொண்டாடப்படும் விழாக்கள் | 83 |
| 41) சிறுவர் உரிமைகளும் துஸ்பிரயோகங்களும் | 84 - 86 |
| 42) முயற்சி | 87 |
| 43) தாயின் வழிகாட்டல் | 88 |
| 44) பரீட்சையில் வெற்றிபெற வேண்டுமானால் | 89 - 91 |
| 45) இலங்கையின் இராசதானிகளில் முக்கியமான ஆட்சியாளர்கள் | 92 - 93 |
| 46) கலை | 94 - 95 |
| 47) விடுகதை | 96 |
| 48) இரைப்பை அழற்சி | 97 |
| 49) நிலவொளி வீசுதே | 98 |
| 50) Environmental Pollution | 99 |
| 51) பிள்ளைகளின் ஆளுமையை வளர்ப்பதற்கான நுட்பங்கள் சில . . | 100 |
| 52) பாடஇணைச்செயற்பாட்டில் சாரணீயம் | 101 - 103 |
| 53) சிறந்த தென்னங்கன்று ஒன்றை முறையாக நாட்டி பாதுகாப்போம் | 104 - 105 |
| 54) விசேட கல்வியில் இன்றைய சமூக முக்கியத்துவம் | 106 - 111 |
| 55) பழமொழிகள் 30 | 112 |
| 56) முயற்சி திருவினையாக்கும் | 113 - 114 |
| 57) நட்புக்கு ஏன் வேலி | 115 |
| 58) Our Principals | 116 |
| 59) Big Match | 117 - 120 |
| 60) இணைப்பாடவிதான செயற்பாட்டில் எமது மாணவர்களின் பங்கு - 2011, 2012 | 121 |
| 61) மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகள் | 112 - 123 |
| 62) ஸ்தாபகர் தினப்போட்டி முடிவுகள் - 2012 | 124 |
| 63) ஆசிரியர் விபரம் | 125 - 127 |
| 64) மாணவர் விபரம் | 128 - 129 |
| 65) பகுப்பாய்வு | 130 |
| 66) 2009, 2010 Result - Scholership - 2011 | 131 |
| 67) O/L Analysis | 132 |
| 68) A/L Analysis | 133 |
| 69) Scholership - 2012 | 134 |
| 70) Photos | 135 - 140 |
| 71) நன்றி நவிலல் | 141 |



திரு. க. மனோராஜ் (அதிபர்)



திரு. ச. தயாபரன் (பிரதி அதிபர்)




மலர்க் குழு

# மட்/சிவாநந்த வித்தியாலய வரலாறு - ஓர் கண்ணோட்டம்

கிழக்கிலங்கையின் மாநகராம், மீன்பாடும் தேனாடாம் மட்டுமாநகரின் தென்கோடியில் உள்ள கல்லடி உப்போடையில் வடக்கில் இராமகிருஷ்ண மிசனும், மேற்கில் பேச்சியம்மன் ஆலயம், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயமும், தெற்கில் சுவாமி விபுலாநந்தரின் மணி மண்டபமும் அலங்கரிக்க மத்தியில் அமைந்திருக்கும் கல்விக் கூடம் தான் சிவாநந்த வித்தியாலயம்.

கிழக்கிலங்கையின் ஒளி விளக்கும், தமிழ் கூறும் நல்லுலகெல்லாம் என்றும் நினைவிற் கொள்ளப்படுவருமான முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரினால் 26-11-1925ஆம் திகதியன்று ஆங்கிலப் பாடசாலையான சிவாநந்த வித்தியாலயத்திற்கு அடிக்கல் நடப்பட்டது. இவ் அறப்பணிக்கு கல்லடி உப்போடையைச் சேர்ந்த கொடை வள்ளல்களான திரு. கந்தப்பெருமாள் கதிர்காமத்தம்பி உடையார் அவர்களும், திரு. தோ.கு. சபாபதிப்பிள்ளை உடையார் அவர்களும் 5000 ரூபா நிதியினையும், திரு. க. வேலுப்பிள்ளை அவர்கள் தனக்கு சொந்தமான 15 ஏக்கர் நிலத்தினையும் வழங்கி இவ்வித்தியாலயம் அமையப் பெறுவதற்கு கால்கோளாகத் திகழ்ந்தனர். சுவாமி விபுலாநந்த அடிகள் தனது குருவாகிய சிவாநந்தரின் நாமத்தினை நினைவு கூரும் முகமாக இப்பாடசாலைக்கு சிவாநந்த வித்தியாலயம் என்ற நாமத்தினை சூட்டினார்.

26-11-1925ஆம் திகதியன்று அடிக்கல் நடப்பட்டு கட்டுமான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் 15-04-1929ஆம் திகதியன்று பூர்வாங்க கிரியைகளுடன் சமய அனுட்டானப்படி சுவாமி விபுலாநந்தர் இப்பாடசாலையை ஆரம்பித்தார். 22-04-1929 ஆம் திகதியன்று அக்கால கிழக்குமாகாண அரசாங்க அதிபராகக்கடமையாற்றிய திரு. ஹரிசன் ஜோன்ஸ் அவர்களால் அதிகார பூர்வமாக இப்பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. 01-05-1929ஆம் திகதி அன்று 27 மாணவர்களுடனும், 08 ஆசிரியர்களுடனும் முறையாக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. 12-07-1929ஆம் திகதி இலங்கை இராமகிருஷ்ண சங்கம் அரச அங்கீகாரம் பெற்றதைத் தொடர்ந்து ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தின் அரச நன்கொடைபெறும் பாடசாலையாக சிவாநந்த வித்தியாலயம் பதிவு செய்யப்பட்டது. 1931ஆம் ஆண்டு சித்திர கூடம் என சுவாமி அவர்களால் அழைக்கப்பட்ட விடுதி அமைக்கப்பட்டது. 1941இல் திரு. K. கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பளிப்பான "**இரத்தினாலயம்**" என்னும் விடுதிக்கட்டடம் இப்பாடசாலைக்குக் கட்டி வழங்கப்பட்டது. 1960ஆம் ஆண்டு இப்பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. 11-05-1994இல் இப்பாடசாலை தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு சிவாநந்த வித்தியாலயம் தேசிய பாடசாலை என்ற பெருமையையும் தன்னோடு சேர்த்துக்கொண்டது.

27 மாணவர்களையும், 08 ஆசிரியர்களையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் முதல் அதிபராக திரு. A. பாலசுப்பிரமணியம் அவர்களும், முகாமையாளராக சுவாமி அவிநாசானந்தா அவர்களும் அவ்வேளையில் கடமையாற்றியதோடு முதல் மாணவர்களாக திரு. அ. பஞ்சாட்சரம் (அமரர்), திரு. M. I.M. அப்துல் சலாம் (அமரர்), திரு, க. உ. வே. நமசிவாயம் (அமரர்), திரு. M.A. அப்துல் மஜித், திரு. K.O.V, கதிர்காமத்தம்பி (அமரர்) ஆகியோர் கல்வி பயின்றமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது. இன்று 1700 மாணவர்களையும், 86 ஆசிரியர்களையும், 11 கல்வி அணிசாரா ஊழியர்களையும் ஆளணிகளாகக் கொண்ட மாபெரும் விருட்சமாக இவ்வித்தியாலயம் திகழ்கின்றது.

இன்றுவரை 23 அதிபர்கள் இவ்வித்தியாலயத்தில் கடமையாற்றி இருக்கின்றனர். இப்பாடசாலையின் ஸ்தாபகரான சுவாமி விபுலானந்த அடிகளார் அவர்கள் இப்பாடசாலையின் முகாமையாளராகவும், ஆசிரியராகவும் இரு தடவைகள் அதிபராகவும் பணியாற்றியுள்ளார். தற்போது இப்பாடசாலையின் 24வது அதிபராக திரு. க. மனோராஜ் அவர்கள் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். இவரும் சிவாநந்தாவின் உற்பத்திகளில் ஒன்று என்றால் மிகையாகாது.

சிவாநந்த வித்தியாலயத்தின் கண்களாகவும், காவலர்களாகவும் இராமகிருஷ்ண மிசன் சுவாமிஜீகளும், பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களும், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களும், அதிபர், ஆசிரியர்களும், அன்பான பெற்றோர்களும் விளங்குகின்றனர். இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் இலங்கையில் மட்டுமன்றி கடல் கடந்த நாடுகளிலும் லண்டன், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்தும் இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பினை நல்கிவருகின்றனர்.

இலங்கையில் மட்டுமன்றி சர்வதேசத்திலும் சிவாநந்தியன்கள் பகலவனைப் போல் பல்துறைகளிலும் பிரகாசிக்கின்றனர். சிறந்த அரசியல்வாதிகளை, அமைச்சர்களை, அரசாங்க அதிபர்களை, வைத்திய நிபுணர்களை, பொறியியலாளர்களை, விஞ்ஞானிகளை, சிறந்த அதிபர்களை, நல்லாசான்களை உருவாக்கி உலகிற்கு அளித்த உயர்வான, மங்காப் புகழ்படைத்த கலைக் கூடம் தான் சிவாநந்த வித்தியாலயம்.

"**எல்லா மதத்தினரும் கூடுவோமே ஏகம் கடவுள் என்று பாடுவோமே**" என்னும் சமரச சன்மார்க்க நெறியில், இனமத பேதங்களை களைந்து நாம் யாவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற மனப்பக்குவத்தினை மாணவர்களிடத்தில் ஊட்டிடும் இவ்வித்தியாலயம் தொடர்ந்தும் மாணவர்களின் கல்வித்தாகத்தைப் போக்கிடும் கங்கை நதியாகவும் கிழக்கிலங்கையின் கலங்கரை விளக்காகவும் திகழும் என்பது உறுதியானதாகும்.

**ஆக்கம் : C. செபநாயகம்** (ஆசிரியை)
B.A (Hons) M.Phil
மட்/சிவாநந்த வித்தியாலயம்

# உலக வரலாற்றில் பொறிக்கப்பட்ட சில யுத்தங்கள்

**1) முதலாம் உலக மகாயுத்தம்**

1914 - யூலை 25ஆம் திகதி யூகோஸ்லாவியாவின் சரஜோவோ நகரில் வைத்து ஒஸ்ரியாவின் இளவரசன் ஆர்ச் பேர்டினன்ட் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து 1918 நவம்பர் 11ம் திகதி வரை முதலாம் உலகப்போர் இடம்பெற்றது.

**2) இரண்டாம் உலக மகாயுத்தம்**

ஜேர்மனி தேசியவாதியான அடொல்ப் ஹிட்லர் 1937 செப்டம்பர் 01இல் போலந்தை கைப்பற்றியதை அடுத்து 1945 ஓகஸ்ட் 15ம் திகதி வரை இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்தது.

**3) வளைகுடா யுத்தம்**

1990 இல் ஈராக் குவைத்தை ஆக்கிரமித்தது. இதனை எதிர்த்து அமெரிக்கா தலைமையிலான 28 நாடுகள் ஒன்று சேர்ந்தது 1991 இல் நடாத்தப்பட்ட "**பாலைவனப்புயல்**" எனும் நடவடிக்கை மூலம் ஈராக் படைகள் தோற்கடிக்கப்பட்டன. இவ்வாறு குவைத்தை மீட்க மேற்கொள்ளப்பட்ட இவ்யுத்தம் வளைகுடா யுத்தம் எனப்படுகிறது.

**4) பொஸ்னிய யுத்தம்**

யூகோஸ்லாவிய குடியரசுகளில் ஒன்றான பொஸ்னியா, கெர்ச்சகோவின் முஸ்லீம் சேர்பிய குரேஷிய இனத்தவர்களிடையே இப்போர் இடம்பெற்றது. இது டேய்டன் உடன்படிக்கை மூலம் தீர்க்கப்பட்டது.

**5) கொசோவோ யுத்தம்**

யூகோஸ்லோவிய குடியரசுகளில் ஒன்றாக இருந்த கொசவோவில் 90 % அல்பேனியர்கள், 10 % சேர்ப்பியர்கள் வாழ்ந்தனர். யூகோஸ்லோவிய அரசால் அல்பேனியர்கள் பல துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டதை அடுத்து இவ்யுத்தம் ஏற்பட்டது. பின்னர் ஐ.நாவின் நேட்டோவினால் யூகோஸ்லாவிய படைகள் விரட்டப்பட்டதுடன் யுத்தம் முடிவுற்றது.

**ஆக்கம் : ச. அனோஜன்**
தரம் 9K

# ஆசிரியர் குழாம் 2012



# ஆசிரியர், மாணவர் வெற்றிக்கு தேவையான சில அடிப்படையான நம்பிக்கைகள்



## தைத்ரீயோபநிஷத் சொல்கிறது. . . . .

**1) கடவுள் நம்பிக்கை**

ஓம் சஹனாவவது - இருவரையும் கடவுள் காப்பாராக

**2) மாணவ - ஆசிரிய வளர்ச்சியில் நம்பிக்கை**

சஹனௌ புனக்து - சேர்ந்து வளர்ச்சி பெறுவோம்.

**3) கற்பதில் கற்பிப்பதில் ஆற்றலில் நம்பிக்கை**

சஹ வீர்யம் - சேர்ந்து ஆற்றல் பெறுவோம்.

**4) மாணவ - ஆசிரிய சேர்ந்த உழைப்பில் நம்பிக்கை**

கரவாவகை - சேர்ந்து உழைப்போம்.

**5) தன்னம்பிக்கை**

தேஜஸ் வினாவதீதமஸ்து - கற்றது பயனுள்ளதாகட்டும்.

மா வித் விஷாவஹை - வெறுக்காமல் இருப்போம்.

**1) இறை நம்பிக்கை -** இது நம்மை ஆளும் மேலான சக்தி.

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும், தெய்வம் உண்மை என்று தானறிதல் வேண்டும்.

பிரார்த்தனைகள் உறுதியாகப் பலன்தரும், என்ற நம்பிக்கை இறை நம்பிக்கையின் மூலமாகவே திடப்படுகிறது. இறைநம்பிக்கை என்பது ஆன்மாவின் ஜன்னல்.

கடவுளிடம் கடுகளவு நம்பிக்கை உனக்கு இருந்தாலும், ஒரு மலையை தொலை தூரத்திற்குச் செல் என்று சொன்னால் அது நகரும்!

இறைநம்பிக்கை உள்ள ஒருவனுக்கு, இறைவன் அருள் கூறுவதைக்கேட்டு, நேரடியாகப் பதில் தருவது போல் வாழ்க்கை நிகழ்வுகள் இருக்கும். எத்தகைய நிலையிலும் அவனது மனம் சமநிலைக்கு எளிதில் திரும்பும்.

"நிர் பல்கே பல் ராம்" - பலம் அற்றவனுக்கு ராமரே பலம், என்பது போல கடவுள் அவனுடனேயே இருந்து என்றும் காப்பார்.

திருவள்ளுவர் தெளிவுபடுத்துகிறார் :

"கடவுள் உண்டா? கடவுள் இருக்குமானால் கண்ணுக்குத் தெரியவில்லையே? உண்டு என்பவர்கள் முட்டாள்கள். கடவுள் நம்பிக்கை மூட நம்பிக்கை" என்று சிலர் வாதம் செய்கிறார்கள்.

உலகமெல்லாம் போற்றும் திருவள்ளுவர் இது பற்றி என்ன கூறுகிறார்? சிந்திப்போம்.

**உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்(து)**
**அலகையா வைக்கப்படும்**

என்பது வள்ளுவர் அமுதவாக்கு. "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பது பிங்கல நிகண்டு. எனவே உலகம் என்ற சொல் அறிவு நிறைந்த ஆன்றோரையே குறிக்கும்.

ஆன்றோர்கள் உண்டு உண்டு என்று கூறுவதை இல்லையென்பவனைப் பேய், என்று ஒதுக்கிட வேண்டும் என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவர் தெளிவுபடுத்துகிறார். இது பற்றி நன்கு சிந்திப்போமாக.

கடவுள் என்ற சொல்லின் பொருள் என்ன? கடவுகிறவன் கடவுள். கடவுதல் - செலுத்துதல். உடம்பை உயிர் செலுத்துகிறது. உயிரைக் கடவுள் செலுத்துகிறார். காரை டிரைவர் செலுத்துகிறான். டிரைவரைப் பின் சீட்டில் உள்ள எஜமான் செலுத்துகிறான். இறைவன் உயிர்க்கு உயிராய் உள் நின்று நம்மைச் செலுத்துகிறான். உடம்புக்குள்ளே உயிர் உயிருக்குள்ளே கடவுள்.

2) **மாணவ - ஆசிரிய வளர்ச்சியில் நம்பிக்கை** - எதிர்காலம் பற்றிய நமது நம்பிக்கையைத் தன்னுள் கொண்டிருக்கும் குழந்தையின் மீது ஆசிரியர் நம்பிக்கை கொள்ளவேண்டும்.

'நீ ஒன்றுக்கும் உதவாதவன்' என்று ஒரு மாணவனிடம் ஒரு போதும் சொல்லாதீர்கள். ஒரு சிறுவனைப்போல் உங்கள் வாழ்வை எளிமையானதாகவும், நேர்மையானதாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள்.

இந்த நம்பிக்கை மட்டும் உங்களுக்கு இருக்குமானால் கல்வி கற்பித்தல் ஒரு நாளும் உங்களைச் சோர்வு அடையச் செய்யாது. குழந்தையின் கண்களில் ஒளிரும் சுடர் உங்கள் இதயத்தை மகிழ்ச்சியால் நிரப்பும்.

3) கற்பதில் நம்பிக்கை - வெளிச்சம் தரும் ஒரு விளக்கு தொடர்ந்து எரியவேண்டும். ஆகவே ஓர்ஆசிரியர் கடைசிவரை கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.

பொழுது போக்கிற்கான புத்தகங்கள், ஒரு முறைக்கு மேல் படிப்பதற்கு அருகதையற்ற இதழ்கள், பத்திரிகைகள், இவற்றைப் படிப்பதோடு நில்லாமல் நாம் கற்றுள்ளது எவ்வளவு சிறிது என உணர்ந்து, நம்மை நாண வைக்கும் சிறந்த நூல்களைப் படிக்க வேண்டும்.

ஓரிரண்டு நூல்களை நமது வாழ்நாள் முழுவதிற்குமான துணைகளாகக் கொள்ள வேண்டும். சுவாமி விவேகானந்தர் கீதையையும், Imitation of Christ என்ற நூலையும் எங்கு சென்றாலும் கொண்டு செல்வார்.

4) **தொழிலில் நம்பிக்கை** - முதலில் ஓர் ஆசிரியர் தனது தொழிலில் பூரண நம்பிக்கை கொள்ளவேண்டும். தனது தொழிலைச் சம்பாதிப்பதற்கான ஒரு வேலை, உகந்த தொழில் என்று மட்டும் கருதாமல் அவற்றை விட ஓர் உயர்ந்த சேவையாக மதிக்க வேண்டும். ஆசிரியப் பணியைத் தமது வாழ்வின் லட்சியமாகக் கொள்ள வேண்டும்.

சமூகத்தில் புனிதமாகக் கருதப்படும் பல பணிகளை விட எவ்விதத்திலும் ஆசிரியப் பணி புனிதம் குறைந்ததல்ல. எனவே ஓர் ஆசிரியர் தனது தொழில் பற்றித் தலைநிமிர்ந்து பெருமிதம் கொள்ளலாம்.

ஆசிரியர் பாடங்களைக் கற்பிப்பதோடு நின்றுவிடக் கூடாது. அவர் மாணவர்களின் மனங்களை எழுச்சி பெற செய்யவேண்டும். ஆசிரியர் அளிக்கும் தகவல்கள் முக்கியம் அல்ல. அவர் அவற்றின் மூலம் அளிக்கும் உள்ளொளியும், எழுச்சியுமே மிக முக்கியமானவை.

5) **தன்னிடம் நம்பிக்கை** - எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவனுக்கு தன்னம்பிக்கை வேண்டும்.

தன்னைத் தானே தாழ்த்திக்கொள்வது சுயபச்சாதாபம். இவற்றை விட்டொழிக்க வேண்டும். சுய பச்சாதாபம் தன் புகழைத் தானே பாடுவதை விட இழிந்தது.

'அம்ருதஸ்ய புத்ரா - பேரின்பத்தின் புத்திரர்களே', என்று கூறுகின்றது உபநிடதம். 'மனிதன் பாவியல்ல,

அவனைப் பாவி என அழைப்பதே பாபம் என்கிறார் சுவாமிஜி.

ஆகவே நீங்கள் முதலில் உங்கள் மீதே நம்பிக்கை வையுங்கள்.



**தொகுப்பு : சுவாமி கபாலீசானந்தா ஜீ**
மட்/இராமகிருஷ்ண மிசன்

# புகழ்மிகு மட்டுநகர்

இயற்கை எழில் கொஞ்சும் இனிதான மட்டுநகர்
இனிதான இசைபாடும் கடற்கரையோர அலைகள்
இது மட்டுமா? பச்சை பரப்பும் இயற்கை வனாந்தரம்
தங்க நிறத்தில் தொங்கிக் கிடக்கும் நெல் மணிகள்
மட்டு நகரின் இனிதான இயற்கை எழில்கள் இவை

கவித்துவம் பல படைக்கும் கவிஞர்கள் பலர் இங்கே
இசையினை வளர்த்தெடுக்கும் இசைமாந்தர்கள் பலர் இங்கே
கருணையோடு பாட்டிசைக்கும் புலவர்கள் பலர் இங்கே
கலைச்சரித்திரம் பலபடைக்கும் புருசர்கள் பலர் எம்மண்ணில்



வீரர்கள் பலரை நல்விதையாய் விதைத்தது நம்மண்
இரும்பரசன் சான்றோ சங்கரதாசை ஈன்றது எம்மண்
முத்தமிழ் வித்தகரை எமக்களித்தது எம் புனித மண்
முத்து முத்தான பல சரித்திரத்தை ஏற்றது எம்மண்
வானளவில் வரலாற்றைப் பெற்றது எம் மட்டுமண்


நெடுஞ்சாலைகள் புகைப் பாதைகள் பல தன்னகத்தே
அருளாட்சி புரியும் பல்மத வணக்க முறை எம் மண்ணிடத்தே
காகித உற்பத்தியில் பெயர்பெற்றதும் மட்டு மண்தானே
விளையும் விந்தையான விவசாயத்திற்கு சிறப்பிடமிதுதானே
மூவளமும் சேரப் பெற்றது எம் மட்டு நகர்தானே.

**ஆக்கம் : ந. வினோ**
தரம் 12 கலை (2014)

# தந்தை யார்?



- விஞ்ஞானத்தின் தந்தை கலிலியோ கலிலி.
- சோசலிசத்தின் தந்தை காள்மாக்கஸ்.
- கேத்திர கணிதத்தின் தந்தை பைதகரஸ்.
- கம்பியூட்டரின் தந்தை சார்ஸ் பபேஜ்.
- வைத்தியத்தின் தந்தை கிப்போகிரட்டிஸ்.
- உளவியலின் தந்தை சிக்மண்ட பிராய்ட்.
- நவீன விண்வெளியுகத்தின் தந்தை கியோல் கோகோல்ஸ்க்கி.
- ஹோமியோபதியின் தந்தை சாமுவேல் ஹனிமன்.
- ஆயுர்வேத மருத்துவத்தின் தந்தை சாரகா.
- கெரில்லா யுத்தத்தின் தந்தை ஷேகுவேரோ.
- அரசறிவியலின் தந்தை அரிஸ்டோட்டில்.
- வரலாற்றின் தந்தை கெரோடற்ஸ்.
- சொற்பொழிவின் தந்தை டெமாஸ்தனிஸ்.
- நவீன காவியத்தின் தந்தை பிக்காசோ.
- ஜனநாயகத்தின் தந்தை ஜீன் ஜக் ரூசோ.
- நவீன ஒலிம்பிக்கின் தந்தை பராபெய்றி டிகௌபேட்.



**தொகுப்பு : G. கோபிநாத்**
தரம் 11M

# வேண்டாம் இந்தப்போர்

மனித வரலாற்றிலே அவன் தாண்டிய மைற்கற்கள் பல அவை ஒவ்வொன்றும் மனிதனின் ஆக்கும் சக்தியையும், அழிக்கும் சக்தியையும் பறைசாற்றி நிற்கின்றன. எத்தனையோ சாதனைகளும், கண்டு பிடிப்புக்களும் மனித இனத்தை ஆக்கும் சக்தி கொண்டனவாக வெளிக்காட்டி உள்ளன. இவற்றினால் மனிதனை படைப்புக்களிலேயே உயர்ந்த படைப்பாகக் கொள்கிறோம். என்றாலும் அம்மனிதனின் அழிக்கும் சக்தியும் உலக வரலாற்றில் அவ்வப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய வெளிப்பாடுகளில் பிரதானமானதாக போரைக் குறிப்பிடலாம்.

போர் என்றாலே மிகவும் அபாயமும், பயங்கரமும் துக்கங்களும் நிறைந்ததாகும். போரின் பயனைக் கொண்டு அவை பிரிக்கப்படுகின்றன. ஒன்று நன்மை தந்த போர் மற்றையது தீமை தந்த போர் நன்மை தரும் போரை எடுத்துக்கொண்டால் 15ஆம், 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட போரால் ஐரோப்பாவிற்கே விடிவு காலம் தோன்றியது. ஆனால் 1ஆம், 2ஆம் உலக யுத்தங்களால் பல தீமைகள் ஏற்பட்டன. உயிர், பொருட் சேதங்கள் ஏற்பட்டன. பல உயிரினங்கள் அழிக்கப்பட்டன. காயமடைந்தன. கட்டிடங்கள் பல கற்களாயின, பலர் அகதிகளாக்கப்பட்டனர். நாட்டின் கலாசாரம், அமைதி, பொருளாதாரம் எனும் மூன்றும் சீர்குலைந்து சின்னாபின்னமாகியது.

யுத்தங்கள் பல காரணங்களை முன் வைத்து நடக்கின்றன. பிரதானமானவையாக நிலத்திற்காக, உரிமைக்காக நடைபெறும் யுத்தங்களை குறிப்பிடலாம். இவ்வாறு நிலத்திற்கான யுத்தங்கள் என 1ஆம், 2ஆம் யுத்தங்களையும் குறிப்பிடலாம். இந்த யுத்தங்களின் போது ஜப்பானின் இரு முக்கிய நகரங்களில் அணுகுண்டு வீசப்பட்டது. இவ் அணு குண்டு வீசி பல தசாப்தங்கள் நகர்ந்தாலும் இன்னும் அம் மண்ணில் அதன் விளைவு தெரிகிறது.

அங்கு ஓர் புல் பூண்டு கூட முளைப்பதில்லை. அங்கு பிறக்கும் குழந்தைகள் எல்லாம் உடல் ஊனமுற்றவர்களாகவே பிறக்கின்றனர் என்றால் எவரேனும் நம்புவீர்களா? நம்பித்தான் ஆக வேண்டும். ஏனெனின் அது முற்றிலும் உண்மை இங்கு மண்வளம் முற்றாக அற்றுப் போய்விட்டது எனலாம். இப்போரின் விளைவால் ஐக்கிய நாடுகள் சபை தோற்றம் பெற்றது. இவ் சபையில் பல சட்டங்கள், காணப்படுகின்றன. இதன் முதலாவது சட்டமே ஒரு நாட்டின் மீது இன்னோர் நாடு நிலம் பிடிக்க போர் தொடுப்பது குற்றமாகும் எனக் கூறுகிறது. இதில் 172 நாடுகள் கையொப்பமிட்டன. அதில் இலங்கையும் ஒன்றாகும்.

ஆனால் இப்போது இடம்பெறுவது நிலத்திற்கான போர் இல்லை. உரிமைக்கான போராகும். உதாரணமாக சிறிய நாட்டில் நடக்கும் போர், முடிந்தேறிய லிபிய அரசாங்கத்திற்கும் மக்களுக்குமான போர், அமெரிக்கப்புரட்சி பிரான்சியப் போர் என்பவற்றைக் கூறலாம். இவ் யுத்தங்களை பார்த்த அமெரிக்க படைவீரர் ஒருவர் **"போரே நீ போ இவ் உலகைவிட்டு நீ போ"** என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டார். நாம் பல அப்பாவி மக்களைக் கொன்றொழித்து அநாதைகளாக்கி, அகதிகளாக்கி நிலத்தைப்பிடிக்க நிலம் என்ன அவர்களின் பாட்டன், முப்பாட்டன் சொத்தா நமக்கு பூமாதேவி அளித்த ஓர் பொதுச்சொத்து என்று எண்ணி நாம் செயற்பட வேண்டும்.

இதை கிருஷ்ண பரமாத்மா, **"எதற்காக நீ அழுகின்றாய் எதை நீ கொண்டு வந்தாய் எது உன்னுடையது என்கிறாயோ அது நாளை மற்றவருடையது. மற்றைய நாள் வேறொருவருடையது"** என அர்த்தத்தெளிவாகக் கூறுகின்றார். நமக்கு இங்கு எவ்வித நிலமும் சொந்தமில்லை.

நம்மை புதைக்கும் ஆறடி நிலம் கூட எமக்குச் சொந்தமில்லை என்பதை இன்னும் பலர் உணரவில்லை. எந்தச் சண்டையும் சிறிய வாய்த்தர்க்கத்திலிருந்து தான் ஆரம்பிக்கின்றது. ஆகவே மாணவர்களாகிய நாம் ஒற்றுமையாகவும், சகோதரத்தன்மையுடனும் செயற்பட்டு நாளை உலகை வெல்வோம். நாம் எதிர்கால பூமியை ஓர் போரில்லா சமாதானமான உலகாகச் செய்வோம் என மனதினுள் உறுதி செய்வோம்.



*சமாதானமான உலகமே மக்கள் வாழச்சிறந்தது.*

**ஆக்கம் : பு. சங்கீர்த்தன்**
தரம் 8R



முகாமைத்துவக் குழு



ஒழுக்காற்றுக் குழு

# புதிய நட்பு



பிரசன்னா என்றும் போல் அன்றும் தனது காலைக்கடன்களை முடிதது பாடசாலை செல்ல ஆயத்தமானான். அவனது உதட்டிலும் கண்களிலும் சிறு புன்னகை தென்பட்டது. அன்று பூத்த மலரைப்போல அவன் முகம் பிரகாசமாகக் காணப்பட்டது. அந்த புன்னகைக்குக் காரணம் அவன் உயர்தரம் கற்பதற்காக புதிய பாடசாலை செல்லவிருந்ததுதான். ஏனென்றால் அவன் ஏற்கனவே கற்ற பாடசாலையில் உயர்தரம் கற்கக்கூடிய வசதிகள் இல்லை. ஆனால் அவன் சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவன். தான் ஏற்கனவே கற்ற பாடசாலையிலும் ஆசிரியர்களிடமும் நன்மதிப்புப்பெற்றவன்.அவனது கல்வியிலும், ஒழுக்கத்திலும் அவன் சிறிது கூடத் தவறியதில்லை. இதன்காரணமாகவே அவன் விண்ணப்பித்த பாடசாலையிலும் உடனே அனுமதி வழங்கப்பட்டது.

வறுமையும் புலமையும் சேர்ந்தே இருக்கும் அது அவன் வாழ்க்கையில் உண்மையாயிற்று. மழை நீரைக் கூட அவன் வீடு முகஞ்சுழிக்காமல் வரவேற்கும். மழைக்காலத்தில் அவன் வீட்டுக்கூரையிலிருந்து வழியும் நீரை எடுக்க ஒரு சிறிய பாத்திரம் வைப்பான். அன்றிரவு அந்த பாத்திரத்திற்குள் நீர் விழுகின்ற போது வரும் சத்தமே அவனுக்கு தாலாட்டொலி. ஏனென்றால் தாலாட்டுப்பாட அவனுக்கு தாயில்லை. ஆனாலும் ஒரு தாய்க்கு நிகராக அவன் தந்தை அவனை கவனித்துக்கொண்டார். அவனது தந்தை ஒரு சிறிய பழக்கடை வைத்திருந்தார். பிரசன்னாவைப்பற்றியும் அவனிடம் இருக்கும் திறமைகளைப்பற்றியும் தந்தை நன்கு தெரிந்தவர். பிரசன்னாவிற்கும் தனது தந்தைமேல் மிகவும் பிரியம்.அவரும் அதற்கேற்றால்போல் நடந்துகொண்டார். அவரால்முடிந்தவரை பிரசன்னாவின் கல்வி நடவடிக்கைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பார். பிரசன்னாவும் அவருக்கு ஏற்றாற்போல் குடும்பநிலை அறிந்து வீண் செலவுகள் செய்யமாட்டான்.

பிரசன்னாவிடம் ஒரு சீருடையே இருந்தது. அது அவனுக்கு சிறிதாகப் போனதால் அவனது தந்தை தைத்துக்கொடுத்த புதிய சீருடையை அணிந்து கொண்டு பட்டர் பூசிய பாணையும் எடுத்து தனது புத்தகப்பைக்குள் வைத்துக்கொண்டு பையை தோளில் போட்டுக்கொண்டு கண்ணாடியின் முன் நின்று கொண்டு அங்கும் இங்கும் பார்த்துப் பார்த்து தன்னைப்பற்றி தானே பெருமையாக நினைத்துக்கொண்டான். கண்ணாடியும் அவன்அழகை அன்று மெருகூட்டிக் காட்டியது. சுவாமியறைக்கு வந்து கடவுளை வணங்கிவிட்டு தனது தாயின் உருவப்படத்தையும் வணங்கிவிட்டு, தந்தையின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டான். தந்தையின் கண்கள் கண்ணீரால் நிறைந்தன. மகனின் எதிர்காலத்தை நினைத்து அவரின் மனது உற்சாக தாண்டவமாடியது. உடனே அவர் சட்டைப்பைக்குள் கையைவிட்டார். அதற்குள் பத்து ரூபாய் மட்டுமே இருந்தது. அதை அவனிடம் கொடுத்து **"செலவிற்கு வைத்துக்கொள்"** என கூறி அனுப்பினார். அவன் முகத்தில் சிறுமகிழ்ச்சி தென்பட்டாலும் அவன் மனதில் ஒரு மூலையில் பதற்றமும் பயமும் மறைந்து கொண்டிருந்தன.

அவன் வீட்டிலிருந்து ஒரு மைல் தூரத்திலேயே அவன் பாடசாலை இருந்தது. தன் காலே தனக்குத்துணை என்பது போல் நடந்தே சென்றான். போகும் வழியில்தென்படும் கோயில்களையெல்லாம் வணக்கிக் கொண்டே சென்றான். பாடசாலைவாசலை அடைந்துவிட்டான். தனது வலதுகாலை எடுத்து வைத்து பாடசாலைக்குள் நுழைந்தான். அவன் இதயத்துடிப்பு அதிகமானது, கைகள் வியர்த்தன, அவனது உதடுகள் காய்ந்து, உடலில் சிறு நடுக்கம் ஏற்பட்டது. உடனே அவன் மனதிற்குள் கடவுளை வணங்கினான். அவனை வரவேற்பதைப்போல் அப்பாடசாலையிலுள்ள முருகன் கோயில் மணி ஒலித்தது. கடவுள் ஆசீர்வாதித்துவிட்டார் என்ற சிறு மனத்தைரியத்துடன் பாடசாலைக்குள் நகர்ந்தான்.

உள்ளே ஒருவன் புத்தபையுடன் அங்குமிங்கும் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான். அவன் கண்களிலும் சிறு பதற்றம் தென்பட்டது. அவனிடம் நெருங்கிச் சென்றான் பிரசன்னா. **"நான் புதுசா வந்திருக்கன் இங்க உயர்தர கலை வகுப்பு எங்க இருக்குதுன்னு சொல்லுவீங்களா?"** என்று கேட்டான். அவன் சிறு புன்னகையுடன் **"நானும் உங்களைப்போலத்தான்"** என்று கேலியாகக் கூறினான். பிரசன்னாவிற்கு மனதிற்குள் ஒரு சிறிய தைரியம் வந்தது. மற்றையவனுக்கும் அதே நிலைமைதான். இருவரும் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொண்டனர். அதில் அவன் பெயரைக் கேட்ட வேளையில் அவன் பெயர்

நிதிகேஷன் என்றும், அவனைப் பற்றிய மற்றைய விடயங்களையும் அவன் கூறினான். பிரசன்னாவும் தன்னை அவனிடம் அறிமுகப்படுத்திக்கொண்டான்.

இருவரும் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் அவர்களை நோக்கி ஒருவர் வந்தார். அவர் வேறு யாருமல்ல அந்தப் பாடசாலையில் கற்பிக்கும் ஒரு ஆசிரியர்தான். இவர்கள் இருவரிடமும் வந்து விசாரித்தார். இவர்களும் தமது புதிய வருகையைப் பற்றிக் கூறினர். அவரும் அதைக் கேட்டவுடன் **"என்னோடு வாங்க"** என கூறிக்கொண்டு இருவரையும் அழைத்துச் சென்றார். இருவரையும் ஒரு வகுப்பறைக்குள் கூட்டிச்சென்றார். அதுதான் உயர்தர மாணவர்களுக்கான கலை வகுப்பு. அங்குள்ள மாணவர்களிடம் இவர்களை அறிமுகப்படுத்திவிட்டு **"போய் இருங்க"** என்ற கூறிவிட்டுச் சென்றுவிட்டார். கடைசி வரிசையில் போய் உட்கார்ந்தான் பிரசன்னா. நிதிகேஷனும் அவனுக்கு அருகிலேயே உட்கார்ந்தான். வகுப்புக்குள் இருந்த மற்றைய மாணவர்கள் இவர்களைப் பார்த்து தங்களுக்குள் ஏதோ ரகசியம் பேசிக்கொண்டனர்.

அந்த வகுப்புக்குள் இருந்த ஒருவன் இவர்களை நோக்கி வந்தான் இவர்களைப் பற்றி விசாரித்தான். பிரசன்னாவும் பதற்றத்துடன் அவனைப்பற்றியும் அவனது நண்பனைப்பற்றியும் கூறினான். பின்னர் பிரசன்னா அவனைப்பற்றியும் ஏனைய மாணவர்களைப்பற்றியும் கேட்டான். அவன்பெயர் தனுஷன் என்றும், அவனைப்பற்றியும் கூறினான். பிரசன்னாவிற்கு மனதிற்குள் இருந்த பயம் சிறிது சிறிதாக விலகத்தொடங்கியது. பிரசன்னா மற்றவர்களைப் பற்றி சொல்லல்லையே, என்று அழுத்தமாக விசாரித்தான். நீங்க இப்படி கேக்கிறதால நான் உங்களுக்கு டானியலைப்பற்றித்தான் சொல்லவேணும் என்றான் தனுஷன். **"யாரந்த டானியல்"** என்று வினவினான். நிதிகேஷன். அதற்கு "அவன் ஒரு வர்த்தகரின் மகன், பெரும் செல்வந்தன் இந்த வகுப்பிலேயே மிகவும் மோசமானவன். இங்க இருக்கிற மாணவர்களையெல்லாம் பயமுறுத்தி அவர்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவன், ஆசிரியர்கள் யாருக்கும் அடங்காதவன், அவன் வீணாகச் செலவு செய்வான், அதனால் இவனின் அடியாட்களைப் போல மூன்று நண்பர்கள் இவன் பின்னாடி திரிவார்கள். அவனிடம் நீங்க கொஞ்சம் ஜாக்கிரதையாக இருங்க" என்று கூறிக் கொண்டிருக்கும் போதே காலைப்பிரார்த்தனைக்கான மணி ஒலித்தது. எல்லா மாணவர்களும் காலைப்பிரார்த்தனைக்காகச் சென்றனர். அவர்களின் பின்னால் பிரசன்னாவும், நிதிகேஷனும் சென்றனர். காலைப்பிரார்த்தனை பிரசன்னா ஏற்கனவே கற்ற பாடசாலையை விட சற்று வித்தியாசமாக இருந்தமையால் அது அவனுக்கு ஒரு புது அனுபவமாக இருந்தது. காலைப்பிரார்த்தனை முடிந்ததும் ஏனைய மாணவர்களுடன் இருவரும் வகுப்புக்குள் வந்து சேர்ந்தார்கள். மற்ற மாணவர்கள் எல்லாம் தத்தமது வேலைகளை பார்த்தவாறும், அவரவர் நண்பர்களுடன் சிரித்துப் பேசியவாறும் இருந்தனர். ஆனால் பிரசன்னாவிற்கு அந்த டானியலைப் பற்றிய எண்ணம் தான். அவன் டானியலை அதுவரை பார்த்திராததால் டானியல் என பல முகங்கள் அவன் மனத்திரையில் வந்துபோயின. சினிமாவில் வரும் வில்லன் கதாப்பாத்திரங்களைப் போல கற்பனையில் உருவகித்துக்கொண்டிருந்தான். டானியலை வகுப்பில் உள்ளவர்களையெல்லாம் டானியலாக நினைத்தான். பிரசன்னாவின் தழும்பிய நீரைப்போல் மனது அங்கும் இங்கும் அலைபாய்ந்தது. அவன்முன்பிருந்த பதற்ற நிலைக்கு மீண்டும் சென்றான். பதற்றத்தைத் தணிப்பதற்காக நிதிகேஷனிடம் பேச்சுக்கொடுத்தான்.

மெல்ல வீசிய காற்று திடீர் என்று சூறாவளி ஆனதைப்போல் ஒரு பெரும் சிரிப்பொலி கேட்டது. அனைத்து மாணவர்களும் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தனர். பிரசன்னாவும் பார்த்தான். மூன்று மாணவர்கள் சிரித்துக்கொண்டே வகுப்பிற்குள் நுழைந்தனர்.

அதில் ஒருவனின் சிரிப்பொலிதான் அது. அவன் மிகவும் உயரமாகவும், திடகாத்திரமான உடலுடனும், பார்ப்பவர்கள் பயப்படும்படியான விழிகளுடனும் இருந்தான். அவன் வேறுயாருமல்ல அந்த டானியல்தான். பிரசன்னாவிற்கு அவனைப் பார்த்தவுடன் இவன்தான் டானியல் என அவன் மனது கூறியது. அங்கிருந்தவர்களில் ஒருவன் டானியலைப் பார்த்து **"குட்மோர்னிங் டானியல்"** என கூறினான். இதைக் கேட்டதும் பிரசன்னாவிற்கு உறுதியாகியது. கைகளைப்பிசைந்தவாறு உட்கார்த்திருந்தான் பிரசன்னா. டானியலின் நண்பன் ஒருவன் டானியலின் தோளில் தட்டி பிரசன்னாவைக் காட்டி கண்களால் ஏதோ சைகை காட்டினான். அப்பொழுதான் டானியல் பிரசன்னாவைப் பார்த்தான்.

பிரசன்னா மிகவும் சாதுவானவன். அவனின் முகமே அதைக்காட்டிக்கொடுத்துவிடும். இதைக் கண்ட டானியலுக்கு ஒரு சிறு மகிழ்ச்சி. அவர்கள் இருவரையும் மிரட்ட வேண்டும் போல் இருந்தது அவனுக்கு. அவர்கள் இருவரையும் அழைத்தான். பிரசன்னாவிற்கு உடல் நடுங்கியது, உதடு துடித்தது, கைகள் வியர்த்தன, நாவறண்டது, கண்களில் பயம் தென்பட்டது. மெதுவாக இருவரும் அவர்களின்

அருகில் சென்றனர். டானியல் நிதிகேஷனிடம் அவனைப்பற்றி விசாரித்தான். அவனும் சற்று நடுக்கத்துடன் பதிலளித்தான். பிரசன்னாவை விசாரித்தான், அவன் குரல் அடைத்தது. சற்றுச் செருமிக்கொண்டே வார்த்தைகளைத் தேடிப்பிடித்து பதிலளித்தான். டானியலின் நண்பனொருவன் டானியலைப் பார்த்து உதட்டில் சிறு புன்னகையுடன் கண்களால் ஏதோ சைகை காட்டினான். அந்தப் புன்னகைக்கான அர்த்தத்தை புரிந்து கொண்ட டானியல் பிரசன்னாவையும், நிதிகேஷனையும் பார்த்து உங்களுக்கு **"நடனமாடத் தெரியுமா?"** என வினவினான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அப்படியே நின்றனர். **"சரி விடுங்கள் உங்களிற்கு பாட்டாவது பாடத் தெரியுமா?"** என்று மீண்டும் கேட்டான் டானியல். இருவரும் மெதுவாக தலையை அசைத்து இல்லை என்று கூறினர். இருவரதும் நிலையைக் கண்டுடானியலும் அவனது நண்பர்களும் ஒரு கேலிச்சிரிப்புச் சிரித்தனர். பிரசன்னாவின் மனது சற்றுக் கலக்கமடைந்தது.
திடீர் என்று டானியல் நிதிகேஷனின் முன் பாய்ந்தான். அவனது சட்டைப்பைகளை தடவியவாறே அவனிடம் பணம் கேட்டான். அதற்கு நிதிகேஷன் அவனின் கையைத் தட்டிவிட்டு பணம் தரமறுத்துவிட்டான். டானியலுக்குமிகவும் கோபம் வந்தது. உடனே டானியல் அவன் கன்னத்தில் அறைந்துவிட்டான். இதைக்கண்ட பிரசன்னாவின் கண்களில் நீர் ஊற்றெடுத்தது. தன்னையும் அவர்கள் அடித்துவிடுவார்களோ என்ற பயம் அவனுக்கு வந்தது. அவர்கள் கேட்கும் முன்னமே தன்னிடமுள்ள அவனது தந்ததை கொடுத்த பத்து ரூபாயை எடுத்து நீட்டி **"இந்தாங்க என்னிடம் இவ்வளவுதான் இருக்கு இதை வைத்துக் கொள்ளுங்க இவனை விட்டுடுங்க,"** எனக் கெஞ்சினான். தம்மைக்கண்டு பயந்துவிட்டதாக டானியலிற்குள் ஒரு பொய்ப்பெருமை. அது அவர்களின் புன்னகையில் தென்பட்டது. அந்தப் பணத்தை வாங்கிக்கொண்டு **"நாளைக்கும் வருவோம் இருவரும் பணம் கொண்டு வரனும்"** என்று கூறிவிட்டு டானியலும் அவனது நண்பர்களும் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றுவிட்டனர். இடைவேளையின் முன்பே சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று தம்மிடமுள்ள பணத்தையெல்லாமே நண்பர்களுடன் செலவு செய்வது டானியலின் ஒரு பழக்கமாகவே இருந்தது.

பிரசன்னா யாருக்கும் இதுவரை இப்படி பயந்ததில்லை. டானியல் சென்றவுடன் கடவுளுக்கு நன்றி சொல்லி பெருமூச்சு விட்டான் பிரசன்னா. அவனுக்கும் அவனது நண்பனுக்கும் அன்றைய நாள் ஒரு நரகமாகவே இருந்தது. எப்படியோ அன்றைய நாளை முடித்துவிட்டு வீடு சென்றான் பிரசன்னா. தனது தந்தையிடம் நடந்த எதையும் பிரசன்னாசொல்லவில்லை. அவன் மனதில் இன்றையநாள் சென்றதைப்பற்றியும், நாளைய நாளை எப்படி சமாளிக்கப்போகின்றோமோ என்ற எண்ணமும்தான் அவன் மனதை வாட்டியது. அவன் மனது சுடுகாடு மாதிரி ஆகிப்போனது.

அன்றுவரை அவன் தந்தையிடம் எதற்கும் பணம் கேட்டதில்லை. ஆனால் அன்று அவனுக்கு பணம் கேட்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தனது தந்தையிடம் பணம் கேட்டான்.அன்றும் அவர் பத்து ரூபாய் கொடுத்து அனுப்பினார். அதை வாங்கிக்கொண்டு பாடசாலை புறப்பட்டான். பணம் கிடைத்தது மகிழ்ச்சி என்றாலும், சிறு சஞ்சலமே அவன் மனதில் தென்பட்டது.

பாடசாலைக்குள் நுளைந்தான் பிரசன்னா. அன்றும் காலைப்பிரார்த்தனை முடிந்ததன் பின்பேடானியல் பாடசாலைக்குள் வந்தான். வகுப்பிற்குள் நுளைந்த டானியல் தனது நண்பர்களைக் கூட்டிக் கொணடு பிரசன்னாவிடம் தான் நேராக வந்தான். அவனுக்கு அருகில் நிதிகேஷனும் நின்றிருந்தான். அவர்கள் கேட்கும் முன்பே பிரசன்னாவும், நிதிகேஷனும் பணத்தை எடுத்துக் கொடுத்தனர். டானியலும் எதுவும் பேசாமல் சிறு கேலிச்சிரிப்பு சிரித்துவிட்டு **"நாளைக்கும் வருவோம்"** என கண்களால் சைகை செய்து விட்டுச் சென்றனர். அன்றும் அவர்கள் இடைவேளைக்கு முன்னமாகவே சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று விட்டனர். அந்த சமயத்திலே வகுப்புக்குள் அதிபர் வந்தார். அவரைக் கண்டதும் அனைத்து மாணவர்களும் எழுந்து மரியாதை செலுத்தினர். அவர் **"நாளை அனைவரும் பத்து ரூபாய் கொண்டுவர வேண்டும் ஆசிரியர் தினத்திற்காக. அப்படி கொண்டு வராத அனைவரும் தண்டனைக்கு உட்படுவீர்கள்;"** என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். இதை டானியல் அறிந்திருக்கவில்லை.

அடுத்தநாள் பிரசன்னா தந்தையிடம் பணம் கேட்டான். பிரசன்னா அன்று உணவு கொண்டு செல்லவில்லை. ஆகவே உணவுக்கும் சேர்த்து இருபது ரூபாய் கொடுத்தார். பத்து ரூபாய் தாள் ஒன்றும், மிகுதிப் பத்துரூபாயை சில்லறையாகவும் கொடுத்தார். பத்து ரூபாயை டானியலுக்கு கொடுத்துவிட்டு அன்று பட்டினி இருப்பதுதான் பிரசன்னாவின் எண்ணம். வீட்டிலிருந்து செல்லும்போதே வயிறுமுட்ட தண்ணீர் குடித்துவிட்டுச் சென்றான். பாடசாலை சென்றதும் என்றும் போல் டானியல் இவர்கள் இருவரிடமும் வந்தான். நிதிகேஷன் தன்னிடம் உள்ள பணத்தை எடுத்துக் கொடுத்தான். பிரசன்னா தாள் காசை மறைத்து வைத்துவிட்டு சில்லறையை எடுத்து நீட்டினான். அதைக் கண்டதும் டானியல் கேலியாகச்

சிரித்தான். **"நாங்கள் இதை பிச்சைக்காரனுக்குக்கூட கொடுத்ததில்லை என்று தற்பெருமையடித்துக் கொண்டான்."** அந்த வார்த்தைகளைக் கேட்டதும் பிரசன்னாவின் மனது கடல் மணலில் கட்டிய வீட்டைப்போல் இடிந்துபோனது. அவன் கண்களில் நீர் நிறைந்தது. டானியல் இதை நீயே வைத்துக்கொள் நாளை வரும்போது இதற்கும் சேர்த்து கொண்டுவா எனக் கூறிக்கொண்டு சிற்றுண்டிச்சாலைக்கு தனது நண்பர்களை அழைத்துக்கொண்டு சென்றுவிட்டான். பிரசன்னாவிற்கு நிதிகேஷன் ஆறுதல் கூறினான்.


அந்த சமயத்தில் அதிபரும் வந்தார். பணத்தைக்கேட்டார். அனைவரும் கொடுத்தனர். பிரசன்னாவும் சில்லறைகளைக் கொடுக்க பயந்து தாளை எடுத்துக் கொடுத்தான். அந்த சமயம் டானியலும் அவனது நண்பர்களும் வகுப்புக்குள் வந்தனர். அதிபரிடம் மாட்டிக்கொண்டனர். என்னசெய்வதென்றறியாமல் விழித்தனர். அதிபர் அவர்களிடமும் பணத்தைக் கேட்டார். இவர்கள்அனைத்து பணத்தையும் செலவு செய்ததனால் ஒன்றும் அறியாமல் விழித்தனர். டானியலுடன் இருந்த அனைத்து மாணவர்களும் தமது வகுப்பிலுள்ள சக மாணவர்களிடம் இரவல் பெற்றுக்கொடுத்து விட்டனர். ஆனால் டானியலுக்கு யாரும் பணம் கொடுக்க மறுத்துவிட்டனர்.

அவன் மனசு உடைந்தது. தனது நண்பர்களை நினைத்து வேதனைப்பட்டான். அதிபர் அவனிற்கு திட்டிக்கொண்டிருந்தார். அவன் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. அவனது அந்தநிலை பிரசன்னாவிற்கு வருத்தத்தைத் தந்தது. அவன் தன்னிடமுள்ள சில்லறைகளை எடுத்து அவனிடம் சிறு பயத்துடன் நீட்டினான். டானியலும் அந்த காசுகளை வாங்கிப்பார்த்தான். அவன் கண்களில் கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அவன் மெய்சிலிர்த்தது, அவன் கண்ணீர் அந்த நாணயத்தில் விழுந்தது. அப்பொழுது அந்த நாணயம் அவனுக்கு தங்கத்திற்கு நிகராகத் தெரிந்தது. அதிபரிடம் அந்தக் காசைக்கொடுத்துவிட்டு, ஓடோடிவந்து பிரசன்னாவின் கைகளைப் பற்றிக்கொண்டான். கல்லாய் இறுகிப் போய்க்கிடந்த அவன்மனம் கனிந்தது, தீயாய் இருந்த அவன் உள்ளம் பனிப்பாறையாய் மாறியது. பிரசன்னா அவனை மெதுவாக அணைத்துக் கொண்டான். நீயும் எனக்கு நண்பன் தானே என்று கூறினான். இதைக் கேட்ட டானியலின் நண்பர்கள் தலைகுனிந்தனர். டானியலும் பிரசன்னாவும் நண்பர்களாயினர். இதைக்கண்ட அதிபரும் இருவரையும் பாராட்டினார். நிதிகேஷனும் பிரசன்னாவை நினைத்து பெருமையடைந்து கொண்டான்.

தன் குணத்தை மாற்றிக்கொண்ட டானியல் பிரசன்னாவிற்கு தேவையான பண உதவி அனைத்தையும் செய்யத் தொடங்கினான். பிரசன்னாவும் டானியலின் உதவியை மதித்து ஏற்றுப் பயன்பெற்றதோடு, நன்றிமறவா நண்பனானான். நிதிகேஷன், டானியல், பிரசன்னா ஆகிய மூவரும் இணைபிரியாத நண்பர்களாகவும், வகுப்பிலே சிறந்த மாணவர்களாகவும் காணப்பட்டார்கள்.

**ஆக்கம் : க. ஆதித்தன்**
தரம் - 12 கலை

# சாதனை சாத்தியமே



சாதனை என்பது சாத்தியமே
சரித்திரம் வரைக்கும் சத்தியமே
அதை நீ உணர்ந்தால் பாக்கியமே
அதனால் வெற்றி நிச்சயமே

முயற்சி பயிற்சி இருந்தாலே
எல்லாம் முடியும் உன்னாலே
முடியும் என்று சொன்னாலே
முடிப்பாய் நீயும் முன்னாலே

இதயத்துடிப்பு உனக்குண்டு
இலக்கு என்பது நமக்குண்டு
உழைக்கும் உரிமை உனக்குண்டு
உழைப்பை விதைத்தால் உயர்வுண்டு

வாழ்க்கை என்பது போராட்டம்
வாழ்ந்தால் உலகம் பாராட்டும்
வாழ்வே உன்னைத் தாலாட்டும்
காலம் வந்தால் கொண்டாடும்

சாதனை செய்ய வயதில்லை
சோதனை இல்லா வாழ்வில்லை
இறைவன் இருக்கப் பயமில்லை
இதை நீ உணர்ந்தால் வீழ்வதில்லை

**சுயஆக்கம் : பி. ஷதுர்வணன்**
தரம் 11R



கல்வி அணிசாரா ஊழியர்கள்




இந்துமா மன்ற உறுப்பினர்கள்

# Kallady Bridge



*Kallady bridge is a road bridge in Eastern Sri Lanka. It is the longest bridge in Sri Lanka. It crosses Batticaloa lagoon and links Batticaloa West and Batticaloa East, enabling transport to East part of Batticaloa and Ampara, through the A4 highway. The bridge was built in 1924 during the time of Sir William Henry Maning. This bridge is called as Lady Manning Bridge. This bridge view from East. This used to be the longest bridge in the country at one time. This biggest bridge located at Kallady. Which is the main access path to the city from the southern places of the district. This bridge is also famous for singing fishes which was considered musical sounds heard in the Kallady lagoon in the fullmoon day.*

*The Kallady bridge is from hotel riviera, Batticaloa. It was built by the dutch. It is a long narrow bridge. The Kallady bridge is to be replaced by a new bridge built with Japanese aid. It is at this 75 year old landmark bridge that the romance of Batticaloa as the "Land of singing fish" was born. Perhaps it would be a good idea to keep this bridge as it is and use it for the ubiquitous bicycles and pedestrian traffic whilst errecting the new bridge alongside.*

*Any way Batticaloa Kallady bridge is called as Sri Lanka mirrir. Around 10000 vehicles cross the bridge on a daily basis and a number of accidents as well as inconveniences occour due to the narrowness of the bridge.*

*In addition to its history the Kallady bridge is also well known for a more mystic reason. Sri Lanka's veteran singer the late Gunadasa Kapuge sang "Kallady Paalama Paamula Sindu Kiyara Maluwo"(the singing fish beneath the kallady bridge.)*

*On full moon nights, during the period of April to September a faint but distinct musical sound. Resembling a plucked guitar rises from the lagoon waters in the area along the Kallady bridge a couple of kilometer off the town centre of Batticaloa.*

*Reports say that the mysterious music is attributed to a noise emanated from some from of a marinelife found in the lagoon and the best way to the music to dip on end of an our in the water and hold the other end to your ear.*

*We are very lucky to have this bridge. We can say it as gift to us. It must be protected.*

*by :* **Kubetharshan**
Grade 11[S]

# செழுந்தமிழ்ச் சிகரம்
# பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி . . .

தமிழன்னை பெற்றெடுத்த தவப் புதல்வர்கள் பலர். காலந்தோறும் அன்னையை அணி செய்துள்ளனர். அத்தகைய அருந்தவப் புதல்வர்களிலே தனிச் சிறப்பு வாய்ந்த தமிழ்ப்பெருங்கடல் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி.

**"தோன்றிற் புகழொடு தோன்றுக"**

எனும் வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப தனக்கு மட்டுமன்றித் தனது மொழிக்கும், தனது மண்ணுக்கும் பெருமை சேர்த்த அன்னார் எம்மை விட்டகன்று ஆண்டொன்று கடந்து விட்டது. ஆயினும் அத்துயர் மாறாத் தமிழ்நெஞ்சங்களில் நானும் ஒருத்தி என்ற வகையிலும், அப் பேராசானிடம் தமிழ்ப் பணிகள் பற்றி நான் அறிந்த, தெரிந்த விடயங்களைத் தொகுத்துத் தர விழைகின்றேன். 1932 வருடம் வைகாசித் திங்கள் 10ம் நாள் யாழ்ப்பாணம் வடமராட்சியில் உள்ள கரவெட்டி கிராமத்தில் பண்டிதர் பொ. கார்த்திகேசு வள்ளியம்மைக்கு மகனாகப் பிறந்தார். கருவிலே திருவுடையவராகப் பிறந்தவருக்குக் குடும்ப சூழலும் உரமூட்டவே தமிழ்த்தாயின் காவலனாகத் தன்னை உருவாக்கிக் கொண்டார். முதுகலைமாணிப் பட்டப்படிப்பை இலங்கையில் முடித்துவிட்டு, கலாநிதிப் பட்டப்படிப்பை பர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் 1970இல் நிறைவு செய்தார். 1984இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராகவும், பின்னர் நுண்கலைத்துறை தலைவராகவும் கடமையாற்றினார். இலங்கையில் பேராதனைப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இந்தியாவில் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், கேம் பிறிட்ஜ் பல்கலைக்கழகம், பேக்லி பல்கலைக்கழகம், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் போன்ற உலகப் புகழ் பெற்ற பல்கலைக்கழகங் களிலெல்லாம் பணியாற்றித் தன் பன்முகப் புலமையால் பல்லாயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கியவர்.

பேராசிரியர் அவர்களின் தமிழ்ப்பணிகளிலே அவரது ஆரம்பகாலப் பணியாக அமைந்தது தமிழ் நாடகத் துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்பாகும். 1953 - 1957 காலப் பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழக நாடகங்களிலும், வானொலி நாடகங்களிலும் தன் நடிப்பு, எழுத்தாற்றலால் பங்கு கொண்டவர். 1956 - 1957ம் வருடங்களில் இலங்கை கலைக்கழக நாடகக் குழுச் செயலாளராகவும், 1974 - 1977 காலப் பகுதியில் அதே நாடகக் குழுவின் தலைவராகவும் செயற்பட்டு ஈழத்து நாடகத்திற்கென்று தனி மரபொன்றை உருவாக்கித் தந்தவர். 1976 - 1978 காலப் பகுதியில் கொழும்பு பல்கலைக்கழக நாடகவியல் பட்டப்படிப்பிற்கான ஒழுங்கமைப்பாளர்களில் ஒருவராக இருந்து பல்கலைக்கழக மட்டத்திலும் நாடகத்துறைக்கான பங்களிப்பை நல்கினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே நுண்கலைத்துறையின் உருவாக்கத்திற்கு காரணமாக இருந்து, அத்துறைக்குத் தலைமை வகித்து நாடகமும் அரங்கியலும், நுண்கலை என்ற இரு பாட நெறிகளை ஒழுங்கமைத்து அவற்றின் வளர்ச்சிக்கு உத்வேகம் கொடுத்தார்.

பேராசிரியர் அவர்களின் நாடகத் துறைக்கான பங்களிப்புக்களிலேயே மணி முடியாகத் திகழ்வது அன்னாரது கலாநிதிப் பட்டப்படிப்பிற்கான ஆய்வாகும். 1969இல் தனது ஆய்விற்கான தலைப்பாக அவர் எடுத்துக் கொண்டது **"பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்"** என்பதாகும். இதன் மூலம் தமிழையும், தமிழ் இலக்கியத்தையும் உலக அரங்கிற்கு எடுத்துச் சென்றார்.

**"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"**

என்றுதான் பாரதி பாடினான். ஆனால் நம் பேராசிரியர் அவர்களோ தமிழிலக்கியமாகிய கலைச் செல்வத்தை எட்டுத்திக்கும் எடுத்துச் சென்று பரப்பினார். அவர் பெற்றிருந்த ஆங்கிலப் புலமை இதற்கு கைகொடுத்தது என்பது இங்கு குறிப்பிட வேண்டியது.

பேராசிரியர் அவர்களின் தமிழ்ப் பணிகளை பிரதானமாக இரு வகைகளில் அடக்கலாம். தமிழியல் ஆய்வு, தமிழிலக்கிய விமர்சனம் என்பனவே அவரது இரு பெருந்துறைகளாக விளங்கின. ஏறத்தாழ அரை நூற்றாண்டு இவ் இரு துறைகளிலும் தன்னிகரில்லாத் தலைவனாக விளங்கினார். பேராசிரியவர்களின்

தமிழியல் ஆய்வு மரபு வழிப்பட்ட ஏனைய ஆய்வாளர்களின் ஆய்வுகளிலிருந்து வேறுபட்டது. குறிப்பாக அவரது இலக்கிய வரலாற்று ஆய்வு இரசனைக்கும், மிகைப்படுத்தலுக்கும் முக்கியத்துவம் கொடுக்காதது. வரலாற்றுப் பொருள் முதல்வாத அடிப்படையில் அமைந்து, இது பெருமளவு மரபுவழி அணுகுமுறையில் இருந்து மாறுபட்டதாக, விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையாக அமைந்தது. **"இலக்கியங்களின் உருவாக்கத்திற்கு அடிப்படையாகவும், பின்புலமாகவும் அமைவது சமூக உருவாக்கமே"** என்பது பேராசிரியரவர்களின் துணிவாகும். இவ் வகையில் இலக்கிய வரலாற்றுக்குப் பின்புலமாய் அமைந்தது சமூக, பொருளாதார, வரலாற்றுக் காரணிகளை ஆழமாக நோக்கி ஆய்வு செய்வதாகவே இவரது இலக்கிய வரலாற்று ஆய்வுகள் அமைந்தன. **"இலக்கியம் என்பது காலத்தின் உற்பத்தி, அது காலத்தையும் உற்பவிக்கின்றது.- இலக்கிய வரலாறு என்பது இலக்கியத்தின் வழி வரலாற்றையும் உள்ளடக்கியது"** என்ற கருத்துக்கள் இலக்கிய வரலாற்றைக் கற்பிக்கும்போது அவர் அடிக்கடி வலியுறுத்தும் கருத்துக்களாகும். தமிழில் இலக்கிய வரலாறு, தமிழ் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், இலக்கணமும் சமூக உறவுகளும், மதமும் கவிதையும் போன்ற அவரது நூல்களை இத்தகைய ஆய்வுகளுக்கு உதாரணமாகக் கூறலாம்.

பேராசிரியர் சிவத்தம்பியின் தமிழ் இலக்கிய விமர்சனமும் தனித்துவம் வாய்ந்தது. மாக்சிய சிந்தனையினூடாக இலக்கியத்தையும் சமூகத்தையும் நோக்கி விமர்சிக்கும் புதியதொரு முறையாக அவரது விமர்சன முறை அமைந்திருந்தது. விஞ்ஞான பூர்வமானதும், சமூக அக்கறை கொண்டதுமான இவரது விமர்சன முறையே இன்று பிரதான விமர்சனப் போக்காக மாறியுள்ளது. பேராசிரியர் கைலாசபதியுடன் இணைந்து இவர் அறிமுகஞ்செய்த இப்புதிய விமர்சன முறையின் மூலம் ஈழத்திலும், தமிழகத்திலும் பல நவீன படைப்பாளர்களை உருவாக்கியவர். தமது விமர்சன முறையினூடாகத் தமிழ் நாடக மரபை கிரேக்க நாடக மரபோடு ஒப்பிட்டு அதற்கு இணையானது தமிழ் நாடக மரபு என்பதை நிரூபித்தார். தமிழ் நாட்டாரியல் மரபின் சிறப்பினை உலகிற்கு எடுத்துக் காட்டியதோடு தமிழ்க் கல்விப் புலங்களில் இதனைப் பாடமாக ஆக்கியமையும் அவரது தமிழ்ப் பணியாக அமைகிறது. தமிழக எழுத்தாளர் எஸ். ராமகிருஸ்ணன் **"இலக்கிய விமர்சனத்தின் போர்க்குரல்"** என பேராசிரியரைக் குறிப்பிடுகிறார்.

பேராசிரியர்கள் பலர் தமது துறைசார் கூறுகளில் ஒன்றில் மட்டும் தேர்ச்சியுள்ளவர்களாயிருப்பதையே பொதுவாகக் காணமுடியும். ஆனால் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களோ தமது அளவிட முடியாத ஆளுமையினால் பல்துறை விற்பனராகத் திகழ்ந்தவர். தமது தமிழ்ப் புலமைதனைப் பல வடிவங்களில் வெளிக்கொணர்ந்தவர். சங்க இலக்கியங்கள் தொடக்கம் நவீன இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை, புதுக்கவிதை என்பவற்றோடு விமர்சனம், நாடகம், இதழியல் என கட்புலக் கலைகள், நிகழ்கலைகள் அத்தனையிலும் தேர்ச்சிமிக்கவர் என்பதை அவரது எழுத்தினாலும் சொல்லினாலும், செயலினாலும் அறியமுடிகிறது. கலைச் சொல்லாக்க முயற்சிக்குத் தலைமை தாங்கியதோடு, புதிய பிறமொழிச் சொற்களுக்கு பழந்தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து மிகப் பொருத்தமான தமிழ்ப் பதங்களைத் தேர்ந்தெடுத்துத் தந்தவர். அகராதி முயற்சியில் பங்குபெற்றவர். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் ஊடாக நாடகம், உரைச்சித்திரம் எனத் தனது படைப்புக்களை வெளியிட்டவர். இலங்கையில் மட்டுமன்றி ஐரோப்பிய தமிழ்ப் பிள்ளைகளுக்காகவும் நூலாக்கப் பணியை மேற்கொண்டவர். பேராசிரியர் தனது பணியைத் தமிழோடும் தமிழிலக்கியத்தோடும் வரையறுத்துக் கொள்ளவில்லை. தமிழர் சமுதாயத்திற்காகவும், தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றிய சமூகப் பற்றாளனாகவும் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவராக, பிரஜைகள் குழுத் தலைவராக, சிங்கள - தமிழ் முற்போக்குவாதிகளின் இணைப்பாளராக என்று பல வகிபாகங்களை வகித்தவர். தமிழ்ச் சமூகம் தொடர்பான சீர்திருத்தக் கருத்துக்களையும், தமிழ்த் தேசியத்திற்கான சிந்தனைகளையும் தனது எழுத்திலும், பேச்சிலும் வெளிப்படுத்தித் தமிழர் சமுதாயத்திற்குப் புதுவழி காட்டியவர். **"தமிழனாகவும், இலங்கையனாகவும்"** என்ற அவரது ஆங்கில நூல், ராவய பத்திரிகையில் அவர் எழுதிய தொடர் கட்டுரைகள் என்பன தமிழ் மக்கள் பற்றிய புரிதலைச் சிங்கள மக்களிடம் ஏற்படுத்துவதற்காக அவர் மேற்கொண்ட பகீரதப் பிரயத்தனங்களாகும்.

தனது பெயருக்கு ஏற்ற விதமாகச் சைவ மரபிலும் பற்றுக் கொண்டவராகச் செயற்படத் தவறவில்லை. தனது அறிவையும், ஆற்றலையும் சைவ சமயத்தைப் பெருமைப்படுத்தவும் பயன்படுத்தியுள்ளார். 2004ம் ஆண்டு இலங்கையில் இந்துப் பாரம்பரியம் தொடர்பான ஆய்வுக் குழுவிற்குத் தலைமை தாங்கி ஆய்வின் முடிவுகளை நூலுருப் பெறச் செய்வதற்கும் அயராது உழைத்தவர்.

உலகத் தமிழ் மகாநாடுகள் பல, பேராசிரியரவர்களின் பங்குபற்றுதலால் சிறப்படைந்துள்ளன. கனடா, இந்தியா, ஐரோப்பிய நாடுகள் என்பவற்றிலெல்லாம் அவர் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகளால் அவற்றில் அவர் எடுத்துக்காட்டிய தமிழ் மொழி, தமிழிலக்கியம், தமிழர் பண்பாடு தொடர்பான கருத்துக்களால் அம் மாநாடுகள் வெற்றியடைந்தன. 2010ம் ஆண்டில் கலைஞர் கருணாநிதி அவர்களால் தமிழகத்தில் நடாத்தப்பட்ட செம்மொழி மகாநாட்டில் தனது உடல் நலக்குறைவையும் பொருட்படுத்தாது தலைமைப் பொறுப்பேற்று அதனைச் செவ்வனே நிறைவேற்றியமை எம் இனத்திற்கும் ஈழ மண்ணுக்கும் பெருமை தரும் விடயமாகும். முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மகாநாடு கடந்த வருடம் தைமாதத்தில் கொழும்பில் நடைபெற்றது. நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலும் கூட அம் மகாநாட்டின் தொடக்கவுரையை நிகழ்த்தி ஆரம்பித்து வைத்தார். அதுவே அவர் பங்குபற்றிய இறுதி நிகழ்வாகவும், இறுதி உரையாகவும் அமையும் எனத் தமிழ் கூறும் நல்லுலகு எதிர்பார்த்திருக்கவில்லை.

உலகறிந்த தமிழ்ப் பேராசான் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் 2011ம் வருடம் ஆடி மாதம் 6ம் நாள் தனது எழுபத்தி ஒன்பதாவது வயதில் பூதவுடலால் தமிழ் கூறும் நல்லுலகை விட்டுப் பிரிந்தார். உலக வரலாற்றிலே பல சான்றோர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படாமலேயே உள்ளன. அவ்வகையில் உலகத் தமிழர்களின் இமயமாக விளங்கிய பேராசான் அவர்களின் இடமும் நிரப்பப்படமுடியாதது. எனினும் 70க்கும் மேற்பட்ட அவரது நூல்களும், 200க்கும் அதிகமான ஆய்வுக் கட்டுரைகளும் தமிழ்க் கருவூலங்களாக அமைந்து தமிழுக்கான அன்னாரது சேவையைத் தொடர்ந்தும் செய்துகொண்டே இருக்கும். அடுத்து வரும் தலைமுறைக்கு மட்டுமன்றி தமிழை அறிய விரும்பும் அத்தனை பேருக்கும் மாபெரும் சொத்தாகவும் அவை அமையப் போகின்றன.



**ஆக்கம் : திருமதி. ச. மகேந்திரன் (B.A, P.G.D.E)**
மட்/சிவாநந்த வித்தியாலயம்.



# ஆசான்

அழியாச் செல்வத்தை அர்ப்பணிப்புடன் எமக்களித்து
ஆண்டவனை நாம் அடைய வழிவகுத்து
இரக்கத்துடன் எம்மைப் பேணிப் பாதுகாத்து
ஈகையாக அன்பையே எமக்களிப்பவர் ஆசான்

உலகில் நாம் உயர்ந்திட ஊன்று கோலாக இருந்து
ஊக்கத்தையும் உற்சாகத்தையும் எம்முள் உறைய வைத்து
எல்லா மாணவர்களையும் தன்னுறவாக பராமரித்து
ஏணிபோல் இருந்து எம்மை கல்வியில் உயரவைப்பவர் ஆசான்

ஐயத்தை எம்மிடமிருந்து அகல வைத்து
ஒற்றுமையில் நாம் வாழ வழிவகுத்து
ஓதவேண்டியவற்றை எல்லாம் ஒழுங்காக ஓதவைத்து
ஔடதமாக இருந்து நம்பிரச்சனைகளை போக்குபவர் ஆசான்

சினத்தை சிறிதும் எங்களிடம் இல்லாதொழித்து
தினம் பல பாடல்கள் எம்மை பாடவைத்து
யார் நாம் என்பதை எமக்குணர வைத்து
பேர் பெற்று உலகில் வாழ வைப்பவர் ஆசான்

குற்றம் குறைகளை எம்மிடமிருந்து அகற்றவைத்து
நித்தம் கல்விக் கனியை எம்மை உண்ண வைத்து
வேண்டுதல் வேண்டாமையை எமக்குப் புரியவைத்து
ஆண்டவன் பால் எம்மைச் சேர்ப்பவன் ஆசான்

சாதனை பலவற்றை படைக்க வைத்து
சோதனை தாண்டியே வாழ்வமைத்து
விருப்புடன் எமக்கு கல்வி கற்பிக்கும்
ஆசானைப் போற்றுவோம்
பெரும்புகழ் அவருக்கே என்று சாற்றுவோம்




**"ஆசிரியர் பணியே அறப்பணி
அதற்கே உன்னை அர்ப்பணி"**

**ஆக்கம் : ம. துவிகரன்**
தரம் 10V



பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்



பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள்

# பாடசாலை மாணவர்களிடையே காணப்படும் பொதுவான தோல் நோய்கள்



Dr. N. **தமிழ்வாணன்** (பழைய மாணவர் 1987) MBBS(Colombo), MD (Derm) - தோல் சிகிச்சை நிபுணர்

பாடசாலை செல்லும் மாணவர்களிடையே பல்வேறுபட்ட தோல்நோய்கள் காணப்பட வாய்ப்புகள் உள்ளன. இவற்றுள் சில தொற்று நோய்வகையைச் சேர்ந்தவை. ஏனையவை தொற்றாத தோல் நோய் வகையைச் சேர்ந்தவை. பாடசாலை மாணவர்கள் வகுப்பறையிலோ, விளையாட்டு மைதானத்திலோ ஒருவருடன் ஒருவர் நெருக்கமாக பழகுவதனால் ஒரு மாணவரில் இருந்து மற்றையவருக்கு மிக இலகுவாகவும், விரைவாகவும் தொற்றக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம். குறிப்பாக பாடசாலை விடுதிகளில் வசிக்கின்ற மாணவர்களுக்கு சில தொற்றும் வகையைச் சேர்ந்த தோல்வியாதிகள் மிக விரைவில் பரவும் ஆபத்தும் உண்டு. மேலும், தோல் தொற்றுநோய்கள் பாடசாலையிலிருந்து ஒரு மாணவர் மூலமாக அவரது வீட்டில் உள்ள ஏனைய அங்கத்துவர்களுக்கும் இலகுவாக பரவக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

தோல் அழற்சி நோய்கள் அதிகளவு சொறிச்சலை ஏற்படுத்துவதன் மூலமாக இரவில் போதிய தூக்கத்தை பெறமுடியாமையாலும், கல்விகற்கும் வேளைகளில் பாடங்களில் போதிய கவனத்தை செலுத்த முடியாமையினாலும் அவர்களது கல்வியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். மேலும், தோல் நோய்கள் மற்றவர்களின் கண்களுக்கு தெரியக்கூடியவையாதலால், சில தோல் வியாதியை உடைய மாணவர்களை, மற்றைய மாணவர்கள் வகுப்பில் புறம்தள்ளி வைப்பதனாலும், ஏளனத்திற்கு உள்ளாகுவதனாலும் பாரிய உளப்பாதிப்பு ஏற்படலாம்.

சில தோல் நோய்கள் உயிருக்கு எந்த ஆபத்தையும் ஏற்படுத்தாத போதும், சரியான முறையில் விரைவில் சிகிச்சை பெறாவிட்டால் நிரந்தர உடல் - ரீதியான அங்கவீனத்திற்கு (Physical Disability) உள்ளாகலாம்.

இக்கட்டுரையின் நோக்கம் பாடசாலை மாணவர்களிடையே காணப்படக்கூடிய சில பொதுவான தோல் நோய்கள் சம்பந்தமாக, குறிப்பாக நோய் அறிகுறிகள் (Symptoms & Signs), ஏற்படுத்தும் காரணிகள் (Aetiology), அவற்றிற்கான சிகிச்சை முறைகள், தடுக்கும் வழிமுறைகள் என்பனவற்றைப் பற்றிய அடிப்படை அறிவை ஏற்படுத்துவதாகும்.

**இப்போது ஒவ்வொரு நோயாகப் பார்ப்போம்.**

1) Scabies (சொறி)

இது Sarcoptes Scabiei என்னும் கண்ணுக்குப் புலப்படாத நுண் உயிரியால் ஏற்படும். மாணவர்களிடையே விரைவாகத் தொற்றக்கூடியது. கடுமையான சொறிச்சலுடன் கூடிய சிறு பருக்களாக ஏற்படும். முன்னங்கையின் உட்பகுதி, விரல் இடுக்குகள், வயிற்றுப்பகுதி, தொடைகள், ஆண்களின் பால் உறுப்புகள், பெண்களின் மார்புப்பகுதிகள் போன்றவற்றில் இவை காணப்படும். இரவுவேளைகளில் சொறிச்சல் பகல் வேளையைவிட கூடுதலாக இருக்கும். ஒருவருக்கு ஏற்பட்டு சில வாரங்களில் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் மேற்படி சொறிச்சலுடன் கூடிய பருக்கள் தோன்றும். இந்நோய் ஏற்பட்டவருக்கும் அவரது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கும், அவருடன் ஒன்றாக பழகுபவர்களுக்கும் முறையான சிகிச்சை அளிப்பதன் மூலம் இதனைப் பூரணமாக குணமாக்கலாம். Permethrin 5% Cream, Lindane 1% lotion, Benzyl Benzoate (B.B Cream 0.5% போன்ற மருந்துகள் இவற்றிற்காக பயன்படுத்தப்படுகின்றன.

2) Viral Warts : (பாலுண்ணிகள்)

இவை Human Papilloma என்னும் வைரசுக்களால் ஏற்படுகின்றன. இவை சிறு சிறு கரடுமுரடான வளர்ச்சிகளாக உடலின் எந்தப்பகுதியிலும் காணப்படலாம். இவை பொதுவாக எந்த நோய் அறிகுறியையும் (Symptoms) ஏற்படுத்தாது. சாதாரண தொடுகை மூலம் ஒருவரிடமிருந்து மற்றையவர்களுக்குப் பரவலாம். கூடுதலாக பாடசாலை செல்லும் சிறுவயதினருக்கே ஏற்படுகின்றது. இவை பல்வேறு தோற்றத்திலும் இடத்திலும் காணப்படுவதால் அவற்றை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) Commom warts - சாதாரண பாலுண்ணிகள்
2) Plane warts - மிகச் சிறிய தட்டையான பாலுண்ணிகள்
3) Filiform warts - மிகச்சிறிய நீளமான பாலுண்ணிகள்
4) Planter warts - கீழ்ப்பாதத்தில் ஏற்படக்கூடிய வெளியில் வளராத பாலுண்ணிகள்.

இவை சில வேளைகளில் தாமாகவே இல்லாது போய்விடலாம். ஆனாலும், பொதுவாக நீண்டகாலம் தோலில் ஏற்படக்கூடியதானவையாகவும் விரைவில் பரவும் பொழுதும் இவற்றிற்கு சிகிச்சை அளிப்பது சிறந்தது. இவற்றை Liquid Nitrogen இனால் Cryotherapy மூலமாகவோ, Electro Cauterization மூலமாகவோ இலகுவில் அகற்றலாம். Salicylic acid பூசுவதன் மூலமாகவும் இவற்றை குணப்படுத்தலாம்.

3) Tinea (வட்டக்கடி)

இவை Dermatophytes எனப்படும் பங்கசுக்களினால் ஏற்படுகின்றன. இவை பொதுவாக சொறிச்சலுடன் கூடிய பருக்கள் வட்டவடிவில் அமைந்ததாகவும் படிப்படியாக படர்ந்து செல்லக்கூடியதாகவும் காணப்படுகின்றன. உடலின் வெப்பமானதும் ஈரலிப்புத் தன்மையானதுமான இடங்கள் இவற்றின் வளர்ச்சிக்கு சாதகமாக அமைகின்றன. இவை உடம்பின் எந்தப் பகுதியிலும் ஏற்படலாம்.

1) Tinea corporis (உடம்பு)
2) Tinea cruris (அரைப்பகுதி)
3) Tinea Faciei (முகம்)
4) Tinea Pedis (கால் பாதம் / விரல் இடுக்கு)
5) Tinea capitis (தலை)

சிலவேளைகளில் நகங்களிலும் தலை முடியிலும் (Scalp hair) தொற்றுதலை ஏற்படுத்தலாம்.

இவற்றை சரியான முறையில் சிகிச்சை அளிப்பதன் மூலமாகக் குணப்படுத்தலாம். இவற்றிற்கு Griseafulvin, Itraconatole போன்ற antifungal வில்லைகள் மூலமாகவும் miconazole Ketoconazole, clotrimazole creams மூலமாகவும் சிகிக்சை அளிக்கப்படுகின்றன.

4) Pityriasis Versicolor (தேமல்)

இவை வெண்புள்ளிகளாகவோ, கருமையான புள்ளிகளாகவோ, படலங்களாகவோ தோற்றமளிக்கலாம். விரைவில் உடற்பகுதிகளில் படர்ந்து செல்லக்கூடியது. Malassezia furfur எனும் yeast வகையைச் சேர்ந்த பங்கசுவினால் ஏற்படுகின்றது. வெப்பமானதும் வியர்க்கின்றதுமான சூழல் இவற்றை ஏற்படுத்துகின்றது. Miconaozle, econazole, selenium sulfide shampoo போன்ற பூசக்கூடிய மருந்துவகைகள் மூலமாகவும் குணமாக்கலாம். உடம்பில் பரந்தளவில் காணப்பட்டால் Ketoconazole, Itraconazole Fluconazole போன்ற வில்லைகளைப் பாவிக்கலாம்.

மெல்லிய தளர்வான பருத்தி ஆடைகளை அணிவதன் மூலம் மீண்டும் மீண்டும் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

5) Leprosy (தொழுநோய்)

இந்நோய் Mycobacterium leprae எனப்படும் பக்றீரியாவினால் ஏற்படுகின்றது. உடம்பில் எந்தப் பாகத்திலும் ஏற்படக்கூடியது. இது பொதுவாக தோலையும், நரம்புகளையும் தாக்கக்கூடியது. ஆரம்ப அறிகுறிகளாக உணர்ச்சிகள் அற்ற நிறம் குறைந்த படலங்களாகவோ, தடிப்படைந்த தோல் பகுதிகளாகவோ, தோல் கட்டிகளாகவோ காணப்படலாம். தோலின் கீழான சில நரம்புகள் தடிப்படைந்து காணப்படலாம். இவை ஒரு போதும் தோலில் சொறிச்சலை ஏற்படுத்தாது. தோலில் இவ்வாறு உணர்ச்சியற்ற அல்லது உணர்ச்சி குறைந்த படலங்கள் கட்டிகள், தடிப்புக்கள் தோன்றும் போது உடனடியாக தோல் சம்பந்தமான வைத்தியரை நாடி இந்நோயை உறுதிசெய்து சிகிச்சையை ஆரம்பிக்கவேண்டும். இல்லாவிடில் நரம்புகளில் நிரந்தரப்பாதிப்புக்கள் (Nerve palsies) ஏற்பட்டு கை, கால்களின் செயற்பாடுகள் இழக்கப்படலாம். (Disability) இந்நோயின் வீரியத்தன்மையைப் பொறுத்து 6 மாதங்களுக்கோ, 1 வருடத்திற்கோ ஒழுங்கான சிகிச்சையைப் பெறுவதன் மூலமாக பூரணமாக குணமாக்கலாம். இந்நோய் ஒருவரில் இருந்து மற்றவர்களுக்கு தொற்றக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

6) Eczemas (தோல் அழற்சி)

இவை பல்வேறு வகைகளைக் கொண்டவை. அத்துடன் நீண்காலம் உடம்பில் மீண்டும் மீண்டும் வரக்கூடியவை. எந்த வயதிலும் இது ஆரம்பித்தாலும், பொதுவாக ஒரு வயதுக்கு முன்னராகவே ஆரம்பித்து விடுகிறது.

இந்நோய் ஆரம்பத்தில் மிகவும் கடுமையான சொறிச்சலை ஏற்படுத்தக்கூடிய நீர்வடியும் தோல் புண்போன்று தோன்றும். (Acute eczemas) இத்தோற்பகுதிகள் காலப்போக்கில் வரட்சியான சொறிச்சல் மிக்க தடிப்படைந்த நிறமாற்றமடைந்த தோற்பகுதிகளாக மாறும் (chronic eczemas). இந்நோய் ஏற்பட முக்கியகாரணம் பரம்பரைத்தன்மையாகும். குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கும் இம்மாதிரியான தோல்நோய் அறிகுறிகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கலாம். இந்நோயாளிக்கோ, குடும்பத்தில் உள்ள ஏனையவர்களுக்கோ ஆஸ்துமா, அலர்ச்சித்தும்மல் போன்ற நோய்கள் ஏற்படலாம். இந்நோயாளிகள் ஒழுங்கான சிகிச்சைகளை ஒரு தோல் கிளினிக்கில் பெறுவதன்மூலம் இத்தோல் அழற்சி நோய்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். வெப்பத்தை தவிர்த்தல், ஒழுங்கான உணவுப்பழக்கம், அதிக காரமான சவர்க்காரங்கள் பாவிக்காமை, தோலை வரட்சியில்லாமல் moisturizers ஐ பாவித்தல், பருத்தி ஆடைகளை அணிதல் போன்றவை இந்நோய் மோசமடைவதை (Disease Exacerbation) தவிர்க்க உதவும்.

7) Insect bites reaction (பூச்சிக்கடி அழற்சி)

முன்பள்ளி மாணவர்களுக்கும், இளம் பாலகர்களுக்கும் மிகவும் அடிக்கடி ஏற்படக்கூடிய பிரச்சினையாகும். சிலவேளைகளில் பாடசாலைப்பருவத்தினருக்கும் இளவயதில் ஆரம்பித்துத் தொடர்ந்து பிரச்சினை கொடுக்கக் கூடியது.

எறும்பு, தெள்ளு, நுளம்பு போன்றவை கடிக்கும்போது கடித்த இடத்தில் சொறிச்சல் ஏற்பட்டு சிறுபருக்கள் தோன்றும். தொடர்ந்து அவ்விடத்தில் புண்கள் தோன்றி கிருமித்தொற்று ஏற்பட்டு சீழ்வடிதல், பாதிக்கப்பட்ட பகுதி வீக்கமடைதல், காய்ச்சல் என்பன ஏற்படும். இது கூடுதலாக கால்கள், கைகள் போன்ற ஆடையினால் மறைக்கப்படாத பகுதிகளில் காணப்படும். எறும்பு, தெள்ளு, நுளம்பு போன்றவற்றின் கடியில் இருந்து பாதுகாப்பதே முக்கியமானதாகும். தேவையேற்படின் வைத்தியரின் ஆலோசனையைப் பெற்று சொறிச்சல், புண்கள் போன்றவற்றை கட்டுப்படுத்தலாம்.

8) Acne (முகப்பருக்கள்)

முகப்பருக்கள் வாலப்பருவத்தினருக்கு (Teenage) ஏற்படும் மிகவும் சாதாரண பிரச்சினையாகும் இது ஆண் பெண் இருபாலாருக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம். இவை சிறு சிறு பருக்களாகவோ, அல்லது நோவை ஏற்படுத்தும் சிறு கட்டிகள் போன்றோ தோன்றும். இவை உடைந்து சிறிது சீழ் வெளியேறலாம். அதன் பின் அவலட்சணமான தழும்புகளாகமாறும். இவ்வாறு முகப்பருக்களின் வீரியம் வேறுபடலாம். இவற்றின் தோற்றத்திற்கும் மாறுபடும் வீரியத்தன்மைக்கும் பரம்பரை இயல்பு, ஓமோனின் தாக்கம் தோலில் உள்ள ஒரு வகையான பக்ரீரியாக்களின் தாக்கம் என்பன காரணமாக அமைகின்றன. முகப்பருக்கள் பொதுவாக முகத்தில் தோன்றினாலும், மார்பு, முதுகு என்பவற்றின் மேற்பகுதியிலும், தோள்பட்டை பகுதிகளிலும் ஏற்படலாம். முகப்பருக்கள் வயதின் இயற்கையான மாற்றமாக கருதப்பட்டு உரிய சிகிச்சை எடுக்காவிட்டால் முகத்தில் ஏற்படும் நிரந்தரமான தழும்புகள் உளரீதியான தாக்கத்தை ஏற்படுத்தலாம். முகத்தில் தேவையற்ற கிறீம் வகைகளைப் பூசுவதையும் அழகு சாதன பதார்த்தங்களைப் பாவிப்பதையும் தவிர்ப்பது பருக்கள் தோன்றுவதைக் குறைக்கும். உணவுப்பழக்கத்தைப் பொறுத்தவரை அதிகளவு இனிப்புக்களை (chocolate & ice – cream) உண்பதைக் குறைப்பது நன்று. உரிய மருந்துகளை (Retinoid creams, antibiotic creams or tables) வைத்தியரின் ஆலோசனைப்படி பாவிப்பதன் மூலம் முகப்பருக்களைக் கட்டுப்படுத்தி நிரந்தர தழும்புகள் ஏற்படாமல் பாதுகாக்கலாம். இவ்வாறு கட்டுப்படுத்தும் பொழுது, ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின் பருக்கள் தோன்றுவது நிரந்தரமாகவே நின்றுவிடலாம்.



# கண்டுபிடிப்பும், கண்டுபிடிப்பாளரும்



- தொலைபேசி - அலக்சாண்டர் கிரகம்பெல்
- தொலைக்காட்சி - ஜோன் லூகி பெயார்ட்
- வானொலி - மார்க்கோனி
- மின்கலம் (பெட்ரி) - வொல்ற்றா
- சைக்கிள் - மக்மிலன்
- சலவை இயந்திரம் - ஹர்லிமெசின்
- கார் (மகிழூர்தி) - கார்ன் பெஸ்
- மின்குமிழ் - தோமஸ் அல்வா எடிசன்
- விமானம் - ஆர்வில்ரைட், வில்பர் ரைட்
- புவியீர்ப்பு விசை - ஐசாக் நியூட்டன்
- வெப்பமானி - கலிலியோ கலிலி
- ஹெலிகொப்டர் (உலங்கு வானூர்தி) - இட்டனி ஒமிசென்
- சீமெந்து - ஜோசப் எஸ்ப்டின்
- பொலித்தீன் - பர்கர்
- இறப்பர் டையர் - தோமஸ் ஹன்கொக்
- கடிகாரம் - மென்ப்ரெடி
- தொலைக்காட்டி - ஹன்ஸ் லிபர்சேய்
- தீப்பெட்டி - ஜோன் வோக்கர்
- நெய்தல் இயந்திரம் - கார்ட் ரைட்
- திசைகாட்டி -- இலமெர் ஸ்லெரி



**ஆக்கம் : கி .சஞ்ஜய்**
தரம் 5K

# விளையாட்டு துறைசார் விடயங்கள்







| விளையாட்டு | மைதான அளவு | விளையாட்டு வீரர் எண்ணிக்கை |
|---|---|---|
| கால்பந்து | 100 - 130 யார் | 11 |
| கிரிக்கட் | 22 யார் பிட்ச் | 11 x 2 |
| கரப்பந்தாட்டம் | 50 x 20 அடி | 6 |
| டெனிஸ் ஒற்றையர் | 75 x 27 | 2 |
| டெனிஸ் இரட்டையர் | 20 x 44 | 4 |
| கூடைப்பந்து | 80 x 44 யார் | 5 x 2 |
| கொக்கி | 100 x 65 யார் | 11 |
| பட்மின்டன் | கம்பத்தின் உயரம் | 5" 1' |
| எல்லே | — | 16 |

**ஆக்கம் : நா. அஜந்தன்**
தரம் 12 வர்த்தகம்

# பாடலை நடிப்பாக்கிய மகா கலைஞன் நடிகமணி வைரமுத்து ....

பரதம், கூத்து, இசை நாடகம், கர்நாடக சங்கீதம் என்பன தமிழர் மத்தியில் வழங்கும் அவைக்காற்று கலை வடிவங்களாகும். இவ்வடிவங்கள் திடீரென உருவாவதில்லை. காலம் தோறும் அதில் ஈடுபட்டுள்ளவர்களால் அழகுபடுத்தப்பட்டு, மெருகு சேர்க்கப்பட்டு மீண்டும் வளம்படுத்தப்பட்டு உச்சநிலை கண்டவை.

உச்சநிலை கண்டு முழுமை பெற்ற இக்கலை வடிவங்களின் முழு இலட்சணங்களையும் வெளிக்கொணர எல்லாராலும் முடியாது. மிக மிகச் சிலராலேயே முடியும்.

இன்னொரு வகையிற் சொன்னால் இக்கலை வடிவங்கள் தம்மை முற்றாகப் பயன்படுத்த ஒரு கலைஞனை / கலைநிலை எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கின்றன.

அபூர்வமாகத் தோன்றும் கலைஞர்கள் அதனை முற்றாகப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் அக்கலையின் கொடு முடியாகவும் கருதப்படுகின்றனர்.

கர்நாடக சங்கீதத்தைப் பயன்படுத்திய மேதை தியாகராச சுவாமிகள் என்றால் பரத நடனத்தைப்பயன்படுத்திய மேதை பத்மா சுப்பிரமணி எனலாம். காத்துக்கிடந்த பார்ஸி நாடக மரபில் வந்த தமிழ் இசை நாடக வடிவத்தைப் பூரணமாகப் பயன்படுத்திய மேதைதான் நடிகமணி வைரமுத்து.

ஈழத்தமிழர் மத்தியில் முதிர்ச்சி பெற்ற இரு நாடக வடிவங்கள் உள்ளன. ஒன்று கூத்துமரபு. அது நமது நாட்டுக்குரியது. மற்றது இசைநாடக மரபு. அது தமிழகத்திலிருந்து எமக்கு வந்தது. கூத்தின் அடி நாதம் ஆட்டம், இசை நாடகத்தின் அடிநாதம் பாட்டு (கர்னாடக இசை).

ஆட்டத்தின் மூலம் கதையைக் கூறுவது கூத்து. பாட்டின் மூலம் கதை கூறுவது இசை நாடகம்.

கதை கூறும் மரபில் இருந்து இசை நாடகத்தை நாடகமாக்கி நடிப்பைப் புகுத்தி உணர்வுச் சுழற்சிக்குள் மக்களை இழுத்து அதனை ஓர் உள்ளம் கவர் கலையாக்கியவர் நடிகமணி வைரமுத்து.

பாட்டை நடிப்பாக்கிய மனிதர் அவர். இசை நாடகத்தில் நமக்கும் நடிகர்கள் பாட்டில் மாத்திரமே கவனம் செலுத்துவர். வைரமுத்துவோ வித்தியாசமானவராக இருந்தார்.

அவரது குரலின் ஏற்ற இறக்கங்களுக்குள் நடிப்புத் தெரியும். பாடலை உச்சரிக்கையில் அவருடைய குரல்தொனி பல்வேறு ஜாலங்கள் புரியும்.

மயான காண்டத்தில் சுடலைக் காட்சியில் "**ஆரடி கள்ளி**" என்று கம்பீரமாக அதட்டி ஆரம்பிப்பார். "**கூறடி உந்தன் பேரில்**" எனும்போது வினாக்குரலாக அது மாறும். "**பாரடி**" என்று கூறுகையில் அது கட்டளையாக மாறும். ஒரு பாடலுக்குள் அதட்டல், வினா, கட்டளை என்ற மூன்று உணர்வுகளை வெளிப்படுத்தும் திறன் வைரமுத்துவால் மாத்திரம்தான் முடிந்தது.

ஆம் பாடலை நடிப்பாக்கிய மகா கலைஞன் வைரமுத்து.

இசை நாடகத்தில் பெரும்பாலும் ஒரே இடத்தில் நின்று கொண்டே பாடுவார்கள். பாடலை மாத்திரமே மக்கள் அன்று ரசித்தனர். வைரமுத்துவோ நாடகத்தில் ஓரிடத்தில் நில்லார். மேடை முழுவதையும் தனக்காக்குவார். மேடையின் அடிப்பாகத்திலிருந்து மேற்பாகம் வரை வலது புறமிருந்து இடது புறம் வரை அவர் மேடை அசைவுகள் புரிவார். இசை நாடகத்திற்கு வைரமுத்து அளித்த கொடை இது.

வைரமுத்து மேடைப்பொருட்களை நடிப்பின் ஒரு பகுதியாக்கிவிடுவார். அரிச்சந்திர மயான காண்டத்தில் அவர் கையில் வைத்திருக்கும் தடியை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அதை வெறும் ஊன்றுகோலாக மாத்திரமன்றி எரியும் விறகாக நெருப்பினுள் தள்ளப்பயன்படும் கருவியாக, சிறுவனின் சடலத்தை வெறுப்போடு தள்ளப்பயன்படும் கருவியாக எல்லாம் பயன்படுத்துவார். இசை நாடகத்தில் இப்படி மேடை பொருட்களைப் பயன்படுத்தியோர் இல்லை எனலாம்.

வைரமுத்துவின் இசை நாடகங்களின் ஒப்பனையும் ஏனைய இசை நாடகங்களை விட வேறு பாடாக இருக்கும்.

இவ்வண்ணம் பாட்டாக இருந்த இசை நாடகத்தை நடிப்புக்குரியதாக அரங்கத்தன்மை பொருந்தியதாக (மேடை அசைவு, மேடைப்பொருட்களைப் பயன்படுத்தல், ஒப்பனை) மாற்றியதனாலேயே வைரமுத்து இசை நாடகத்தின் பிதாமகராகக் கணிக்கப்படுகிறார்.

நாடகத்தை நடிகனின் கலை (Avtors Art) என்பர். வைரமுத்துவின் அரங்கும் ஒரு நடிகனின் அரங்காகும். நடிகனின் அரங்காக வெளிப்படுத்த அவர் நாடகங்களில் ஏனைய நடிகர்கள் துணையாகத்தான் நிற்பார்கள். எல்லா நடிகர்கட்குள்ளும் தனது குரலாலும் நடிப்பாலும் மேடை அசைவுகளாலும் தனித்துத் தெரிவார். இது இவருக்கு எப்படிச்சாத்தியமாயிற்று.

ஒன்று அவரிடம் மிகவும் பண்பட்ட நாடகக் கலைஞனுக்குரிய வளமான குரல் இருந்தது. இரண்டு அதனை அவர் முறையான கர்நாடக சங்கீதப் பயிற்சி மூலம் உளப்படுத்திக் கொண்டார். (அவர் முறையாக கர்நாடக இசைக்கச்சேரி கூடச் செய்வார்.)

மூன்று சினிமாப்படங்கள் மூலம் தன் நடிப்புப்பாணியை அகவித்தார்.

நான்கு பரத நாட்டிய அசைவுகளை தன் அசைவுகளில் இணைத்தார்.

ஐந்து நீண்ட கால நடிப்பின் மூலம் இவை யாவற்றையும் இணைத்து இசை நாடகத்திற்கு ஒரு புதிய பாணி நடிப்பைத் தோற்றுவித்தார். இவரது நடிப்புப் பாணியை இவரோடு சேர்ந்து நடித்தவர்களும் மேற்கொண்டனர்.

இன்று ஈழத்து தமிழ் இசை நாடக மரபில் வைரமுத்து பாணி நடிப்பு என்று ஒரு நடிப்பே தோன்றிவிட்டது.

புகழ்பெற்ற ஸ்ரனிஸ்லாவ்ஸ்கி தனது முறைமை நடிப்பை (System of Acting) தன் காலத்தில் வாழ்ந்த நடிகர்களிடமிருந்து பெற்றே உருவாக்கினார் என்பர்.

நமக்குள் வாழும் நாடகக் கோட்பாட்டாளர்களும் நாடகக் கலைஞர்களும் வைரமுத்துவிடமிருந்து கற்று இசை நாடகத்திற்கென ஒரு முறையான நடிப்பு முறையை உருவாக்கவேண்டும்.

நான் முன்னர் குறிப்பிட்டது போல இசை நாடகத்தின் முழு லட்சணங்களையும் வெளிப்படுத்துவதோடு அதனை புதிய திசைகள்நோக்கி நகர்த்திப்பெரும் மேதையாகவும் வைரமுத்து அமைந்துவிடுகிறார்.

இம்மேதைத் தனத்தை இனங்கண்டு அவர் இறந்த பிறகாவது பட்டம் வழங்கிக் கௌரவித்ததனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டதையும் இங்கு நினைவு கூருவோம்.

ஆக்கம் : பேராசிரியர் சி. மௌனகுரு



பழைய மாணவர் மன்ற செயற்குழு உறுப்பினர்கள்



லண்டன் பழைய மாணவர் மன்ற செயற்குழு உறுப்பினர்கள்



கனடா பழைய மாணவர் மன்ற செயற்குழு உறுப்பினர்கள்



அவுஸ்ரேலியா பழைய மாணவர் மன்ற செயற்குழு உறுப்பினர்கள்

# Elizabethan Poetry A view

The Elizabethan age is the most important age in English literary work. It started in the latter half of the sixteenth century. The principal theme of the poems were courtly love, pastoral love and unrequited love. During this age, poetry was highly musical and the poetic forms were sonnets, ballads and lyrics. The leading poets were shakespeare, Campion, Marlow, Spencer, Lodge and so-on.

The famous poets william shakespoare and Thomas Campion belong to the Elizabethan age. Shalespeare is more famous as a play wright but he has written several poems. Thomas campion also is one of the greatest and the most intellectual song writers of this period. He wrote not only the songs but also composed the music for his works and this contributed to the success of his compositions.

In discussing the characteristics of Elizabethan poetry in relation to the three songs of shakespeare and the two poems of Thomas Campion. We could consider them under two aspects - namely, subject matter and technique. We could see how for the subject metter of the poems were similar to that of the Elizabethan poetry and also howfar the language and the technical qualities of the poems were similar to those of the Elizabethan poems.

Elizabethan poetry was concerned with nature, They admired nature and things natural. Nature infact was idealized. The world of the shepherds who tended their sheep in the lonely hills, playing their fultes and singing songs of love, was considered to be the ideal life. It was the pastoral country side that was admired. We see this in the song 'It was a Lover and His Lass'. In this song the poet sings of spring the beauty of the Dountryside during spring, and of the love of the shepherd boy for his less, of the freedom they enjoy in the country side and of their idylide love. There is joyous combination of love and nature in these lines :

"It was a lover and his lass,
with a hey, add aho, and a heynonino,
That o'er the green corn field did pass
In the spring times, the only pretty ring time,
When birds do sing, they ding a ding - ding
Sweet lovers love the spring".

But all Elizabethan poets didnot idealise nature although they did love nature. We find this for example in Shakespeare's song on winter - when foicles Hang by the wall. Here there is no attempt to glorify winter. What he does is to present a true picture of the grim life in winter, having at the background the mournfulcry of the owl, "Tu-who, tu-whit, tu-who". There is wholesome acceptance of the reality.

Together with thislove for nature, a common theme of Elizabethan poetry was courty love. We notice that Shakespeare's 'O Mistress Mine Where Are You Roaming' and Campion's two poems both deal with the subject of love. In courty love poetry of the time, the lady was always of great, beauty and the lover admired her for beauty. But she proud and wouldnot listen to the entroaties of the lover who would then mourn and sigh and sing song in praise of her beauty. We notice this for example in Campion's. "There is a garden in her face". The poet sings of the beauty of the lady. Her face is compared to a garden. But then she willnot accept him. Her lips would not be his, 'till cherrt - ripe temselves do cry'. But in Shakespoare's O' Mistress Mine . . ' the lover pleads with his disdainful lady.

'O stay and hear your true love's coming'.

Yet he also reminds her of the passage of time and of the urgency that she should accept his love. This effct of time on beauty was one of the concerns of the poets of that age. Shakespoare sings thus.

"What's to come is still unsure,
In delay there lies no plenty,
Then come kiss me, sweet and twenty,
youth's stuff will not endure."

In Campion's 'Blame not any cheeks". We notice a departure from the courty love theme and an attempt to rationalise.

If we delay we grow old and then our joy would be less than what it would be now. The lover then has a solution;

> "Then come kiss me, sweet and twenty;
> youth's stuff willnot endure."

The poem ends with a positive attitude to life, saying let's make the most of it while we can. This poem, as we said earlier, was written to be sung to music. But it does not have some of the characteristics of the earlier songs. For example, it doesnot have repetitive lines or nonsensical lines. And the language itself is more akin to poetry than to song. The lover tries to rationalise wiht the mistress and he doesnot unduly praise her. There is in fact a more rational attitude to the problem of unrequited love. In one sense this song may be considered as the best of the three poems of shakespoare in this selection.

Campion wrote not only the songs but also composed the music for his works and this contributed to the success of his compositions. His song . . . . . . . ..

"There is a Garden in Her Face"

We notice that the poem is about a young lady whom the poet admires verymuch. He is perhaps in love with her. The face of the lady is compared to a garden. The comparision of the face of the young lady to the beautiful things in a garden is in the manner of the courtly love poetry of the time.

The beauty of the lady is described in the equistito manner. She is of ansurpassing beauty. Her face is like a garden and in this garden there are roses and white lilies. The roses are probably associated with the cheeks of the lady. The face is like 'heavenly paradise' the garden of Eden where Adam and Eva lived in perfect joy and happiness. All pleasant fruits grow in this garden. Cherries too grow there. But 'none may buy' them. The cherries are symbolic of the lips of lady - which no one may kiss until' cherry ripe themselves do cry That is until the lady is willing to accept her lover.

In the second verse the orient pearls referred to are the teeth of the lady which are enclosed by the lips, and which show off when she smiles. The teeth are also compared to 'rose buds filled with snows'. But all this beauty no lord or prince can buy until the lady her self is amenable to the approaches of the lover - that - is 'till cherry - ripe themselves do cry'.

The eyes of the lady are compared to angels, watching in their state of purity. The eye brows are like 'bended bows'. But if any one attempts to court her with looks or hold her hand, threatning and piercing frowns would kill such an attempt and no one will be able to 'come nigh' those sacred lips.

The image that is presented here is that of a young lady of exquisite beauty. There is none other who is as beautiful as her.

The poet is almost moved to madness in his love for her. But she doesnot return his love and the lover is mourning the fact that he cannot say his feeling. She is proud and she would refuse, frown and threaten anyone who tries to court her or get near those 'cherries'. The poem itself makes use of the conventional similies and comparisons. There were the current image of the time. But what is interesting in the poem is the manner in which the poet has variated the common compliment. The customary compliments havebeen combined in a way that is fresh and pleasing.

The musical tone of the poem and the polished and refined language is another important - feature of the poem and in comparison with the lyrics of the time. Compion's poetry certainly bear a superior quality. In this poem, for example, he in deliberately trying to produce a decorative effect. Note the lines.

"These cherries fairly do enclose
of orient pearls a double row,
which when her lovely laughter shows,
They look like rose buds filled with snow."

But although this decorative effect is there, we perceive the poets enthusiasm for physical beauty. The decorative effect is not merely for its own sake. The poet is deeply moved by the beauty of the lady.

"Blame not my cheeks, though pale with love they be" is a variation of the usual courtly love poetry of the time. The poem is not about a lady of great beauty who doesnot return the love of the lover.

Thus, in Elizabethan poetry, courtly love, pastoral love and unrequired love are clearly brought out in poems in Elizabethan age poetry. We can easily understand the charactiristics of its beauty; when we read any poems in the common wealth peotry we can easily understand the meaning of poems. But in the western poetry (like Elizabethan age). We cannot realize the meaning of the poems without knowing the background of that age.

In this way, we see the Elizabethan age and its growth in poetic field. The language and its all features regading with Elizabethan age are revealed through the poem.

**Mrs. L. Giritharan**
(B.A. in English)
P.G.D.E (English)

***Reference :***

1) Shakespoare his world and his Art (1994).
2) English and WEstern literature (1984)
3) Atlas Hall.

# Amazing Facts of Animals

1) *10,000 years ago, the lion was the most widespread large land mammal after humans.*
2) *Lions are the only members of the cat family where males and females look different.*
3) *The night vision of tigers is sixtimes better than human.*
4) *Giraffe in average sleeps less than 2 hours per day.*
5) *Scientists have estimated that the largest dinosaurs may have weighted 80,000 to 100,000Kg.*
6) *The smallest snake in the world is 4 inches while the largest snake is 10m long.*
7) *Chimpanzees can learn to recognize their own image in a mirror.*
8) *The sweat glands of a cow is on it's nose.*
9) *The ostrieh's eye is larger than it's brain.*
10) *The memory span of gold fish is just about 3 seconds.*

***By :* Shawn**
**Grade 11[M]**

# தரம் 9, 10, 11 வகுப்புகளுக்கான பாடசாலை மட்ட சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்ற சிறுகதை

# குடியைக்கெடுத்த குடி

கார்த்திகை மாத ஞாயிறு மேற்கு வானில் மறைந்து செல்ல, தென்றல் காற்று உள்ளத்தை வருட, மேல் வானம் கொவ்வைப் பழமாய்க் காணப்பட்டது. சூரியகாந்தி தன் வாழ்வை முடித்துக் கொள்ள விண்மீன்கள் கண்சிமிட்ட ஆரம்பித்தன. வானில் நிலா தன் சாம்ராஜ்சியத்தைப் படைக்கிறது. திடீரென ஒரு விண்மீன் தன் வாழ்வை முடித்துக் கொண்டு மிக வேகமாக மண்ணை நோக்கி வருகிறது ஆம் அது ஓர் குடிசையின் அருகில் சென்று மறைகிறது.

அந்தக் குடிசையில் எங்கும் அமைதி. அங்கே சஜீவ் குப்பி விளக்கருகே குப்புறக்கிடந்து ஆர்வமாகக் கற்றுக் கொண்டிருக்கிறான். அவன் தங்கை கீர்த்தனா எதையோ வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறாள். அவர்களது தாய் தன் பிள்ளைகளுக்காக இரவு உணவு தயாரித்துக் கொண்டிருக்கிறார். இரவுணவென்றால் இடியப்பமோ, பிட்டோ இல்லை. பழைய சாதமும் பச்சை மிளகாயும்தான். சத்தமில்லாமல் எலியைப் பிடிக்கப் பதுங்குகிறது அவர்கள் வீட்டுப் பூனை.

திடீரென **"அடியே"** எனும் சத்தம் அவ்வளவு தான் சோற்றுப் பானை நெளிந்து தன்னிடம் இருந்த பழஞ்சோற்றைக் குழந்தைகளின் முகத்தில் வாரியடித்தது. ஆம்! சஜீவின் அப்பா வீரசிங்கம் கள்ளுக்குடித்த கம்பீரத்தைக் கள்ளமில்லாக் குழந்தைகளின் உணவின்மேல் காட்டியுள்ளார். ஆறாய்ப் பெருக்கெடுத்த கண்ணீர் குழந்தைகளின் கண்களில். வீரசிங்கம் அதோடு நின்று விடாமல் தன் பலத்தை மனைவியிடம் காட்டத் தொடங்கினார். நல்லவேளை அந்த நேரம் சஜீவ் வீட்டிலிருந்ததால் அவனது தாயைக் காப்பாற்றினான். மறுநாள் புலர்ந்தது. உற்சாகத்துடன் எழுந்த சஜீவ் தன் தங்கையையும் அழைத்துக் கொண்டு பாடசாலை செல்லப் புறப்பட்டான். அப்பொழுதான் எழுந்து குளித்த தந்தை நெற்றியில் விபூதியோடு வீட்டை விட்டுப்புறப்பட ஆயத்தமானார். அப்பொழுது சஜீவ் பக்குவமாகத் தன் தந்தை அருகில் சென்று தமது நிலையைப்பற்றித் தந்தைக்குப் புரிய வைத்தான். அத்தோடு தன் தாய்க்கு அடிக்க வேண்டாம் எனவும் வேண்டிக்கொண்டான். எல்லாம் உணர்ந்தவரைப்போல் வீரசிங்கம் தலையாட்டி விட்டு **"இனிமேல் நான் குடிக்கமாட்டேன்"** என்று சஜீவின் தலையில் சத்தியம் செய்து விட்டு வேலைக்குக் கிளம்பினார்.

தந்தையைத் திருத்தி விட்டோம் என்ற மனத்திருப்தியுடன் தங்கையையும் அழைத்துக்கொண்டு பாடசாலைக்குச் சென்றான். பாடசாலை மிக நீண்ட தொலைவில் இருந்த போதிலும் படிக்கும் ஆர்வத்தில் அவ்வளவு தூரமும் நடந்தே சென்றான். நடந்து செல்லும்போது திருக்குறள்களை மனனம் செய்தபடியே சென்றான். அவன் ஏழைக் குடும்பத்துப்பிள்ளையாக இருந்த போதிலும் அவனே வகுப்பில் முதல் மாணவனாக வருவான். அனைத்துப் பாடங்களிலும் எண்பதிற்கு மேல் புள்ளிகளெடுத்துச் சித்தியடைவான். அதுமட்டுமல்லாமல் அவனது உயிர் நண்பன் ரஜீவிற்கும் படிப்பதற்கு உதவி செய்வான்.அதாவது ரஜீவிற்கு விளங்காத பாடங்களை சொல்லிக் கொடுப்பான். கல்வியில் அவனது தங்கையையும் குறை சொல்ல முடியாது அவளும் கெட்டிக்காரிதான். இருவரும் சேற்றில்முளைத்த தாமரைகள்.

ஆம், மாலைப்பொழுதும் வந்தது. திருந்தி வருவார் என நினைத்திருந்த தந்தை மீண்டும் மது அருந்தியே வந்தார். தனது பிள்ளையின் மேல் செய்த சத்தியத்தைக் கூட அவர்பொருட்படுத்தவில்லை. அவரின் கண்களிற்கு கள்ளுப்பானை மட்டுமே இன்பமாகத்தெரிந்தது. மீண்டும் தாய்க்கு அடி, வழக்கம்போல் சாப்பாடில்லை. இருந்தாலும் கல்வியின் மேல் உள்ள ஆர்வத்தால் பசி, தூக்கமின்றி சஜீவ் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஓர் பெரிய வைத்தியராக வரவேண்டும் என்ற ஆசை அந்த ஆசையே அவனை வழிநடத்திச் சென்றது. எவ்வாறிருந்த போதும் தன் தாய் காயப்படுவது அவனுக்கு சஞ்சலமாகவே இருந்தது. தன் தாய், தந்தையிடம் அடிவாங்கும் போதெல்லாம் தரையில் விழுந்த மீனாய்த் துடித்துப் போவான்.

மறுநாட்காலை பாடசாலைக்குச் சென்றதும் அங்கு ஒரு பிரச்சினை அவனின் கையைப் பிடித்து இழுத்துச் சென்றது. அது என்னவென்றால் அவன் சப்பாத்து அணிந்து வராத காரணத்தினால் ஒரு மாணவத்தலைவன் சஜீவை அதிபரிடம் அழைத்துச் சென்றான். சஜீவின் கோலத்தை அதிபர் ஒரு முறை


மேலும் கீழும் பார்த்தார். அழுக்கான ஆடை, சப்பாத்து இல்லை, அதிபருக்கு மூக்கிற்கு மேல் கோபம். நாளை சப்பாத்தோடு வா, இல்லை பாடசாலைக்கு வராதே என திட்டி அனுப்பினார். செய்வதறியாது திகைத்தான் சஜீவ். வீட்டு நிலையும் அவன் மனக்கண்முன் ஓடியது. வேறு வழியில்லாத சஜீவ் தான் வேலைக்குச் சென்று தன் தங்கையை மாத்திரம் படிக்க வைத்துத் தன் குடும்பத்தை பராமரிக்க நினைத்தான். அதற்குத் தயாரும் ஆனான். இதை அவனது உயிர் நண்பன் ரஜீவ் அறிந்து உடைந்துபோனான். ரஜீவ் பணக்கார மாணவன் தான். அவன் சஜீவிற்கும் அவனது தங்கைக்கும் நல்ல சப்பாத்தும் சீருடையும் வாங்கிக் கொண்டு சஜீவின் வீட்டிற்கு வந்தான். சஜீவ் வறுமையிலும் செம்மையாக வாழ்பவன்.இலகுவில் யாரிடமும் கையேந்த மாட்டான்.ஆனால் ரஜீவிடம் அப்படி இல்லை, அதனால் அவன் கொண்டு வந்த பொருட்களை வாங்கிக் கொண்டான்.

"இவ்வாறு நமக்குப் பல வழிகளிலும் உதவி செய்யும் ரஜீவிற்கு என்ன கைம்மாறு செய்யப்போகின்றோம்" எனக் கண்கலங்கி நின்றான் சஜீவ். அதன்பின் அவன் ஒழுங்காகப் பாடசாலை செல்லத் தொடங்கினான். ஆனால் அவன் வீட்டுப் பிரச்சினையோ முடிந்தபாடில்லை. "நாம் எப்படியாவது வைத்தியராகி நம் குடும்ப வறுமையைத் தீர்ப்போம்" எனத் திடசங்கற்பம் பூண்டான் சஜீவ். அதற்காக நீண்ட நேரம் படித்தான். அத்தோடு நின்று விடாது தனது தாய்க்கும் பல உதவிகளைச் செய்து கொடுக்க அவன் தவறவில்லை.

அன்று சனிக்கிழமை, வீரசிங்கம் நேரத்துடன் அவரின் கோயிலான கள்ளுத் தவறணைக்குச் சென்று, அவரது தெய்வமான தள்ளாடியம்மனை (கள்ளு) தரிசித்து விட்டு வீடு வந்தார். அன்று அவரது இம்சை அதிகமாக இருந்தது. வீட்டிலிருந்த பொருட்களையெல்லாம் எடுத்து உடைத்ததுடன் சஜீவ், கீர்த்தனாவின் புத்தகங்களைத் தீயிட்டுக் கொழுத்தினார். அத்தோடு நின்றுவிடாமல் சஜீவின் தாய் அந்த உத்தமியின் தாலிக்கொடியைத்தருமாறு அவளை அடித்து துன்புறுத்தினார். தாலிதானே பெண்ணுக்கு வேலி. அவள் தன் தாலியைக் கொடுக்க மறுத்தாள். இதனால் ஆத்திரமடைந்த வீரசிங்கம் வீட்டு மூலைக்குள் இருந்த உலக்கையை எடுத்து வந்து அவளுக்குத் தாறுமாறாக அடித்தான். அதில் ஒரு அடி அவளது தலையில் பட்டது. மரத்திலிருந்து பூ விழுவது போல சஜீவின் தாய் சாய்ந்தார். தன் தாயின் உயிர் பிரிந்ததைக் கண்ட சஜீவ் கோபத்தின் உச்சிக்கே போய்விட்டான். வீரசிங்கம் தன் தந்தை என்பதைக் கூட மறந்து மரக்கறிகள் வெட்டும் கத்தியால் தன் தந்தையைக் குத்தினான். தந்தையும் அடியற்ற மரம்போலச் சாய்ந்தார். சஜீவ் கத்தினான், கதறினான், அனலிட்ட மெழுகாய்த் துடித்தான், அழுது புரண்டான்.

கொலை செய்தவனைச் சட்டம் விடுமா? பொலிசார் அவனைக் கைதுசெய்து சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்த்தனர். அவனது தாய்க்கு இறுதிக்கிரியைகள் புரியக்கூட அவனை விடவில்லை. அவனின்நிலை இவ்வாறிருக்க அவனது தங்கை இச்சம்பவங்களால் மனநிலை பாதிக்கப்பட்டு அயலவர்களின் உதவியுடன் ஓர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள்.

அவளுக்குப் பித்துப்பிடித்து விட்டதாக வைத்தியர்கள் உறுதி செய்தனர். இச்செய்தியைக் கேட்ட சஜீவ் இடிந்து போனான். அவனுக்கு இவ்வாழ்க்கையே வெறுத்துப்போனது. அவனும் ஓர் நடைப் பிணமாகவே திரிய ஆரம்பித்தான். ஓர் குடிகாரனுக்குப் பிள்ளைகளாகப் பிறந்த பாவத்தால் ஓர் நல்ல வைத்தியனாக வரவேண்டிய ஒரு சிறுவனின் எதிர்காலம் வைத்தியசாலையுடனும் முடிவடைந்தது. இதனால் சஜீவின் நண்பன் ரஜீவும் மிகுந்த கவலையடைந்தான். இதில் ஒரே ஒரு நன்மை என்னவென்றால் சஜீவின் அயல்வீட்டுக்காரர் குடிப்பழக்கத்தைக் கைவிட்டார். இதை வீரசிங்கம் உணர்ந்திருந்தால் அச்சிறுவர்களின் நிலை சிறப்பாக விளங்கியிருக்கும்.




**ஆக்கம் : ம. ஜனோஜன்**
தரம் 11K

# பதின் வயதில் உள நலம்

## (MENTAL HEALTH TEENAGE)

அன்பான மாணவர்களே பதின்வயது (Teenage) என்பது பன்னிரண்டு வயது தொடக்கம் பத்தொன்பது வயது வரையான காலப்பகுதியாகும். உங்கள் உடலில் சிறுபராயத்திலிருந்ததை விட பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்படுவதை அவதானித்திருப்பீர்கள். சடுதியாக உங்கள் உயரம் கூடிவரும், உங்கள் தசைகள் சிறிது புடைக்கத் தொடங்கும், மெதுவாக உங்கள் மீசை அரும்பத் தொடங்கும், உங்கள் பிறப்புறுப்பின் அளவு சிறிது சிறிதாகப் பெரியதாகும், பிறப்புறுப்பைச் சுற்றியும் கமக்கட்டுக்களிலும் மயிர் வளர ஆரம்பிக்கும்.

இதன் அர்த்தம் உங்கள் உடல் பெரியவர்களின் உடலாக மாறிவிட்டதென்று அல்ல. சிறிது சிறிதாகப் பெரியவர்களின் உடலாக மாறி வருகின்றது என்றே அர்த்தமாகும். இவ்வளவு நீண்ட பதின்வயதின்தேவை என்ன?

அதற்குத் தகுந்த பல காரணங்கள் உள்ளன. ஒரு மனிதன் பெரியவனாக வளர்ந்ததும் சமுதாயத்தில் சுயமாக வாழ வேண்டிய நிர்ப்பந்தம் கட்டாயம் ஏற்படும். பெற்றெடுத்த தாய், தந்தையரைப் பராமரிக்க வேண்டிய காலம் உருவாகும். கூடப் பிறந்த சகோதர சகோதரரியருக்குப் பக்கத் துணையாக இருக்க வேண்டிய காலம் வரும். திருமணம் செய்து மனைவி, குழந்தைகளைப் பராமரிக்கும் காலம் வரும்.

இவை எல்லாவற்றுக்கும் எந்தவொரு காலகட்டத்திலும் வாழ்க்கைச் செலவைக் கட்டுக்குள் வைத்திருக்கக் கூடிய ஒரு தொழில் அவசியம். மேலும் உத்தியோக உயர்வில் அல்லது வியாபார முன்னேற்றத்தில் பிறரோடு கடுமையாகப் போட்டி போட வேண்டி வரும். அத்தோடு தொழிற்துறையில் வசிக்கும் பிரதேசத்தில் உறவினர் மத்தியில் காழ்ப்புணர்வு மற்றும் கருத்து வேறுபாடுகளினால் ஏற்படும் பாதகமான சூழ்நிலைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். திருமண வாழ்வில் பசும்புற் தரையில் சுகமாக நடக்கும் அனுபவம் மாத்திரமன்று இடையிடையே கல்லும் முள்ளும் நிறைந்த பாதையில் நடப்பதைப் போன்று சவாலான அனுபவங்களும் ஏற்படும்.

ஆக மேற்கூறப்பட்ட அனைத்து சவால்களுக்கும் மன ரீதியான பயிற்சிபெறும் காலம்தான் இந்த நீண்ட பதின் வயது. இனி சிறிது சிறிதாக என்னென்ன பயிற்சிகள் அவசியம் என்று விரிவாக ஆராய்வோம்.

நம் வாழ்வின் போக்கைத் தீர்மானிப்பதில் பழக்க வழக்கங்கள் பாரிய பங்களிப்புகளைச் செய்கின்றன. பழக்கவழக்கங்கள் என்றால் என்ன என்று மேலோட்டமாகப் பார்ப்போம்.

**பழக்க வழக்கங்கள் (Habits)**

நாளாந்த செயற்பாடுகளை திரும்பத் திரும்பச் செய்யும்போது பழக்க வழக்கங்களாக மாறுகின்றன. உதாரணமாக : காலையில் எழுந்தவுடன் பல் துலக்குதல், குளிக்கும் போது சோப் போடுதல் போன்றன. இந்த நிலையில் நல்லதோ கெட்டதோ பழக்க வழக்கங்களிலிருந்து மீள்வது என்பது மிகவும் கடினமாக காரியமாகும். இதற்கு மிகப் பெரிய தொடர்ச்சியான பிரயத்தனங்கள் தேவைப்படலாம். எனவே நல்ல பழக்கவழக்கங்கள் உருவாக வேண்டுமாயின் பிழையற்ற நாளாந்த நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். மேலும், சில பிழையான பழக்கவழக்கங்களைப் பழகியபின் செய்யாமல் தவிர்க்கும்போது மன, உடல் உளைச்சல் ஏற்படும். உதாரணமாக : மதுவுக்கு அடிமையாதல், புகைத்தல் பழக்கத்திற்கு அடிமையாதல், போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் என்பன.

பதின் வயதில் மிகக் கூடுதலான பழக்கவழக்கங்கள் ஆரம்பிக்கின்றன. எந்த நாளாந்த நடவடிக்கையில் ஈடுபட முன்னும் இது நல்ல நடவடிக்கையா? தீய நடவடிக்கையா என்று சற்றே சிந்தித்த பின் ஈடுபடுங்கள்.

விழுமியங்கள் (Valves) மனப்பாங்கு (Attitudes) என்பவற்றைக் கூடப் பழகித்தான் வாழ்க்கையில் கைக்கொள்ள முடியும். இதனை விளங்கிக் கொள்ள சுவாரஷ்யமான இதிகாசக் கதையொன்று உள்ளது. கிருஷ்ணர் ஒரு நாள் இரண்டு தங்க மலைகளைச் சிருஷ்டித்து விட்டு அவற்றைக் காலையிலிருந்து மாலைக்குள்ளே தானம் செய்து முடிக்கும் படி அர்ச்சனனிடம் கூறினார். உற்சாகமாகக் கடப்பாறையுடன் கிளம்பிய அர்ச்சுனன் மலைகளை உடைத்துப் போவார் வருவோருக்குத் தானம் செய்யத் தொடங்கினான். ஆனால் மாலையாகும் போது அந்த மலைகளின் ஆயிரத்தில் ஒரு பகுதியைக் கூடத் தானம்

செய்யமுடியவில்லை. அடுத்தநாள் கொடை வள்ளல் கர்ணனைக் கிருஷ்ணர் அழைத்து முன்புபோல் இரண்டு தங்க மலைகளைச் சிருஷ்டித்து மாலையாவதற்குமுன் தானம் செய்யும்படி பணித்தார். உடனே கர்ணன் அவ்வழியால் போன இரு வழிப்போக்கர்களை அழைத்து **"ஒரு மலையை நீ வைத்துக்கொள், மற்றையதை அவன் வைத்துக் கொள்ளட்டும்"**, என்று அதிரடியாகத் தானம் வழங்கினான்.

பார்த்தீர்களா மாணவர்களே மனப்பாங்கு கூட பழக்கவழக்கங்களால் தான் சிறப்புறுகின்றன.

இனிநாம் மாணவர் பராயத்தில் சிறந்த உள நலத்துடன் இருக்கப் பாடசாலைக்குள்ளே என்ன செய்யலாம், பாடசாலைக்கு வெளியே என்ன செய்யலாம் என்று பார்ப்போம்.

## பாடசாலைக்கு உள்ளே (செய்வதற்கு உகந்தவை)

### 1) புலனடக்கம் :

நீங்கள் படிக்கும் அனைத்துப் பாடங்களும் பிற்காலத்துக்கு உதவக்கூடிய அடிப்படையான விடயங்களை உள்ளடக்கியுள்ளன. பாடங்களை விளங்கிக்கொள்வதற்கு உங்கள் மனம் தெளிவாயிருக்க வேண்டும். மனம்தான் மூளைக்கு உள்ளே தகவல்கள் செல்வதற்குரிய கால்வாய். ஆசிரியர் பாடம் நடாத்தும் போது முதல்நாள் கலந்து கொண்ட திருமண வைபவத்தையோ அல்லது அடுத்த நாள் செல்லவிருக்கும் சுற்றுலாவைப் பற்றியோ நினைத்துக் கொண்டிருந்தால் ஆசிரியர் கதைக்கும் ஒலி மாத்திரம் கேட்கும், ஆனால் கருத்து விளங்காது. இதேபோல் சிந்தனையை சுற்றியிருக்கும் பொருட்கள் மீது படரவிட்டால் அல்லது ஆசிரியரோடு அன்றேல் பிறமாணவரோடு சேஷ்டை விட்டால் கூட மூளையில் பதிந்த, பாட சம்பந்தமான விடயத்தில் இடைவெளி காணப்படும்.

### 2) பிறரை மதித்தல்

அதிபர், ஆசிரியர்கள், சிரேஷ்ட மாணவர்களுக்கு மரியாதை கொடுத்துப் பழகும்போது பிற்காலத்தில் உயரதிகாரிகளுக்கு மரியாதை கொடுக்கும் மனப்பயிற்சி உருவாகும். அதிபர் ஆசிரியர்களை நீங்கள் அவமரியாதை செய்யும் போது வார்த்தைகளால் ஏசிவிட்டு மனவருத்தத்துடன் மாத்திரம் செல்வார்கள். ஆனால் இதே பழக்கத்தில் உயரதிகாரிகளைப் பிற்காலத்தில் அவமரியாதைசெய்யும் போது வார்த்தைகளால் மாத்திரம் புண்படுத்தாது சம்பளக்குறைப்பு ஏன் சேவை நீக்கம் கூடச் செய்து கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவார்கள். அத்துடன் சக, கனிஷ்ட மாணவர்களை மரியாதையாக நடத்தும்போது அவர்களும் உங்களுடன் மரியாதையாகப் பழகுவதுடன் உங்கள் மீது உயர்மதிப்பும் கொள்வார்கள்.

### 3) ஆர்வம் (Interest)

எந்தவொரு விடத்திலும் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டால் அந்த விடயத்தில் கரை காணலாம். சில மாணவர்கள் தங்களாகவே கணனியில் மென்பொருட்களைப் பாவிப்பதில் விற்பன்னர்களாகின்றனர். சிலர் கைத்தொலைபேசியை மிகச் சிறப்பாகக் கழற்றித் திருத்துவதில் பாண்டித்தியம் பெறுகிறார்கள். இதற்குக் காரணம் அவற்றில் அவர்களுக்கு உள்ள ஆர்வம் தான். துரதிஸ்ட வசமாக நம் நாட்டின் மாணவர்களின் தொழில்சார் சிறப்புத் தேர்ச்சியை விட உயர்தரப் பெறுபேற்றிற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. எனவே உங்கள் பாடங்களில் ஆர்வத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

### 4) ஈடுபாடு

எந்தவொரு விடயத்திலும் தனியே ஆர்வத்தை மாத்திரம் வளர்த்துக் கொண்டால் போதுமானது அல்ல. ஈடுபாட்டையும் வளர்த்துக் கொள்ளவேண்டும். ஒரு பாடத்தை விரும்பிப் படிப்பதுடன் முழுதாகவும் படிக்க வேண்டும். மேலும், அது சம்பந்தமான சந்தேகங்களை உரியவர்களிடம் கேட்டுத்தெரிந்து கொள்ளவேண்டும்.

### 5) புறக்கிருத்திய நடவடிக்கைகள்

நீங்கள் மிகவும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய செயற்பாடுகள் இவை. பாடசாலை விழாக்களில் பங்குபற்றலாம், விளையாட்டுக்களில் ஈடுபடலாம், பல்வேறு போட்டிகளில் பங்கு பற்றலாம், சாரணியம், Interact club, leo club என்பவற்றில் இணைந்து கொள்ளலாம். இவற்றின் மூலம் பிறருக்கு உதவும் மனப்பாங்கு வளரும், சுய கட்டுப்பாடு அதிகரிக்கும், விட்டுக் கொடுக்கும் தன்மை வளரும், தோல்விகளைத் தாங்கும் மனப்பாங்கு அதிகரிக்கும், உங்கள் கொள்கையை ஏற்றுக் கொள்ளச் செய்யும் ஆற்றல் அதிகரிக்கும், பிறரை எடைபோடும் ஆற்றல் கூட வளரும்.

**(தவிர்க்க வேண்டியவை)**

**1) சக மாணவரைச் சீண்டுதல் (Bullying)**

தனி மாணவனோ அல்லது குழுவோ ஒரு மாணவனை அந்த மாணவனின் உடல் ரீதியான இயலாமையை, சமூக பொருளாதார இயலாமையை, மன ரீதியிலான இயலாமையைப் பெரிதுபடுத்தி தொடர்ச்சியாகக் கேலி, கிண்டல் செய்து உள வதை கொடுத்தல், இதனால் பாதிக்கப்பட்ட மாணவனின் மனவளர்ச்சி பாதிக்கப்படுவதுடன் பாதகமான மனப்பாங்குகள் வளரவும் அடிகோலப்படும். நீங்களும் இவ்வாறு பாதிக்கப்பட்டிருந்தால் சிவாநந்த வித்தியாலயத்திற்குரிய Councelling ஆசிரியரை அணுகவும்.

**2) ஓய்வு நேர அரட்டை**

இது தவிர்க்க முடியாத ஒன்றுதான் என்றாலும் பாலியல் சம்பந்தமானகருத்துக்களை மாத்திரமாவது தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் பாடசாலைக் காலத்தில் எந்தவொரு மாணவனுக்கும் பாலியல் சம்பந்தமான முழுமையான அறிவு கிடையாது. ஆனால் அநேக மாணவர்கள் தங்களுக்குப் பாலியல் அறிவு அதிகம் என்று காட்டிக்கொள்ளவே விரும்புவார்கள். இதனால் பிழையான தகவல்களை சகமாணவர்களுக்குத் தெளிவாக வழங்குவார்கள். இதனால் பாலியம்சம்பந்தமாகப் பிழையான அறிவுடன் ஒரு குழுவே உருவாகும். பாலியல் என்பது பாலியல் நடவடிக்கை மாத்திரமல்ல, இந்த நடவடிக்கையால் ஏற்படும் பின்விளைவுகள், நோய்கள், மனத்தாக்கங்கள் போன்றன கூட உள்ளடக்கப்படுகின்றன.

உங்களுக்கு இது சம்பந்தமான உள்ளத்தேடல் இருந்தால், நண்பர்களின் அறிவுரைகளையோ, Internet உதவியையோ நாட வேண்டாம். உங்கள் பெற்றோர் உங்களுடன் ஆழமான மனம் திறந்த கலந்துரையாடல்களை நடத்துபவராயின் அவர்களிடம் கேளுங்கள். அல்லது மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறும் குடும்பநல கிளினிக்கிற்குச் செல்லுங்கள். இங்கு மிகவும் திறமையான உள வளத் துணையாளர்கள் சேவையாற்றுகிறார்கள். உங்கள் வயதுக்கேற்ற அறிவுரை வழங்குவார்கள். பரிகசிக்க மாட்டார்கள்.

## பாடசாலைக்கு வெளியேயான உள நலம்

**1) குடும்ப உளநலம்**

பதின் வயதில் தாய் தந்தையரோடு உங்களுக்கு ஏன் முரண்பாடு வருகிறது? நான் வளர்ந்தவன், எனக்குரிய மரியாதை வேண்டும், எனக்கு எல்லாம் தெரியும், ஆனால் இது அம்மா அப்பாவுக்கு விளங்கவில்லை. இது உங்கள் பக்க நியாயம். எனது பிள்ளைக்கு உரியவயது வரவில்லை, அவன் பிழையான வழியில் போகக் கூடாது. இது உங்கள் பெற்றோர் பக்க நியாயம். எனது பிள்ளை கெட்டுப்போகக்கூடாது என்ற அந்த அப்பாவிப் பெற்றோரின் ஆதங்கத்திற்குரிய உரிமையைக் கொடுக்கமாட்டீர்களா? அந்த உரிமையைக் கொடுப்பீர்கள் தானே?

**காதல் உணர்வு**

நம்முடைய இயல்பு வாழ்க்கையை வழிநடத்துவது பிற்றியூட்டரி (Pitutory) என்ற மூளைக்குக் கீழே உள்ள சுரப்பிதான். பதின் வயதில் ஆண்களும் பருவமடைகிறார்கள். இதன்போது பிற்றியூற்றரி சுரக்கும் சுரப்புகள் ஆண் விதையைத் தூண்டி (Testesteronel) டெஸ்டெஸ்டெரோன் என்ற ஓமோனைச் சுரக்க வைக்கும்.

டெஸ்டடெஸ்டெரோன் தான் நான் பெரியவன் என்ற உணர்வைக் கிளர்ந்தெழச் செய்கிறது. இந்த உணர்வின் வடிகாலுக்காக சிகரெட், பியர், சாராயம் என்று வாழ்க்கையின் இருளை நோக்கிப் பயணிக்கிறார்கள். இவை பிற்காலத்தில் பொக்கிஷமான ஆண்மையை நேரடியாகப் பாதிக்கும்.
கிழங்குக்கடை, இன்டர்நெட் சென்ரர், மைதானம் என்று முக்கிய இடங்களில் கூடிக் கருத்துப் பரிமாறுவது வாழ்க்கையாகிறது. "**புதுமை**" பிடித்தமான கொள்கையாகிறது. முந்தைய தலைமுறையிலிருந்து மாறுபட வேண்டும் என்ற வேட்கை வலுக்கிறது.

இதே நேரம் அதுவரை புரியாத சிலேடை, இரட்டை அர்த்தம், கவிதை, தத்துவம், வியாக்கியானம், தார்மீகம் எல்லாம் சுவாரஸ்யமாகிறன. புதிய துறைகளில் ஆர்வம் கூடுகிறது.

இவ்வளவு விரைவாகச் சிந்திக்கும் மூளை இன்னொன்றையும் செய்யும். காமம், காதல் பற்றிய அதீத கற்பனை. இது சிந்தனைத் தேடலைத் தூண்டும். இறுதியில் எதிர்ப்பாலினக் கவனத்தைத் தன்பக்கம் திருப்பும் நடவடிக்கைகளை அதிகரிக்கும்.

இது வெறும் பருவக் கவர்ச்சியே அன்றி முதிர்ந்த காதல் அல்ல. எனவே ஏடாகூடமாகக் காதல் செய்கிறேன் என்று கிளம்பி, உங்களுக்கும் ஒரு அப்பாவிப் பெண்ணுக்கும் மனஅழுத்தத்தை ஏற்படுத்தாதீர்கள். சினிமாவில் காதல் காட்சிகளில் நடிப்பவர்கள் பல இலட்ச ரூபாய்கள் சம்பளத்திற்காகவே நடிக்கிறார்கள். எனவே சினிமாவில் வரும் காதல் காட்சிகள் வெறும் கற்பனையே அன்றி யதார்த்தமல்ல.

### 3) நேரமுகாமைத்துவம் (Time Manegement)

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பழக வேண்டிய மிக முக்கியமான பழக்கவழக்கங்களில் ஒன்று இதுவாகும். நாளாந்தம் நீங்கள் செய்ய வேண்டிய வேலைகளுக்கு நேரத்தைப் பிரித்து அதன்படி செய்து முடியுங்கள். மேலும், மாதாந்தம் வருடாந்தம் கூட உங்கள் நேரத்தைப் பிரிக்கப் பழகிக்கொள்ளுங்கள். Microsooft ஸ்தாபகர் Bill Gates இற்குக் கூட ஒரு நாளில் 24 மணித்தியாலங்கள் தான் உள்ளன. ஆனால் அவர் தனது நேரத்தைச் சிறந்த முறையில் முகாமைப்படுத்தி இன்று உலகை வென்றுள்ளார். ஆற்றல் மிக்க மாணவர்களே ஏன் நீங்களும் உங்கள் முப்பத்தைந்தாவது வயதில் பெரிய பணக்காரராக வரமுடியாது? அது உங்களால் நிச்சயமாக முடியும்! விளம்பரங்கள், சினிமா, மெகாசீரியல்கள் இவற்றுக்கு தகுந்த தீனி போடுகின்றன.

### 4) பொழுது போக்குகள்

பொழுதைப் பயனுள்ள முறையில் கழித்தல் என்பதே இதன்பொருள். உங்களுக்குப் பிடித்த நல்ல விளையாட்டுக்களில் ஈடுபடலாம், கலைகளைக் கற்று பிறரையும் மகிழ்விக்கலாம், சமூக ஆர்வலர் கழகங்களை உருவாக்கி சமூகப் பணிகளில் ஈடுபடலாம். குழந்தைகளுக்குப் பாடஞ் சொல்லித் தரலாம். மிக முக்கியமாக முடிந்தவரை நல்ல புத்தகங்களை வாசியுங்கள். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான். ஓய்வு நேரத்தில் சோம்பி இருக்கவேண்டாம். "**வேலையற்ற மனம் பேயின் கைத்தடியாகிறது**" என்ற ஆங்கிலப் பழமொழி கூட உள்ளது. சோம்பியிருக்கும் போது மனம் அலைபாய்ந்து தீய சிந்தனைகளில் ஈடுபடும்.

அதேநேரம் அதீத இன்டர்நெற் பாவனை, நீண்ட நேர கைத்தொலைபேசிப் பாவனை, நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்த்தல் என்பன மன அழுத்தத்தைத் தோற்றுவிப்பதுடன் எரிந்து விழும் தன்மையையும் அதிகரிக்கும். சாராயம், சிகரட், மது, போதைப்பொருட் பாவனைகளை வெறுத்தொதுக்குங்கள்.

### ஆன்மீகம்

கடவுளின் இருக்கை பற்றிய கொள்கைகள் இன்றுவரை விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்த முடியாதுள்ளது. ஆனால் ஆழமான கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள் எந்நேரமும் இறைவன் உற்ற துணையாக இருக்கிறார் என்று நம்புவார்கள். எப்பொழுதும் கடவுள் தம்மை அவதானித்துக் கொண்டிருக்கிறார் என்று நம்புவர்கள் இதனால் இக்கட்டான நேரங்களில் அவர்கள் தளர்ந்து போகமாட்டார்கள். இலகுவில் பிழையான வழிச் செல்லமாட்டார்கள். எனவே இறை நம்பிக்கை, இறை அனுஷ்டானம் போன்றன உங்களை சிறந்த ஒழுக்க சீலர்களாக மாற்றும். மேலும் வாழ்க்கையில் வெற்றி பெற்று உலகப் புகழ் பெற்ற யாரையாவது உங்கள் Role Model ஆகக் கொள்ளுங்கள். அவர் வாழ்க்கையில் பின்பற்றிய முறைகளைத் தேடி அறியுங்கள். அவரைப் போல் வாழ்வில் வெற்றியீட்ட முனையுங்கள்.

நீங்கள் சிறந்த உளச் சுகாதாரத்தைப் பேணுபவராக இருந்தால் வாழ்க்கையின் சகல படிகளிலும் வெற்றியை வயப்படுத்துவதுடன், பிள்ளைகளில் ஏற்படக்கூடிய மன உளைச்சல் (Stress) மேலும் இதனால் ஏற்படக்கூடிய இதய நோய்கள், நீரிழிவு, புற்று நோய் போன்றவற்றிலிருந்து கூட தப்பிப் பிழைக்கலாம்.

நீங்கள் வாழ்க்கைப் பாதையிலிருந்து தவறிப்போகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவச் சொற்களால் சிவாநந்தா மாதாவே அல்லலுறுவாள். எனவே என் இனிய மாணவர்களே மானமுயர்ந்து, வானமுயர்ந்து, புகழ் பெறுவீர்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

**Dr. சிவலிங்கம் விவேகானந்தன்** (MBBS (Cey))

# ஆசிரியரை விட்டுப் பிரியும் தருணம் . . .

*கல்விக் கடலில் முதல் படியைத் தாண்ட ஆசானே!*
*உம்மைப் பிரிந்து செல்லவிருக்கிறோம்*
*பல வருடங்கள் சென்ற — நம்*
*கல்வி வாழ்க்கையில்*
*நாம் பழகிய எத்தனையோ நினைவுகள்*
*எத்தனையோ இன்பங்கள்*
*பெறுமதிமிக்க ஆசான் மாணவ உறவு*
*எத்தனை ஜென்மம் எடுத்தாலும்*
*அழியாமல் என்றும் நிழலாய் தொடரும்*

*ஆசானே கல்விக் கடலைத் தாண்டுவதற்குரிய*
*வழியை காட்டினாய்*
*படகாய் நீயே மாறினாய்!*
*இத்தனை காலங்கள் எங்களுக்காய்*
*பாடுபட்டு கல்வி அறிவை புகட்டினாய்!*



*கதை கதையாய் சொல்லும் நம் பிரயாண*
*காலம் முடியும் தருணம் வந்தது*
*ஒரு சில காலத்தில் மாணவ மலர்களை*
*உருவாக்கி சிறந்த பெறுபேறைப் பெற*
*வைக்கும் ஆசானே!*
*உமக்கு நாங்கள் என்ன செய்வது?*
*செய்யும் ஒரே செயல் சிறந்த*
*பெறுபேற்றை பெற்று*
*உங்கள் புகழை மேலுயர்த்துவோம்*

*நீங்கள் கல்வியை மட்டும் ஊட்டவில்லை . .*
*அன்பையும் மகிழ்ச்சியையும் புகட்டினீர்கள்*
*இனி நாங்கள் உங்கள் அன்பை*
*எங்கு சுவாசிப்பது*

*இத்தனை நாட்கள் நீங்கள் ஆற்றிய*
*முப்பெரும் சேவைக்கு — நன்றி*
*எனும் மூன்று எழுத்து*
*ஈடாகுமா? கல்வித் தந்தையே*
*எங்கள் உயிர் வாழும் காலம்*
*எல்லாம் இதயம் துடிக்கும்*
*உங்கள் ஞாபகத்தில்.*



**ஆக்கம் : ந. நவநிதன்**
தரம் 12 கணிதம்

# நூல்களும் அவற்றை எழுதியவர்களும்



| | | |
|---|---|---|
| பெரிய புராணம் | - | சேக்கிழார் பெருமான் |
| சீறாப்புராணம் | - | உமறுப் புலவர் |
| சிலப்பதிகாரம் | - | இளங்கோவடிகள் |
| மகாபாரதம் | - | வேதவியாசர் |
| இலியட், | - | ஒடிசி ஹோமர் |
| அர்த்தசாஸ்திரம் | - | கௌடில்யர் (சாணக்கியர்) |
| மணிமேகலை | - | சீழ்த்தலைச் சாத்தனார் |
| கீதாஞ்சலி | - | ரவீந்திரநாத் தாகூர் |
| குடியரசு | - | பிளேட்டோ |
| ஒரு உலகம் | - | வென்டல் வில்கி |
| யுத்தமும் சமாதானமும் | - | லியோ ரொல்ஸ் ரோய் |
| சகுந்தலை வெண்பா | - | சு. நடேசபிள்ளை |
| தேம்பாவணி | - | வீரமாமுனிவர் |
| எனது போராட்டம் | - | அடொல்ப் ஹிட்லர் |

**ஆக்கம் : அ. சுரேஷ்காந்**
தரம் 5R



# இசையின் சிறப்பும் நாட்டியத்தில் இதன் முக்கியத்துவமும்



அறிவிற் சிறந்து விளங்கும் மனித சமுதாயத்தின் பண்பாட்டு வரலாற்றில் ஓர் இனத்தின் நாகரீக வளர்ச்சியை கணிப்பதற்கு அம்மக்களால் சிறப்பாகப் போற்றி வளர்க்கப்படும் கலைகளையே ஓர் அளவுகோலாகக் கொள்கின்றனர் உலக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள். இக்கலைகளினுள்ளும் மக்களுடைய உள்ளுணர்வைத் தூண்டி இன்பம் பயந்து அவர்களுடைய அறிவையும் துலங்கச் செய்யும் ஆற்றல் கொண்டு விளங்குவன நுண்கலைகளாகிய இசை, நடனம், சிற்பம், நாடகம், ஓவியம், கட்டடக்கலை என்பனவாகும். இவற்றுள் தலையாயதான கலையாக விளங்குவது இசைக்கலையே.

இசை என்றால் எல்லோருடைய உள்ளத்திலும் இன்ப உணர்வு பிறத்தல் இயல்பாக உள்ளது. இசை எனப்படுவது உணர்வு பூர்வமாக உருவாகும் ஒலியை நெறிப்படுத்தி அழகு, இனிமை பரிமளிக்கக் கேட்போர் கருத்தைக் கவரும்படி வெளிப்படுத்துவது என்று கொள்ளலாம். இயற்கையிலே மனிதன் தோன்றும் முன்னமே ஒலி பிறந்தது என்பர். இவ்வாறாகப் பிறந்த ஒலியே காலப்போக்கில் இனிமையான இசையாக பரிணாம வளர்ச்சியடைந்தது.

இசை வாயாற் பாடுவது என்ற வகையாலும், கருவியாற்றுவது என்ற வகையாலும் காலப்போக்கில் தனிசிறந்து வளர்ச்சியுற்று, மொழியின் ஒரு கூறாக இடம்பெற்று விளங்கியது. இசைமரபே இவ்விரு வகையில்தான் அமைந்தது. சிலர் இசையும் மொழியும் ஒன்றே என்பர். ஆனால் இசை வேறு மொழி வேறு இசையினால் மொழியும் மொழியினால் இசையும் சிறப்புற்றன என்று கூறலாம்.

இசை இனிமையுடையது என்பது எவருக்கும் சொல்லித் தெரிய வேண்டியதன்று. உலகிலேயே உள்ள இசைகளிலே தமிழிசை மிகவும் இனிமையுடையதாகவும், சிறந்ததாகவும் இருப்பதற்கு ஒரு காரணம் உண்டு. தமிழ் உலகமொழிகளிலே சிறந்தது இனிமையானது அத்தமிழ் பாடலோடு இசை கூடும்போது இயல்பாகவுள்ள இசையின் இனிமையும், சிறப்பும் இணைந்து இணையற்ற நிலையினை எய்திவிடுகின்றது.

**"கவிப்பா அமுதம் இசையின் கரியோடு**
**கண்ணற் குண்ணக் குவிப்பேன்"**



இவ்வாறு கம்பநாடர் பாடியுள்ளார். இனிமைத் தமிழும் இன்னிசையும் இணைந்து விளங்குதல், உடலும், உயிரும், மலரும் மணமும், மணியும் ஒலியும் போல பிரிக்க முடியாத பற்றினைக் கொண்டது. எனவேதான் **"தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்"** என்று திருநாவுக்கரசர் தேவாரத்தில் பாடியுள்ளார். இசையினால் எதுவும் வசமாகும். இசை இன்பத்தை உண்டாக்கும். பசியைத் தீர்க்கும், தன்னையே மறக்கச் செய்யும், பகைமையைத் துறக்கச் செய்யும், அனைத்து உயிரினங்களையும் ஆட்டிவைக்கும். இதயத்தைத் தூய்மைப்படுத்தும், மதியைக் கூட மயக்கிடும் மதுரஸநாதம் என ஓர் அறிஞர் கூறுகிறார். மேலும் கற்றோர், கல்லாதவர், அரசர், ஆண்டி, விலங்குகள், பறவைகள், தாவரங்கள் யாவற்றையுமே இசை இன்புறச்செய்கிறது. நல்ல பசியுடன் தினைக்கதிரை உண்ண வந்த யானை கொல்லையை காத்து நின்ற பெண்ணின் குறிஞ்சிப் பண்ணைக் கேட்டு மயங்கி பசியையும் மறந்து தினையை உண்ணாது நின்றது என்று அகநானூறு கூறுகிறது.

இன்னிசையால் உடலில் தோன்றும் கொடிய நோய்களையும் குணப்படுத்தலாம் என ஆய்வாளர்கள் கண்டு பிடித்து நிரூபித்துள்ளனர். உதாரணமாக :

| | | |
|---|---|---|
| 1) தீராத வயிற்றுவலி தீர | - | நவரோஜ் இராகம் சிறந்த மருந்தாகிறது. |
| 2) நல்ல உறக்கத்திற்கு | - | நீலாம்பரி, யதுகுலகாம்போதி இராகங்கள் |
| 3) வாத நோய் குணமடைய | - | வராளி இராகம் |
| 4) இரத்த அழுத்தம், மனச்சோர்வை நீக்க | - | ஆனந்தபைரவி, காம்போதி இராகங்கள் |
| 5) உத்வேகத்தை உண்டாக்க | - | பிலஹரி இராகம் |
| 6) தலைவலி தீர | - | ஸாவேரி இராகம் |

மேலும் இசையினால் பேசாத ஊமைகளை பேசவைக்கவும் நடக்காதவர்களை நடக்க வைப்பதற்கும் **'ஹேர்டெக்கில்'** சங்கீத சிகிச்சை நிலையமொன்றில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இவை தவிரவும் இசை, மழையைப் பெய்விப்பதற்கும் காரணமாக அமைகின்றது. குறிப்பாக பண்டைக்காலத்தில் மேக ராக குறிஞ்சிப்பண் (அமிர்தவர்ஷினி) பாடி மழை பெய்வித்ததாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறாக இசையினது சிறப்பை பலவகையிலும் எடுத்து நோக்கிப் பார்த்து அறிந்து கொண்டாலும் அவ்விசையானது நாட்டியத்திற்கு எவ்வாறான முக்கிய பங்கை ஆற்றுகின்றது என்பது பற்றிப் பார்ப்பது சாலச்சிறந்ததாகும்.

நாட்டிய அரங்கில் இயற்றமிழின் இன்பமும், அதில் ஊறிக்கிடக்கும் இசையமுதும் இவ்விரண்டையும் தழுவிய நாட்டியத்தில் நளினமும் ஆகிய மூன்றும் மயங்கி முத்தமிழாகக் கலந்து காண்போரையும் கேட்போரையும் இன்பக் கனவில் தவழச் செய்யும் தெய்வீக சிறப்பினைக் கொண்டன. நாட்டியம் சிறக்க அதற்கு உறுதுணையான இசை மிகவும் இன்றியமையாதது.


நாட்டிய நிகழ்வானது ஒரு கூட்டு முயற்சியாகும். ஆடல், நட்டுவாங்கம், பாட்டிசை, கருவியிசை ஆகிய அனைத்தும் ஒட்டு மொத்தமாக ஒரு முழுமையான நிகழ்ச்சியை உருவாக்குவதே கலையின் வெற்றிக்கு மூலகாரணமாகிறது.

இசை என்பது நாட்டியத்தின் உயிர்போன்று திகழ்கின்றது. பொதுவாக பாட்டில்லாத நாட்டியம் வர்ணம் தீட்டாத ஓவியம் போலாகும் என்று கூறப்படுகின்றது. பரதர் நாட்டிய சாஸ்திரத்தில் நாட்டியத்தின் அங்கமாக இசை பற்றியும் அதன் இலக்கணங்கள் பற்றியும் விளக்குகின்றார். இசையைத் தனித்து நோக்கலாம். ஆனால் நாட்டியமோ தனித்து நோக்கமுடியாதது. கற்றோர் மட்டுமன்றி கல்லாதோரும் இசைக்கு மயங்குகின்றனர். இசைப்பாடல்கள் ஆடலின் பாவங்களுக்கேற்ப பாடப்படுகின்றன. தற்போது நடைமுறையிலுள்ள சங்கீதம் எனும் இசைச்சொல் இசையுடன் கூடிய கூத்திற்கேயுரிய பெயராகக் கையாளப்பட்டு வந்தது. நாடகம் அபிநயப் பிரதானமான நிருத்தியம் தாள லயத்தோடு கூடிய அங்க வித்தியாச ரூபமான நிருத்தம் இம் மூன்றும் நாட்டியத்தினுள் அடங்கும்.

நாட்டியத்தில் இசையின் தரம் குறைந்தால் அது தன் சிறப்பை இழந்து விடுகிறது. இனிய குரலின் பாட்டிசையும், உணர்ச்சிகளுக்கு எழிச்சியூட்டும் கருவியிசையும், ஆடலோடு பொருந்தி எழும்போது ஆடல் சிறக்கிறது உயர்ச்சி பெறுகிறது.

பழந்தமிழகத்தில் மாதவியின் அரங்கேற்றத்தின்போது யாழும் குழலும் தாளமும் தண்ணுமையும் இணைய ஆடலுக்குச் சிறப்பூட்டிய செய்தியை சிலப்பதிகாரம் கூறுகிறது.

நாட்டியத்தில் குரலிசையுடன் இசைவிருந்தளிப்பன வாத்தியங்களாகும். இவ்வாத்தியங்கள் தோல்வாத்தியம், துளைவாத்தியம், நரம்புவாத்தியம், கஞ்சற்கருவிகள் என நான்கு வகையாக பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாத்தியங்களின் சேர்க்கை குதவம் எனப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. இவை தவிர ரக்திக்கும் ரஸத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால் நாட்டியத்தில் ரஸத்திற்கேற்ற பாடலே கையாளப்படுகிறது. ரஸங்கள் ஒன்பது என வகுக்கப்பட்டுள்ளன. அவை நவரஸங்கள் என அழைக்கப்படுகின்றன. உதாரணமாக



வீரரஸத்திற்கு அடானா, பிலஹரி, ஹம்ஸத்வனி இராகங்களும்,
கருணாரஸத்திற்கு சகானா, காபி இராகங்களும்,
சிருங்கார ரஸத்திற்கு மோகனம், உசேனி போன்ற ராகங்களும் ரஸானுபாவங்களுக்கேற்ப பயன்படுத்தப்படுகின்றன.

நடனத்தில் இசைப்பாட்டானது ஸமமாகவும், ரக்தியும் இனிமையும் உள்ளதாகவும் இருத்தல் அவசியம். அழுத்தமும் குழைவும் மூன்று ஸ்தாயிகளிலும் சஞ்சரிப்பதாயும் சபை முழுவதும் கேட்கப்படுவதாயும் இருக்கவேண்டும். எனினும் குரல் இனிமை ஸ்திரீ கானத்திற்கே மிகப்பொருத்தமாகக் காணப்படுகிறது. எனினும் ஆண் குரலும் இணைந்து ஒலிக்கும்போது கேட்பதற்கு மிகவும் இனிமை உடையதாய் இருக்கும்.

கடவுள்களை நடனத்தோற்றத்தில் கண்டு வழிபடுபவர் நம் மக்கள். உதாரணமாக நடராஜர், காளி, கணபதி, கிருஷ்ணர் முதலிய தெய்வங்கள் நடனத் தோற்றங்களில் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. பண்டைக்கால ஆடவரும், பெண்டிரும் ஆடற்கலையிலும், இசைக்கலையிலும் தேர்ச்சி பெறுதலை ஒரு

பெருமையான விடயமாகக் கருதினர். இன்றும் இவ்வாறு இசை, நடனத்தில் மக்களது ஆர்வம் அதிகரித்துள்ளதை நாம் காணலாம்.

நாட்டியத்திற்கேற்ற தனிப்பட்ட இசை காணப்படுகிறது. அத்தகைய இசையை தஞ்சை நால்வர், சூரியநாராயண சாஸ்திரி, மகாதேவ அண்ணாவி, மூவலூர் சபாபதி ஐயர், ஜெயராமன் அவர்களின் தந்தையான பாட்டகசுந்தர நட்டுவனார் போன்றோர் இந் நடனக்கலையில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், நாட்டிய இசைக்கு வழிகோரியவர்களாகவும் விளங்குகின்றனர்.

எனவே இவற்றை எடுத்த நோக்கிப் பார்ப்போமாயின் நாட்டியத்தின் உயிர்நாடியாகத் திகழும் ஆடலும் பாடலும் தாளத்தினூடு ஒருங்கிணையும் நட்டுவாங்கமும் நடனத்திற்கு இன்றியமையாதனவாகும். பாடலை இன்னும் மெருகேற்றுவன பக்க வாத்தியங்களாகும். இம்முறையானது பண்டைக்காலம் தொடக்கம் இன்றுவரை நாட்டியத்தின் கூறாக விளங்குகிறது. அதுமட்டுமன்றி இசையின்றி நடனம் இல்லை என்றும், வாழ்க்கையின் முழுத்தன்மைகளும் முற்றுப்பெற வேண்டுமெனில் இசை ஒரு கூறாக இடம்பெறுதல் வேண்டும் என்று கூறுவதில் ஐயமேதும் இல்லை.



**உசாத்துணை நூல்கள் :**


1) திராவிடர் இசை - தண்டபாணி பக் - 01
2) இசையியல் - வெற்றிச்செல்வன் சென்னை ஜுன் 1986 பக் 17
3) பண்டைத்தமிழர் ஒலியுணர்வும் இசையுணர்வும் - ஆளவந்தார் RF 1981 பக் 12
4) இந்திய இசைக்கருவூலம் - டாக்டர் பக்கிரிசாமி கே. ஏ 2002 குசேலர் சென்னை பக் 04 - 06
5) பரதக்கலை - சிவசாமி - யாழ்ப்பாணம்
6) பரதநாட்டியம் நாட்டியவரலாறு - தேசிய கல்வி நிறுவகம் 1992



**ஆக்கம் : திருமதி. ஜயந்தினி கலிங்கேஸ்வரன்**
(ஆசிரியை)
மட்/சிவாநந்த வித்தியாலயம்



Mr. K. MANORAJ
Principal
BT/Shivananda Vidyalaya
(National School)
Kallady-Uppodai
Batticaloa


## பொது அறிவு



1) கண்ணாடி செய்யப்படும் மணல் வகை .................... சிலிக்கன்
2) மிகச் சிறிய இதயம் உள்ள பிராணி .................... சிங்கம்
3) சூரியனை நேருக்கு நேர் பார்க்கக் கூடிய சக்தி உள்ள பறவை ...... கழுகு
4) உலகில் சூரியன் மறையும் நாடு .................... இங்கிலாந்து
5) சத்தமிடத் தெரியாத விலங்கு .................... ஒட்டகம்
6) தனது வாலில் உணவையும் நீரையும் சேமித்த வைக்கும் பிராணி ...... பல்லி
7) கறையான அரிக்காத மரம் எது .................... தேக்கு




**ஆக்கம் : வ. யுவதர்ஷன்**
தரம் 4R

# வாய், பல் சுகாதாரம்

Dr. கேதீசன் - DDS(SL), - பல்வைத்திய நிபுணர்

எமது உடலில் வாய் மிகவும் பிரதானமான ஒரு அங்கமாகும். வீட்டிற்கு வாசல் எவ்வளவு அவசியமோ இதே போல் மனித உடலிற்கு வாய் மிகவும் அவசியமாகும். வாயுடன் தொடர்புபட்டு உதடுகள், பற்கள், முரசு, நாக்கு, அண்ணம் வாய்க்குழி, மென்சவ்வுகள் என்பன காணப்படுகின்றன. இவை அனைத்தும் சுகாதார முறைப்படி பேணப்படல் வேண்டும். இல்லாவிடில் . . . . . .

1) பற்சூத்தை (Dental Caries)
2) முரசுநோய் (Periodontal Disease)
3) வாய்ப்புற்று நோய் (Oral Cancer)

போன்ற முக்கிய நோய்கள் ஏற்படலாம். இந்நோய்கள் வயது, பால் வேறுபாடு இன்றி சகலரையும் தாக்கக்கூடியது. நாம் நோய்கள் பற்றி விழிப்புணர்வுடன் இருப்போமாயின் சகல நோய்களில் இருந்தும் பாதுகாப்புப் பெறலாம். மேற்குறித்த நோய்கள் பற்றி சிறிது விளக்கமாக நோக்குவோம்.

## (1) பற்சூத்தை (Dental Caries)

பற்சூத்தை நோயானது உலக அளவில் ஒரு பொதுச் சுகாதாரப் பிரச்சனையாக கருதப்படுகின்றது. கடந்த 20 ஆண்டுகளுக்கு உள்ளாக பல முன்னேற்றம் அடைந்த நாடுகளில் இப்பிரச்சினை மிக வேகமாக குறைந்து வருகின்றது எனலாம். இதற்கான காரணம்

1) புளோறைட் (fluoride) அடங்கிய பற்பசை / குடிநீர் பாவித்தல்.
2) பற்களில் இயற்கையாகவே காணப்படும் வெட்டுக்களை அடைப்பதற்கான புதிய மருத்துவக் கண்டுபிடிப்பு.
3) பற்சுகாதார நிகழ்ச்சிகளை முன்னெடுத்தலும் அமுலாக்குதலும்.

இலங்கையிலும் பல சுகாதார முன்னேற்ற நிகழ்வுகள் ஒவ்வொரு சுகாதாரப் பிரிவிலும் அமுலாக்கப்பட்டு வருகின்றது. இவற்றில் முக்கியமாக பாடசாலைக் குழந்தைகளுக்கான நிகழ்வும், கற்பிணித்தாய்மார்களுக்கான நிகழ்வும் சகல பிராந்திய சுகாதாரப் பிரிவுகளிலும் (MOH), சகல தரப்பு சுகாதார ஊழியர்களின் உதவியுடன் நடாத்தப்படுகின்றன.

மனிதன் கருவில் உற்பத்தியாகி வளரும் போதே பல முக்கிய நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. தாயின் மூலம் பல ஊட்டச்சத்துக்களைப் பெற்று வளர்ந்து குழந்தை பிறந்து 6 – 8 மாதத்திலேயே பாற்பற்கள் முளைக்கத் தொடங்குகின்றன. 2 – 2 ½ வருட எல்லைக்குள் மொத்தம் 20 பற்கள் (மேல்தாடையில் - 10, கீழ்த்தாடையில் - 10) முளைக்கின்றன.

இந்த பாற்பற்களை பாதுகாப்பது எமது கடமையாகும். நவீன ஆய்வின்படி குழந்தை பிறந்து வளரும்போது அக்குழந்தையை பராமரிக்கும் தாய், தந்தை, சுற்றத்தார், இனத்தவர் மற்றும் பராமரிப்பாளர்களின் வாய் சுகாதாரம் மிகவும் சுத்தமாக இருத்தல் வேண்டும். குழந்தையை கொஞ்சும் போது, உணவுகளை பெரியவர்கள் எச்சிப்படுத்திக் கொடுக்கும் போது கிருமிகள் அற்ற வாயுடன் பிறக்கும் குழந்தைக்கு கிருமிகள் பரவுகின்றன. எனவே ஒரு குழந்தையின் வாயின் சுகாதாரம் மிகவும் கவனத்துடன் பேணப்பட வேண்டும். குழந்தை பிறப்பதற்கு முன்பாகவே முக்கியமாக தாய், தந்தை, மற்றும் இனத்தார், சுற்றத்தார் ஆகியோரின் பற்களின் நிலைமைகளுக்கு ஏற்ப நிரப்பப்பட வேண்டிய சூத்தைப்பற்கள் நிரப்பப்பட்டு, அகற்றப்பட வேண்டிய துண்டுப்பற்கள், சூத்தைப் பற்கள் அகற்றப்பட்டு, முரசு நோய்களும் களைந்தெறியப்பட வேண்டும். இதற்கான நிகழ்வாக ஒவ்வொரு கற்பிணித் தாயும் பல்வைத்தியரின் சோதனைக்காக அனுப்பப்படுவதுடன், அவர்களுக்கான வாய் சுகாதார செயலமர்வுகளும் முன்னெடுக்கப்பட்டு விழிப்பூட்டப்படுகின்றனர்.

**பாற்பற்கள் நிரந்தரப் பற்களுக்கான தூண்கள் அவை நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.**

a) பற்கள் முளைத்தவுடனேயே அவை துலக்கப்பட்டு சுத்தமாக்கப்பட வேண்டும். அதாவது பெரியவர்கள் தங்கள் கைகளில் அணியும் பற்தூரிகையினால் சிறியவர்களின் பற்களை சுத்தமாக்கலாம்.

b) குழந்தைக்கு பால் ஊட்டும் போது தாய் மிகக் கவனத்துடன் செயற்பட வேண்டும். பால் ஊட்டி முடிந்தவுடன் குழந்தையின் வாயை நீரினால் சுத்தமாக்கி பால் வாயினுள் படியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எந்த நேரமானாலும் இம்முறை கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

c) புட்டிப்பாலுக்கு சீனி இட்டு கொடுப்பதை தவிர்த்தல் வேண்டும்.

d) குழந்தை இனிப்பான பண்டங்களை உண்டவுடன் வாயை நன்றாக நீரில் கழுவிவிடல் வேண்டும்.

e) இனிப்பான உணவுகளை குழந்தைக்கு அடிக்கடி கொடுப்பதை தவிர்த்தல் வேண்டும்.

f) அவ்வாறு இனிப்பான உணவுகள் கொடுக்கப்படும் இடத்து அவை பிரதான உணவு வேளைகளில் கொடுக்கப்படுவது மிகவும் விரும்பத்தக்கது.

g) இரவில் குழந்தை பற்களை விளக்குவது ஒவ்வொரு பெற்றோராலும் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

h) பல் விளக்கியவுடன் எந்த இனிப்புப் பண்டங்களையும் குழந்தையை உண்ண விடக் கூடாது.

இவ்வாறான பழக்கவழக்கங்கள் பாற்பற்களின் சூத்தையை தவிர்க்கும்.

நிரந்தரப் பற்கள் 6 – 7 வயதில் முளைக்கத் தொடங்குகின்றன. 18 – 21 வயதில் ஒவ்வொரு தாடையிலும் 16 பற்களாக 32 பற்கள் காணப்படும்.

பாற்பற்கள் நிரந்தரப் பற்களினால் பிரதியீடு செய்யப்படுகின்றன. நிரந்தரப்பற்கள் முளைக்கும் போது பாற்பற்கள் ஆடி விழுகின்றன. அவ்வாறு விழாத சந்தர்ப்பத்தில் அவை வைத்தியரின் ஆலோசனையின் பிரகாரம் அகற்றப்பட்ட வேண்டும். இதன் மூலம் நாம் பற்களின் ஒழுங்கீனத்தை தவிர்க்கலாம். (Mal occlusion) ஒரு சில சந்தர்ப்பங்களில் பாற்பற்கள் அகற்றப்படாமல் பேணப்பட வேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு.

இவ்வாறு நிரந்தரப் பற்கள் முளைக்கும் போது அவை நன்றாக சுத்தமாக்கப்பட வேண்டும். இல்லாவிடின் அவற்றில் பற்சூத்தையை நாம் எதிர்கொள்ளலாம். அடுத்ததாக எமது நிரந்தரப் பற்களில் 6 – 7 வயதில் முளைக்கும் 1ம் கடைவாய்ப்பல்லில் சூத்தை பிடிப்பது அதிகம். இதனை கருத்தில் கொண்டு வைத்தியரின் உதவியுடன் அப்பல்லில் காணப்படும் குழிகளை (Pit & Fissure) நிரப்பி விடவேண்டும்.

**நிரந்தரப் பற்களை மிகவும் அவதானத்துடன் பராமரிக்க வேண்டும்.**

1) சிறுவர்கள் பாடசாலை காலங்களில் நிலத்தில் விழுதல்.
2) ஒருவருடன் ஒருவர் மோதுதல்.
3) மாடிப்படிக்கட்டுகளில் இருந்து தவறி விழுதல்.
4) துவிச்சக்கர வண்டியில் இருந்து விழுதல்.
5) சண்டை பிடித்தல்.

போன்ற நிகழ்வுகளினால் முன்பற்கள் உடையக்கூடும். அல்லாவிட்டால் அவை முரசில் இருந்து கழன்று நிலத்தில் விழும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆசிரியரும், பெற்றோரும் மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

1) உடைந்த துண்டுப்பற்களை / முழுப்பல்லை மிகக் கவனமாக சுத்தமான துணியில் / கடதாசியில் எடுத்துக் கொண்டு 24 மணிநேரத்திற்குள்ளாக அருகில் உள்ள பல்வைத்தியரின் உதவியை நாடவேண்டும்.
2) விபத்தின் மூலம் பற்கள் அடிபட்டு அவற்றில் உடைவு, முரசில் கிழிவு இல்லாவிட்டாலும் பல்வைத்தியரின் உதவியை நாடவேண்டும்.

அடுத்ததாக பல்லில் சூத்தை ஏற்பட்டால் அவற்றிற்கு தகுந்த வைத்திய ஆலோசனையைப் பெறவேண்டும்.

1) உணவை அரைப்பதற்கும்,
2) முகத்திற்கு தோற்றத்தையும் அழகையும் கொடுப்பதற்கும்,
3) கதைப்பதற்கும்

பற்கள் மனிதனுக்கு உறுதுணையாகின்றன. பல்லுப் போனால் சொல்லுப் போகும் என்பார்கள். சாதாரணமாக நாம் உண்ணும் உணவில் உள்ள வெல்லங்களை பற்றீரியாக்கள் உபயோகித்து இலத்திரிக்கமிலத்தை உற்பத்தி செய்கின்றன. இது பல்லின் மேற்பரப்பில் காணப்படும் கல்சியம் பொஸ்பேற்றை அகற்றுகின்றது. (Deminaralization) சிறிது நேரத்தின் பின் 20 நிமிடம் - 2 மணித்தியாலத்தினுள் அமிலம் பொதுவாக மறைந்து இழக்கப்பட்ட தாதுப்பொருள் உமிழ்நீரில் இருந்து பெறப்பட்டு பிரதியீடு செய்யப்படுகின்றது (Remineralytion). தொடர்ந்து வெல்லம் பாவிக்கப்பட்டால் இந்த செயற்பாடு குழம்பப்பட்டு தாதுப் பொருளின் வெளியேற்றம் கூடுதலாக்கப்பட்டு மிளிரி கரைந்து

பற்களில் குழிகள் ஏற்படும் இதுவே பற்சூத்தையாகும். அதிகளவு சீனி கொண்ட உணவுகள் இவ்வரிப்பை அதிகரித்து கூடுதலான நேரம் பல்மேற்பரப்பில் தொடர்பில் இருப்பதற்கு உதவுகின்றன.

எனவே பற்சூத்தையை ஏற்படுத்தும் பக்ரீரியாவானது நாம் உண்ணும் உணவில் சீனியின் அளவு குறையும் போதும் அதை உபயோகப்படுத்தும் எண்ணிக்கை குறையும் போதும் குறைகின்றன.

## 2) முரசு நோய்

பற்படலம் (Dental Plaque) என்பது பக்ரீரியா செறிந்துள்ள மென்மையான பல் மேற்பரப்பில் காணப்படும் வெண்படலமே ஆகும். பொதுவாக இது எல்லோருடைய வாயிலும் காணப்படும்.

பாற்படலத்தில் உள்ள பக்ரீரியாக்களும் அவை உண்டாக்கும். நச்சுப் பதார்த்தங்களுக்கும் முரசு ஏற்படுத்தும் எதிர்த்தாக்கமே முரசு நோயை உண்டாக்குகின்றது.

**முரசு நோயானது**

- பற்களின் ஒழுங்கீன அமைப்பு (Malaligned teeth))
- திருத்தமாக அடைக்கப்படாத பல் அடைப்புக்கள் (Irregular Restorations)
- பற்படலத்தில் கல்சியம் படிதல் (Dental Calculus)
- பகுதி செயற்கை பற்கள் அணிதல் (Partial Dentures) போன்ற காரணிகளால் அதிகரிக்கின்றன.

பக்ரீரியாவுக்கும், பக்ரீரியாவினால் உண்டாகும் நச்சுப்பதார்த்தங்களுக்கும் எதிராக முரசு ஏற்படுத்தும் எதிர்த்தாக்கத்தை மாற்றும் காரணிகள்.

1) பக்ரீரியாவின் வேறுபட்ட இனங்கள்.
2) புகைபிடித்தல்
3) ஓமோன்களின் / அனுசேப தாக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள்.
   உதரணம் : மாதவிடாய்
   கர்ப்ப காலம்
   நீரிழிவு நோய்

முரசு நோயை கட்டுப்படுத்துவதென்பது பற்படலத்தை கட்டுப்படுத்துவதே ஆகும்.

பற்படலத்தை நாம் தினமும் முறையான பற்தூரிகை கொண்டு தகுந்த முறைப்படி பல்துலக்குவதால் கட்டுப்படுத்தலாம்.

ஒரு நாளைக்கு பல தடவைகள் பிழையான முறையில் பல் துலக்குவதைப் பார்க்கிலும் ஒன்று / இரண்டு தடவைகள் சரியான முறையில் பல் துலக்குவதே நல்ல செயற்பாடாகும். Modified Bass Technique திருத்தியமைக்கப்பட்ட பாஸ்முறை பல்துலக்குதலானது உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்துலக்கும் முறையாகும்.

எமது சரீரத்தில் உள்ள சில கலங்கள் மாறுபாடடைந்து அதிலிருந்து போசணை பெற்று சரீரத்திற்கு எதிராக தொழிற்படும் எமது சரீரத்தின் பகுதியே புற்றுநோயாகும். இது எமது உடலின் எப்பகுதியிலும் உருவாகலாம். இவ்வாறே வாயினுள் வாய் புற்று நோய் ஏற்படுகின்றது. (Oral Cancer)

1) புகையிலை பாவித்தல்
   - வெற்றிலை போடுதல்
   - புகைபிடித்தல்
   - மூக்குப் பொடி போடுதல்
2) மதுசாரம்
3) வாய்ப்புற்று நோயாக மாறக்கூடிய நோய்கள்
   1) வாய் மென்சவ்வில் காணப்படும் அகற்றமுடியாத வெண்படலம்
   2) சிவப்பு படலங்கள். (Eryhroplalia)
   3) வாய் மென்சவ்வின் கீழ் நார்த்தன்மை (sub mucous fibrosis)
   4) லைகன் பிளேனஸ் எனப்படும் தோலுடன் சம்பந்தப்பட்ட அல்லது சம்பந்தப்படாத நோய் (Lichen Planus)
   5) பங்கசு நோய் (Candidiasts)

4) வாய் மென்சவ்வின் மீது மீண்டும் மீண்டும் உராய்வு.

   1) கூர்மையான பற்கள், பற்துண்டுகள், பல்வேர்கள்
   2) சரியாக செய்யப்படாத செய்கை பற்கூட்டம்
   3) சரியாக செய்யப்படாத பல் ஒழுங்கீனத்தை ஒழுங்குபடுத்த உபயோகிக்கும் கம்பியுடன் கூடிய தகடுகள்
   5) இரும்புச் சத்து, விற்றமின் B சத்து குறைவதால் இவை புற்றுநோய் ஏற்படுவதற்கான ஆபத்தை அதிகரிக்கும்.
   6) பாலியல் நோய்கள்
      சிபிலிஸ் (syphilis)
      ஹேர்பிஸ் (Herpes)
      எயிட்ஸ் (Aids)

இவற்றால் நாக்கு, வாய், சொக்கு பகுதிகளில் புற்றுநோய் ஏற்படும் சந்தர்ப்பம் அதிகரிக்கும். எனவே இவ்வாறான நோய்களை நாம் தவிர்ப்பதற்கு

1) நல்ல பழக்கவழக்கங்களை கைக்கொண்டு
2) நல்ல சத்தான உணவுகளை உட்கொண்டும்
3) வைத்தியரின் ஆலோசனைகளை பெற்று சுகதேகிகளாக வாழ்வோமாக.

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**

## பாரதியார் அமுதவாக்கு

## அரைநொடி கூட வீணாக்காதே!

- கடவுளை நம்பினவர்கள் கைவிடப்படமாட்டார்கள். அனைத்தும் கடவுளுடைய செயல் என்பதே பொது உண்மையாகும்.
- நமக்கு வெளியில் இருப்பவர்கள் பகைவர்கள் இல்லை. நம் உள்ளமே நமக்கு பகை. உள்ளப்பகையை களைந்துவிட்டால் வெளிப்பகை தானாகவே அகன்றுவிடும்.
- வேலை செய்யாமல் அரைநொடி கூட இருக்கக்கூடாது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உனக்கென்று இறைவனால் தரப்பட்டுள்ள பணியை செய்து கொண்டே இருக்க வேண்டும்.
- தெய்வபக்தி உடையவன் மற்றவர்களுக்கு உதவி செய்பவனாக இருப்பான். மற்றவர்கள் வேடதாரிகளாகத்தான் இருப்பார்கள்.
- அனைத்து விதமான குறைகளுக்கும் புத்தி குறைவே காரணமாகும். இந்த குறையை நீக்குவதற்கு ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும்.
- அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். இயற்கை விதியை அனுசரித்து வாழவேண்டும். அடக்கம், பொறுமை, ஜீவகாருண்யம் என்ற குணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**- பாரதியார் -**

**ஆக்கம் : ர. சஜீவன்**
தரம் 5

# சிவாநந்த வித்தியாலய சரஸ்வதி ஆலயம்



1929ம் ஆண்டு மட்டக்களப்பில் வாழ்ந்த சைவ மக்களுக்கு ஓர் உன்னத ஆண்டாகக் காணப்பட்டது. அவ்வாண்டுகளுக்கு முன் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பிறமதப் பாடசாலைகளையே நம்பியிருந்தனர். அப் பாடசாலைகளே பெரிதும் உதவின. ஆனால் அவ்வாண்டில் தான் தமது பிள்ளைகள் சைவச் சூழலிலே கல்வி கற்கக் கூடியவாறு இராமக்கிருஷ்ண மிசன் துறவி கிழக்கிழங்கை காரைதீவின் புலவர் **"முத்தமிழ் வித்தகர் ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர்"** அவர்களால் சிவாநந்த வித்தியாலயம் (1929ம்ஆண்டில்) நிறுவப்பட்டது.

1963ம் ஆண்டு இப்பாடசாலை அரசின் உடைமையாக்கப்படும் வரை இராமக்கிருஷ்ண மிசன் சங்கத் துறவிகளாலேயே நிர்வகிக்கப்பட்டு வந்தது. இராமக்கிருஷ்ண மிசன் சங்கமும், சிவாநந்த வித்தியாலயமும் ஒன்றாகவே பண்பாட்டைப் பேணி மக்களால் போற்றப்பட்டு மதிக்கப்பட்டமையாலேயே இவ் வித்தியாலயத்தை **"சுவாமியின் பாடசாலை"** என்றே மக்கள் பொதுவாக அழைத்து வரலாயினர்.

அரசினர் வித்தியாலயத்தை உடைமையாக்கிய பொழுது ஏற்பட்ட கட்டிட நிலப் பகிர்வு காரணமாக பாடசாலை பயன்படுத்தி வந்த வழிபாட்டுத் தலம் மிசனின் நில எல்லைக்குள் அமைந்துவிட்டது. எனினும், சில காலம் அவ்வழிபாட்டுத் தலத்தையே வித்தியாலயம் பயன்படுத்தி வந்தது. ஆனால் வித்தியாலய வளர்ச்சி காரணமாக வகுப்பறைகள் கட்டப்பட்டபோது வழிபாட்டிற்குச் செல்லும் வழி முற்றாகவே அடைக்கப்பட்டு விட்டது. இதனால் தல வழிபாட்டில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டன. இவ்வாறான வேளையில் வித்தியாலயத்தில் ஒரு வழிபாட்டுத் தலத்தின் அவசியம் உணரப்பட்டது.

வித்தியாலய ஆசிரியர் சங்கக் கூட்டத்திலே இதன் தேவை பற்றிக் கலந்துரையாடி சரஸ்வதிக்கான ஒரு வழிபாட்டிடம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இத் தீர்மானம் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இச்சங்கம் கல்வி அலுவலகத்தின் அனுமதியையும் பெற்றுக்கொண்டது.

சரஸ்வதி ஆலயம் கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்த வேளையிலேயே, அமரரான செல்லையா சுப்பிரமணியம் சரஸ்வதி விக்கிரகத்திற்குத் தேவையான பொருள் உதவிகளை வழங்கினார். அத்தோடு அவர் அவ்வித்தியாலயத்தில் கற்பித்த சமஸ்கிருத ஆசிரியர் வியாகரண சிரோமணி பூரண தியாகராஜா குருக்கள் மூலம் நாமகள் விக்கிரகத்தை பஞ்சலோகத்தில் வடிக்கவும் ஆவன செய்தார்.

விக்கிரகம் வடிக்கப்பட்டதும் அதனை எடுத்து வந்து கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் சரஸ்வதிக்கு ஆலயம் அமைக்கும் வரை அங்கேயே வைக்கப்பட்டிருந்தது.

ஆலய நிர்மாணம் நிறைவுற்று அம்மன் விக்கிரகத்தை வித்தியாலயத்தில் ஸ்தாபிக்க 18-03-1992ம் ஆண்டில் அன்னையின் திருவருள் கைகூடியது. அன்று புதன்கிழமை பங்குனி உத்தர திருநாளில் வந்த சுபவேளையில் அன்னை குடமுழுக்குச் செய்யப்பட்டு அருள்பாலித்து வருகின்றாள். முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் பிறந்த நூற்றாண்டினைக் கொண்டாடும் அவ்வாண்டிலேயே அவரினால் தாபிக்கப்பெற்ற சிவாநந்த வித்தியாலயத்தில் ஆயகலைகள் அறுபத்து நான்கிற்கும் தலைவியாக விளங்கும் கலைமகள் விக்கிரகத்தை ஸ்தாபித்தது பொருத்தமாகவே அமைந்துள்ளது. இவ் விக்கிரக ஸ்தாபனம் அன்றைய அதிபர் திரு. க. தியாகராஜா தலைமையில் ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி அணிசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் மன்றத்தினராலும் சிறப்பாக அன்னையின் விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டது.

மேலும் 2002ம் ஆண்டு பங்குனி உத்தர தினத்தில் மீண்டும் அவ்வாலயத்தில் அன்றைய அதிபர் E.P. ஆனந்தராஜா அவர்களின் தலைமையில் பழைய மாணவர் மன்றம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியோரின் ஒத்துழைப்புடன் கும்பாபிஷேகம் இனிதே நடைபெற்றது.

இப்பாடசாலையில் இவ்வருட மங்களகரமான ஸ்ரீ நந்தன வருஷம் உத்தராயணம் வசந்த ருது சித்திரைத் திங்கள் 22ம் நாள் (04-05-2012) வெள்ளிக்கிழமை பூர்வபஷ திரயோதசி திதியும், அமிர்தசித்த யோகமும், அத்த நஷத்திரமும் கூடிய காலை 8.40 மணி முதல் 9.32 மணி வரையுள்ள மிதுன லக்கன சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீ சரஸ்வதி தேவிக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேக நிகழ்வினை சிவஸ்ரீ பூரண தியாகராஜ குருக்கள், சிவஸ்ரீ தியாகராஜா கமலராஜக் குருக்கள், பிரம்மஸ்ரீ சோ. கிரிதரசர்மா குருக்கள் போன்றோர் சிறப்பாக நடாத்தி முடித்தனர்.

இம் மகாகும்பாபிஷேக நிகழ்வு அப்போதைய பாடசாலை அதிபர். திரு. தெ. ரவீந்திரமூர்த்தி தலைமையில் ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி அணிசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் மன்றத்தினராலும் சிறப்பாக நடாத்தி முடித்தனர்.

தற்போது இவ்வாலயத்தில் ஒவ்வொரு நாளும் காலையில் பிரமஸ்ரீ சோ. கிரிதரசர்மா பிரதம குருக்களால் பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. அத்தோடு ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் ஒவ்வொரு தரத்தைச் சேர்ந்த பிரிவு மாணவர்களினாலும் சிறப்பாக பூசை வழிபாடுகள் நடைபெற்று வருவது சிறம்பம்சமாகும்.



**ஆக்கம் : திருமதி. V. புலேந்திரன்** (ஆசிரியை)
மட்/சிவாநந்த வித்தியாலயம்

---

# புத்தகப் புரட்சி



ஆசான்களே இல்லாது
அமைதியாய் கற்றுத்தருபவர்கள்
நீங்களல்லவா . . . . ?

கட்டணம் எதுவுமின்றி
கல்வியூட்டும் ஆசான்களாய்
அரியணையில் அமர்ந்தவரே . . . . !

அறியாமை எனும் அழுக்கில்
மனிதமின்றி உழல்வது உங்கள்
அகல் விழிகளில் தெரியவில்லையா . . . ?

ஏடுகளே . . . !



கட்டுக்களை அறுத்தெறிந்து
கவிதைகளை சொரியுங்கள். . .
பாளை வெடித்தாற்போல்
பக்கங்களை திறவுங்கள் ..

நூல்களே . . . !

மூளைக்கு விருந்து வைக்க
முகம் முன்னால் வாருங்கள் . . !
வேளைக்கு வந்தால்தான்
வெளிச்சத்தை மானிடம் பெறும்

ஏழைக்கும் எளியவர்க்கும்
எட்டிடாத எழுத்தறிவை
எட்டிப் பிடிப்பதற்கு – கல்வி
ஏணிதனை எமக்கு தாருங்கள் .. !

கலை மகளை கூட
காசுள்ளவர்கள் – தம்
கைகளுக்குள் போட்டுவிடுகிறார்கள் . .
நாங்கள் ஏழைகள்
தெரு விளக்குகள் எரியும் வரை
தினம் தினம் காத்திருப்பவர்கள்
கற்று கொள்ள ஆசைப்படுகிறோம்
கதவுகளை திறவுங்கள் . . . . .

தொட்டடுக் கொள்ள முடியாததென்று
துன்பத்தில் துவளுவோரை
தட்டிக் கொடுத்து – நீங்கள்
தரணியில் அறிஞனாக்கிடுக . . . .

தொடர்க உங்கள் பணி . . .

**கவியாக்கம் : N. லக்ஸ்மணன்**
தரம் 1IV

# சான்றிதழுக்கு படித்தாலும் சான்றோனாகிச் சீர்பெறு

அன்புள்ள தம்பி நிஷ்காமியன் படிப்புக்கு படிதல் அச்சாணி ஆகும். படிதல் என்றால் பணிவென்று பொருள். சான்றோர்களாகிய அறிஞர்கள் சொல்லாமலே குறிப்பறிந்து மற்றவர்க்கு நன்மை செய்வர். அறிவிற்குறைந்த சிறியோர் பிறர் சொல்வதை கேட்டு அனுசரித்து செய்வர். ஆனால் அறிவில்லாத மூடர்கள் யார் எவ்வண்ணம் எவ்வளவு தூரம் எடுத்து உரைத்த போதிலும் எப்படியான பொறுப்புக்களையும் உணரமாட்டார்கள். காரியங்களையும் செய்யமாட்டார்கள் இதற்கு உதாரணம் சொல்கிறேன் கேள்.



பூக்காமல் காய்க்கும் பலாமரம்
பூத்துக்காய்க்கும் மாமரம்
பூத்தும் பயன் அளிக்காத பாதிரிமரம்

மன்னனும் மாசு அறக்கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன்
மன்னனுக்கு தன்தேசம் அல்லால் சிறப்பில்லை
கற்றோர்க்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு.

என்ற ஔவை கிழவியின் பாடலை கற்கும் குழவிகளாகிய நீங்கள் உணரவேண்டும்.

சக்கரையை எவர் தின்றாலும் இனிக்குமே தவிர கசக்காது. அதுபோல் வேப்பம் பழத்தை எவர்மென்றாலும் கசக்குமே தவிர இனிக்காது.

இதே போன்றுதான் சான்றோரும் அவரவர்களின் குணங்களில் எப்போதுமே குறையாமல் இருப்பார்கள்.

சாத்திரங்கள் பல்வேறு வழிகளைச் சொல்லுகின்றன. எமக்கு எது தகுதியானது என்பதை நோயாளி ஒருவருக்கு தகுந்த மருந்து எதுவென்று வைத்தியர் கூறுவதுபோல் நமக்கு சான்றோர்கள் அறிவாளிகள் சொல்லியுள்ளார்கள்.

சருணுஷ்வா வஹிதோ
வித்வன்யன்மயா
ஸமுதீர்யதே ததேதச்
சரவணாத் ஸயோ
பவபந்தாத் விமோஷ்யதே (விவேகசூடாமணி - 63)

எது விளக்கி கூறப்படுகிறதோ அதை மிக கவனத்துடன் கேட்பதால் பிறவித்தளையில் இருந்து விடுபட முடியும். இங்கே பிறவித்தளை என்று சொல்லும் இடத்தில் கற்கின்ற மாணவர்கள் புத்திகிலேச சோர்வு என்று எண்ணிக்கொண்டால் உங்கள் எண்ணங்கள் ஈடேறும்.

சாத்திரங்கள் எல்லையற்றது எனவும், அறிய வேண்டியது அநேகம் எனவும் காலம் குறைவு இடையூறுகள் பற்பல எனவும் எது சாரமாயுள்ளதோ அதை நீர் கலந்த பாலிலிருந்து பாலை மட்டும் கிரகிப்பதுபோல நாடியடைய வேண்டும் என மகான்கள் மாத்திரம் அல்ல ராமகிருஷ்ண மிசன் சிவாநந்த வித்தியாலய சின்னத்தில் உள்ளஅன்னமும் தாமரைப் பூவும் இதையே மாணவர்களுக்கு அறிவுறுத்துகிறது.

எந்த வழியிலும் வாழலாம் என்பதை விட இந்த வழிதான் வாழ வேண்டும் என வாழ்ந்து வழிகாட்டி இருக்கும் மானிடர்க்கு எங்கு செல்லினும் சிறப்புத்தான்.

குடும்பத்தலைவன் தன் வீட்டில் பூசிக்கப்பட்டான் அன்று. அது போன்று ஆசிரியர், குரு ஒவ்வொரு மாணவரது இதயக் கோயிலிலும் வைத்து பூசிக்கப்பட்டார்கள் அன்று. ஆனால் இன்று பூசிக்காவிட்டாலும் ஏற்றிவிடும் ஏணிகள் என்பதை கூட மறந்துவிட்டார்களே.

தன்னுடைய நாட்டில் மட்டும் பூசிக்கப்படுபவன் அரசன். அறிவாளிகள் எவ்விடத்தும் (சென்ற தேசமெல்லாம்) பூசிக்கப்படுவார்கள். அவர்கள் அகவையிலும், அறிவிலும். அனுபவத்திலும், அன்பு காட்டுவதிலும், அறம் புரிவதிலும் உயர்ந்தவர்கள்.

வேதகாலத்திலிருந்தே மனிதகுலம் நல்வாழ்வு வாழ்வதற்காக முனிவர்கள், சித்தர்கள், மகான்கள் கற்பது கற்பிப்பது இவை இரண்டையும் வாழ்வின் முக்கிய குறியாகக் கொண்டு வாழவேண்டும் என எடுத்தியம்பியுள்ளார்கள். அப்பேர்ப்பட்டவர்களின் சுயநலம் அற்ற வாழ்வு மனிதகுலத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு

**"வேதத்தை விட்ட அறமில்லை**
**வேதத்தில் ஓதத்தகு எல்லாம் உள"**
என்ற திருமந்திரம் கற்றபடி நிற்க மாணவர்க்கு குருமந்திரமாகும்.

வாழ்ந்து வழிகாட்டிய மகானுபாவர்களாகிய அறிவாளிகள், குருமார்கள் மிக ஆழமான கடலில் உள்ள முத்து சிப்பிகள் இவை ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. அப்படிப்பட்ட முத்துக்களை மிகுந்த கவனத்துடனும் சிரத்தையுடனும் சிரமம்பட்டு பொறுப்புடன் ஒன்றாக கோர்த்து அறிவின் தூய்மையான மாலையாக்கி தாமும் அணிந்து பயன்பெற்று நல்வாழ்வு வாழ எமக்கு ஈந்துள்ளது யாம் செய்த பாக்கியமே. மாணவர்கள் எதிர்காலத்தில் பயனுள்ள வாழ்வு வாழ வேண்டும் என்பதே அறிஞர்களின் குறிக்கோள்.

ஆதிசங்கரர்

**"ஜந்தூனாம் நரஜன்ம துர்லபம்"** மனிதனாகப் பிறப்பது ஓர் உயர்ந்த பாக்கியம் என்று சொன்னதை

**"அரிது அரிது மானிடராதல் அரிது"**

என மனிதனின் கடமை, பண்பாடு, நெறிகளை கூறியுள்ள ஔவையார் மிக அழகாக வாழ்க்கைத் தேவையான பொருள் இல்லாதவனும், செங்கோல் செலுத்துவதற்கு நாடு இல்லாத அரசனும், வியாபாரம் செய்வதற்கு அறிவு இல்லாதவனும், ஆசிரியர் இன்றி கல்வி பயில்பவனும், நல்ல பண்புகள் இல்லாத மனையாளும், விருந்தினர்களை உபசரிக்காத குடும்பமும் வீண் ஆனவை என்பதை வாழப்போகும் மாணவர் சமுதாயம் கருத்தில் கொள்வது காலத்தின் தேவை.

வையகவாழ்வை வாழ்வாங்கு வாழ்ந்த பெரியோர்கள் மனித சமுதாயம் நல்லபடி வாழ வழிகாட்டியதை பைத்தியக்காரன் என்று ஏளனம் கூறியதே மிச்சம், எனவும் ஆன்மீக மாணவர்களாகிய நீங்கள் வாழ்க்கையில் சவால்களை சிரித்து கொண்டே சமாளிக்க வேண்டும். பிறர் சிரிக்க வாழாமல், நீ சிரித்து வாழ புலனடக்கி கற்பதே சிறப்பென்று கூறிய சுவாமி சிவாநந்த மகராஜியின் கருத்தை கருத்தில் கொள்மின்.

சுவாமி சிவாநந்தரை பார்த்து மாணவனொருவன் உலகில் அருமையான ஐந்துபேர் யார் எனக்கேட்டான் அதற்கு சுவாமிஜி.


மகனே! தன்னுடைய சரக்கில் கெட்ட நிலை கூறும் வியாபாரி, புகழை விரும்பாத கொடையாளி, மாற்றைக் குறைத்து கூறாமல் பொன் வாங்கும் வணிகன், எந்த லஞ்சமும் வாங்காத உத்தியோகத்தன், தண்டனையை நியாயம் என்று ஒப்பு கொள்ளும் குற்றவாளி ஆகிய ஐந்து பேருமே அருமை ஆனவர்கள் எனக் கூறியவர்.

அத்தோடு இவை ஐந்துமே படிக்கின்ற மாணவரைக் கெடுக்கின்ற பஞ்ச புலனக்காட்சிகள் எனக்கூறி உள்ளதை மாணவர்கள் சிந்திக்க வேண்டும். மாணவர்களுக்கிடையே ஏற்படும் நட்பு வேணவாவோடு கற்பதற்கும் ஞானத்தை காப்பதற்கும் ஆக இருக்க வேண்டும்.

நாகாக்கும் நட்பாக தேகாதி சுகமற்றதாக இருக்க வேண்டும். கோடாலியால் சாய்க்கப்படும் காடு மீண்டும் வளரும் ஆனால் அருவருப்பாக புண்பட பேசி காயத்தை ஏற்படுத்தும் தீய நட்பு தீயை போன்று மாணவர்களின் உயர்வை எரித்து விடும்.

நன்றி உடையவர்கள் பண்பாளர்கள், உண்மையாளர்கள், உயர்தரமானவர்கள், "விசுவாசம் உள்ளவர்கள் ஒழுக்கத்திலும் நேர்மையிலும் உறுதியானவர்கள் ஆகியோரையே மாணவ காலத்தில் நட்பாக்கி கொள்ளுங்கள்" என்ற விதுரரின் நீதி மொழி என்றைக்கும் நீதியே. வீணாக கோடாலி காம்பான நட்புகளால் உங்கள் கல்வி ஞான மேன்பாட்டை அழித்துவிடாதீர்கள். சினேகிதத்தின் சிறப்பு நல்லவர்களுடன் கூடிவாழ்வது என்பதை மிகச்சிறப்பாக ஆதிசங்கரர்

"சத்சங்கத்லே நிஷ்சங்கத்துவம்
நிஷ்சங்கத்வே நிர்மோகத்துவம்
நிர்மோகத்வே நித்ஸலதத்துவம்
நிர்ஸல தத்துவ ஜீவன்முத்தி"



என்று சொன்னதை கம்பர் **"ஒரு பகல் பழகினார் உயிரை ஈவரால்"** எனச்சொன்னவை யாருக்காக நமக்காகத்தானே.கட்டுப்பாட்டுடனும், சீரிய ஒழுக்கத்துடனும் வாழ்க்கை நடத்தும் நண்பர்களுடன் சேரும் அவசியத்தைப் பற்றி ஔவையார்

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற்கேட்பதுவும் நன்றே
நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே
அவரோடிணங்கி இருப்பதுவும் நன்று."

எனப் பாடியது எக்காலும் சான்றோர் ஆக்கும் அல்லவா? சுவாமி கெங்காதரர் சொல்வார் மனிதன் அவனுடைய சூழ்நிலையை உருவாக்குவதில்லை அவனது மனம் தான் உருவாக்குகிறது கமரா போன்ற மனம் நீ பிடிப்பதை அப்படியே பற்றிவிடும் மிகக்கவனம் என்பார்.

நம் முன்னோர்கள் அவ்வப்போது ஆங்காங்கே தங்கள் அறிவுரைகளின் மூலம் மாணவ வாழ்விற்கும் மண்ணக வாழ்விற்கும் உரிய நெறிமுறைகளையும், ஒழுக்கம், அன்புடைமை, தன்னடக்கம், பிறரை பொல்லாங்கு சொல்லாமை, தூய நோக்கம், மனஅமைதி, பொறுமை உடமை, விருந்தோம்பல், இனியவை பேசல், செய்நன்றி அறிதல், பணிவு, அடக்கம், விருப்பு வெறுப்பு, அறியாமை, காமம், கோபம், லோபம், மதிமயக்கம் ஆகியவற்றை ஒதுக்கி வாழ்வது போன்ற எண்ணில் அடங்கா நல்வழியை காட்டி உள்ளார்கள் மேலோர் எதனைச் செய்கின்றனரோ அதையே மற்ற மனிதர்கள் பின்பற்றுகின்றனர். உயர்ந்தோர் எதை பிரமாணம் ஆக்குகின்றாரோ அதையே உலகம் அனுசரிக்கின்றது என்கிறது பகவத்கீதை.

கீழ்வரும் சான்றோர் அறிவுரையை மனிதகுலம் நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

அரு:ஸுகமாராத்ய:ஸுக்த ரமாராதயதே
விசேவிஞ: ஞானலவ துர்விதத்தம்
பரும் மாபி நரம்ந ரஞ்சயதி

(நீதிச்சதகம்)

அறியாதவனை எளிதில் திருப்தி செய்யலாம். அறிந்தவனை அதைவிட எளிதில் திருப்தி செய்திடமுடியும். மிகக் குறைவாகவே அறிந்து விட்டவன்போல நினைத்து கொள்பவனை பிரம்மாவாலும் திருப்தி செய்யமுடியாது என்பதே நீதிச்சகதப் பொருளாம்.

சான்றோர்களாகிய குரு ஆசிரியர் ஞானிகள் அறிவாளிகள் சாதனை படைத்தவர்கள் வரிசையில் நீயும் சான்றோனாக வரவேண்டாமா? வருவாய், முன்வைத்த காலை பின்வைக்காதே துணிந்து செயற்படு சாதனையாளனாகி சோதனைகளை வெல்லு என்று யான் நிஸ்காமியனிடம் கூறிய போது மிகத்தயங்கியபடி, ஐயா! நீங்கள் சொல்வதெல்லாம் கேட்க நல்லாயிருக்கு யானும் முயன்றுதான் பார்க்கிறேன்ஒரு கேள்வி கேட்பேன் என்று தன் தலையை சொறிந்தவனிடம் ஏன் தயக்கம், பயம் என்றேன். கேட்பது மாணவர் கடன், விளக்குவது ஆசானின் கடன்.

**"ஐயா அம்மா சொன்னா எனக்கு அட்டமத்துசனி தொடங்கிவிட்டதாம் சோதனைவேளை சனி இடையூறு பண்ணுமாமே"** என முடிக்குமுன்பே எனக்கு சிரிப்பு வந்தது அவனும் பலமாக சிரித்தான்.

தம்பி, தெய்வ நம்பிக்கையும் மெய் உணர்வும் உய்வளிக்கும். வித்தையை காட்டு ஆனால் வித்தகத்தை விற்றுவிடாதே. செய்வன திருந்தச்செய். உன்கேள்விக்கு ஔவையார் கூறும் பதிலை கேள்.

காலையிலே பல்கலை நூல் கல்லாதலை மகனும்
ஆலை எரிபோன்ற அயலானும் - சாலவுறு
கட்டளிக்க மனையாளும் தானே
வீட்டுக்கு அட்மத்துச்சனி

பொருள் புரிகிறதா? முதல் வரியின் படி நம்மில் எத்தனைபேர் வீட்டுக்கு அட்மத்துச்சனி என்று பார். சிரத்தையோடு படி சான்றோனாக முயல். செயமெலாம் சான்றோனாகச் செல்க. செகமெலாம் உன்னையே தேடும், சென்ற இடமெல்லாம் சிறப்பாக வாழ்வாய். மூன்று சனிகள் உன் வீட்டினுள்ளேயே உண்டு என்பதை எண்ணிப்பார். கருமத்தை பண்ணிப்பார். தம்பி நிஸ்காம் மீண்டும் சொல்கிறேன். முன்னோரும் உன் ஆசிரியரும் சொன்னபடி சான்றிதழுக்காக படித்தாலும் சான்றோனாகப் படித்து சீரெலாம் பெறுக.

**முத்தமிழரசு சிவகதாவாரி, சிவயோகச் செல்வன்**
**த. சாம்பசிவ சிவாச்சாரியார்**
**காயத்திரி கலாச்சார பீடம்**

# WHAT IS CYBER CRIME?



The internet is growing rapidly. It has given rise to new opportunities in every field we can think of – be it entertainment, business, sports or education. There are two sides to a coin. Internet also has its own disadvantages. One of the major disadvantages is Cybercrime – illegal activity committed on the internet. The internet, along with its advantages, has also exposed us to security risks that come with connecting to a large network. Computers today are being misused for illegal activities like e.mail espionage, credit card fraud, and software privacy and so on, which invade our privacy and offend our senses. Criminal activities in the cyberspace are on the rise. Here I publish an article by me to our "Shivanandan Sanjikai" in series for the benefit of our citizens. "The modern thief can steal more with a computer than with a gun. Tomorrow's terrorist may be able to do more damage with a keyboard than with a bomb.

(- National Research Council, "Computer at Risk", 1991 -)

What is this Cyber crime? We read about it in newspapers very often. Let's look at the dictionary definition of Cybercrime. "It is a criminal activity committed on the internet. This is a broad term that describes everything from electronic cracking to denial of service attacks that cause electronic commerce sites to lose money".

Mr. Pavan Duggal, who is the President of cyberlaws. Net and consultant, in a report has clearly defined the various categories and types of cybercrimes.

Cybercrimes can be basically divided into 3 major categories.



*What is Cyber Crime?*

1) Cybercrimes against persons.
2) Cybercrimes against property.
3) Cybercrimes against government.

Cybercrimes committed against persons include various crimes like transmission of child – pornography, harassment of any one with the use of a computer such as e-mail. The trafficking, distribution, posting and dissemination of obscene material including pornography and indecent exposure, constitutes one of the most important Cybercrimes known today. The potential harm of such a crime to humanity can hardly be amplified. This is one cybercrime which threatens to undermine the growth of the younger generation as also leave irreparable scars and injury on the younger generation, if not controlled. Another example where in the damage was not done to a person but to the masses is the case of the Melissa virus. The Melissa virus first appeared on the internet in March of 1999. It spread rapidly throughout computer systems in the united States and Europe. It is estimated that the virus caused 80 million dollars in damages to computers worldwide.

In the United States alone, the virus made its way through 1.2 million computers in one – fifth of the country's largest businesses. David Smith pleaded guilty on Dec.9, 1999 to state and federal charges associated with his creation of the Melissa virus. There are numerous examples of such computer viruses few of them being "Melissa" and "love bug".

Cyber harassment is a distinct Cybercrime. Various kinds of harassment can and do occur in cyberspace, or through the use of cyberspace. Harassment can be sexual, racial, religious, or other. Persons perpetuating such harassment are also guilty of cybercrimes.

Cyber harassment is a distinct Cybercrime. Various kinds of harassment can and do occur in cyberspace, or through the use of cyberspace. Harassment can be sexual, racial, religious or other persons perpetuating such harassment are also guilty of cybercrimes.

Cyber harassment as a crime also brings us to another related area of violation of privacy of citizens. Violation of privacy of online citizens is a cybercrime of a grave nature. No one likes any other person invading the invaluable and extremely touchy area of his or her own privacy which the medium of internet grants to the citizen.

The second category of Cyber – crime is that of Cybercrimes against all forms of property. These crimes include computer vandalism (destruction of others' property), transmission of harmful programmes.

A Mumbai – based upstart engineering company lost a say and much money in the business when the rival company, an industry major, stole the technical database from their computers with the help of a corporate cyber spy.

The third category of Cyber – crimes relate to Cybercrimes against Government. Cyber terrorism is one distinct kind of crime in this category. The growth of internet has shown that the medium of cyberspace is being used by individuals and groups to threaten the international governments as also terrorize the citizens of a county. This crime manifests itself into terrorism when an individual "cracks" into a government or military maintained website.

In a report of expressindia.com, it was said that internet was becoming a boon for the terrorist organizations. According to Mr. A. K. Gupta, Deputy Director (Co-ordination). CBI, terrorist outfits are increasingly using internet to communicate and move funds. "Lashker-e-Toiba is collecting contributions online from its sympathizers all over the world. During the investigation of the Red Fort shootout in Dec. 2000, the accused Ashfaq Ahmed of this terrorist group revealed that the militants are making extensive use of the internet to communicate with the operatives and the sympathizers and also using the medium for intra-bank transfer of funds".

Cracking is amongst the gravest Cyber-crimes known till date. It is a dreadful feeling to know that a stranger has broken into your computer systems without your knowledge and consent and has tampered with precious confidential data and information.

Coupled with this the actuality is that no computer system in the world is cracking proof. It is unanimously agreed that any and every system in the world can be cracked. The recent denial of service attacks seen over the popular commercial sites like E-bay, Yahoo, Amazon and others are a new category of Cyber – crime which are slowly emerging as being extremely dangerous.

## Unauthorized access

Using one's own programming abilities as also various programmes with malicious intent to gain unauthorized access to a computer or network are very serious crimes. Similarly, the creation and dissemination of harmful computer programmes which do irreparable damage to computer systems is another kind of Cybercrime. Software piracy is also another distinct kind of Cybercrime which is perpetuated by many people online who distribute illegal and unauthorized pirated copies of software.

Professionals who involve in these cybercrimes are called crackers and it is found that many of such professionals are still in their teens. A report written near the start of the information. Age warned that America's computers were at risk from crackers. It said that computers that "control (our) power delivery, communications, aviation and financial services (and) store vital information from medical re-cords to business plans, to criminal records", were vulnerable from many sources, including deliberate attack.

The following information (and areas throughout the site) will help familiarize you with unethical and illegal online behavior. Additionally, to learn more about cyber crime, visit the Department of Justice Computer Crime & intellectual property section's website at www.cybercrime.gov. The Computer Emergency Response Team (CERT) at www.cert.org and the National Infrastructure Protection Centre at the FBI at www.infragrd.net provides regularly updated information and descriptions of cyber crimes.

*By :* **N. Kishoth**
Grade 13 Com

# புதிர்கள்

1) இது பாவனை பொருள். முதல் எழுத்து கண்ணில் உண்டு. காதில் இல்லை. இரண்டாம் எழுத்து பத்தில் உண்டு, இருபதில் இல்லை. மூன்றாம் எழுத்து திங்களில் உண்டு, செவ்வாயில் இல்லை. அது என்ன?

| | |
|---|---|
| கண், | காது |
| பத்து, | இருபது |
| திங்கள், | செவ்வாய் |

(கத்தி)

2) இது மூன்று எழுத்தைக் கொண்ட ஒரு சொல்லாகும். முதலெழுத்து பலத்தில் உண்டு, குலத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து மணத்தில் உண்டு, மனத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து கொம்பில் உண்டு, கொப்பியில் இல்லை அது என்ன?

| | |
|---|---|
| பலம், | குலம் |
| மணம், | மனம் |
| கொம்பு, | கொப்பி |

(பணம்)

3) இது மூன்று எழுத்தை கொண்ட சொல் முதலெழுத்து அவலில் உண்டு. அயலில இல்லை. இரண்டாம் எழுத்து கரத்தில் உண்டு, களத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து கும்மியில் உண்டு, குடுமியில் இல்லை. அது என்ன?

| | |
|---|---|
| அவல், | அயல் |
| கரம், | களம் |
| கும்மி, | குடுமி |

(வரம்)

4) முதலெழுத்து சந்தியில் உண்டு, பந்தியில் இல்லை. இரண்டாம் எழுத்து பக்தியில் உண்டு, ஆனால் பகுதியில் இல்லை. மூன்றாம் எழுத்து அகதியில் உண்டு, ஆனால் அகழியில் இல்லை. அது என்ன?

| | |
|---|---|
| சந்தி, | பந்தி |
| பக்தி, | பகுதி |
| அகதி, | அகழி |

(சக்தி)

**ஆக்கம் : க. திவாகர்**
தரம் 4K

*எல்லோருடைய உபதேசங்களையும் காதுகொடுத்துக்*
*கேளுங்கள் – ஒன்றை மட்டும் பின்பற்றுங்கள்*
*எல்லோருக்கும் மரியாதை செய்யுங்கள் – ஆனால்*
*ஒருவரைமட்டும் பூஜியுங்கள்*
*எல்லோரிடத்திலும் ஞானத்தை சேகரித்துக் கொள்ளுங்கள் – ஆனால்*
*ஒரு குருவினுடைய உபதேசத்தை மட்டும்*
*சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.*



**- சிவாநந்த சுவாமிகள் -**



# மெய்ப்படும் கனவு

கிளிவெட்டி கந்தவரோதயா மகாவித்தியாலயத்தின் காலை ஒன்று கூடலுக்கான மணி ஒலித்தது. மாணவர்கள் வரிசையாகச்சென்று ஒன்றுகூடும் இடத்தில் அமைதியாக நின்றனர். முகுந்தன் சற்று பயத்துடனும், தயக்கத்துடனும் அதிபரின் அருகில் நிற்கின்றான். பாடசாலையின் அதிபர் மாணவர்களுக்கு வணக்கம் சொன்னதும் தேவாரம் இடம்பெற்றது. "**இடரினும் தளரினும் .. .**" எனும் தேவாரத்தை ஒரு மாணவன் மிக இனிமையாகப் பாடினான். முகுந்தனுக்கோ மெய்சிலிர்த்தது. அது தனக்காகவே பாடப்பட்டதுபோல் தெரிந்தது அவனுக்கு. அவனது வாழ்விலும் தான் எத்தனை இன்னல்கள் அத்தனையும் தாண்டி இன்று இந்நிலைக்கு வந்து உள்ளான்.

தேவாரம் முடிந்ததும் அதிபர் மாணவர்களைப் பார்த்து "பிள்ளைகளே உங்களுக்கு நான் ஒரு நல்ல செய்தி சொல்லப்போகின்றேன். நீண்ட நாட்களாக எமது பாடசாலைக்கு இல்லாததிருந்த கணித பாடத்திற்கான ஆசிரியர் ஒருவர் இன்று நியமனம் பெற்று வந்துள்ளார். அவரது பெயர் முகுந்தன். இதோ அவருக்கு உங்கள் வரவேற்பைத் தெரிவியுங்கள்" என்றதும் உரத்துக் கரகோசம் செய்தனர்.

முகுந்தனது மனம் சொல்லவொண்ணாப் பரவச நிலைக்குச் சென்றது. தான் படித்த பாடசாலைக்கே ஆசிரியராக வருவது என்பது அவன் ஆசைப்பட்ட விடயமானாலும் எதிர்பாராத விடயம். இன்று அது நிதர்சனமாகிய நிலையில் அவன் மனம் மகிழ்ச்சிக் குளத்தில் துள்ளும் மீனாகியது.

முகுந்தன் ஐந்து வருடங்களுக்கு பின் தான் படித்த அந்தப் பாடாலைக்கு வந்திருக்கின்றான்.அதிபர் காரியாலயம் புதிதாக அமைக்கப்பட்டு இருந்தது. சுவரில் பல படங்களும் அட்டைகளும் மாட்டப்பட்டு இருந்தன. ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டு வந்த முகுந்தனுக்கு ஒரு இன்ப அதிர்ச்சி சுவரின் நடுவில் தொங்கிய படம் ஒன்றுதான் அந்த அதிர்ச்சியைத் தந்தது. முகுந்தன் உயர்தரம் படித்த வேளையில் தன் குழுவினருடன் விவாதப்போட்டி ஒன்றில் பங்குபற்றி இருந்தான். நகரிலுள்ள பிரபலமான பாடசாலை ஒன்றுடன் மோதி இவர்களே வெற்றியீட்டி இருந்தனர். தமது வெற்றிக்கு வழிகாட்டிய கணபதிப்பிள்ளை அதிபருடன் விவாதக் குழுவினர் எடுத்துக் கொண்ட படம்தான் இன்னும் அங்கே தொங்கிக் கொண்டு இருந்தது.

கணபதிப்பிள்ளை சேரை நினைத்ததும் முகுந்தனின் கண்கள் குளமாகியன. கந்தவரோதயா வித்தியாலயத்தில் கணபதிப்பிள்ளை சேர் அதிபராக வந்ததன் பின் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அதில் ஒன்றுதான் க.பொ.த. உயர்தரம் கணித, விஞ்ஞானப் பிரிவு தொடங்கப்பட்டது. முதல் வகுப்பு மாணவர்களில் முகுந்தனும் ஒருவன். அதிபரின் ஊக்குவிப்பும், கண்டிப்பும், கண்காணிப்பும் ஒன்று சேர்ந்து அப்பாடசாலையில் இருந்தது. முதன்முதல் பல்கலைக்கழகம் செல்லும் மாணவனாக முகுந்தனை உருவாக்கியது.

தன் மாணவன் முகுந்தன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளான் என்பதை அறிந்த அந்த சந்தர்ப்பத்தில் கணபதிப்பிள்ளை சேர் அடைந்த மகிழ்ச்சி இன்னும் அவன் மனக்கண்முன் படமாக ஓடியது.

பரீட்சை முடிவு வந்த மறுநாள் அவன் காதுக்கு எட்டிய செய்தி அவனை அதிர்ச்சியில் உறைய வைத்தது. "கணபதிப்பிள்ளை சேர் இனம் தெரியாதோரால் சுடப்பட்டு இறந்து விட்டார்" என்ற செய்தி அவனை மட்டுமல்ல கந்தவரோதயா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் அத்தனை பேருக்கும் பேரிடியாகத்தான் இருந்தது.

என்ன செய்வது தமிழினத்தின் சாபக்கேடு யார் யாரெல்லாம் வழிகாட்டிகளாக வருகின்றார்களோ அவர்களையெல்லாம் தொலைத்துவிட்டு நடுக்காட்டில் நிற்கும் தலைவிதி. பல நூறுபேரின் கண்ணீருக்கு மத்தியில் அக்கினியுடன் சங்கமமானது அவரின் பூதவுடல். ஆனாலும், அவர் விட்டுச் சென்ற பணியை தொடர வேண்டும் என்று அன்று முகுந்தன் தனக்குள் எடுத்துக்கொண்ட சபதம் இன்று நிறைவேறுகின்ற தருணம் அவனது கனவு மெய்ப்படும் தருணம்.

அதிபரின் மறைவைத் தொடர்ந்து ஊரில் ஏற்பட்ட எதிர்பாராத இடையூறுகளால் அவனது கிராமமே இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்தது. ஒன்றன்பின் ஒன்றாக உருண்டோடிய வருடங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் பல. மட்டக்களப்பில் உள்ள தன் உறவினரின் வீட்டில் தன் தாயுடன் குடியேறிய முகுந்தன் அங்கிருந்தபடியே கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மாணிப்பட்டத்தையும் பெற்றுக் கொண்டு நியமனத்திற்காகக் காத்திருந்தான்.

இனமோதல்கள் முடிவுக்கு வந்ததனால் மீண்டும் அரைகுறை வசதிகளோடு கிளிவெட்டிக் கிராமத்தவரில் பலர் அங்கு குடியேறிவிட்டனர். பாடசாலையும் இப்போது இரண்டு கட்டடங்களுடன் இயங்கிக்கொண்டு இருக்கிறது. என்றாலும் ஆசிரியர்கள் உட்பட வளப்பற்றாக்குறை தாராளமாகவே உள்ளது. தனது ஆசிரியர் நியமனத்தை அப்பாடசாலையில் நிறைவேற்ற எடுத்த முயற்சி இன்று வெற்றியடைந்துள்ளது.

"கொஞ்சம் தாமதமாகிவிட்டது சேர்" என்றபடி வந்த அதிபரின் பிரசன்னம் அவனது சிந்தனையை முடிவுக்கு கொண்டு வந்தது. "பரவாயில்லை சேர்" என்றபடி எழுந்தான் முகுந்தன். வாருங்கள் இந்தப் புத்தகத்தில் கையொப்பம் இடுங்கள் என்றபடி சம்பவக் குறிப்புப் புத்தகத்தை நீட்டினார் அதிபர். அவனது இலட்சியப்பணியைத் தொடரும் பயணத்திற்கான ஆரம்பமாக அதைக் கருதி கையெழுத்திட்டான்.

தனக்குரிய நேர சூசியைப்பெற்றுக் கொண்டு க.பொ.த. சாதாரண தர வகுப்பிற்குள் நுழைகின்றார் முகுந்தன் சேர். கந்தவரோதயா வித்தியாலயத்தின் மற்றுமொரு பொற்காலம் ஆரம்பமாகப் போவது அவரது கண்களில் பளிச்சிட்டது.

**ஆக்கம் : A. செல்வக்குமார்**
தரம் 12 கலை

# மனிதனை பூரணமாக்கும் பொன்மொழிகள்

- அதிகம் பேசாதே பிறர் பேசுவதைக்கேள் நீ ஒருநாள் அறிவாளியாகலாம் . ..
- கடமையைச் செய்யத் துணிவுடன் இரு அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.
- எல்லா மதங்களுக்கும் நோக்கம் ஒன்றுதான் விளக்க முடியாததை ஏற்றுக்கொள்ளச் செய்வதே அதன் நோக்கம்.
- சரித்திரம் படைக்கும் மனிதனுக்கு அதைப்பற்றி எழுத நேரமில்லை.
- நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால் உன்னுடைய பலவீனத்தை தெரிந்து கொள்.
- கோபம் கொள்ளாதீர் கோபம் வாயைத்திறக்கும் ஆனால் கண்களை மூடிவிடும்.
- பேசிய பின்பு வருந்துவதை விட பேசுவதற்கு முன்னாலேயே யோசனை பண்ணுவது சிறந்தது.
- தர்மத்தை செய்ய முடியாதவனும் தர்மத்தை காக்க முடியாதவனும் வாழ்வதில் அர்த்தமில்லை.
- வாழ்க்கை என்பது கதைப் புத்தகமல்ல அது ஒரு விசித்திரமான நாவல்.
- வருந்தும் நேரம் ஒன்றும் திருந்தும் நேரம் ஒன்றும் நிச்சயமாக ஒவ்வொருவருக்கும் உண்டு.

**ஆக்கம் : கோ. ஜெகதீஸ்வரன்**
தரம் 12 கலை



# குழந்தைப் பருவ பார்வைக் குறைபாடுகள்

Dr. பு. ஸ்ரீஹரநாதன் (பழைய மாணவர் - 1991)
MDOphth (Col) ICO(USA),FRCS (Glas) - கண் சத்திரசிகிச்சை நிபுணர்.

இன்று உலகளாவிய ரீதியில் 1.5 மில்லியன் குழந்தைகள் பார்வைக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இப்பாதிப்புகளானது அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி, குழந்தைகளின் இறப்பு விகிதம் (Infant Mortality rate) என்பவற்றில் பெரிதும் தங்கியுள்ளது. துரதிஸ்டவசமாக. 90% ஆன பார்வைக் குறைபாடுடைய குழந்தைகள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலேயே காணப்படுகின்றனர். 75% ஆன பார்வைக் குறைபாடுகள் தவிர்க்கப்படக்கூடியன அல்லது மருத்துவ ரீதியாக குணப்படுத்தப்படக்கூடியன. கணக்கெடுப்புகளின் படி, உலகில் ஒவ்வொரு நிமிடத்துக்கு ஒரு குழந்தை பார்வைக் குறைாடுகளினால் பாதிக்கப்படுகின்றது. இவ்வாறாக, ஒரு குழந்தை பாதிக்கப்படும் போது, அது தனது முழு வாழ் நாட்களையும் குறைபாடுடைய மனிதனாக கழிப்பதால், அதனுடைய பாதிப்பு மிகவும் பாரதூரமானதாகும். இது அக்குழந்தையின் குடும்பம், சமுதாயம் போன்றவற்றை மிக அதிகமாக பாதிக்கின்றது.

நான் இக்கட்டுரையில் எமது சமூகத்தில் பொதுவாகக் காணப்படும், குழந்தைகளை அல்லது பாடசாலை செல்லுவோரை பாதிக்கும் நோய்கள் / குறைபாடுகளையும் அவற்றை தவிர்க்கும் அல்லது அதற்கு தீர்வு காண்பதற்கான வழிமுறைகளையும் குறிப்பிடுகிறேன்.

தற்போதைய கணக்கெடுப்புகளின்படி குழந்தைகளில் பார்வையைப் பாதிக்கும் மிக முக்கிய காரணியாக **"கண்களில் பூவிழுதல்"** (cataract) நோய் காணப்படுகின்றது. இது வயதானவர்களில் ஏற்படும் கண்களில் பூவிழுதல் நோயிலிருந்து சிறிது வேறுபட்டதாகும். இந்நோய் மருத்துவ ரீதியாக முற்றிலும் குணப்படுத்தக் கூடியதாகும். இந்நோயானது முன்கூட்டியே கண்டறியப்பட்டால் அதற்கான தீர்வு இலகுவானதாகவும், சத்திரசிகிச்சையின் பலன் அதிகூடியதாகவும் இருக்கும். நாம் பிறக்கும் போது இயற்கையாக கண்ணில் காணப்படும் வில்லையானது கமராவின் (camera) வில்லையை போல் காணப்படும். இதனால் வெளியுலகில் தெரியும் பொருட்கள், இவ்வில்லையின் உதவியால் மிகத் தெளிவான விம்பங்களை விழித்திரையில் தோற்றுவித்து, உலகை தெளிவாக காணக்கூடியதாகவுள்ளது.

கண்களில் பூவிழும் போது வில்லையால் தெளிவான விம்பங்களை உருவாக்க முடியாததால் குருட்டுத்தன்மை ஏற்படுகின்றது. இந்நிலை இளமையிலேயே குணப்படுத்தப்படாவிட்டால், பின்பு சத்திரசிகிச்சையினால் கூட முற்றாக குணப்படுத்த முடியாது போய்விடும். ஆகையினால் குழந்தைகள் பிறந்தவுடன் கண்களும் சோதனை செய்யப்பட வேண்டும். சந்தேகப்படும்படியாக காணப்பட்டால் அது உடனடியாக சிறப்பு கண் பரிசோதனை நிபுணர்களின் ஆலோசனைக்கு அனுப்பப்பட வேண்டும். வீட்டில் Tourch இனால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கண்களை சோதிப்பதன் மூலமும் ஓரளவிற்கு கண்ணில் பூவிழுதலைக் கண்டுபிடிக்க முடியும்.

விற்றமின் A குறைபாடானது குழந்தைப்பருவ பார்வைக் குறைபாடுகளுக்கு ஒரு முக்கிய காரணியாகும். இது மிக இலகுவாக தவிர்க்கக்கூடியதும், தீர்வு காணப்படக்கூடிய நிலைமையும் ஆகும். குழந்தைப்பருவம் முதல் அவர்களை போசாக்கான உணவுகளை சாப்பிடப்பழகுதல் பெற்றோர்களின் முக்கிய கடமையாகும்.

விலங்கு ஈரல், வற்றாழை கிழங்கு, கரட் போன்ற மஞ்சள் நிற காய்கறிகள், பச்சை இலைக்கறி வகைகள் போன்றவை விற்றமின் A செறிந்து காணப்படும் உணவுவகைகளாகும்.

விற்றமின் A குறைபாடு விழிவெண்படலத்தை (Corne) பாதிப்பதன் மூலம் பார்வைக் குறைபாட்டை தோற்றுவிக்கிறது. இந்நோயானது முற்றுமுழுதாக தவிர்க்க கூடியதும், தீர்க்கக் கூடியதுமானதாகும். றெற்றினோபதி ஒவ் பிறிமச்சூரிட்டி (Retinopathy of Prematurity) எனும் நோயானது குறைமாத குழந்தைகளின் கண்களைப் பாதிக்கின்ற ஒரு நோயாகும். இதற்கு முக்கிய காரணி மருத்துவ துறையானது அதீதமாக முன்னேறியதால், மருத்துவ காரணங்களுக்காக குறைமாதக் குழந்தைகள் பிறப்பிக்கப்படுகின்றனர் (desease of development). தற்கால மருத்துவ விஞ்ஞானம் இக்குறைமாதக் குழந்தைகளைப் பராமரித்து முழு மனிதர்களாக உருவாக்கும் அளவிற்கு முன்னேற்றமடைந்துள்ளது. இருந்தாலும் இந்த ROP எனப்படும் நோயானது குணப்படுத்தக் கூடியதென்றாலும், குறிப்பிட்ட வீதமான குழந்தைகள் பார்வைக் குறைபாட்டினால் பாதிக்கப்படுகின்றனர்.கண்ணாடி நோய் (Refractive Error) ஆனது குழந்தைகள், பாடசாலை செல்லும் சிறுவர், சிறுமிகளை பாதிக்கும் ஒரு முக்கிய குறைபாடு.

இது மிக இலகுவாக ஆசிரியரால் கண்டுபிடிக்கக்கூடியதொன்றும். ஒரு மாணவன் பின்வரிசையிலிருந்து கரும்பலகையில் எழுத்துக்களை வாசிக்க தடுமாறினால், அவரை தகுந்த கண்பரிசோதனைக்கு அனுப்புதல்மிக முக்கியமானதாகும். இக்குறைபாடானது மிக இலகுவாக கண்ணாடி, **"கொண்டாக்ட்லென்ஸ்"** (contact Lense) மூலம் குணப்படுத்தக்கூடியதாகும். இக்குறைபாடு மிக முன்கூட்டியே கண்டுபிடிக்கப்பட வேண்டும். பொதுவாக 8 வயதிற்குப் பின் இக்குறைபாட்டை முற்றாக குணப்படுத்துதல் சற்றுக் கடினமாகும்.

இவற்றைவிட கண் உயர் அழுத்தம் (Glaucoma) பிறவிக் குறைபாடுகள் போன்ற நோய்களும் குழந்தைகளை பாதிக்கக் கூடியனவாகும்.

எனது கடைசி 10 வருட கண் வைத்திய அனுபவத்தில் அடிக்கடி சிறுவர்கள், குழந்தைகள் தமது கண்களை தெரியாத்தனமாக காயப்படுத்தி வருவதை காணக்கூடியதாக உள்ளது. இது முற்று முழுதாக தவிர்க்க கூடிய ஒன்றாகும். கண்களை கூர்மையான ஆயதங்களால் (கத்தி, Screw driver, பென்சில்) காயப்படுத்துதல், கோழி கொத்தி கண் புண்ணாதல், விளையாடும் போது கம்பு போன்றவற்றால் காயப்படுத்துதல் போன்றவை மிக முக்கிய சந்தர்ப்பங்களாகும்.இதனால் பெற்றோர்கள், ஆசிரியர்கள் குழந்தைகளை இவ்வகையான கூர்மையான பொருட்களோடு விளையாடுவதை தடுக்க வேண்டும். கண்ணானது மிக மென்மையான உறுப்பாகும். இதுபோன்ற தாக்குதலால் வெகுவாக பாதிக்கப்படும் போது அவற்றை நிவர்த்தி செய்வது அல்லது குணப்படுத்துவது மிக மிக கடினமானதாகும். எனவே அவற்றை தவிர்த்தல் மிக எளிதான ஒன்றாகும். இன்று முழு உலகமும் "Vision 2020" அல்லது **"எல்லோருக்கும் பார்வை 2020இல்"** என்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் திட்டத்திற்கமைய பல நிகழ்வுகளை செயல்படுத்துகின்றன. இலங்கையிலும் இது தொடர்பாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு கொண்டிருக்கினறனர்.இதில் குழந்தைகளின் பார்வைக் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் என்பது ஒரு முக்கிய நோக்கமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த அழகான உலகைக் காண்பதற்கு, ரசிப்பதற்கு, சமூகத்தில் சிறந்த மனிதர்களாக வாழ்வதற்கு கண்கள் மிக முக்கியமான உறுப்பு ஆகும். எனவே அதனைப் பாதுகாப்பது எமது எல்லோரினதும் கடமையாகும்.

# பொது அறிவு

- உலகிலேயே மிகக் குறைந்த வார்த்தைகளைக் கொண்ட மொழி - இலத்தின்மொழி
- முட்டைகளை தனது வயிற்றுப்புறத்தில் பாதுகாக்கும் கடலில் வாழும் ஆண் பிராணி - கடற்குதிரை
- உலக சாதனைகளை பதிவு செய்யும் புத்தகம் - கின்னஸ்
- இலங்கையை அதிக ஆண்டுகள் ஆட்சி புரிந்த பண்டைய மன்னன் - பண்டுகாபயன் (78 வருடங்கள்)
- இலங்கையை அதிக ஆண்டு ஆட்சி புரிந்த தமிழ் மன்னன் - எல்லாளன்
- தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் - தலவாக்கலை
- தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் - லுணுவில
- இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் - அகலவத்தை

**ஆக்கம் : லோ. ஷர்மிலன்**
தரம் 1



# சிவாநந்தாவில் படித்த காலத்தில்!

நான் சிவாநந்த வித்தியாலயத்தில் ஆறாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த போது நடந்த சம்பவம் ஒன்று எனது மனதில் பசுமரத்து ஆணிபோலப் பதிந்துள்ளது. அப்போது எங்களுக்கு ஆங்கில ஆசிரியராக இருந்தவர் திரு. குகதாசன். நாங்களெல்லாம் அவரைக் கோதாஸ் மாஸ்டர் என்றே அழைப்பது வழக்கம். அவர் ஆங்கிலத்தில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர்.

ஆஜானுபாகுவான தோற்றம் உடைய அவரைக் கண்டால் மாணவர்களின் உடல் நடுங்கும். ஆங்கிலப் பாடத்தில் ஏதாவது தவறு விட்டுவிட்டால் உரி, உரி என்று உரித்துவிடுவார். வகுப்புக்குள் வந்ததும் மேசையில் கிடக்கும் பிரம்பைத்தான் முதலில் அவதானிப்பார்.

பாடசாலையில் அதிகம் குழப்படி செய்யும் மாணவர்களை திரு. குகதாஸ் ஆசிரியரிடமே அதிபர் அனுப்பிவைப்பது வழக்கம். அம்மாணவர்களுக்கு திரு. குகதாசன் பிரம்பால் தாராளமாக அன்பளிப்புகள் வழங்குவார்.

வருடாந்த பரிசளிப்பு விழாவுக்கு ஆங்கில நாடகம் தயார் செய்வதில் அவர் பெரும்புகழ் பெற்றவர். அவர் மிகவும் கண்டிப்பானவராக இருந்தாலும், நன்றாகப் படிக்கும் மாணவர்களை தட்டிக்கொடுத்துப் பாராட்டத் தவறமாட்டார். அதனால் அவர் மீது மாணவர்களுக்கு ஒருவித தனிமதிப்பிருந்தது.

ஒரு நாள் இருபத்து நான்கு வரிகளையுடைய ஆங்கிக் கவிதையொன்றைத் தந்து, அடுத்த நாள் மனப்பாடம் செய்து வரவேண்டும் என்று கண்டிப்பான குரலிலே கூறினார். ஆங்கிலக் கவிதையில் மனப்பாடம் செய்யாத ஒவ்வொரு வரிக்கும் ஒவ்வொரு பிரம்படி கிடைக்கும் என்றும் எச்சரித்தார்.

அன்றிரவு எனது ஊரான மஞ்சந்தொடுவாயில் **"அசுவமேதயாகம்"** என்ற நாட்டுக்கூத்து அரங்கேற்றப்பட இருந்தது. சிறிய வயதிலே எனக்கு நாட்டுக்கூத்து, நாடகம் என்றால் மிகவும் விருப்பம். எனது எண்ணமெல்லாம் நாட்டுக்கூத்திலே இருந்ததால் ஆங்கிலக் கவிதையை மனப்பாடம் செய்யவேண்டும் என்பதையே மறந்துவிட்டேன்.

கூத்துப் பார்க்கப்போவதற்கு ஆரம்பத்தில் அம்மாவின் அனுமதி கிடைக்கவில்லை. எமது தந்தையார் காலமாகிவிட்டதால், அம்மாவிடமே அனுமதி பெற வேண்டியிருந்தது.

**"பத்துமணி வரைதான் கூத்துப் பார்க்க வேண்டும். அதன் பின் வீட்டுக்கு வந்து தூங்க வேண்டும். நாளைக்கு தவறாது பாடசாலைக்குச் செல்ல வேண்டும்"** என்று நிபந்தனை விதித்தார் அம்மா.

நிபந்தனையை ஏற்றுக்கொண்டு, கூத்து நடைபெறும் இடத்துக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றேன். மாமாங்கத் தீர்த்தக்கரையில் கூடும் மக்கள் கூட்டத்தைப் போன்று ஜனத்திரள் காணப்பட்டது. கூத்துக் களரியைச் சுற்றி ஆண்களும், பெண்களும் நிறைந்திருந்தனர். கூட்டத்துக்குள் புகுந்து சென்று முன்வரிசையில் இடம்பிடித்துக்கொண்டேன்.

கூத்து சம்பிரதாயபூர்வமாக ஆரம்பமானது. கண்ணைப் பறிக்கும் வண்ண ஆடை அலங்காரங்களோடு தோன்றிய பஞ்சபாண்டவர்களும் கண்ணபிரானும் களரியில் தோன்றிப் பாடி ஆடிய காட்சியை மெய்மறந்து ரசித்துக்கொண்டிருந்தேன். நேரம் நகர்ந்து கொண்டேயிருந்தது.

திடீரென்று எனது பாடசாலையும் குகதாசன் ஆசிரியர் தந்த ஆங்கிலக் கவிதையும் எனது நினைவுக்கு வந்ததும் எனது உடல் இலேசாக நடுங்க ஆரம்பித்து விட்டது. பக்கத்திலிருந்த ஒருவரிடம் **"இப்போது நேரம் என்ன?"** என்று கேட்டேன்.

**"அதிகாலை நான்கு மணி"** என்றார் அம்மனிதர். **"அண்ணே! என்னை அழைத்துச் சென்று எங்கள் வீட்டடியில் விட்டுவிடுங்கள் . . "** என்று கெஞ்சும் குரலிலே கூறினேன்.

**"தம்பி! ரெட்ணம் வாத்தியாரின் மகன்தானே நீ?"** என்று கேட்டார். **'ஆம்'** என்பதற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டினேன். நல்ல உள்ளம் படைத்த அந்த மனிதர் என்னை அழைத்துச் சென்று எங்கள் வீட்டடியில் விட்டு விட்டு சென்றார்.

கடப்பில் ஏறிக்குதித்து உள்ளே சென்று வெளித்திண்ணையில் படுத்துத் தூங்கிவிட்டேன். காலை ஆறு மணிக்கு அம்மா என்னைத் தட்டி எழுப்பினார். **"அம்மா! எனக்குக் காய்ச்சல் . . . . இன்று நான் பாடசாலைக்குப் போகவில்லை"** என்று தட்டுத்தடுமாறியபடி கூறிவிட்டுச் சுருண்டு படுத்தேன்.

அம்மா எனது நெற்றியைத் தொட்டுப் பார்த்துவிட்டு, **"காய்ச்சலுமில்லை ஒன்றுமில்லை. எழும்பிக் குளித்து வெளிக்கிட்டுப் பாடசாலைக்குப் போகலாம்"** என்று கண்டிப்பான குரலிலே கூறினார். அம்மாவின் கூற்றை ஆதரித்து மூத்த அண்ணனும் குரல்கொடுத்தார். இனி முரண்டு பிடிப்பதில் பயனில்லை என்று எண்ணிய நான், மெதுவாக எழுந்து தலையணையின் கீழிருந்த ஆங்கிலப் புத்தகத்தை எடுத்து குகதாசன் ஆசிரியர் பாடமாக்கச் சொன்ன கவிதையைப் பாடமாக்க ஆரம்பித்தேன்.

கூத்துப் பார்த்த தூக்கக் கலக்கத்தின் காரணமாக முழுப்பாடலையும் பாடமாக்க முடியவில்லை. பாடலின் பத்து வரிகளையே என்னால் பாடமாக்க முடிந்தது. பயந்தபடியே பாடசாலைக்குச் சென்றேன்.

பெரும்பாலான மாணவர்கள் இருபது வரிகளுக்கு மேல் பாடமாக்கியிருந்தனர். **"சிவலிங்கத்துக்கு இன்று கோதாஸ் மாஸ்டர் பிரம்பால் அன்பளிப்பு வழங்குவார்"** என்று முணுமுணுத்தான் ஒரு மாணவன். அதே நேரத்தில் பிரம்பும் கையுமாக குகதாசன் மாஸ்டர் வகுப்புக்குள் புகுந்தார்.

திடீரென்று அவரைக் கண்டதும் பயத்தில் பாடலின் ஐந்து வரிகளை மறந்துவிட்டேன். ஆங்கிலக் கவிதையின் ஆறாவது வரி என்ன? என்று பக்கத்திலிருந்த மொனிற்றர் ஆனந்தராசா என்ற மாணவனிடம் கேட்டேன். அதனை ஆசிரியர் அவதானித்துவிட்டார்.

**"சிவலிங்கம்! என்ன விசயம்?"** என்று கர்ச்சித்தார் குகதாசன் மாஸ்டர் **"சார்! இவர் என்னிடம் ஆங்கிலக் கவிதை பற்றிக் கேட்கிறார் . . . "** என்று கூறினேன். மொனிற்றர் ஆனந்தராசாவை வாங்கின் மேல் ஏறி நிற்கும்படி பணித்தார் ஆசிரியர்.

வாங்கின் மேல் ஏறி நின்ற ஆனந்தராசா, **"சிவலிங்கம்! பாடசாலை விட்டதும் உனது மண்டையை உடைப்பேன்"** என்று ஆத்திரத்துடன் முணுமுணுத்தான்.

ஆசிரியர் ஆங்கிலக் கவிதையை ஒவ்வொரு மாணவராகக் கேட்டுக்கொண்டு வந்தார். என்னை ஒருவித பயம் பற்றிக்கொண்டது. எனது மூளை தீவிரமாக இயங்க ஆரம்பித்தது.

தட்டுத்தடுமாறியபடி கூறுவோரிடம் முழுக்கவிதையையும் கேட்ட ஆசிரியர், வேகமாகக் கூறும் மாணவர்களிடம் சில வரிகளையே கேட்டு வந்தார். எனது முறை வந்தது . . .

சிவலிங்கம்! என்றார் குகதாசன் மாஸ்டர், துள்ளி எழுந்த நான் எனக்குத் தெரிந்த ஐந்து வரிகளையும் கடுகதி வேகத்தில் கூறினேன். நான் ஐந்தாவது வரியை முடிப்பதற்குள் "Good Sitdown" (நல்லது இருக்கலாம்) என்றார் ஆசிரியர். **'படார்'** என்று அமர்ந்து விட்டேன். அப்போதுதான் எனக்கு நிம்மதியாக மூச்சு வெளிந்தது.

பாடசாலை முடிந்ததும் எனது மண்டையை உடைப்பதாகக் கூறிய மாணவன் அதனை மறந்துவிட்டான்போலும் நல்லவேளை எனது மண்டையும் தப்பியது.


**ஆக்கம் : மாஸ்டர் சிவலிங்கம்**

# நடப்பு


சேவல் கூவியது    நான் எழும்போது இந்தச் சேவல் எத்தனை பெரிய அன்போடு என்னை வாழ்த்துகிறது என்று கதிரவன் பூரித்துப் போனான்.

மாலை வந்தது    கதிரவன் மேற்குத் திசையின் மூலையில் கவிழ்ந்தான்.

சாயும் போது    நான் விழுகின்றேன் . . . என்னைத் தாங்க யாருமே வரமாட்டார்களா? என்று ஏங்கினான். சேவலை அவன் எதிர்பார்த்தான் வரவில்லை



விழுந்து கொண்டே கதிரவன் சொன்னான் . . . . .
எழும் போது தாங்க வருகிறவனெல்லாம் விழும் போது தாங்க வருவதில்லை.



**ஆக்கம் : ந. விதுஜன்**
தரம் 10R



# எனது வீட்டுத் தோட்டம்



என்னிடம் ஓர் அழகான வீட்டுத் தோட்டம் உள்ளது. அதில் கத்தரி, வெண்டி, மிளகாய் ஆகிய செடிகளும் பாகல், அவரை, பயற்றை, நாடை, பூசனி ஆகிய கொடிகளும் உள்ளன. அத்துடன் முடக்கொத்தான், தவசிமுருங்கை, தூதுவளை முதலில் மூலிகைத் தாவரங்களும் கறிவேப்பிலை, ரம்பை போன்ற சுவையூட்டிகளும் வளர்க்கின்றேன்.

முதலில் எனது வீட்டுத் தோட்டத்தை விளையாட்டாகத்தான் தொடங்கினேன். எனது தாவரங்கள் வளர்ந்து அதன் பயனை கொடுக்கத் தொடங்கியதும் என்னுடன் என் குடும்பத்தாரும் இணைந்து கொண்டனர். இப்பொழுது எனது குடும்பத்துக்குரிய பொழுதுபோக்கு விடயமாக இவ் வீட்டுத்தோட்டம் உள்ளது. விடுமுறை நாட்களில் நாங்கள் வீட்டுத்தோட்டத்தில் இணைந்து வேலை செய்யும்போது எங்கள் குடும்ப ஒற்றுமை பலப்படுத்தப்படுவதுடன் எங்களுக்கு சிறந்த உடற்பயிற்சியாகவும் அமைந்துவிடுகின்றது.

நாங்கள் தாவரங்களுக்கு பசளையாக கூட்டெருவைப் பயன்படுத்துகின்றோம். பூச்சிநாசினியாக எந்த வித இரசாயன பதார்த்தங்களும் பயன்படுத்துவதில்லை. இதனால் நச்சுத்தன்மை அற்ற புத்தம்புதிய காய்கறிகளை எங்களால் பெற்றுக் கொள்ளமுடிகின்றது. அத்துடன் பணத்தினையும் மீதப்படுத்திக்கொள்ள முடிகின்றது.

எங்கள் தேவைக்கு மேலதிகமாக உள்ள காய்கறிகளை அயலவர்களுக்கும் கொடுப்போம். இதனால் அயலவர்களுடனான எங்கள் உறவு மேலும் வளர்க்கப்படுகின்றது. **"சிறுபிள்ளை வேளாண்மை வீட்டுக்கு வராது"** என்பது பழமொழி. ஆனால் இந்த எனது முயற்சி பழமொழியைப் பொய்யாக்கி விட்டதாக எல்லோரும் பாராட்டும் போது எனக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது. இதனால் எனது வீட்டுத்தோட்டத்தை மிகவும் நேசிக்கின்றேன்.






**ஆக்கம் : R. வியாகிஷ்**
தரம் 4R



# நாய் கற்ற பாடம்

ஒரு நாள் இடையன் ஒருவன் மாட்டு மந்தையை ஒரு பண்ணையில் கட்டி வைத்திருந்தான். அப்போது ஒரு நாய் வைக்கோலின் மீது படுத்திருந்தது.மாடு ஒன்று வந்து நீ தயவு செய்து விலகிவிடு என்றது.

அது எழும்பவில்லை, பிறகும் மாடு இது தான் எங்கள் உணவு இதைத்தான் நாங்கள் உண்ண வேண்டும் என்றது. நாய் மிகவும் உரத்துக் குரைத்தது. பிறகு ஆண் மாடு ஒன்று வந்தது. எங்களுக்கு இது உணவு வேறு உணவு இங்கு இல்லை என்று கூறிப் பார்த்தது. நாய் எழும்பவில்லை. ஆண் மாடு முட்ட வந்தது. நாய் பயந்து ஓட்டம் பிடித்தது.



**ஆக்கம் : K. மகரிஷன்**
தரம் 4K

# வன்முறை ஒழிப்போம் வளநாடு காண்போம்

மனித நாகரிக வரலாற்றிலே சமூகக் குழுக்களாக வாழத் தலைப்பட்டமையும் ஒரு படிநிலையாகும். அந்நிலையிலேயே அரசு தோன்றியது. அதனுடன் இணைந்ததாக உரிமைகள் பற்றிய சிந்தனைகளும் எழுந்தன. அவையே இன்று மனித உரிமைகளாக பரிமளித்துள்ளன. ஒரு மனிதன் இயற்கையானதும், சகஜமானதுமான வாழ்க்கையை நடாத்திச் செல்லத் தேவையான உரிமைகளே மனித உரிமைகள். பெண்களும், பிள்ளைகளும் கூட மனித உரிமை பெற்றவர்களே. ஆயினும் அவ் இருசாரார் மீதுமான வன்முறை மனித வரலாற்றில் ஒரு கரும்புள்ளியே. மனித இனத்திற்கு ஆதார சக்தி பெண்கள். நாளைய சமுதாய சிற்பிகள் பிள்ளைகள். இவர்கள் பூரண உரிமை பெற்று சுதந்திரம் உள்ளவர்களாக வாழும்போதே மனிதனின் நாகரிகப் பண்புகள் மேலோங்கும். பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகளை மதிப்பதன் மூலமே வன்முறையற்ற நாளையை உருவாக்க முடியும்.

நாகரிகத்துடன் கூடிய சமூக வாழ்க்கை மனித குலத்திற்கு மட்டுமே உரியதோர் சிறப்பம்சமாகும். மனித இனம் நாகரிகத்தின் உச்சிக்குச் சென்று விட்ட இன்றும் கூட, பெண்கள் மீதான வன்முறை மட்டும் ஒழிந்தபாடில்லை. 1979இல் பெண்கள் தொடர்பான உரிமைகள் சாசனம் ஐ.நா மனித உரிமைகள் சாசனத்திலே இணைந்து கொண்டது. தொடர்ந்து பல சர்வதேச பிரகடனங்களும் உருவாக்கப்பட்டுவிட்டன இருந்தும் உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் இன்றைய பெண்களில் பலர் வன்முறைக்கு முகம்கொடுக்க வேண்டியவர்களாகவே உள்ளனர். வீட்டிலும், வேலைத்தளங்களிலும், போக்குவரத்தின் போதும் எத்தனையோ சந்தர்ப்பங்களில் பெண்கள் வன்முறையை எதிர்கொள்கின்றனர். விசேடமாக இயற்கை அனர்த்தங்கள், போர் நிலைமைகள் என்பவற்றின் போது பெண்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகளின் படி 60% மான பெண்கள் இல்லத்து வன்முறைகளாலும், துஸ்பிரயோகங்களாலும் பாதிக்கப்படுகின்றனர். இல்ல வன்முறை என்பது மிக நெருங்கிய உறவினர்களால் வாய்மொழியாகவும், உணர்வு ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் ஒருவர் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதாகும். இவ் இல்ல வன்முறைகள் காரணமாக பெண்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

சமுதாயத்தில் அதிகளவான பெண்களுக்கு, தமது உரிமைகள் பற்றிய அறிவின்மையும், நான் வன்முறைக்கு உட்படுகின்றேன் என்ற புரிதல் இல்லாமையுமான நிலையே இன்று காணப்படுகின்றது. இதுவே அடக்குமுறையும், வன்முறையும் தொடர அடிப்படைக்காரணம். எனவே பெண்களுக்கு இவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே வன்முறையற்ற நாளையை உருவாக்க எடுக்கும் முதல் நடவடிக்கையாக இருக்க வேண்டும். அதுமட்டுமன்றி பெண்களை வன்முறைக்கு உட்படுத்தும் சமுதாயத்தில் ஏனைய அங்கத்தவர்களும் இது பற்றி உணர வேண்டும். பெண்களையும் மனிதர்களாக எண்ணிப் பார்க்கும் மனித நேயப் பண்பு இல்லாமையே வன்முறை தொடர மற்றுமோர் காரணம். பெண்களுக்கும் உரிமைகள் உண்டு, அவ் உரிமைகளை மதிக்கும் கடப்பாடு நமக்கும் உண்டென மனிதர்கள் எண்ணிச் செயற்பட வேண்டும்.

18 வயதிற்குட்பட்ட அனைத்து மனிதப் பிறவிகளும் பிள்ளைகள் என்று வரையறை செய்யப்படுகின்றனர். எமது நாட்டினுடைய எதிர்காலம் இப்பிள்ளைகளின் கைகளிலே தங்கியுள்ளதால் நாம் ஒவ்வொருவரும் பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்ட வேண்டிய தேவை உள்ளது. சிறுவர்கள் வன்முறைக்கு உட்படுத்தப்படுவதும், அவர்களது உரிமைகள் மீறப்படுவதும் இன்று உலகளாவிய பிரச்சினைகளாக விஸ்வரூபம் எடுத்துள்ளன. இளமையில் ஏதோவொரு விதத்தில் வன்முறைக்கு அல்லது நெருக்குதல்களுக்கு உள்ளாகும் பிள்ளையே பின்னைய நாளில் சமூக விரோதியாக, குற்றவாளியாக வன்முறையாளனாக மாறுவதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். எனவே நாளைய சமுதாயம் வன்முறையற்றதாக விளங்க இன்றைய சிறுவர்களின் உரிமைகளைப் பேண வேண்டியது சமூக அங்கத்தவர்களின் கடமையாகும். சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் சமுதாயத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் புரியப்படுகின்றன. இவற்றை இனங்கண்டறிவதன் மூலமே, தடுக்கும் வாய்ப்பினை பெறலாம். பாலியல், வன்முறை, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், பெற்றோர் பாதுகாவலர்களால் கைவிடப்படுதல், ஆட்கடத்தல்களுக்கு உள்ளாகுதல், பிச்சை எடுக்கப்பயன்படுதல், பணத்திற்காக விற்கப்படல் போன்றவை சிறுவர்களுக்கெதிராக உலகம் முழுவதும் புரியப்படுகின்ற வன்முறைகளாகும்.

மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும், சமுதாய சிந்தனையை புகுத்துவதன் மூலமும், இக்குற்றங்களை புரிகின்றவர்களுக்கு எதிராக சட்ட ஏற்பாடுகளை இறுக்கமாக்குவதன் மூலமும் பிள்ளைகள் மீதான வன்முறையைத் தடுக்க முடியும். தன்மீது பிரயோகிக்கப்படும் வன்முறை, உரிமை மீறலைப் பற்றிய போதிய விளக்கம் சிறுவர்களுக்க இல்லாதிருப்பது இந்நிலை தொடர பிரதான காரணம். சிறுவர்களின் நல்வாழ்வினை நோக்கிய வளர்ச்சிக்கு ஏற்ற இயற்கை சூழலாக விளங்குவது அவர்களது குடும்பமாகும். எனவே அவர்களுக்கு அன்பையும், கரிசனையையும், பண்பையும், தேவைகளையும் வழங்குவதன் மூலம் குடும்பத்தின் பணிமுடிந்து விடக்கூடாது. உலகில் பிள்ளைகள் எதிர்கொள்ளக் கூடிய சவால்கள் பற்றியும் அவற்றிலிருந்து தம்மைப் பாதுகாக்க வேண்டிய சுயபுத்தி ஆற்றல் தொடர்பாகவும் பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டியது குடும்பத்தின்மிக முக்கிய பொறுப்பாகும். இது இன்று காலத்தின் கட்டாய தேவையாகும்.

சர்வதேச ரீதியாக பெண்கள் தினம் மார்ச் 08ம் திகதியும், சிறுவர் தினம் ஒக்டோபர் 01ம் திகதியும் கொண்டாடப்படுகின்றன. இக்காலங்களிலாவது இவ்விருசாராரினதும் உரிமைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும். "**அறிவு கொண்ட மனிதவுயிர்களை அடிமையாக்க நினைப்பவர் பித்தராம்**" என்ற பாரதியின் வாக்கினை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமானால் வன்முறையற்ற நாளைநிச்சயம் மலர்ந்தே தீரும்.

**ஆக்கம் : மகேந்திரன் புவனதர்சன்**
தரம் - 13 கலை

# பேராசை

ஒரு முயலொன்று ஆழ்ந்த தூக்கத்திலிருந்ததைக் கண்ட சிங்கம்அதனை வேட்டையாட அதன்அருகே சென்றது. அப்பொழுது அவ்விடத்திலிருந்து மானொன்று ஓடியது. இதனால் தடுமாறிய சிங்கம் முயலிறைச்சியை விட மானிறைச்சி நல்லதல்லவா? என்று எண்ணியது.

முயல் தற்போது ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதனால் அதனைப் பின்னர் வேட்டையாட முடியும் என நினைத்து முயலை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு மானைத் துரத்தத் தொடங்கியது. இந்தச் சலசலப்பைக் கேட்ட முயல் எழுந்து மறுபுறம் ஓடத் தொடங்கியது. சிங்கமும் மானை நீண்ட தூரம் துரத்திச் சென்றது. எனினும் மானின் வேகத்திற்க ஈடுகொடுக்க சிங்கத்தால் முடியவில்லை இதனால் மான், சிங்கத்திடம் இருந்து தப்பி கண்ணுக்கெட்டாத தூரத்திற்கு ஓடி மறைந்தது.

களைப்படைந்த சிங்கம் மானிறைச்சியை உண்ணும் ஆசையை கைவிட்டு மெல்லத் திரும்பி வந்து முயல் இருக்கும் இடத்தைப் பார்த்தது. ஆனால், அவ்விடத்தில் முயல் இருக்கவில்லை. "**எனது கைக்குக் கிடைத்த இரையை விட்டு விட்டு பேராசையில் அதனை விட நல்லதைத் தேடிச் சென்ற எனக்கு அது நல்ல பாடம்**" என்று தனக்குள் சிங்கம் சொல்லிக் கொண்டு அந்த இடத்தை விட்டு அது அகன்றது.

*"பேராசை பெருநட்டம்"*

**ஆக்கம்** : **ர. சஜீவன்**
தரம் - $5^K$

# ஒளி ஆண்டு

பரந்த இப் பிரபஞ்சத்தை அளக்க எமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் cm, m, km போன்று அளவீடுகளால் முடியாது. ஆகவே இவ்வாறான பாரிய தூரத்தை அளக்க வானியலாளர்கள் பயன்படுத்தும் அளவீடே இவ் ஒளி ஆண்டு. ஒளியாண்டு என்பது ஒளி ஒரு வருடத்தில் பயணிக்கும் தூரம். 17ம் நூற்றாண்டில் நடத்தப்பட்ட ஒளிபற்றிய ஆராய்ச்சியில் வானியலாளர்கள் இதை ஒளியாண்டு என்கின்றனர். ஐன்ஸ்டைனின் கூற்றுப்படி ஒளியிலும் வேகமான பொருள் இல்லை. இவ் ஒளியின் வேகம் 3.0 $\times 10^8 m^{s-1}$ ஆகவே

ஒளி ஆண்டு = $3.0 \times 10^8 \times 60 \times 60 \times 24 \times 365$

ஒளி ஆண்டு = $9.4608 \times 10^{15}$m

ஒளி ஆண்டு = $9.4608 \times 10^{12}$km ஆகும்.



அதாவது ஒளி ஒரு வருடத்தில் 9.4608 x 12km தூரம் பயணிக்கும்.

இவ்வளவு வேகமாக வந்தாலும் எமது சூரியக்கதிர் 8 நிமிடங்களிலும் எம் சூரியக் குடும்பம் அருகிலுள்ள புரொக்ஸிமா சென்டாரி நட்சத்திரகதிர்கள் பூமியை அடைய 4.3 ஒளி ஆண்டுகளும் ஆகும். இதன் மூலமே விளங்கவில்லையா பிரபஞ்சம் எவ்வளவு பாரியது என்று.

ஒரு நட்சத்திரம் 100 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது எனின் அதன் ஒளி நம்மை வந்தடைய 100 மில்லியன் வருடங்களாகும். அதாவது நாம் பார்ப்பது 100 மில்லியன் வருடங்களுக்கு முந்தைய நட்சத்திரத்தை சிலவேளை இப்போது அந்நட்சத்திரம் அழிந்து கூட இருக்கலாம்.

ஒளியின் வேகத்தில் புவியை சுற்றினால் 1 விநாடியில் 7.5 தடவை சுற்றிவிடலாம். அதேபோல் 50 ஒளியாண்டு தூரத்திலுள்ள நட்சத்திரத்தை அடைய 5 ஒளி வேகத்தில் சென்றாலே 50 வருடம் செல்லும். நம் ஞாயிற்று தொகுதியருகே இருக்கும் ஆன்ட்ரோமிடா அண்டம் 25 லட்சம் ஒளிஆண்டு தொலைவில் உள்ளது.



தொகுப்பு : N. கிருத்திகன்
தரம் 10S

# நான்



எனது பெயர் தக்ஷானன்.
நான் முதலாம் தரத்தில் கல்வி கற்கிறேன்.
எனக்கு விருப்பமான பாடம் கணிதம்.
எனக்கு விருப்பமான பழம் வாழைப்பழம்.
எனக்கு விருப்பமான பூ றோஜாப்பூ
எனக்கு விருப்பமான செல்லப்பிராணி கிளி.
நான் அதிகாலையில் எழுவேன்.
நான் பாடங்களை ஒழுங்காகப் படிப்பேன்.
நான் பெரியோர் சொற்படி நடப்பேன்.
எனக்கு வைத்தியராக வர ஆசை.



ஆக்கம் : க. தக்ஷானன்
தரம் 1R

# வித்தியின் விடிவானம் சிவாநந்தா!

முத்தமிழின் வித்தகராம் விபுலானந்தர்,
முறுவலுடன் கல்லடியில் அமைத்த நல்ல
வித்திநிலை சிவாநந்தா என்னும்தூய
விளைநிலமே விரிகதிராய் மாறியின்று
நித்திலமும் பரந்துபுகழ் பரப்புதன்றோ!
நிகரில்லா அரும்பணியை செய்யுதன்றோ!
உத்தமராய் மானுடரை மாற்றுகின்ற
உயர்கல்வி கூடமதைப் புகழுகின்றேன்!



முத்தமிழை முழங்குகின்ற தமிழர் மற்றும்
முஸ்லிமுடன் கிறிஸ்தவரும் இணைந்து இங்கு,
வித்தியினை தேடுவதைக் காணும்போது
விரிகிறதே உவகையது மனங்களுக்குள்!
எத்தனையோ மானுடரை அறிவின்குன்றாய்
எம்மிடையே மாற்றியமா சிவாநந்தாவே!
சத்தியமாய் நீபெரிய அறிவுச்சாலை –
சாற்றுகின்றேன் தமிழ்தனிலே கீர்த்திதன்னை!

முத்திரைதான் சிவாநந்தா என்னும்நாமம்
முடிவுண்டா உந்தனது பணிகளுக்கு?
சித்திரையின் நிலவாக நீஜொலிக்க
சிறப்புதனை செய்பவர்கள் ஆசானன்றோ!
பத்தியமாய் மாணவரை அரவணைத்து
பாடமதைப் புகட்டுவதால், அதிகமானோர்
சித்தியினைப் பெறுகின்றார்! அதனாலன்றோ
சீவித்து நிற்கிறதே உந்தன்நாமம்!

அத்தனையும் முத்துவென உனக்குள்உள்ள
அறிவுநிறை ஆசான்கள் காட்டும்நல்ல
புத்திநிறை செயலதனை கண்டுநெஞ்சம்
புதுஉவகை கொள்கிறதே! சிவாநந்தாவே
எத்திசையும் வாழுகின்ற மாணவர்கள்
ஏணியென உயர்ந்துள்ள பதவி கண்டார்!
அத்தனையும் உன் கல்விப் பணியாலன்றோ!
அகிலமது உள்ளவரை உன்பேர்வாழும்!

எத்தனையோ துறைகளிலே நீசுமந்த
ஏராள மாணவர்கள் உயர்ந்துபோனார்!
சித்திரமாய் ஒளிருகின்ற வைத்தியர்கள்
சிந்தனையின் வாரிசென "எஞ்ஜினீயர்",
கத்தியென கூர்நிறைந்த சட்டமேதை
காவினிலே மலராக "நிருவாகத்தார்",
எத்தனையோ பட்டங்களை சுமக்கவைத்த
எழில்குன்றம் எங்களது சிவாநந்தாதான்!



கவிச்சுடர் : ரீ. எல். ஜவ்பர்கான்

## My Picnic

Last August school holiday. I went to Sigiriya Village with my family. We stayed in a nice hotel for 3 wonderful days. The first day we had elephant safari and boat riding. My brother and I enjoyed these very much. Second day early morning we went for bird watching in to a small jungle area. I like bird wathing very much.

One uncle came with us as a guide. There were parrots, crows, woodpeckers, cuckoos, my-nahs, peacocks, sparrows and many more kinds of birds. They eat nuts, grains fruit in the jungle. Some birds make sweet voice. I watched kingfisher cought a fish in a small pond there. After finishing bird watching, we came back to the hotel and swam in the swimming pool. I played water games with my brother and sister in the swiming pool. Then the next day (3rd day) we went to see sigiriya historical rock. But, due to heavy rain we couldn't hike the mountain. In the evening we left from sigiriya to home.

I like this picnic very much. What a wounderful holiday (Picnic) I have spent! Do you have like these nice picnics?

**By : K. Kibirshan** - Grade 3R

# மருந்தாகும் இசை.

**"பொதுமொழி"** என்று மூத்தோர்களால் அழைக்கப்படும் இசையானது இன, மத, மொழி பேதமின்றி தன்னுலகினுள் எம்மை உட்புகுத்தி, தன்னை நுகர்ந்து, அனுபவித்து உய்த்துணர்வதன் மூலம் மக்களுக்கு பேரின்பத்தினை வாரியிறைக்கின்றது. இவ்விசையானது இறைவனோடு எம்மை இணைப்பதோடு நின்றுவிடாது. எமது நோய் மற்றும் குறைகளை நீக்கும் மாமருந்தாகின்றது. நம் உடலினிலே நான்கு நாதபீடங்கள் உள்ளன. அதாவது மனிதனது சப்தத்தை மேலும் மேலும் பெரிதாகக் காட்டுவது. இவற்றை பரா, பசயந்தி, மத்யாமா, வைகரி என அழைப்பர். பரா என்பது மூலாதாரத்திலும், பத்யந்தி நாபிக்கு அருகிலும், வைகரி தொண்டையிலிருந்தும் வெளிவருகின்றது. இந்தவகையில் இசையானது மனித உடலினை ஆள்கின்றது என்பதில் ஐயமில்லை. இனி இசையானது மருந்தாகின்ற அற்புதத்தினை நோக்குவோம்.

இராகசிகிச்சை அல்லது நாத சிகிச்சை என்றழைக்கப்படும் இசைச் சிகிச்சையானது இன்று பெரிதும் இயங்குகின்ற ஒரு ஆராய்ச்சியாகும். ஏனெனில் இன்றும் இந்த இராகச் சிகிச்சையானது ஆராய்ச்சி நிலையிலேயே உள்ளது. சென்னை நுங்கம்பாக்கத்தில் பிரபல மருத்துவமனை ஒன்றிலே இன்று இம்முறை கையாளப்பட்டு வருகின்றது. இசையிலே ஆரம்பபாட ஸ்வரஜதி திட்டத்தினை கற்பதன் மூலமாக திக்குவாய் நோயினை இல்லாதொழிக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஏனெனில் தொடர்ச்சியான ஸ்வரசாதகம் மூலமாக தொண்டைவழியே சீராக காற்றுப்புகும். இதனால் திக்குவாய் நோயானது குணமாகின்றது. மேலும் ஒவ்வொரு நாளும் குரல் பயிற்சி செய்வதன் மூலமாக குறட்டை விடும் பழக்கமானது நீங்குகின்றது என மருத்துவ ஆய்வாளர் **"எலிஸபெத் ஸ்காட்"** (Dr. Elizabeth Scott) குறிப்பிட்டு உள்ளார். அத்துடன் உடல்நலம், மனநலம் குன்றிய நோயாளிகளும் மன அழுத்தம், உளச்சிக்கல் (Mentol Tension) உள்ளவர்களும் இசையினைக் கேட்பதனால் நற்பயனடைகிறார்கள் என மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மற்றும் இசையின் மூத்த கலைஞர்களில் ஒருவரான **"தான்சேன்"** என்பவர் அக்பரின் அரச சபையிலே ஆஸ்தான வித்துவானாக இருந்த பொழுது **"தீபக்"** இராகத்தினைப் பாடி விளக்குகளை எரியச் செய்ததாகவும், இதனால் அவருக்கு ஏற்பட்ட உடல் எரிச்சலினைத் தவிர்க்க **"மல்ஹார்"** இராகத்தினைப் பாடி சூட்டினை தவிர்த்து மனம் குளிர்ந்தார் எனவும், அவரது வரலாற்று பதிவுகள் குறிப்பிடுகின்றன. மற்றும் முத்துஸ்வாமி தீஷிதர் **"அமிர்தவர்ஷினி"** இராகம் பாடி, மழையினை வரவழைத்து மக்கள் பசிப்பிணியினைப் போக்கியதாகவும், திருவையாறு தியாகப்பிரம்மம் ஒருமுறை திருப்பதி சென்றபோது ஆந்திராவிலுள்ள புத்தூர் கிராமத்திலே நீரில் மூழ்கி நினைவற்று கிடந்த சிறுவனுக்கு **"பிலஹரி"** இராகத்தில் கீர்த்தனை ஒன்றினைப்பாடி உயிர் பெறச் செய்ததாகவும் கூறப்படுகின்றது. இதனாலேயே இவ்விராகத்தை **"உயிர் காக்கும் இராகம்"** என அழைக்கின்றனர். மற்றும் ஸ்ரீராகம் நல்ல ஜீரண சக்தியை தருவதாகவும், சாமாராகம் மன உளைச்சலை தடுப்பதாகவும், வராளி இராகம் வாத நோயை தீர்ப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

மேலும் வயது முதிர்ச்சி காரணமாக நினைவாற்றலை இழந்த முதியோருக்கு நல்லிசை வாயிலாக இழந்த நினைவினை மீட்டுக் கொடுக்க முடியும் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மற்றும் தற்கொலை செய்யும் எண்ணங்கொண்டவர்களை நல்ல இசையினை கேட்கச் செய்வதன் மூலம் மாற்றலாம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. மேலும் அமெரிக்க மருத்துவர்களின் ஆராய்ச்சியிலே மாரடைப்பு நோயாளர்களுக்கும் இசை சிறந்த மருந்தெனக் குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய தனிச்சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள கலைகளின் அரசியான இசையினை கேட்டு, நுகர்ந்து நோயற்ற வாழ்வினை வாழ்வோம்.

**உசாத்துணை நூல்கள் :**


1) இந்திய இசைக்கருவூலம் - Dr. K. A. பக்கிரிசாமிபாரதி
2) தென்னக இசையியல்
3) இணையத்தளம் - சங்கீதம்



**ஆக்கம் : செல்வி. சுபாங்கி சந்தானம்** (ஆசிரியை)
மட்/சிவாநந்த வித்தியாலயம்

# சுமை



மேற்கு வானம் செந்நிறத்தை அள்ளி பூசிக்கொண்டிருந்தது. சாயங்கால நேரம் அது. நல்லையா மண்முனை பாதையில் இருந்து தனது முதலாவது பாதத்தை படுவான்கரை மண்ணிலே ஊன்றினார். அவருக்கு அளவில்லாத மகிழ்ச்சி எவரையும் யாரும் கவனிக்கவில்லை தங்களின் பாட்டில் நடந்தவர்கள், நடந்தார்கள் வாகனத்தில் வந்தவர்கள் முன்னோக்கிக்கொண்டு போனார்கள். நல்லையாவும் அப்படியே நடக்கத் தொடங்கினார்.

நல்லையாவின் மனம் குழந்தையாக மாறியது. வீதியின் இருமருங்கினையும் கவனித்துக் கொண்டே சென்றார்.இப்போது அவருக்கு வயது எழுபதை தாண்டிக் கொண்டிருந்தது. தலைமுடியோ பருத்தி பஞ்சாக மாறிவிட்டது. தோல் சுருங்கிவிட்டது. இப்போதும் முறுக்கிய மீசை குலையவில்லை, கண்பார்வையோ மங்கவில்லை, நேர்த்தியாக வாரப்பட்ட தலை எட்டுமுழ வேட்டியை அழகாக கட்டி அதற்கேற்ப வெள்ளை நிறத்திலே சேட்டும் நெற்றியிலே பரப்பப்பட்ட திருநீறும் அவரை இன்னும் இளமையாகவே மாற்றி இருந்தது. நல்லையாவுக்கு இப்போது எழுபது இல்லை மூவேழு.

மண்முனை தார்ரோட்டை உற்றுப் பார்த்தார். அதில்தான் எத்தனை பள்ளங்கள் சேற்றுக்குள்ளே எருமை படுத்து புறண்ட குழிபோல இருந்தது. ஒவ்வொரு அடி எடுத்து நடக்கும்போதும் கூழங்கற்கள் பற்களைக் காட்டி சிரித்துக் கொண்டிருந்தன. சிலவேளைகளில் கால்களையும் பதம் பார்த்தன. நல்லையா எதையும் கவனத்தில் எடுக்காமல், எழில் கொஞ்சும் இயற்கையை ரசித்துக் கொண்டே சென்றார். அந்த நீளமான வீதியின் இருமருங்கிலும் காடுகளாக அடர்ந்திருந்த தில்லை மரங்களும், கண்டல் தாவரங்களும் முள்ளிகளும் வசந்த காலத்தை வரவேற்பது போல பூத்து குலுங்கிக் கொண்டிருந்தன. அந்த சாயங்கால காற்று பூக்களின் மணத்தை அள்ளிவீசிக் கொண்டிருந்தது.

வானம் பாடிகள் தாழப்பறந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தன. பாக்கு வெட்டியின் காம்பினைப் போல நீளமான கால்களையும், கறந்த பசும்பாலை உடலாகவும், பிளந்த பனங்கிழங்கினை அலகாகவும், முருங்கக்காய் போன்ற நீளமான கழுத்தினையும் கொண்ட நாரைகள் ஓடு மீனைவிட்டு உறுமீனுக்காக ஒற்றைக்காலில் தவங்கிடந்தன. ஒரு சிறு துளி கூடவும் வெண்மை இல்லாத நீர்க்காகம் சொண்டிலே அகப்பட்டுக் கொண்ட கெழுத்தி மீனின் முட்களை உடைப்பதற்கு தண்ணீருக்குள்ளே சண்டை போட்டுக் கொண்டிருந்தது. தன்னுடைய குஞ்சுகளுக்கு வெளி உலகத்தையும் காட்டுவதற்காக கானாங்கோழி ஒன்று குஞ்சுகளை மேய்த்துக் கொண்டு வீதியினைக் கடந்து குறுக்கு மறுக்குமாக ஓடிக்கொண்டிருந்தது. ஆகாயத்திலே இயந்திரப் பறவைகள் போல நான்கைந்து பருந்துகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. இன்னும் சில குருவிகள் அருகில் இருந்த சிறிய பற்றைகளில் தத்தித்தாவி பறந்துகொண்டிருந்தன. சற்று தூரத்திலே மீனவர்கள் சிலர் அழகாக வலை வீசி மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். இன்னும் வர்ணிக்க வார்த்தைகள் இல்லாத காட்சிகள் பல.

இத்தினையையும் இரசித்துக் கொண்டு சென்றாலும் அவர் மனம் சுற்றிச் சுழன்று ஒரே புள்ளியிலே வந்து நின்றது. என்னதான் அவர் மறக்க நினைத்தாலும் அந்த நினைப்பு மனதிலே நங்கூரமிட்டுக் கொண்டது. அந்த கொடிய சொற்களை நினைக்கும் போது அவரால் இயற்கையை ரசிக்க முடியவில்லை. அவர் மனமும், நடையும் தள்ளாடியது. அந்த வார்த்தைகளை நினைக்கும் போது அவரின் தலையில் பின்னால் நின்று சம்மட்டியால் அடிப்பது போல் உணருகின்றார். நல்லையா பாதித்தூரத்தை நடந்தே முடித்துவிட்டார். மீதித் தூரத்தை கடக்க அவரால் இப்போது முடியவில்லை. அருகில் இருந்த பனை மரநிழலிலே ஓய்வெடுக்க அமர்ந்து விட்டார். ஓய்வுக்காக அமர்ந்த நல்லையாவின் மனதிலே தனது மனைவி செல்லம்மாவின் நினைவுகள் அடிக்கடி வட்டமிட்டன. "**செல்லம்மா நீ மட்டும் என்னை விட்டுத்து போய்த்தா ஆனா என் கதியினை பார்த்தாயா? நம்ம பிள்ளைகளின் நிலையையும் செயலையும் பார்த்தாயா செல்லம்மா . . .** " நல்லையா மனதுக்குள் அழுது கொண்டிருந்தார்.

நல்லையாவும் செல்லம்மாவும் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள். ஒருவருக்கொருவர் மிகுந்த அன்புடன் இருந்தனர். அவர்களின் பாசத்தினைப் பார்த்து சில வேளைகளில் பலர் பொறாமைப்பட்டனர். இந்தத் தம்பதிகளுக்கு நான்கு பிள்ளைகள் மூத்தவன் குணசேகரன், இரண்டாவது மகன் சந்திரசேகரம், அடுத்தவன் சோமசேகரம், கடைசி மகன் குணலெட்சுமி.

நல்லையா ஒரு சாதாரண விவசாயி. காடு வெட்டி கண்டெடுத்த காணியில் விவசாயம் செய்து தனது குடும்பத்தை ஓட்டியதோடு, தனது பிள்ளைகளை நன்றாக படிக்கவைத்தார். மூத்தவன் தபால்காரன், இப்போது தபாலதிபர் இரண்டாவது மகன் ஆசிரியர், மூன்றாவது மகன் படித்துவிட்டு இப்போது கனடாவில் இருக்கிறான். கடைசி மகள் படிப்பை நிறுத்திவிட்டாள். ஒவ்வொரு பிள்ளையினையும் ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வருவதே நல்லையா செல்லம்மா தம்பதிகளின் நோக்கமாக இருந்தது. உத்தியோகம் கிடைத்து சில காலங்களிலே எல்லோரும் திருமணம் செய்து கொண்டார்கள். மூத்த மகன் மட்டக்களப்பு நகரிலும், இரண்டாவது மகன் கல்முனையிலும், மூன்றாவது மகன் ஆரையம்பதியில் திருமணம் செய்து கொண்டு மனைவி, மாமாவின் ஆதரவில் அகதியாக கனடாபோய் 5 வருடங்கள் ஆகிவிட்டன. இளைய மகள் காதலித்தவனோடு சென்றுவிட்டாள்.

ஆசையோடு வளர்த்த பிள்ளைகள் தங்களை அநாதையாக்கி சென்றுவிட்டனர் என செல்லம்மா அடிக்கடி சொல்லி அழுவாள். செல்லம்மாவும், நல்லையாவும் கன்று இழந்த பசுவாக மாறியிருந்தனர். ஒரு பிள்ளை கூட தங்கள் காலடியில் இல்லையே என்பதே அவர்கள் வருத்தம். **"அவர்களுக்கும் குடும்பம் பிள்ளைகள் என்று வந்த பின்னர் அவர்களின் வாழ்க்கையைப் பார்க்க வேண்டும் தானே"** என்று சமாதானம் ஆகிவிடுவார்கள். கோடையில் மழைபோல மூத்த மகன் வந்து போவார். மார்கழியில் வெயில் போல அடுத்த மகன் வருவார். கனடாவில் இருப்பவன் வருடத்துக்கு இரண்டு கடிதத்தோடு உறவை மட்டுப்படுத்துவான். இளையமகள் திருகோணமலையில் அவளுக்கு வேலையும் அதிகம் பிள்ளைகளும் அதிகம் தன்னுடைய அன்றாட அலுவல்களைப் பார்க்கவே அவளுக்கு நேரம் சரியாக இருக்கும்.

நல்லையாவுக்கும் ஆசை தன்னுடைய மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள் என எல்லோருடனும் சேர்ந்து மகிழ்ச்சியாக உறவாட வேணும், உணவு உண்ண வேண்டும், நாள் முழுவதும் பேசிக்கொண்டிருக்க வேணும், பேரப்பிள்ளைகளின் மழலை மொழியுடன் விவாதம் நடத்த வேணும் இன்னும் எவ்வளவோ . நினைத்துவிட்டு முடியவில்லை என்னும் போது ஒரு ஏக்கப்பெருமூச்சுவிடுவார்.

செல்லம்மாவுக்குத்தான் மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் கோயிலுக்கு செல்லும்போது ஊரில் உள்ளவர்களின் கண்பட்டுவிடும் என்று பூசணிக்காய் சுற்றிப்போட, பேரப்பிள்ளைகள் கேட்கும் பலகாரங்கள், தின்பண்டங்களை செய்து கொடுக்க ஒரு பண்டிகை நாளிலே எல்லோரும் சேர்ந்து உணவு சமைத்து எல்லோருக்கும் அவள் பரிமாற ஆசைதான். ஆனால் அது நிராசையாகவே போய்விட்டது. இதுதானே ஐம்பது வயதை தாண்டிய பெற்றோரின் ஆசை அவர்களுக்கு மட்டும் விதிவிலக்கா.

செல்லம்மா ஒவ்வொரு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கப்பட்ட பாட்டை சொல்லமுடியாது. ஆனால் அவர்கள் வளர்ந்தும் தங்களோடு இல்லை என்னும்போது செல்லம்மா அழுதுகொண்டே இருப்பாள். அவளுக்கு ஆறுதல் சொல்வதே நல்லையாவுக்கு ஒரு கடமையாகிவிட்டது. **"அதுகளுக்கும் குடும்பம் குட்டி என்று ஆனபிறகு நாம அவங்களைத் தொந்தரவு செய்யக்கூடாது செல்லம்மா"** என்பார்.

"கலியாணம் கட்டிபோனா பெத்த அப்பா அம்மாவை மறக்கிறதா ஒரு மாதத்தில ஒரு தரம், ஒரு தைப்பொங்கல், சித்திரைக்கு வர ஏலாதா . ." இந்தா பக்கத்து வீட்டு பாக்கியத்திட மக்களும் இருக்குதுகள் தானே அதுகளும் மாதத்துக்கு ஒரு தரம் வந்துத்து போகுதுகள் தானே அதுகளுக்கு என்ன குடும்பம் குட்டிகள் இல்லையா நம்மட புள்ளையள் மட்டும் ஏன்தான் இப்படியோ . . . அழுவாள். அழுது கொண்டிருக்கும் செல்லம்மாவை சமாதானப்படுத்த "செல்லம்மா நாம கல்யாணம் கட்டக்குள்ள உனக்கு நான் எனக்கு நீ என்று தானே இருந்தோம். பிள்ளைகள் இடையிலே வந்ததுகள்தானே இடையிலே போய்த்துகள் அதுகளுக்கு இப்படி ஒரு நிலைவரும் போதுதான் உணருங்கள் . . " எனச் சமாதானப்படுத்தி அன்பாக அணைத்துக் கொள்வார் நல்லையா.

வாரத்துக்கு ஒருமுறை கூடும் கொக்கட்டிச்சோலை சந்தை போல வாரத்துக்கு ஒருமுறை அழுது கொண்டே இருப்பாள். தாய் மனசு அல்லவா என்னசொல்லியும் அது கேட்காது. செல்லம்மாவை சமாதானப்படுத்தினாலும் நல்லையா அவளுக்கு தெரியாமல் உள்ளுக்குள்ளே அழுதழுது உருகிக் கொண்டுதான் இருந்தார்.

இப்படியே அழுது கொண்டிருந்த செல்லம்மாவுக்கு அந்த ஏக்கத்திலே இருதயவருத்தம் தொற்றிக்கொண்டது. இந்த விஷயம் செல்லம்மாவின் பிள்ளைகளுக்கு எட்டியது. அனைவரும் பறந்து வந்தார்கள். மூத்தவன் குணசேகரம், மனைவி 3 பிள்ளைகள் குடும்பத்தோடு வந்திருந்தான். அடுத்த மகன் சந்திரசேகரம் மனைவி பிள்ளைகள் என வந்திருந்தான். அடுத்த மகன் வரவில்லை. மனைவியும் இரண்டு பிள்ளைகளும் வந்திருந்தனர். கடைசி மகள் கணவன் 4 பிள்ளைகள் என வந்திருந்தாள்.

செல்லம்மாவின் ஒவ்வொரு பிள்ளைகளும் அவளையே சுற்றி இருந்து நலம் விசாரித்துக் கொண்டு அவளுக்குத் தேவையானதை செய்து கொண்டிருந்தனர். செல்லம்மாவின் பேரப்பிள்ளைகளைக் கண்டதும் அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. அவர்களுடனே செல்லாம்மா படுக்கையில் கிடந்தபடியே நாட்கள் சிலவற்றை கடத்தினாள். இவ்வளவு காலமும் தான் எதற்காக ஏங்கினாளோ அது இப்போது கண்முன்னே நடப்பதை எண்ணி மகிழ்ச்சியடைந்தாள் செல்லம்மா. அந்த மகிழ்ச்சியிலே கண்களை மூடி இறையடி சேர்ந்தாள். அவள் தன் பிள்ளைகள் எல்லோரையும் பேரப்பிள்ளைகளையும் ஒன்றாக காண்பதற்காகவே உயிரை கையில் பிடித்து வைத்திருந்தாள் போல செல்லம்மாவின் பிள்ளைகள் அவளை அடிக்கடி வந்து பார்த்துச் சென்றிருந்தால் அவள் இன்னும் சில காலம் நல்லையாவோடு வாழ்ந்திருப்பாள். இப்படி நல்லையாவைத் தவிக்க விட்டுச் சென்றிருக்க மாட்டாள்.

செல்லம்மாவின் மரணச் சடங்குகளை பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து குறைகள் இல்லாதவண்ணம் செய்து முடித்தார்கள். மரணம் நிகழ்ந்து எட்டு நாட்களைத் தாண்டிவிட்டது. ஒவ்வொரு பிள்ளைகளும் ஒவ்வொரு காரணத்தைக் காட்டி சென்றுவிட்டனர். இப்போது நல்லையாவின் வீட்டில் இருப்பது செல்லம்மாவின் நினைவுகளும் அவர்கள் வளர்த்த நாயும் தான்.

சிலவாரங்கள் . . சில மாதங்கள் சென்றன. நல்லையா தனிமையிலே காலத்தை கழித்து வந்தார். பேச்சுத்துணைக்கு கூட ஒருவரும் இல்லை. தன்பாட்டிற்கே சமைத்து தானே உண்டுவந்தார். செல்லம்மாவின் நினைவுகள் அவரைவிட்டு அகலவில்லை. அவளின் இழப்பினைத் தாங்கமுடியாமல் தன்னுடைய பாட்டிற்கு புலம்பிக் கொண்டிருந்தார். "செல்லம்மா என்னைவிட்டு நீ மட்டும் சென்றுவிட்டாயா? நான் மட்டும் இந்த உலகத்தில் தனியாக கஷ்டப்படுறன் . . . இன்னும் கொஞ்ச நாளிலே நானும் உன்னோடு வந்திடுவேன் . . " இதனையே நல்லையா தாரக மந்திரமாக தினமும் சொல்லிக்கொண்டிருப்பார். நல்லையாவின் இந்தப் புலம்பலைப்பார்த்த அயலவர்கள் உடனே சந்திரசேகரத்து தெரியப்படுத்தி அவரை வரச் செய்தார்கள்.

நல்லையாவின் உறவுக்காரனான மணிவண்ணன் அவரின் நிலையினை எடுத்து கூறினார். சந்திரசேகரம் உங்கட அம்மா இறந்த பிறகு அப்பா அம்மாவின் நினைவாகவே பேசிக்கொண்டு திரிகிறார். அவருக்கும் வயது போய்விட்டது. இப்போ அவரும் ஒரு குழந்தையாக மாறிவிட்டார். இனி அவரைத் தனியாக விடுவது அவ்வளவு நல்லமில்லை. அதனாலே . . அவரை உங்களுடனே வைத்துக்கொண்டால் அவருக்கு கவலையோ மன அழுத்தங்களோ இல்லாமல் பிள்ளைகளோடு சந்தோஷமாக தன்ட கடைசி காலத்தை கழிப்பார் . . . உங்கட தம்பியிடம் இதுபற்றி சொன்னேன் அதை அவர் பெரிதாக எடுக்கவில்லை. அதுதான் உங்களிடம் சொல்கிறேன் . . . . என முடித்தார் மணிவண்ணன் இதற்கு மறுவார்த்தை பேசவில்லை சந்திரசேகரம் மௌனம் சாதித்தார்.

நல்லையா அடுத்தநாள் மட்டுநகரில் அவரின் மூத்த மகன் வீட்டுக்கு புறப்பட்டார். அவரை அரைவாசித் தூரம் வரை வழியனுப்பியது. அதற்கு மேல் செல்வதற்கு நல்லையா வீட்டு நாய்க்கு தெரு நாய்கள் அனுமதியளிக்கவில்லை திருப்ப அனுப்பிவிட்டன.

நல்லையா குணசேகரனின் வீட்டுக்கு வந்ததும் பேரப்பிள்ளைகளின் அன்பிலும், அவர்களின் பேச்சிலும் தன்னை மறந்தார். அவர்களுடன் ஆடிப்பாடி மகிழ்ச்சியாக இருந்தார். கதைகள் சொன்னார், மழலை மொழியிலே தன்னையும் மறந்தார். அவருக்கு இப்போது எந்த கவலையும் இல்லை. அடிக்கடி செல்லம்மாவை நினைத்துப்பார்ப்பார். "இதையெல்லாம் பார்க்கிறதுக்கு நீ இல்லாமல் போய்த்தாயே செல்லம்மா . . . " மனதுக்குள்ளே அழுவார்.

நல்லையா வந்து இரண்டு மாதங்கள் தாண்டிவிட்டது. அவர் பேரப்பிள்ளைகள் மூவருடனும் ஒரு புது உலகத்தில் இருந்தார். ஆனால், குணசேகரனின் மனைவிக்கு இது பிடிக்காமல் போய்விட்டது. பள்ளி இருந்து பிள்ளைகள் வந்ததும் தாத்தா, தாத்தா என்று அவரையே சுற்றிக்கொண்டு திரிவதால் பிள்ளைகளின் படிப்பு கெட்டுவிடும் என நினைத்தாள். அத்தோடு நல்லையாவுக்கு சமைத்து சாப்பாடு குடுப்பதும், அவரின் சேவைகளைச் செய்வதும் சிரமமாக எண்ணினாள். நல்லையா வீட்டில் இருப்பது சுமையாக கருதினாள். அவரால் தங்களுக்கு எந்த பயனும் இல்லை மாறாக அவர் தங்களுக்கு பாரமாக இருப்பதாக நினைத்தாள். அதனை பல தடவைகள் கணவனிடம் எடுத்துக் கூறினாள். இந்த பிரச்சினையினை விவாதிக்கும்போது சந்திரசேகரத்துக்கும் மனைவிக்கும் வாக்குவாதம் ஏற்படும். நான் எத்தனை தரம் சொன்னேன் பிள்ளைகளின் படிப்பு கெட்டுப்போய்விடும் என்று நீங்கதான் கேட்கல என அவளின் குரல் உச்சஸ்தாயில் கேட்கும்.

"நான் என்ன விசாரிக்காமலா இருக்கன் இடம் கிடைத்த பிறகு கொண்டுபோய் விடுவோம் நீ இப்ப சத்தம் போடாத . . . " என அவளின் சத்தத்தை அடக்குவான்.

இந்த சத்தமும் அதட்டலும் நல்லையா வீட்டுக்கு வந்து இரண்டு வாரந்தொடங்கியே கேட்கிறது.இதைப்பற்றி அவருக்கு எதுவுமே தெரியாது.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை பத்துமணி இருபது நிமிடம் இடம் குணசேகரனின் வீட்டு மண்டபம் மூத்த மகளுக்கு பாடம் சொல்லிக்கொண்டிருந்தாள் சந்திரசேகரனின் மனைவி. "அம்மா இந்த பழமொழிக்கு என்ன கருத்தம்மா முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்றால். காலையிலே நெல்லை விதைத்தால் பின்னேரம் விளைந்து விடுமா அம்மா . . " எனத் தனது அறிவுக்கு எட்டியவரையும் கேட்டாள். அம்மாவும் தாத்தாவும் சிரிக்க தொடங்கிவிட்டார்கள்.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது நாம்இப்போது என்ன செயலைச் செய்கின்றோமோ அதற்குரிய மாதிரி பின்னர் பலன் கிடைக்கும் என விளக்கினாள் அம்மா. மூத்த பேத்திக்கு எதுவுமே விளங்கவில்லை. வலக்கையினால் பிடரியை சொறிந்து கொண்டிருந்தாள்.

நல்லையா இளைய பேரப்பிள்ளைகள் இரண்டுக்கும் சின்ன மரக்குற்றிகளைக் கொண்டு கோபுரம் அமைத்துக் காட்டிக்கொண்டிருந்தார். அப்போது மோட்டார் சைக்கிள் ஒன்று வரும் சத்தம் கேட்டது. சந்திரசேகரம் தான். மோட்டார் சைக்கிளை வீதியிலே நிறுத்தியவர். ஒருவிதமான உற்சாகத்தோடு வீட்டுக்குள் நுழைந்தார். அங்கிருந்த மனைவியைப் பார்த்து "அப்பாவை முதியோர் இல்லத்தில் சேர்ப்பதற்கு இடம் கிடைத்து விட்டது . . . " என்று சற்று சத்தமாக சொல்லி விட்டார். அங்கே நல்லையா கட்டிய கோபுரம் சரிந்து விழுந்து விட்டது.

குணசேகரம் நல்லையாவுக்க அருகில் வந்தார். "அப்பா உங்களை முதியோர் இல்லத்தில் சேர்ப்பதாக நாங்க முடிவெடுத்திருக்கம். இப்போதுதான் ஒரு இடம் கிடைத்திருக்குது. மிகவும் கஷ்டப்பட்டுத்தான் இதனை எடுத்தேன். இங்க நீங்க இருப்பதைவிட அங்கு இருந்தால் உங்களுக்கு வசதியாக இருக்கும் என விக்கி விக்கி கூறிமுடித்தான்.

கோபுரம் இடிந்து விழுந்ததுபோல அவர் மனமும் சலித்துவிட்டது. கண்ணும் மனமும் ஓயாது சுற்றிக்கொண்டே இருந்தது. அவர்கண்முன்னே செல்லம்மா மட்டும் வந்துவந்து போனாள்.

குணசேகரனின் மனைவி வந்தாள் "மாமா நீங்க வீட்டிலே இருக்கிறதால பிள்ளையள் ஒன்றும் படிக்குதுகள் இல்லை எப்பபார்த்தாலும் உங்களோடுதான் சுற்றிக்கொண்டு திரியுதுகள். அதோடு நீங்க இங்க சும்மாதானே இருக்கிறியள். அங்கே போனால் நிம்மதியாக இருப்பீங்க . . கவலைப்படாதீங்க உங்களை நாங்க அடிக்கடி பார்க்க வருவோம்" என அவரை வீட்டைவிட்டு வெளியேற காரணத்தை கூறி பசப்பிக்கொண்டிருந்தாள்.

மூத்த பேத்தி இடையிலே குறுக்கிட்டாள் "அம்மா தாத்தாவை எங்கேயும் அனுப்பாதீங்க நாங்க நல்லாத்தான் படிக்கிறம். தாத்தா சொல்லித் தந்த கதையைச் சொல்லித்தான் எனக்கு முதல் பரிசு கிடைத்தது. தாத்தாவை முதியோர் இல்லத்துக்கு அனுப்பாதீங்க . . ." அடம்பிடித்து அழுதாள்.

நீ சும்மா இருடி உனக்கு ஒன்றும் தெரியாது. மகளை அதட்டினார் தாய். யார் பேச்சையும் காதில் வாங்காமல் அமைதியாக உட்கார்ந்திருந்தார் நல்லையா. அவர் மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. என்ன பேசுவதென்று தெரியாமல் தவித்தது பின்னர் ஒரு நிலைக்கு வந்தார் " ஏன் தம்பி முதியோர் இல்லத்தில் இடம் எடுக்க மிகவும் கஷ்டப்பட்டாயா . . . எப்ப நான் போகணும் . . . " என மெல்லிய குரலிலே கேட்டார்.

"சந்திரசேகரம் ஓம் ஓம் அப்பா மிகவும் கஷ்டப்பட்டுத்தான் எடுத்தேன். நீங்க புதன்கிழமை போகணும் அன்றைக்குத்தான் நல்லநாள் . . " என்றான். தன்னை வெளியேற்ற மகன் நல்லநாள் குறித்து இருப்பதை எண்ணி மனதுக்குள் சிரித்துக்கொண்டார்.

சந்திரசேகரமும். மனைவியும் இப்படிச்சொல்லிவிட்டுச் சென்றபின்னர் பேரப்பிள்ளைகள்மூவரும் தாத்தைவைச் சுற்றிக் கொண்டனர். அவர்கள் கண்களில் ஏக்கமும்அனுதாபமும், சோகமும் குடிகொண்டிருந்தது. "தாத்தா தாத்தா நீங்க எங்களை விட்டுத்து எங்கேயும் போகாதீங்க தாத்தா" மூவரும் ஒருமித்து விம்மி விம்மி அழுதார்கள்.

"தாத்தா நானும் பெரியவனாக வளர்ந்த பின்னர் அப்பாவை முதியோர் இல்லத்திலதான் கொண்டு விடனுமா . . . ? இளைய பேரன் கேட்டான். இப்போது முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் பழமொழியை பேரப்பிள்ளைகளும் பின்பற்றப்போகிறார்கள் என்று நினைக்கும்போது அவருக்கு மிகுந்த கவலையாக இருந்தது.

நல்லையா அன்று இரவு முழுவதும் தூங்கவே இல்லை. மனதுக்குள்ளே பல போராட்டங்கள் செய்தார். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார். திங்கட்கிழமை காலையில் வேலைக்கு செல்ல சந்திரசேகரம் தயாரானான். பள்ளிக்கூடம் செல்ல பிள்ளைகளும் ஆயத்தமானார்கள். நல்லையா பேரப்பிள்ளைகள் மூவரையும் அணைத்து ஆசை தீர முத்தமிட்டார். அவர்களுக்கு தெரியாது தாத்தாவின் இறுதி முத்தம் அதுதான் என்று, பிள்ளைகளை வழியனுப்பிவைத்தார். இப்போது வீட்டிலே ஒருவரும் இல்லை. நல்லையா . . நல்லையா மட்டுமே தன்னுடைய சிறிய கைப்பையை எடுத்தார். தன்னுடைய ஒற்றை வேட்டியையும், ஒரு சேட்டையும் மடித்து வைத்துக் கொண்டார். அவருக்கு வேறு எதுவுமே தேவைப்படவில்லை. இன்னுமொன்று அவரின் உயிர் செல்லமாவின் படம் மறப்பாரா? அதை தன்னுடனே எடுத்துக் கொண்டார். கால்நடையாக நடந்து வந்து இப்போது பனைமரத்து நிழலிலே இளைப்பாறுகிறார்.

இப்போது நல்லையாவுக்கு களைப்பு நீங்கிவிட்டது. இருந்தாலும் கவலை தீரவில்லை. மனதை திடப்படுத்திக்கொண்டு வீட்டை நோக்கி நடக்கலானார். மெல்ல மெல்ல ஊர்ந்து தன் வீட்டை அடைந்தார். வாசலுக்கு சென்றபோது அவரை செல்லம்மா வந்து வரவேற்பது போல ஒரு பிரம்மை "உள்ள வாங்க ஏன் வெளியிலே நிற்கிறீங்க" என்பது போல இருந்தது உள்ளே நுழைந்தார். செல்லம்மா அங்கு இல்லை. செல்லம்மாவும் நல்லையாவும் வளர்த்த அதே நாய் ஓடிவந்தது. நல்லையாவை சுற்றி வட்டமிட்டது. வாலை ஆட்டிக்கொண்டு காலைச் சுற்றிசுற்றி வந்தது. முன்னங்கால்களை உயர்த்திக் கொண்டு வரவேற்றது. அவரைச் சுற்றி வந்து தன்னுடைய விசுவாசத்தையும் நன்றியையும் வெளிக்காட்டியது. "இத்தனை நாட்களும் எங்கே போயிருந்தீர்கள் .. " என்பது போல அது நல்லையாவையே சுற்றி சுற்றி வந்தது. அப்போதுதான் நல்லையா ஒரு உண்மையை உணர்ந்து கொண்டார். நாயிடம் இருந்து மனிதன் நன்றியைக் கற்றுக் கொள்கிறான். காகத்திடம் இருந்து ஒற்றுமையை கற்றுக் கொள்கிறான். ஆனால் இந்த மனிதனிடம் இருந்து கற்றுக் கொள்வதற்கு . . . ???

**ஆக்கம் : செல்வி. சி. குபீந்தா** (ஆசிரியை)
மட்/சிவாநந்த வித்தியாலயம்

# வேண்டும் வரம்

அன்னை எம்மீது காட்டியது உண்மையான பாசம்
அதில் என்றுமே இல்லையே பொய் வேசம்
பூக்களில் உருவாகும் நல்ல வாசம்
இறையருளால் நீங்கிடும் உனது தோசம்.

இறைவனிடம் எமக்கு ஏற்பட வேண்டும் பக்தி
அவன் அருளால் பெற்றிட வேண்டும் சக்தி
இது தான் உலகை வெல்லும் உத்தி
இறையருளால் பெற்றிட வேண்டும் முக்தி.

புலன்களை அடக்கச் சிறந்தது மனம்
பண்பாய் வாழ வேண்டும் நல்ல குணம்
நற்செயல்களை செய்திட வேண்டும் தினம்
இறையருளால் பெற்றிட வேண்டும் வரம்.

இறந்தவர்களை புதைக்கும் இடம் மயானம்
இறைவனின் அருளை பெற்றிட வேண்டும் தியானம்
ஒழுக்கமே உலகில் உயர்ந்த குணம்
அதை கடைப்பிடித்திடு தினமும்.

**ஆக்கம் : இ. மனோஜன்**
தரம் 9M

# கற்றிடுவோம் நாம்

கல்வியைக் கற்றுவரும் பிள்ளை
காசினியில் உயர்ந்து வரும் முல்லை
கள்ளத்தில் களித்திருந்தால் பின் வாழ்க்கை
காலத்தில் கவலை தரும் வாழ்க்கை

கற்றவருக்கு நிகர் இல்லை பாரில்
கல்லாதவருக்கு புகழில்லை ஊரில்
எத்திசையும் இவன் பெருமை பேசும் கல்வி
என்றும் இல்லையெனில் சமூகம் ஏசும்

வருவதில்லை கல்வி எளிதாக
வந்தால் இனிக்கும் கரும்பாக
கொடுப்பதால் ஊறிடும் தண்ணீர் ஊற்றாய்
கொள்வதால் வளர்ந்திடும் நல்லறிவாம்





கல்விதரும் உனக்கு நல்லழகுப் பேறு
கனிவாம் நீயும் அதை கற்றுதேறு
செல்வம் எப்பொழுதும் பழுது - அது
சென்றுவிடும் என்றோ ஒரு பொழுது

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
நல் வாழ்வுக்கு கல்வி என்றும் உறுதி
பார் எங்கும் போற்றும் அழியாச் செல்வம்
பண்புடன் பயின்று நீ பெறுவோம் பெரும்செல்வம்

நடுக்கடலில் கப்பலை இறங்கி தள்ளமுடியுமா?
அதனால் நீ கல்வியை கற்றுத்தேறிடு
அகிலம் உன்னை போற்றிட

**ஆக்கம் : சி. தர்ஷிகாந்**
தரம் $10^{S}$

# சித்த மருத்துவ குறிப்புக்கள்

1) கண் பார்வை தெளிவு பெற பொன்னாங்கண்ணி இலையை காலையில் மென்று தின்று பால் பருகி வரலாம்.
2) ஞாபக சக்தி பெருக வல்லாரை 150g, வசம்பு 15g பவுடராக்கி தேனில் கலந்து சாப்பிடலாம்.
3) வாய்ப்புண் குணமாக தேங்காய் பாலுடன் தேன் கலந்து குடிக்கலாம்.
4) எந்த நோயும் அணுகாமல் இருக்க அறுகம்புல்சாறு 10 மி.லி அளவு வெறும் வயிற்றில் குடித்து வரலாம்.
5) நாய் கடி விஷம் நீங்க கடிவாயில் எருக்கம் பாலை 2, 3 சொட்டு விட்டால் குணமாகும்.
6) ஆஸ்துமா குணமாக வில்வ இலையை மிளகு சேர்த்து மென்று தின்று சுடு நீர் பருகி வர நீங்கும்.
7) அல்சர் குணமாக தினமும் ஒரு டம்ளர் திராட்சைப் பழச்சாறு குடித்து வரலாம்.
8) சுறுசுறுப்பாக இருக்க ரோஜாப்பூ இதழ்களை சாப்பிடலாம்.
9) பற்கள் உறுதியாக மாவிலையை பொடி செய்து பற்களை துலக்கி வந்தால் உறுதிபெறும்.
10) முகத்தில் உள்ள தழும்புகள், கரும்புள்ளி, முகப்பரு நீங்க அவரை இலைச் சாறு, தினமும் முகத்தில் பூசி காயவிட்டு குளித்து வரலாம். முகமும் பளபளக்கும்.

| | | |
|---|---|---|
| 1) அப்பிள் | : | மலச்சிக்கலை போக்கும். |
| 2) கொய்யாப்பழம் | : | இரத்தச்சோகையை குணப்படுத்தும். |
| 3) செவ்வாழைப்பழம் | : | கல்லீரல் வீக்கம், சிறுநீரக வியாதியை குணமாக்கும். |
| 4) மாம்பழம் | : | இரத்த அழுத்தம் சீராகும். |
| 5) வெந்தயம் | : | கல்லீரல் வீக்கம், இருமல், வயிற்று வலிக்கு சிறந்தது. |
| 6) அரைக்கீரை | : | நரம்பு தளர்ச்சியை போக்கும். |
| 7) விளாம்பழம் | : | பித்தத்தை குறைக்கும். |
| 8) மிளகு | : | பூச்சிக்கடிகளுக்கு மிளகு சாப்பிட்டால் நஞ்சு அழிந்துவிடும். |
| 9) எலுமிச்சைச்சாறு | : | தேன் கலந்து சாப்பிட்டால் மலேரியா குணமாகும். |
| 10) மாதுளம்பழம் | : | ஜலதோஷத்திற்கு சாப்பிட்டால் குணமடையும். |



**ஆக்கம் : ம. கவீநயன்**
தரம் $11^{K}$

# ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற இடங்கள்



| வருடம் | இடம் |
|---|---|
| 1896 | எதென்ஸ், கிறீஸ் |
| 1900 | பாரிஸ், பிரான்ஸ் |
| 1904 | செயின்ட்லூயி, ஐக்கிய அமெரிக்கா |
| 1908 | லண்டன், இங்கிலாந்து |
| 1912 | ஸ்டொக்ஹோம், சுவீடன் |
| 1920 | ஆன்ட்வேர்ப், பெல்ஜியம் |
| 1924 | பாரிஸ், பிரான்ஸ் |
| 1928 | ஆமஸ்டர்டாம், நெதர்லாந்து |
| 1932 | லொஸ்ஏஞ்சல்ஸ், ஐக்கிய அமெரிக்கா |
| 1936 | பெர்லின், ஜெர்மனி |



**இரண்டாவது உலக மகாயுத்தம் காரணமாக 1942ல் போட்டிகள் நடைபெறவில்லை**

| | |
|---|---|
| 1948 | லண்டன், இங்கிலாந்து |
| 1952 | ஹெல்சின்கி, பின்லாந்து |
| 1956 | மெல்பர்ன், அவுஸ்ரிரேலியா |
| 1960 | ரோம், இத்தாலி |
| 1964 | டோக்கியோ, ஜப்பான் |
| 1968 | மெக்சிக்கோசிட்டி, ஜப்பான் |
| 1972 | மியூனிச், ஜேர்மனி |
| 1976 | மொன்றில், கனடா |
| 1980 | மொஸ்கோ, சோவியத் யூனியன் |
| 1984 | லோஸ்ஏஞ்சல்ஸ், ஐக்கிய அமெரிக்கா |
| 1988 | சோல், தென்கொரியா |
| 1992 | பார்சிலோனா, ஸ்பெயின் |
| 1996 | அட்லாண்டா, ஐக்கிய அமெரிக்கா |
| 2000 | சிட்னி, அவுஸ்திரேலியா |
| 2004 | ஏதென்ஸ், கிரீஸ் |
| 2008 | பீஜிங், சீனா |
| 2012 | லண்டன், இங்கிலாந்து |



**ஆக்கம் : சு. நிகுஷகன்**
தரம் 6K

# நாடுகளும் அவற்றின் பாராளுமன்றங்களும்

| | |
|---|---|
| ஆப்கானிஸ்தான் | - சோரா |
| ஆஜெண்டினா | - தேசிய காங்கிரஸ் |
| அவுஸ்திரேலியா | - கூட்டாட்சி பாராளுமன்றம் / பெடரல் |
| பங்களாதேஷ் | - ஜாட்டியா சன்சாத்சீனா- தேசிய மக்கள் காங்கிரஸ் |
| டென்மார்க் | - டோல் கெட்டிங் காங்கிரஸ் |
| இந்தோனிசியா | - மக்கள் ஆட்சி பேரவை |
| ஈரான் | - மஜ்லின் |
| அயர்லாந்து | - டெல்ப் |
| இஸ்ரேல் | - நெசட் |
| ஜப்பான் | - டயட் புண்டஸ்ராட் |
| மலேசியா | - தேவான் ராக்யத் |
| மொங்கோலியா | - குறள் |
| நேபாளம் | - தேசிய பஞ்சாயத்து |
| நெதர்லாந்து | - ஸ்டேட்ஸ் ஜெனரல் |
| நியூசிலாந்து | - பிரதிநிதிகள் சபை |
| நோர்வே | - ஸ்டோர்டிங் |
| போலந்து | - சிச்சீம் மக்கள் சபை |
| ருமேனியா | - கிராண்ட் நேசனல் அசெம்பிளி |
| அமெரிக்கா | - காங்கிரஸ் (பிரதி நிதிகள் சபை செனட்) |
| சோவியத்ரஷ்யா | - சுப்ரிம் சோவியத் |



**ஆக்கம் : லோ. கஜமுகன்**
தரம் 11R



# தலைமைத்துவம் (Leadership)

ஓர் இலக்கு நோக்கி ஒரு குழுவினரின் செயற்பாடுகளை நெறிப்படுத்தும் ஒரு நபரின் நடத்தைதான் தலைமைத்துவம். தலைமைத்துவம் என்பது ஒவ்வொருவரது ஆளுமையாலும் தீர்மானிக்கப்படும். ஒரு தலைவருக்கு கீழ் உதவியாளர்களும் பின்பற்றுவோரும் காணப்படுவார்கள். மனிதர்கள் காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்த காலத்தில் அவர்களைப் பாதுகாக்கவும், வழிநடத்தவும் தலைவர்கள் இருந்திருக்கின்றார்கள். பின்னர் வாழ்ந்த ஆண்டான் - அடிமை சமூகத்திலும் மானியமுறை சமூகத்திலும் கூட தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். எனவே தலைமைத்துவம் என்பது மானிட வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருப்பதோடு அவனது வாழ்க்கைப் போக்கினைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் விளங்குகின்றது.

தலைமைத்துவப் பாதையில் தலைவர்கள் அதிக வலுவினைக் கொண்டு இருத்தல் வேண்டும். இதன் மூலம் ஏனையோரது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி குறிப்பிட்ட இலக்கை அடைய வழிவகுக்க வேண்டும். தலைமைத்துவத்தில் பின்வரும் அம்சங்கள் வெளிப்படுகின்றன.

- தலைமைத்துவம் என்பது பிறரது நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் செயன்முறை.
- தலைமைத்துவம் நபர்களை இலக்குகளை அடைய வழிப்படுத்துகிறது.
- தலைமைத்துவம் ஒரு குழுவுக்கான குறிப்பிட்ட கால வரையறையைக் கொண்ட வகிபங்கு.
- தலைவரிடம் பிறரில் செல்வாக்கு செலுத்தும் பண்புகள் உள்ளன.
- தலைமைத்துவம் நபர்களுக்கு தரிசன நோக்கினை வழங்குகிறது.
- தலைமைத்துவம் குறிப்பிட்ட சூழலில் செயற்படுகிறது.
- தலைமைத்துவம் நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் தொடர்செயன்முறை.
- தலைமைத்துவம் பன்முகத் தன்மையைக் கொண்ட ஓர் உளவியல் செயன்முறை.

பாடசாலையைப் பொறுத்தமட்டில் தலைமைத்துவம் என்பது தனியொருவரில் மட்டும் தங்கியிருப்பதில்லை. நிறைவேற்றும் தலைவர்கள், பகுதிதலைவர்கள் எனும் வகையில் தலைமைத்துவம் பாகுபடுத்தப்படும் பொழுது இயல்பாகவே இது ஒரு கூட்டுத் தொழிற்பாடு என்பதை உணரமுடியும்.

நிறுவனங்களின் தலைவர்கள் பின்வரும் பத்து வகிபங்குகளை ஆற்றுகின்றனர். தலைமை உரு, தலைவர், தொடர்பாளர், கண்காணிப்பாளர், தகவல்பரப்புபவர், பேச்சாளர், முயற்சியாண்மையாளர், பிரச்சினைகளை கையாளுபவர், வளங்களை பகிர்பவர், பேரம் பேசுபவர் என்பவை ஆகும்.

**தலைமைத்துவ வகைகள் :**

1) பிறப்பிலான தலைமைத்துவம் - Chromatic Leadership
2) பாரம்பரிய தலைமைத்துவம் - Traditional Leadership
3) நியமனத் தலைமைத்துவம் - Appointed Leader ship
4) தெரிவுத் தலைமைத்துவம் - Selected Leadership

பிறப்பிலான தலைமைத்துவம் என்பது ஒருவரிடத்தில் இயற்கையாகவே இருக்கின்ற திறமைகள், மற்றவர்களை கவரும் தன்மை, பிரச்சினைகளை தீர்க்கும் ஆற்றல், தீர்மானம் எடுத்தல் என்பன அவருக்கு தலைவராகும் தன்மைக்கு கொண்டுவரும். (உ + ம் : காந்தி, கெனடி)

பாரம்பரிய தலைமைத்துவம் என்பது பிறப்பின் வழியாக பரம்பரையாக உருவாவதைக் குறிக்கும். இங்கு ஒருவரின் திறமை, ஆளுமை போன்றன. தலைமைத்துவத்தில் செல்வாக்கு செலுத்தாது மாறாக அவர் தோன்றிய பரம்பரையே தலைமைத்துவத்தை பெற்றுக் கொள்ளும். (உ + ம் : எலிசபெத் மகாராணி)

நியமனத் தலைமைத்துவம் என்பது இது நியமனம் செய்யப்படும் வகையில் உருவாகும் தலைமைத்துவம் ஆகும். முகாமையாளர்களது நியமனம் பாடசாலை அதிபர்களது நியமனம் ஆகியன நியமனத் தலைமைத்துவங்களே ஆகும். (உ + ம் - அதிபர், ஆசிரியர்கள், நீதிவான்)

தெரிவு தலைமைத்துவம் என்பது மக்களால் அல்லது குழுக்களால் தேர்ந்தெடுப்பதாகும்.

கல்வி நிறுவனம் ஒன்றில் தலைமைத்துவத்திற்குப் பொறுப்பாக இருப்பவர் ஆழமான அறிவும், விமர்சனத்துடன் கூடிய விளக்கம் உடையவராக இருப்பது பிரதானமாகும். வினைதிறன் மிக்க கல்விசார் தலைவர்கள் தொடர்ந்தும் கற்றலில் ஈடுபடுவதுடன் இன்றைய நவீன தகவல் தொழில்நுட்ப யுகத்திற்கேற்ப புதிய தகவல்களை கற்பதிலே கவனஞ் செலுத்த வேண்டும். புதிய மாற்றங்களை உள்வாங்கி நடைமுறை உலகிற்கேற்ப பிரயோகிக்கக் கூடியவராக இருக்க வேண்டும். எனவே ஒரு தலைமைத்துவத்தை ஏற்பவருக்கு கற்றல் செயல்முறைகளில் ஆழமான விளக்கம், புரிந்துணர்வு என்பன அவசியமாகும்.

தலைவர்கள் நேர்க்கணியத் தலைமைத்துவம், எதிர்க்கணியத் தலைமைத்துவம் என இருவகையான தலைமைத்துவத்தினைப் பின்பற்றலாம். தலைமைத்துவத்தை ஏற்பவர் தான் விரும்பியவாறு ஏனையோரை இயங்க வைப்பது நேர்கணிய முகாமைத்துவம் என்றும், ஏனையோர் விரும்பியவாறு தான் நடத்துகின்றது. எதிர்கணிய தலைமைத்துவம் என்றும் கூறப்படுகின்றது.

**நல்ல தலைவரின் பண்புகள் :**

- தொடர்பாடல் திறன் மிக்கவராக இருக்க வேண்டும்.
- பக்கச் சார்பில்லாதவராக இருக்க வேண்டும்.
- மானிடத்திறன் உடையவராயிருத்தல்.
- தொழில்நுட்பதிறன் உடையவராயிருத்தல்.
- எப்பொழுதும் நிறுவனத்தின் இலக்கிலிருந்து விலகிச் செல்லாதிருத்தல்.
- விமர்சனங்களை ஏற்கும் பண்புடையவராயிருத்தல்.
- ஏனையோர் நிலைக்குள்ளாகும் பண்பு.
- தீர்மானமெடுக்கும் திறன் கொண்டிருத்தல்.
- பொறுப்புக்களையும் ஆபத்துக்களையும் ஏற்கின்ற மனோநிலை.
- பிறர் தன்னை உதாரணம் காட்டி பின்பற்ற கூடியவராக நடத்தல்.
- ஊழியர்களை ஊக்குவிக்க கூடியவராயிருத்தல்.
- மன உறுதி, கடமையுணர்வு, விடாமுயற்சி என்பவற்றை கொண்டிருத்தல்.
- நேரந்தவறாமை, பொறுமை, இன்முகம் போன்றவை எல்லாம் ஒரு நல்ல தலைமைத்துவத்தைப் பேணுபவரிடத்தில் கட்டாயம் காணப்பட வேண்டிய அம்சங்களாகும்.

இவ்வாறான பண்புகளைக் கொண்டிருப்பது மட்டுமல்லாது தலைமைத்துவ நடத்தைகளான அறிவித்தல் நடத்தை, கலந்தாலோசித்தல் நடத்தை, இணைதல் நடத்தை எனும் நடத்தைக் கோலங்களையும் கொண்டு மற்றவர்களுக்கு முன்னோடியான, முன்னுதாரணமான தலைவர்களாக மிளிர வேண்டும்.

**உசாத்துணை நூல்கள் :**


1) **"தலைமைத்துவக் கோட்பாடுகள்"**
தை. தனராஜ்
கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

2) **"இலங்கையின் முகாமைத்துவக்கல்வி"**
மா. சின்னத்தம்பி
கல்வியியற்துறை, யாழ்ப்பாணம்.

3) நான் சஞ்சிகை



தொகுத்து வழங்கியவர் : S. சாந்தகுமார் (ஆசிரியர்)
மட்/சிவாநந்த வித்தியாலயம்.

# SCIENCE & TECHNOLOGY

*Science feeds technology and technology helps science to uncover unexplored fields. So interwined are these two fields of knowledge and skill that without them the world would not be as what we see it today. The advancement of science equips technology with new concepts which find their application in different technologies. These advances bring about our life style.*

*The development of science and technology is so rapidly changing the world that keeping peace with it has become a problem specially in society of the third wrold contries. A product turned out to suit modern life becomes out dated even before it finds utility, with the introduction of yet another more advanced type. It is the necessary that we keep up with the standards of the developed countries in science and technology.*



*By* : **M. Shakanuthan**
Grade $8^{M}$



# My Hobby



*My hobby is gardening. I have a home garden. It is in front of my house. It is a big and beautiful garden. It has many pretty flowers such as roses, shoeflowers, anturium, Tempel flowers and oxra. There are some trees such as mango, coconut, king coconut and morgaza. They give shade to my garden. Many vegetable for our meal. Some medical plants like thuthuvalai, thulasi, ginger. Birds, butterflys, bees and squirrels are some visitors to my home garden. Gardening is our family hobby we water the plants and remove weeds every week. My garden saves our monkey adds beauty to the house and helps us make good use of our time. Gardening is a profitable way of hobby. I love my hobby home gardening.*



*By* : **R. Tinukshan**
Grade $8^{V}$

## Myself



- ☺ *My Name is A. Abilashan.*
- ☺ *I'm eight years old.*
- ☺ *I'm in grade three.*
- ☺ *I live inKallady.*
- ☺ *My favourite colour is blue.*
- ☺ *My father is Mr. Antonythas.*
- ☺ *He is a driver.*
- ☺ *My mother is Mrs. Shivamalar Antonythas.*
- ☺ *She is a housewife.*
- ☺ *I have a brother his name is Thineshkanth.*
- ☺ *I want to be a doctor.*

**By : A. Abilashan**
Grade $3^{R}$

# ROLE OF TOURISM IN THE SOCIO ECONOMIC DEVELOPMENT OF SRILANKA

# இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் சுற்றுலாத்துறையின் பங்கு

இன்று இலங்கைக்கு மட்டுமல்லாது அனைத்துலக நாடுகளுக்கும் வருமானம் ஈட்டித்தரும் முக்கிய மூலமாக விளங்குவதே சுற்றுலாத்துறையாகும். உலக சுற்றுலா அமைப்பு இதனை வரைவிலக்கணப்படுத்துகையில் "ஒருவர் தனது வழமையான சுற்றுச்சூழலை விட்டு வேறு இடத்திற்கு ஓய்வு, அலுவலற்ற ஏனைய நோக்குடன் மேற்கொள்ளும் ஒருவருட காலத்திற்குட்பட்டதும் பயணிக்கப்பட்ட இடத்திலிருந்து ஊதியம் பெற்றுக் கொள்ளாத வகையிலும் அமைந்த தங்கியிருத்தலுடன் கூடிய பயணமே சுற்றுலா" என்கிறது. சுற்றுலாத் துறையானது 'உலகிலேயே மிகப்பெரிய துறை' எனவும் வர்ணிக்கப்படுகிறது. அந்த வகையில் 2010ல் 940 மில்லியன் சுற்றுலாப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவ்வாண்டில் உலக சுற்றுலாத்துறை USA$ 919 பில்லியன் வருமானத்தையும் பெற்றுக் கொண்டது. சுற்றுலாத்துறையானது போக்குவரத்து, உணவுத்துறை, இடவசதி, ஓய்வு மற்றும் கேளிக்கை, சுற்றுலா சேவைகள் ஆகிய ஐந்து துறைகளைச்சார்ந்ததாகக் காணப்படுகிறது. இவ்வாறான சுற்றுலாத்துறையின் சமூக பொருளாதாரப் பங்களிப்பை இலங்கையை மையமாகக் கொண்டு இனி நாம் ஆராயலாம்.

'இந்துசமுத்திரத்தின் முத்து' என வர்ணிக்கப்படும் இலங்கைத் தீவானது இயற்கையெழில் நிறைந்த ஒரு சுற்றுலா மையமாகத் திகழ்கின்றது. இது இலங்கைச் சுற்றுலாத்துறையின் வேகமான வளர்ச்சிக்கு மிகப் பெரிய வாய்ப்பாகும். இலங்கை அழகிய கடற்கரைகளையும் மலைகளையும் கொண்டுள்ளதுடன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் வரலாற்றுச் சிதைவுகள், தொன்மை வாய்ந்த நாகரிகம், பண்பாடு சார்ந்த சுற்றுலாப் பின்னணி என்பவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கு பல்வேறு வகையான சுற்றுலாவுக்கான வாய்ப்புகள் காணப்பட்ட போதிலும் வரலாற்று சுற்றுலா, கலாசார சுற்றுலா, சூழல் சுழல் சுற்றுலா போன்றவற்றுக்கான வாய்ப்புகளே அதிகம் காணப்படுகின்றன. அந்த வகையில் அனுராதபுரம், சீகிரிய, தம்புள்ள, பொலன்னறுவ, கண்டி, காலி, யாப்பகூவ போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும் யால, வில்பத்து, குமண, உடவளவ, புத்தள முதலிய தேசிய விலங்கு சரணாலயங்களும் பிரசித்தமானவையாகக் காணப்படுகின்றன. மேலும் தாவரவியற் பூங்காக்கள், பல்வேறு மழைக்காடுகள், நீர்வீழ்ச்சிகள், இயற்கைப் பூங்காக்கள், ஹக்கல பூங்கா, ஹிக்கடுவ(முருகைக் கற்கள்) போன்றனவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அத்துடன் நீர்ச்சறுக்கல் விளையாட்டிற்கு அறுகம்பேயும் படகுச்சவாரிக்கு பென்தோட்ட, வைட் வோட்டர் ரெப்டிங்க்கு கிதுல்கல போன்ற இடங்களும் பிரசித்தி வாய்ந்தவையாக உள்ளன. இவைதவிர இந்நாட்டிற்கேயுரிய கலைகள் (உ-ம்: கண்டிய நடனம்), விழாக்கள் (உ-ம் கண்டிப் பெரகர), ஆயர்வேத மருந்துகள், சமையற் கலைகள், மரபுகள் போன்றனவும் சுற்றுலாப் பயணிகளைக் கவருவனவாக உள்ளன. இங்கு சர்வதேச விளையாட்டுக்கள், மாநாடுகள், ஆய்வரங்குகள் போன்றவை இடம்பெறுவதும் சுற்றுலாவுக்கான வாய்ப்பாக அமைகிறது.

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் வகையில் 1937ல் உலக சுற்றுலாசபை நிறுவப்பட்டது. 1953ல் பணியகத்தின் முதலாவது கிளை நிறுவப்பட்டது. இப் பணியகம் பத்திரிகைகள், பிரசுரங்களின் ஊடாக மேற்கு நாடுகளில் சுற்றுலாவை ஊக்குவிப்பதில் ஈடுபட்டது. 1958ல் தீவிர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்று கரையோரப் பிரதேசங்களையும் வரலாற்று ரீதியான முக்கிய இடங்களையும் விருத்தி செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. 1959ல் வாடகைக்கு அமர்த்தப் பட்ட 1வது விமானம் இலங்கையை வந்தடைந்தது. 1966ல் இலங்கை சுற்றுலாசபை நிறுவப்பட்டு சுற்றுலாப் பணியகத்தின் தொழிற்பாடுகள் கையேற்கப் பட்டன. 1967ல் பன்னாட்டுப் பயணம் மற்றும் சுற்றுலா என்பவற்றில் அதிகூடிய வளர்ச்சியை எய்தும் நோக்கத்துடன் 1வது நீண்டகால 10 ஆண்டு சுற்றுலா பாரிய முதன்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1971களில் ஏற்பட்ட இளைஞர் அமைதியின்மை கிளர்ச்சியின் காரணமாக சுற்றுலாத்துறை ஓரளவு பின்னடைவுக்குள்ளானது. 1973ல் 1வது 5 நட்சத்திர ஹோட்டலான 'ஹோட்டல்

சிலோன் இன்டர்கொன்டினென்டல்' நிறுவப்பட்டது. இது இலங்கை சுற்றுலாத்துறை வளர்ச்சியில் முக்கிய திருப்பு முனையாக அமைந்த போதும் தொடர்ச்சியாக இடம்பெற்ற இனப்பிரச்சனையின் காரணமாக பாரிய பின்னடைவை எதிர்க்கொண்டது. பின்னர் 2001ஆம் ஆண்டு அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து சுற்றுலாத் துறையும் விருத்தியடைவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. தற்போது சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக நாடுமுழுவதும் பல செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுக்கு உதாரணமாக சுற்றுலா விடுதிகளை நிர்மாணித்தல், ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி, பயன்படுத்தாத கடற்கரைகளை அபிவிருத்தி செய்வதற்கான செயற்றிட்டம், கொழும்பு நகர அபிவிருத்தி போன்ற செயற்றிட்டங்களைக் கூறலாம். இன்று இலங்கைக்கு வருமானமீட்டித்தரும் முக்கிய துறையாக சுற்றுலாத்துறை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## The role 0f tourism in the economy (WTTC 2010)

புதிய வேலைவாய்ப்புகளின் உருவாக்கம், அந்நியசெலாவணிச் சம்பாதிப்பு, பிராந்திய அபிவிருத்தி, மக்களிடையே வருமானப் பகிர்வு, பொதுமக்களையும் அபிவிருத்தியில் பங்கு கொள்ளச் செய்தல் போன்ற செயற்பாடுகள் சுற்றுலாத்துறையினால் ஏற்படுவதனால் ஏனைய துறைகளைவிட சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு அதிக பங்களிப்பினை வழங்கும் துறையாக இத்துறை விளங்குகின்றது. இன்று இலங்கை தனது கடனிலிருந்து மீள சுற்றுலாத்துறையையே நம்புமளவிற்கு அதிகளவு வருமானமீட்டித் தரும் இத்துறை கட்புலனாகா அந்நிய செலாவணி சாம்பாத்திய மூலமொன்றாகக் காணப்படுகின்றது. இச் சம்பாத்தியம் ஒரு சில காலகட்டங்களில் தளம்பலுற்ற போதும் பொதுவாக பல தசாப்த காலமாக அதிகரித்தே வந்துள்ளது. சுற்றுலாத்துறை மூலம் கிடைத்த வருமானங்களின் மெய்ப்பெறுமதி 1978ல் ரூபா1589 மில்லியனாக இருந்து 1997ல் ரூபா2491 மில்லியனாக அதிகரித்தது. இது 10% அதிகரிப்பாகும். சுற்றுலாத்துறை மூலமான வருமானம் பொருளாதாரத்தின் சராசரி வளர்ச்சியிலும் பார்க்க உயர்ந்த மட்டத்தில் வளர்ச்சி கண்டதுடன் 1978-1997 (20)வருட காலப்பகுதயில் GDPஆ(மொத்தத உள்நாட்டு உற்பத்தியில்) 2.4% பங்களிப்பினை வழங்கியிருந்தது

சுற்றுலாவிலிருந்தான மொத்த வருமானங்கள் 2000ம் ஆண்டு $274 மில்லியனிலிருந்து(1999) $252 மில்லியனாக வீழ்ச்சி அடைந்தது. 2000ம் ஆண்டில் முக்கிய சுற்றுலா மூலங்களாக விளங்கும் நாடுகளின் வலுவான பொருளாதார வளர்ச்சி, சிறிலங்கா எயாலைன்சினதும் மற்றைய விமான சேவை நிறுவனங்களினதும் பரப்பு மற்றும் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு, அரசினாலும் தனியார் துறையினாலும் மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்பு என்பவற்றுக்கு மத்தியிலும் இச்சுற்றுலாத்துறை பெரும் பின்னடைவைக் காட்டியது. 2003ல் பயணிகள் வருகையை அதிகரிப்பதற்காக வான் பயணம், தங்குமிட வசதிகள், சந்தைப்படுத்தல், மனித வளம், சுற்றுலா விடுதிகள் முதலியவற்றை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. யுத்த நிறுத்தம், சமாதான பேச்சு வார்த்தைகளின் நன்மைகள் இத்துறையில் தீவிரமாக உணரப்பட்டன. இவ்வாறான விளைவுகளால் 2002ம் ஆண்டின் $248 மில்லியன் வருமானத்தைவிட 2003ல் மொத்த வருமானம் 39% ஆல் அதிகரித்தது. சுனாமிப் பேரழிவு காரணமாக 2005ல் இத்துறையின் வருவாய்கள் வீழ்ச்சியுற்றன. 2006ல் வருவாய்கள் படிப்படியாக மீட்சியடைந்து 17% வளர்ச்சியைக்காட்டியது. 2008களில் சிறிது வீழ்ச்சியை எதிர் கொண்ட இச்சுற்றுலாத்துறை 2009,10 ஆண்டுகளில் போர் முடிவுற்றமையாலும் போருக்குப் பின்னரான அபிவிருத்தி மூலமும் முறையான ஒரு வளர்ச்சியை அடைந்து கொண்டுள்ளது. 2009ல் சுற்றுலாத்துறை மூலமான வருமானம் $350 மில்லியனாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சுற்றுலாத்துறை மூலமான வேலைவாய்ப்புகள் பற்றிப் பார்ப்போமாயின் மிகச்சிறந்த மனிதவள ஆற்றலைக் கொண்டுள்ள இலங்கை போன்ற நாடுகளுக்கு கிடைத்த வாய்ப்பாகவே சுற்றுலாத்துறைசார் வேலைவாய்ப்புகள் காணப்படுகின்றன. 1982ற்குப் பின்னர்நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுக் கலவரங்கள் காரணமாக பயணிகளின் வருகையில் தீவிர வீழ்ச்சி ஏற்பட்டது எனினும் 1991 அளவில் மீட்சிநிலையை எட்டியது. 1978-1997க்கிடைப்பட்ட 20 வருட காலப்பகுதியில் நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகள் 5% ஆல் அதிகரித்துச் சென்றுள்ளன. இக்காலப் பிரிவில் நேரடி வேலைவாய்ப்புகளை விட மறைமுக வேலைவாய்ப்புகள் அதிகரித்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

வேலைவாய்ப்புகள் 2001-2004 வரை படிப்படியாக அதிகரித்துவந்து 2004ல் நேரடி வேலைவாய்ப்புகள் 53766 ஆகவும் மறைமுக வேலைவாய்ப்புகள் 75272 ஆகவும் காணப்பட்டது. 2004ம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்தமை, கரையோர சுற்றுலா மையங்கள் பாதிக்கப்பட்டமை போன்ற காரணங்களால் சுற்றுலாத்துறை சிறிது பின்னடைவை எதிர்நோக்கியிருந்தது. இதனால் 2005ல் நேரடி வேலைவாய்ப்புகள் 52085 ஆகவும் மறைமுக வேலைவாய்ப்புகள் 72919 ஆகவும் வீழ்ச்சியடைந்தன.

இங்கு நேரடி வேலைவாய்ப்புகளை விட மறைமுக வேலைவாய்ப்புகளே அதிகமாக உள்ளன, இதுவே சுற்றுலாத்துறையின் விஷேட தன்மையாகும். இவ்வேலைவாய்ப்புகள் சமூக அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி ஆகிய இரண்டையும் ஒரேநேரத்தில் ஏற்படுத்துகின்றன.

சமூகத்திலே நிலவும் வருமானப்பங்கீட்டு ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதில் சுற்றுலாத்துறை பாரிய பங்குவகிக்கின்றது. இத்துறையானது ஏனைய துறைகளைப் போலல்லாது ஒரு தனித்துவமானதும் சமத்துவபபாங்கைக் கொண்டதுமான துறையொன்றாகும். அதாவது பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்களில் ஒன்றான 'சமூக நீதி' இச்சுற்றுலாத்துறை மூலம் அடையப்படுகிறது. எவ்வாறெனில் இத்துறை விமான சேவைகள், விருந்தோம்பல் சேவைகள், பயண முகவர்கள், வழிகாட்டிகள், ஏனைய பொருட்கள்,சேவைகள் வழங்குனர்கள், உள்ளூர்வாசிகள் என பலதரப்பட்ட இணைப்புக்களைக் கொண்டுள்ளது. இதனூடாக வருமானமும் இணைப்பிலுள்ள பல்வேறு தரப்பினரிடையேயும் பகிரப்படுகின்றது. ஏனைய கைத்தொழில் துறைகள், நிறுவனங்கள் போன்றன வருமானத்தை பங்குதாரர்கள், ஊழியர்கள், சில வழங்குனர்கள் போன்றவர்களுக்கிடையில் மட்டுமே பகிர்ந்து கொள்கின்றன. ஆனால், சுற்றுலாத் துறையின் மூலம் பெறப்படும் வருமானங்களை நாட்டின் பரந்த சமூகப்பிரிவினர் தமக்கிடையே பகிர்ந்துகொள்கின்றனர்.

சுற்றுலாப்பயணிகளின் வருகை பற்றி இனிப் பார்ப்போமானால், சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கும் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கும் இடையே நேர்க்கணிய தொடர்பு காணப்படுகிறது. அண்மைய காலங்களில் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு சுற்றுலாத்துறை மூலமான வருமானங்களை அதிகரித்துள்ளது.

1970 காலப்பகுதிகளில் நாட்டில் ஏற்பட்ட இளைஞர் கலவரம், சுற்றுலாத்துறைசார் சேவைகள் வளர்ச்சியடையாத நிலை, உலகப் பொருளாதார மந்தம் போன்ற காரணங்களால் இலங்கையில் சுற்றுலாப்பயணிகளின் வருகை அரிதாகவே காணப்பட்டது. பின்னர் 1973-1983 வரையான காலப்பகுதியில் முறையான முன்னேற்றமொன்று காணப்பட்டது. 1983-1989 காலப்பகுதியில் இடம்பெற்ற உள்நாட்டுக் கலவரங்களின் விளைவாக சுற்றுலாத்துறை பாரிய பின்னடைவை எதிர்கொண்டது. 1994 அளவில் பயணிகளின் வருகை 407511 ஆகக் காணப்பட்டு, 1996களில் 302265 அளவாக பயணிகளின் எண்ணிக்கையில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது.

இதன்பின் சுற்றுலாத்துறையில் முன்வைக்கப்பட்ட சிறந்த கொள்கைகளினால் 1999ல் நல்ல மாற்றம் ஒன்று ஏற்பட்டு சுற்றுலாப்பயணிகளின் வருகையும் 436440 ஆக அதிகரித்தது. 2000ஆம் ஆண்டிற்குப் பின்னரான போக்கை பின்வரும் அட்டவணையூடாக நோக்கலாம்


| வருடம் | தொகை |
|---|---|
| 2000 | 400414 |
| 2001 | 336794 |
| 2002 | 393171 |
| 2003 | 500642 |
| 2004 | 566202 |
| 2005 | 549308 |
| 2006 | 559603 |
| 2007 | 494008 |
| 2008 | 438475 |
| 2009 | 447890 |
| 2010 | 654476 |
| 2011 | 855975 |

2004 வரை சாதாரண வேகத்தில் அதிகரித்து வந்த பயணிகளின் வருகை சுனாமியின் தாக்கத்தால் தளம்பலுற்று 2006ல மீண்டும் மீட்சியுறுகையில் 2007,2008 களின் யுத்தத்தின் தாக்கம் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பிரதிபலித்து 2008ல் 438475 அளவாக வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது. யுத்தம் முடிவடைந்தமையினால் ஏற்பட்ட பயமற்ற நிலை போன்ற காரணங்களினால் 2009 மே மாதத்துக்குப் பின்னர் சிறிது அதிகரித்த சுற்றுலாப் பயணிகள் வருகை 447890 ஆகக் காணப்பட்டது. இதுவே 2010களில் (206586 என்ற அளவினால்) 46.12% னால் அதிகரித்து 654476 ஆகக் காணப்பட்டது. இன்று இலங்கைப் பொருளாதாரமே சுற்றுலாவில் தங்கியிருக்கும் வண்ணம் முன்னெப்போதும் இல்லாதவாறு 2011ல் 855975 ஆக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து 2016ம் ஆண்டு 2.5 மில்லியனாக இவ்வருகை அதிகரிக்கும் எனவும் இதன்மூலம் ரூபா 1 பில்லியன் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைக்கு வருகைதரும் பயணிகளில் அநேகமானோர் மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவர்களாவர். 2011ன் 855975 அளவான வருகையில் 315210 பேர் மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள். மேலும் 49249 பேர் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், 333841 பயணிகள் ஆசிய நாடுகளிலிருந்தும் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். ஆசிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகளில் அதிகமானோர் இந்தியர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் பருவ காலங்களின் அடிப்படையில் வருகை தருவது முக்கிய அம்சமாகும். பொதுவாக பெப்ரவரி, ஏப்ரல் யூலை, நவம்பர், டிசம்பர் மாதங்களில் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு ஏற்படுகிறது. பயணிகளின் வருகை குறைந்த காலம் மே, ஜுன் மாதங்களாகும். சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வயது, பால் போன்ற விடயங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன. 30-49 க்கிடைப்பட்ட வயதுக் குழுவினரே அதிகம் வருகைதருகின்றனர். பால்நிலையைப் பொறுத்தவரை ஆண்களின் வருகை அதிகமாகும்.

by Sex





| Sex | 2009 | 2010 |
|---|---|---|
| Male | 59.7% | 54.1% |
| Female | 40.3% | 45.9% |

2009ஐ விட 2010ல் சதவீத ரீதியாக ஆண்களின் வருகை குறைவடைந்து, பெண்களின் வருகை வீதம் 40.3% லிருந்து 45.9% மாக அதிகரித்துள்ளதனை வரைபடம் காட்டுகிறது.

சுற்றுலாத் துறையானது அதனுடன் சம்பந்தப்பட்ட கைத்தொழில்களை மேம்படுத்துவது மட்டுமன்றி ஏனைய உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கும் மறைமுகமாக உதவி வருகிறது. பயணிகள் உணவு, தங்குமிடம் மற்றும் ஏனைய சேவைகளுக்காக மட்டுமன்றி நினைவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் தமது செலவை மேற்கொள்கின்றனர். பத்திக் ஆடைகள், இரத்தினக்கற்கள், மரவேலைப்பாடுகள், பித்தளைப்பொருட்கள், தொல்பொருட்கள் போன்றவற்றை அதிகமாக இவர்கள் கொள்வனவு செய்கின்றனர். இவ்வாறான நடவடிக்கைகள் உள்ளூர்க் கைத்தொழில்களுக்கு ஊக்குவிப்பினை வழங்கி வருகிறன. பாரியளவிலான உள்ளூர்க் கைத்தொழில்கள் பெருமளவுக்கு சுற்றுலாத்துறையின் மீதே தங்கியிருந்து வருகின்றமை கண்கூடு. இது சமூக, பொருளாதார அபிவிருத்தியில் சுற்றுலாத்துறையின் இன்னுமொரு பரிணாமமாகும்.

இச்சுற்றுலாத்துறையின் எல்லையில்லாப் பயன்கள் அறிந்தே இலங்கை சுற்றுலா அபிவிருத்தி மீது பாரிய கவனம் செலுத்தி வருகிறது. சுற்றுலாப் பயணிகளின் தங்குமிட வசதிகளை அரசு அதிகரித்து வருவது நாம் யாவரும் அறிந்த விடயமாகும். தற்போது யுத்தம் முடிவடைந்த பின்னர் கரையோரப் பிரதேசங்களான குச்சவெளி, ஹொள்ளுப்பிட்டிய, பாசிக்குடா(150 rooms) போன்ற இடங்களில் மாலைதீவு முதலீட்டுக் கம்பனிகளுள் ஒன்றான **'Blue continent'** ஹோட்டல்களை அமைத்து வருகிறது. அடுத்துவரும் 7 ஆண்டுகளில் 20000 புதிய அறைகள் நாட்டில் கட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**Chart 1: Tourist hotels by grade as at end-2010**




***Source: SLTDA***

சுற்றுலாத்துறை அபிவிருத்தியானது பிராந்திய அபிவிருத்தியூடாகவும் சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துகிறது. அதாவது பல்வேறு பகுதிகளில் விமானநிலையங்கள், துறைமுகங்கள், பாதைகள், தங்குமிட வசதிகள், நீர் வினியோகம், மின்சாரம், தொலைத் தொடர்பு, சுகாதாரசேவைகள், கடைத்தொகுதிகள் போன்றன சுற்றுலாத் துறைக்கான முதலீடாகக் கொள்ளப்படுகின்றன. இவை சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கேற்ப தொடர்ந்து வளர்ந்து வருவனவாகும். இத்துறை நகரத்தை மாத்திரமல்லாது கிராமப்புறங்களையும் விருத்தி செய்யக்கூடிய துறையாக உள்ளமையினால் வருமான பங்கீடு முதலியவற்றை உள்ளடக்கிய ஒரு அபிவிருத்தி ஏற்பட ஏதுவாகிறது. இதனால் சமூகம் முன்னேற்றமடைந்து அதனூடாக பொருளாதார அபிவிருத்தியும் அடையப்படுகிறது.



**கட்டுரை ஆக்கம் :- கதிரமலை கிரிசாந்த் (13வர்த்தகம் -2013)**

நன்றி - AuthorityStatistical Report 2010

# பொன்மொழிகள்

- கோபம் அன்பை அழிக்கிறது. செருக்கு அடக்கத்தை அழிக்கிறது. - மகா வீரர் -
- கோபப்படும் போது நரகத்தில் வாழ்கிறோம். அன்பில் மூழ்கும்போது சொர்க்கத்தில் நுழைந்து விடுகிறோம். - ரஜனீஷ் -
- முடியாது என்பது முட்டாள்களின் தத்துவம். - நெப்போலியன் -
- விடாமுயற்சி உடையவன் விரும்பிய அனைத்தையும் பெற்று விடுகிறான். - ரூஸ்வெல்ட் -
- அறிவு என்பது நாம் வானுலகு ஏறுவதற்குரிய சிறகு. - ஷேக்ஸ்பியர் -
- படியுங்கள், சிந்தியுங்கள், நெஞ்சில் நிறுத்துங்கள், உயருங்கள். - எமர்சன் -
- உழைப்பால் களைப்படைபவர்களே உண்மையான இன்பம் காண்கிறார்கள். - அரிஸ்டோட்டில் -
- பொறுமையை இழந்தவன் வறுமையில் வாடுவான். ஒற்றுமையை இழந்தவன் சிறுமையில் வாடுவான். - ரூசோ -
- கவலையற்ற எதிர்காலத்திற்கு கல்வியே நிகழ்காலம். - தோமஸ் புல்லர் -
- எந்த வீட்டில் நூலகம் இருக்கிறதோ அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது. - பிளேற்டோ -
- பட்டங்கள் மட்டும் உன்னை உயர்த்தாது, உன் நடத்தைதான் உன்னை உயர்த்தும். - ஹென்றி போர்ப் -
- பலம் பொருந்திய நூறு கைகளை விட ஒரு நல்ல மூளையே சிறந்தது. - எடிசன் -
- மதங்கள் மீது மதம் பிடிக்காமல் வாழ வேண்டும். - இங்கர்சால -
- உழைப்பில்லாமல் எதுவும் செழிப்பதில்லை, அதுவே கலங்கரை விளக்கு. - கால்ரிட்ஸ் -

**ஆக்கம் : யு. சஜிபிரநாத்**
தரம் 9K



# கடலலை

கடலலை! கடலலை! கடலலை
காண்பவர் கண்ணை குளிரவைப்பாய்
தொடுபவர் நெஞ்சை அதிரவைப்பாய்
உள்ளே பசுவாய் நின்றிடுவாய்
வெளியே புலியாய் பாய்ந்திடுவாய்
உன்னைப் போன்ற கொலைகாரன்
உலகில் எங்குமே இல்லை அடா

உன்னைக் காட்டி மயக்கிடுவாய்
மயங்கும் நெஞ்சை பறித்திடுவாய்
நீயே என்றும் எதிரியடா
நீயே என்றும் பகைவனடா
உன்னில் உள்ள பகையுணர்வு என்றும்
எங்களில் மறையாதடா



**ஆக்கம் : ஏ. ரட்சரன்**
தரம் 6R

# புதிரான புதிர்ப் பயணம்

நாம் கடுமையான வழிகளில் பயணிக்க போகிறோம். சரியான பாதையில் செல்க. முதலில் 1ம் எண்ணுக்கு செல்வோம். வேகம் வேண்டாம். விவேகமே வேண்டும்.

1) சரி பயண ஆரம்பத்தில் இணைவோம். ஹிட்லர் எங்கு பிறந்தார் ஜேர்மன் என்பவர்கள் 4ம் எண்ணுக்கும் ஆஸ்திரியா என்பவர்கள் 10ம் எண்ணுக்கும் செல்க.

2) இல்லை பிழை, ஸ்புட்நிக் - 1 1937 அக்டோபர் 4ம் திகதி ஏவப்பட்டது. ஆனால் இது R - 7 ரொக்கட்டால் அனுப்பப்பட்டது. R - 7 க்கு அடிப்படை V2 வே! சரி 9ம் எண்ணுக்கு சென்ற V2 பற்றி தெரிந்து கொள்க.

3) இல்லை Rohald dahl தான் அவ்வெழுத்தாளர். ericbrowlin என்பவர் famous five, secreate seven என்பவற்றை எழுதியவர் சரி 7ம் எண்ணுக்கு செல்க.

4) இல்லை! அவர் பிறந்தது ஆஸ்திரேலியாவில் தான். ஆஸ்திரேலியா இல்லை ஆஸ்ரியா ஐரோபாவில் உண்டு. சரி 10ம் எண்ணுக்கு சென்று மேலும் தெரிந்து கொள்க.

5) சர்வாதிகாரி ஹிட்லர் பற்றிய விடயம் நன்றாயிருந்ததா. சரி V2 ரொக்கெட்டானது 2ம் உலக மகாயுதத்தத்தில் உருவானது. அதே போல் ஸ்புட்நிக் - 1ம் விண்வெளி ஆராய்வில் உருவானது. இதில் எது முதலாவதாக உருவானது?
ஸ்புட்நிக் - 1 என்பவர் 2ம் எண்ணுக்கும் V2 என்பவர் 9ம் எண்ணுக்கும் விரைந்து செல்க


6) ஆம் பயணத்தை முடித்துவிட்டோம். சரி பிழைகளை திருத்த முயற்சியுங்கள். முடிவுக்கோடு வரை வந்ததே பெருமைதான்.

7) ஆம் Rohald dahl தான் இவரே fantastic Mr. Fox, Danny the champion of the world போன்ற திறமான கதைகளை எழுதினார் 6ம் எண்ணுக்கு செல்க.

8) சரி V2 எப்படிப்பட்டது என்று தெரிந்ததா? பிற பல கதையான Charly and the Choclate factory (சார்லி அன்ட் தி சொக்லட் பக்டரி) யை எழுதியது யார்? Rohald dahl எழுத்தாளர் என்பவர் 6ம் எண்ணுக்கும் Eric browlin என்பவர் 3ம் எண்ணுக்கும் செல்க.

9) சரியான விடை V2 என்பதில் ஆச்சரியமில்லை. 2ம் உலக மகாயுத்தத்தில் உருவானது மனிதனால் உருவாக்கிய முதல் வளிமண்டலத்தை தாண்டிய முதல் ரொக்கட் ஆனால் இதை ஏவமுன்னர் இதன் திட்டத்தை நேசநாடுகள் கைப்பற்றின. இருப்பினும் இது ஏவப்பட்டது. சரி 8ம் எண்ணுக்கு செல்க.

10) ஆம்! சரியான விடை ஆஸ்திரியாதான்! ஆச்சரியமாயுள்ளதா? 1ம் உலக மகா யுத்தத்தில் சாதாரண படைவீரராக ஜேர்மனுடன் இணைந்த இவர் பிற்காலத்தில் 2ம் உலக மகா யுத்தத்தில் அந்நாட்டு தலைவரானார். பின் தன் தாய் நாட்டை கைப்பற்றினார். சரி 5ம் எண்ணுக்கு செல்க.



**ஆக்கம் : நா. சொரூபன்**
தரம் $7^{S}$

# மலர்கள்



மனதைக் கவர்ந்த மலர்களே
மாறா மணம் கொண்ட மலர்களே
காலைக் கதிரவன் கண் திறந்ததும்
கம்பீரமாய் காட்சி தரும் மலர்களே

வண்டுகள் வந்தமர்ந்து தேன் குடிக்க
வாழ்விடமாய் பூச்சிகள் உன்னை நோக்க
பாலகனும் பார்த்து ரசிக்க
பாரினிலே வந்த என் பாச மலரே

உம் அழகைக் காண என் விதி போதுமா!
உம் வாசம் நுகர என் நாசிமூச்சு போதுமா!
எத்தனை வண்ணமாய் நீ பிறக்கிறாய்
எத்தனை கோலமாய் நீ வாழ்கிறாய்

விழாவினிலே நீ முதன்மையானாய்
விண்ணினிலே நீ கோலம் ஆனாய்
மனதினிலே நீ தலைவனானாய்
மனித வாழ்வினிலே நீ தோழனானாய்.

ஆக்கம் : A. M. இஜாஸ்
தரம் 8K

# நகைச்சுவை

1) ஆசிரியர் : ஐந்து பேர் சேர்ந்து ஒரு கட்டடத்தை 20 நாளில் கட்டி முடித்தார்கள். அதே கட்டடத்தை 10 பேர் சேர்ந்து எத்தனை நாட்களில் கட்டி முடிப்பார்கள்.





மாணவன் : ஏற்கனவே கட்டிமுடித்த கட்டடத்தை ஏன் சார் திரும்ப கட்டணும்? வீண் வேலை சார் அது.


2) மீனா : "இலங்கையில் என் புருஷன் காலடிபடாத இடமேஇல்லை"

மாலா : அப்படியா!

மீனா : "ஆமாம், கீழே கிடந்த இலங்கைப்படத்தை கவனிக்காமல் முழுசா மிதிச்சிட்டாரு"

3) ஆசிரியர் : காளை மாடு, பசு மாடு, எருமை மாடு மூன்றில் எது பால் தரும்?





மாணவன் : எதுவும் தராது. நாமதானே பால் கறக்கணும் சார்?

ஆக்கம் : அ. கவிராஜ்
தரம் 9R

# கர்மவிதி




- ஒவ்வொரு தாக்கத்திற்குமானதும் எதிரானதுமான மறுதாக்கம் இருப்பதைப் போன்று நான் செய்யும் செயல் ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற பலனை நானே அனுபவிக்க வேண்டும்.
- நான் சந்தோஷத்தைக் கொடுத்தால் சந்தோஷத்தை அனுபவிக்கிறேன்.
- நான் துக்கத்தைக் கொடுத்தால் துக்கத்தை அனுபவிக்கின்றேன்.
- என்னுடன் தொடர்பில் வருகின்ற நான் சந்திக்கின்ற ஆத்மாக்கள், விலங்குகள், இயற்கை அனைத்துடனும் எனக்கு ஒரு தொடர்பு உள்ளது.
- அவற்றுடன் நான் செயற்படுகின்ற விதத்தைப் பொறுத்து கர்மக்கணக்கு ஒன்று உருவாகின்றது.
- நான் நன்மை செய்யும் போதெல்லாம் எனது கணக்கில் வரவு வைக்கிறேன்.
- நான் தீமை செய்யும் போதெல்லாம் எனது கணக்கில் செலவு வைக்கிறேன்.
- நான் உருவாக்கியதை நானே தீர்க்க வேண்டும். எவர் மீதும் எதன் மீதும் நான் பழிபோட முடியாது.
- எனது எண்ணம், சொல், செயல், மனோபாவம், பார்வை, நடத்தை அனைத்தினாலும் நான் நன்மை செய்ய வேண்டும்.
- கடவுளை சரியாக உணர்ந்து, அவரை ஆழ்ந்த அன்புடன் நினைவு செய்யும் போது, எமது கடந்த காலப் பாவங்கள் அழிந்து போகின்றன.
- கடந்தது கடந்து விட்டது ஆயினும் வருங்காலத்தை என்னால் சிறப்பாக அமைத்துக்கொள்ள முடியும்.
- அதற்காக கடவுளின் நினைவுடன் எனது செயல்களை செய்வதற்கு என்னை பழக்கப்படுத்திக் கொள்கின்றேன்.

தொகுப்பு : **K. சதாசிவம்** (ஆசிரியர்)
மட்/சிவாநந்த தேசிய பாடசாலை

---

# புத்தரின் பொன்மொழிகள்



**அறிவு :** அறிவுள்ள எதிரியைவிட அறிவில்லாத நண்பர்கள் மிகவும் மோசமானவர்கள்.

**அன்பு :** பகைமையைப் பகைமையினால் தணிக்க முடியாது. அன்பின் மூலமாக மட்டுமே தணிக்க முடியும்.

**அறநெறி :** ஆழமான குளமானது பரிசுத்தமாகவும், சலனமின்றியும் விளங்கும். அதைப்போல் அறநெறியில் ஆழ்ந்த ஞானம் உடையவர்களில் மனம் மாசற்றதாகவும் சலனமற்றதாகவும் விளங்கும்.

**அடக்கம் :** வயது முதிர்ந்த பெரியோரை விடாமல் வணங்கி மரியாதை செய்து வருபவனுக்கு ஆயுள் அழகு இன்பம் வலிமை என்னும் நான்கு பயன்களும் அதிகரிக்கும்.

– புத்தர் –

தொகுப்பு : திருமதி. நிதர்ஷினி சுபாகரன்
(ஆசிரியை)



ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.

- திருக்குறள் -

**The man whose conduct is pure is honoured by all :**
**Purity of conduct is therefore to be prized even above life.**

- Thirukural -

# பொது நடத்தையும் ஒழுக்கமும்

**க. குருநாதன்** (பழைய மாணவர் மன்றத் தலைவர்) - முன்னாள் காணி ஆணையாளர் - கிழக்கு மாகாணம்

**பின்வரும் விடயங்கள் ஒரு அரசாங்க உத்தியோகத்தருக்கு பொது நடத்தையாக கருதப்படுகின்றது.**

1) அரசுக்கு பூரணவிசுவாசமாக இருக்க வேண்டியமை அவர் அரசாங்கத்துக்கு தேவைப்படுமிடத்து அவர் எச்சந்தர்ப்பத்திலும் எப்பொழுதும் அரசுக்கு சார்பாக செயற்படுதல் வேண்டும்.

2) ஒப்படைக்கப்படும் எக்கடமையும் நிறைவேற்ற வேண்டியமை அக்கடமைகளை அவர் வினைத்திறமையுடனும் சுறுசுறுப்புடனும் நிறைவேற்ற வேண்டும்.

3) அரசால் வழங்கப்படும் சம்பந்தப்பட்ட உத்தியோகபூர்வ மதியுரைகளை விளங்கி கடைபிடிக்க வேண்டும். குறிப்பாக தாபனவிதிக்கோவை, நிதி ஒழுங்குவிதி, சுற்றறிக்கை மதியுரைகள், திணைக்கள கைநூல், மதியுரைக் கோவைகளின் ஏற்பாடுகளையும் அவதானமாக வாசித்து விளங்கி அவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

4) தனது பதவியினதும் நற்பெயரைக் காக்கவேண்டும். தான் பதவி வகிக்கும் பதவியை அவமதிப் புக்குட்படுத்தத்தூண்டும் எந்த செயலையும் செய்யக்கூடாது. அப்படி செய்யின் அவரின் மிக நெருங்கிய தலைவர் அல்லது மற்றொரு அதிகாரியினால் அவ் அலுவலகர் பணிபுரியும் திணைக்கள தலைவருக்கோ அல்லது அவரின் ஒழுக்காற்று அதிகாரிக்கோ தாமதமின்றி அதுபற்றி அறிக்கையிடல் வேண்டும்.

5) அலுவலகர் தனது தனிப்பட்ட கருமங்களுடன் முரனுறாவண்ணம் நடந்து கொள்ள வேண்டும். தனிப்பட்ட கருமங்களுக்கும் அரச கருமங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றக் கூடிய எச்செயலையும் செய்யக்கூடாது அதற்கு இடமளிக்கவும் கூடாது. விசேடமாக தாபனக்கோவை அத்தியாயம் XXIX இற்கமைய தனது சொத்துக்களை பிரகடனப்படுத்தி அவதானமாக நடந்து கொள்ளவேண்டும்.

6) பதவி உயர்வுகள் தொடர்பாக தூண்டுதல்கள் செய்யக்கூடாமை. இடமாற்றங்கள், பதவி உயர்வு, நியமனங்கள் ஆகியவற்றிற்கு உத்தியோகத்தர் நேரடியாகவோ, பிறநபர்கள் மூலமோ சட்டரீதி அற்றவகையில் உதவி கோருதலானது ஒழுக்காற்று அவ் அலுவலருக்கு எதிராக எடுக்கவோ, அரசியலமைப்புச் சட்டம் உறுப்புரை 60 இற்கு அமைய வழக்கு தாக்கல் செய்யத் தூண்டும் துர்நடத்தைச் செயலாகவும் கருதப்படும்.

7) அலுவலகர் முறை தவறிய நலன்களை கருதி கடமைகளைப் பரிமாற்றம் செய்து கொள்ளக்கூடாது. அதற்கு முயற்சிக்கவும் கூடாது. அப்படிச் செய்தால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு காரணமாக அமையும்.

8) பொதுமக்களுடன் அலுவலகர் கண்ணியமாக நடக்கவேண்டும். அவர்களுக்கு தம்மிடம் வரும்போது தயங்காமல் உதவி செய்தல் வேண்டும். கடமையின் போதும், கடிதத்தொடர்புகள் வைக்கும் போதும் ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

9) மொழிவடிவம் ஒழுக்கமுறையில் அமைத்தல் வேண்டும். கடிதத்தொடர்பு, அறிக்கைகள் எழுதும் போது, அலுவலக பதிவுகள் எழுதும் போது பண்பாடானதும் ஒழுக்கமுடையதுமான மொழி வடிவை பயன்படுத்தல் வேண்டும்.

10) அலுவலகர் பொதுமக்கள் தருமக்கொடை நிதிகளுக்காக தனக்குக் கீழ் வேலைபார்க்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து பணம் சேகரிக்க தான் நேரடியாகவோ அல்லது தன் கீழ் உள்ள ஊழியர்களிடமிருந்து பணம் சேகரிக்க தன் குடும்பத்தவர்களுக்கு இடமளிக்கவோ கூடாது.

11) அலுவலகர் தனது தனிப்பட்ட கருமங்களுக்காக அலுவலக நேரத்திலும் அதற்கு அப்பாற்பட்ட நேரத்திலும் சரி செயலாளரின் விசேட அனுமதியின்றி ஊழியர் ஒருவரையோ அரச சொத்துக் களையோ பயன்படுத்துதல் முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது.

12) செயலாளரின் விசேட முன் அங்கீகாரமில்லாமல் அரசுக்கு பொருட்களை விற்கவோ, அவற்றின் மாதிரிகளை சமர்ப்பிக்கவோ முயலக்கூடாது.

**மதுபானமும் நச்சுப் போதைப்பொருள் பாவனையும் (தா.வி.கோ XLVII பிரிவு 2)**

1) மதுபானம், நச்சுப்போதைப் பொருட்களை கடமையின் போதோ, அலுவலகத்திலோ, அதன் சுற்றாடலிலோ அல்லது மற்றொரு அரச அலுவலகத்திலோ பாவித்தல் குடிபோதையில் இருத்தல், மது நாற்றம் வீசும்படி இருத்தல் பாரிய துர்நடத்தையாகும்.

2) குடிபோதையில் இருந்தமை, மதுநாற்றம் வீசியமை தொடர்பில் முறைசார் ஒழுக்காற்று விசாரணையில் அக்குற்றம் செய்தமையை நிருபிக்க பதவி நிலை உத்தியோகத்தர் இருவரின் சாட்சியம் போதுமானதாகும்.

3) மேற்படி குற்றத்திற்கு இரண்டாம் தடவையும் குற்றவாளியாகும் அலுவலகர் கட்டாயமாக பதவி நீக்கம் செய்யப்படுவார்.

4) இது அரச அலுவலகர் நச்சுப்போதைப் பொருட்கள் பாவித்தமை அரச மருத்துவரால் அல்லது சட்ட மருத்துவரால் அறிக்கை மூலம் நிருபிக்கப்படல் வேண்டும்.

**பரிசுகளும் நிதி உதவிப்பட்டியல்களும் (தா.வி.கோ - அத்தியாயம் XLVII பிரிவு 3)**

1) பரிசுகளை பொறுப்பேற்பது அலுவலருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தடைசெய்யப்பட்டுள்ளது.

2) தனது குடும்ப உறுப்பினர்களின் செயல்கள் அவதானிக்கப்பட வேண்டியவை முக்கியமாகும். அவர்களும் உத்தியோகத்தர் சார்பில் பரிசுப் பொருட்களை அரச கடமையின் சார்பில் பொறுப்பேற்கக் கூடாது.

3) உத்தியோகபூர்வ நிலைக்காகவே பரிசுகள் அளிக்கப்படுகிறதென கருதவேண்டும். வெளிநாட்டு அரச தலைவரொருவரிடமிருந்து அல்லது பிரதிநிதியிடம் இருந்து அரச அலுவலருக்கு கிடைக்கும் பரிசுகளை அரச பிரதிநிதியொருவர் என்ற வகையில்தான் வகிக்கும் நிலைக்காக கிடைக்கப் பெற்ற பரிசுகளாக கருத வேண்டும்.

4) வெளிநாட்டில் இருந்து இந்நாட்டவருக்கு அதிதியாக வருகின்ற அரச அலுவலர்களைப் போன்றவர்களிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற மறுக்கமுடியாத விதத்திலான பரிசுகளை வெளிநாட்டலுவலர்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிக்கையிடல் வேண்டும்.

5) இதன் பெறுமதி ரூபாய் 5000/= க்கு குறைவானதென சுங்கப் பணியாளர் நாயகத்தினால் மதிப்பீடு செய்யப்படும் பரிசுகள் பரிசாளிக்கு வழங்கப்படும். ரூபாய் 5000/=திற்கு மேற்பட்டதாயின் தீர்வைக்கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும். வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் விதிப்பின்படி தகுந்த ஒரு முறையை கையாளவேண்டும்.

6) அலுவலர் ஒருவருக்காக சேகரிக்கப்படும் பொதுநிதியை பொதுமக்கள் கருமங்களுக்காக ஈடுபடுத்த வேண்டும்.

7) கீழ் அலுவலர்களிடமிருந்து பணம் சேகரிக்கப்படல் ஆகாது. உயர் அலுவலகர்களுக்கு பரிசு வழங்கவோ நன்றிக்கடிதம் வழங்கவோ பணம் சேகரிக்கக் கூடாது.

8) அலுவலர் ஒருவருக்கு பரிசுகள் வழங்கப்படுவதற்காகவோ அல்லது புத்தாண்டுப் பண்டிகைக்காலம் போன்றவற்றுக்கு பகிர்வதற்காக பணம் சேகரித்தலும் நிதி உதவிப் பத்திரங்கள் நடமாட்டம் தடை செய்யப்பட்டுள்ளது.

9) அலுவலகர் இடமாற்றப்படும் அல்லது ஓய்வு பெறும் சந்தர்ப்பங்களில் இவ்விதி தளர்த்தப்பட்டுள்ளது. இருந்தாலும் திணைக்களத் தலைவர் அல்லது செயலாளரின் அனுமதி பெறவேண்டும்.

**பணக்கஷ்டங்கள். (தா.வி.கோ - அத்தியாயம் XI, VII பிரிவு 4)**

1) ஒரு உத்தியோகத்தர்களுக்கு பணக்கஷ்டங்கள் வரக்கூடாது அது அவரின் வினைத்திறமையைக் குறைக்கும்.

2) அளவை மீறிச் செலவு செய்வதால், அறிவுக்கூர்மை இல்லாமையினால் அல்லது குற்றங்குறை தெரிவிக்கத்தக்கதான மற்றொரு காரணத்தினால் அத்தகைய பணக்கஷ்டங்கள் ஏற்பட்டிருந்தால் அது அரச சேவையை அவமதித்து அலுவலர் மீது வைக்கப்படும் நம்பிக்கை குறைவதற்கு காரணமாகும் குற்றமாகக் கருதப்படும்

3) பணக்கஷ்டங்கள் அறியவரும் பட்சத்தில் கவனத்திற்கு கொண்டு பார்க்கப்படுவதோடு அச்சந்தர்ப்பங்களின்படி தகுந்தவாறு சம்பந்தப்பட்ட அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கலாம்.

4) அலுவலர் சம்பளப்பற்றுச்சீட்டை பிணைக்காகவைத்து கடன் பெறலாகாது கொண்டுவருபவருக்குச் செலுத்தவும் என்ற வகையில் குறிப்பிட்ட சம்பளப் பற்றுச் சீட்டொன்றை முன்வைத்து எவரேனுமொரு அலுவலர் கடன் பெற்றுள்ளார் என நிருபிக்கப்பட்டால் அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கமுடியும். சம்பளப்பட்டியலிலேயே உத்தியோகத்தர் கையொப்பம் பெற்று சம்பளம் பெறவேண்டும்.

5) ஒரு உத்தியோகத்தர் தான் பெற்ற கடனை மீளச்செலுத்தாததால் அல்லது பொருளழிவுக்கு ஆளானவர் என நீதிமன்றத்தில் எண்பிக்கப்பட்டால் அல்லது கடன் கொடுத்தோருடன் உடன்பட்டால் அரச சேவையை அவமதித்த குற்றத்திற்காளாவர். ஒழுக்காற்று விசாரணைக்குட்படுவோர் தவிர்க்க முடியாத துரதிஸ்டத்தினால் அவர் அக்குற்றத்தை புரிந்துள்ளார் என தெரியவந்தால் தண்டனை விதிக்கப்படும் போது அக்காரணத்தை அனுதாபத்துடன் கவனத்திற்கெடுக்கப்படும்.

6) மேற்கூறிய கடன் குற்றத்திற்கு ஆளான அலுவலர் தான் கைதுசெய்யப்பட்டதும் அல்லது பொருளழிவுக்கு சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டவுடன் தனது திணைக்கள தலைவருக்கு அறிவிக்க வேண்டும். அறிவிக்காவிட்டால் அது பாரிய ஒரு துர்நடத்தையாக கருதி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

7) பொருளழிவு தொடர்பில் சம்பந்தப்பட்ட நீதிமன்றம் வழக்கு ஆரம்பிக்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கடனாளியாக்கப்பட்டு உத்தியோகத்தர் பற்றி தீர்ப்பு அளிக்கும் போது அவ் உத்தியோகத்தரின் திணைக்கள தலைவருக்கு அறிக்கையிடல் வேண்டும்.

8) அவ்வறிக்கை தொடர்பாக அவரின் திணைக்களத்தலைவர் அவரின் வினைத்திறமையின்மை பற்றி அல்லது துர்நடத்தைப் பற்றி விமர்சித்து ஒழுக்காற்று சட்டங்களில் விதிக்கப்பட்டுள்ளவாறு அவருக்கு தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**தனிப்பட்ட கருமங்களுக்கு அரசநிதியை பயன்படுத்தல் (தா.வி.கோ - பிரிவு 5)**

1) அரச சேவையைச் சேர்ந்த சிறாப்பர் அல்லது நிதிப்பொறுப்பாளர் ஒருவரிடமிருந்து அல்லது அரசாங்க நிதிக்குப் பொறுப்பாக உள்ள எந்த அலுவலரிடமிருந்தும் அவர்களின் பொறுப்பிலுள்ள அரச நிதிகளை கடனாகப் பெறுதல் முழுமையாக தடைசெய்யப்பட்ட ஒன்றாகும்.

2) அனுமதியின்றி மேற்படி நிதிக்கு பொறுப்பான உத்தியோகத்தர் எந்த உத்தியோகத்தருக்கும் கடன் அல்லது முற்பணம் வழங்கக்கூடாது. அது முழுமையாக தடை செய்யப்பட்டதொன்றாகும்.

3) அரச நிதியை எவ்வளவு குறுகிய காலத்திற்கும் தனிப்பட்ட கருமங்களுக்கு பயன்படுத்துவது பாரிய குற்றமாகும். அப்படி பாவித்த அரச உத்தியோகத்தருக்கு வழக்குத் தொடர்வதோடு ஒழுக்காற்று விசாரணையும் செய்யப்படல் வேண்டும்.

**தொடர்பு சாதனங்களுக்கு அல்லது பொதுமக்களுக்கு உத்தியோகபூர்வ செய்திகளை அளித்தல். (தா.வி.கோ - அத்தியாயம் - XLVII பிரிவு 6)**

1) தனது விடய விரிவெல்லைக்குட்பட்ட அரசாங்க அலுவலர்களுடன் திணைக்கள் அமைச்சின் அலுவல்கள் பற்றி பொதுமக்கள் பயனடையக்கூடிய தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவது தொடர்புச் சாதனங்களுக்கு வழங்குவது பற்றி திணைக்கள தலைவர், செயலாளர் தனது தற்றுணிவின்படி செயல்பட முடியும்.

2) அத்தகைய தகவல்கள் பொதுவாக தகவல்துறை பணிப்பாளர் ஊடாகவே தொடர்புச் சாதனங்களுக்கு வழங்க வேண்டும். எனினும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப நேரடியாகவும் வழங்க முடியும்.

3) மேற்கூறிய தகவல் சரியான புள்ளி விபரங்களையும் உண்மைத் தன்மையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

4) உண்மையான செய்தியானாலும் அரசையும் அல்லது அரச நிறுவனமொன்றை அல்லது அலுவல ரொருவரை இக்கட்டான நிலைக்காளாக்க இடமிருக்குமானால் அச்செய்தியை வெளியிடக்கூடாது. சந்தேகமென்றால் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் கலந்தாலோசித்து செயலாற்ற வேண்டும்.

5) அரசை, அரச நிறுவனத்தை விமர்சித்தல் அல்லது நிறுவனத்தின் துயர்களை வெளிப்படுத்தும் அம்சமாக தொடர்பு சாதனங்களை பயன்படுத்தலாகாது. தாபன விதிக்கோவை அத்தியாயம் XXXI பிரிவு 3.2ஐப் பார்க்கவும். உதாரணமாக அரச திணைக்களத்தில் போதிய நிதியின்மை, ஆளணியில்லை, வசதிகள் இல்லை என தொடர்புச் சாதனங்களுக்கு தகவல் கொடுக்கக்கூடாது.

6) செயலாளர், திணைக்களத் தலைவர் செய்தி வழங்கும் போது உத்தியோக பூர்வமாக வழங்க வேண்டும்.

7) அனுமதியின்றி தொடர்பு சாதனங்களுக்கு யாராவது உத்தியோகத்தர் தகவல் வழங்கியிருந்தால் அதற்கு பொறுப்பான உத்தியோகத்தரை கண்டறிய வேண்டும். செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். அவர் நடவடிக்கை எடுக்க.

8) தொடர்புச் சாதன அறிக்கைகளின் மீது அவதானமாக இருப்பதில் திணைக்கள தலைவர், செயலாளர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

9) செயலாளர், திணைக்கள தலைவர் தவிர்ந்த அல்லது விசேட அனுமதி பெறாத எந்த அலுவலரும் தனது கடமையின்போது தனக்கு கிடைத்த தகவல்களை உத்தியோகபூர்வமாக அறிவதற்கு உரிமை இல்லாத தொடர்புச்சாதனப் பிரதிநிதிகள் அடங்கலாக எந்தவொரு நபருக்கும் முறைப்படியாகிலும் சரி இல்லாமலும் சரி வெளிப்படுத்தும் அத்தகைய தகவலைப்பற்றி அந்நபருடன் பேசுவதற்கு இடமளித்தலும் அவர்களுக்கு தடையாகும். அதாவது தகவல் வழங்குவதோ அதைப்பற்றி பேசுவதோ தவறாகும்.

10) அரச, அலுவலர்கள் எவரும் அரச கொள்கைகள் பற்றிய பிரச்சனைகள் பற்றியோ இலங்கைப் பாதுகாப்பை பாதிக்கும் விடயம் பற்றியோ கடமையில் இருக்கும் போதோ விடுமுறையில் இருக்கும் போதோ வெளித்தரப்பார்கள் தன்னோடு பேச இடமளித்தல் தவறாகும்.

11) அரச அலுவலர் செயலாளரின் அல்லது திணைக்களத் தலைவரின் அனுமதியின்றி அலுவலக ஆவணங்களை அல்லது பிரதிகளை எத்தகைய தேவைக்கும் தொடர்புச் சாதனங்களுக்கு வழங்குதல் இடமளித்தல் முழுமையாக தடைசெய்யப்பட்டதாகும்.

12) அரச நிர்வாக விடயத்திற்கு பொறுப்பான செயலாளரின் முன் அங்கீகாரமின்றி எவரும் தொடர்புசாதன நிறுவனம் எதிலும் பதவி வகித்தலோ முறையாக அல்லது முறையற்றதாக அவ்வாறு சம்பந்தப்படுத்தலோ செய்யப்படலாகாது.

**புத்தகங்கள் கட்டுரைகளைப் பிரசுரித்தலும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் சொற்பொழிவுரை நிகழ்த்துதல் சம்பந்தமான அலுவலர்களும் (தா.வி.கோ. அத்தியாயம் XLVII பிரிவு 7)**

1) இலங்கையில் இருந்தோ அல்லது வெளிநாட்டில் இருந்தோ தொடர்புசாதனத்திற்கு அநாமதேய பேரில் அல்லது புனைப்பெயரில் கட்டுரைகள், தகவல்கள், ஆக்கங்கள் வழங்கப்படலாகாது. இது அரச உத்தியோகத்தருக்கு தடையாகும்.

2) முன் அங்கீகாரமின்றி நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றி கட்டுரைகள் சொற்பொழிவுகள் என்பவை நடத்தலாகாது. செயலாளரின் முன் அங்கீகாரம் பெறவேண்டும் 2 பிரதிகள் அதுபற்றிய விடயங்கள் அடங்கிய கட்டுரை அவருக்கு அனுப்ப வேண்டும். செயலாளர் அது பற்றி அமைச்சருக்கு அறிவிக்க வேண்டும். அமைச்சர் வேண்டாத பட்சத்தில் தவிர்க்கலாமே தவிர அமைச்சர் அங்கீகாரம் பெற வேண்டும்.

3) அரச விடயங்கள், அரச அலுவலர்களை, திணைக்களத்தை பாதிக்கின்ற விடயங்கள் தவிர்ந்த வேறு விடயங்களை சாதாரண விடயங்களை ஊடகங்களுக்கு தொடர்பு சாதனங்களுக்கு வெளியிட பகிரங்கப்படுத்த சொற்பொழிவு ஆற்ற அரச அலுவலருக்கு முடியும்.

4) நூல் ஒன்றை வெளியிட அரச அலுவலருக்கு தகவல் தேவைப்படும் பட்சத்தில் தகவல் சம்பந்தப்பட்ட திணைக்களத்தலைவரின் முன் அங்கீகாரம் பெற்றே தகவல்களை பெறவேண்டும்.

5) நூல் ஒன்றைவெளியிட எவரேனும் அலுவலர் அவரின் கடமைக்குட்பட்ட வேறு ஏதேனும் அலுவலரொருவரின் அரச கடமைகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் உள்ளடங்கிய அலுவலக பதிவேட்டுத் தகவல்களை பரிசீலித்து ஆக்கங்களை பிரசுரிப்பதாயின் பிரசுரிக்க முன்னதாக சம்பந்தப்பட்ட செயலாளரின் முன் அங்கீகாரம் பெறுவதோடு சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல் நூலின் அல்லது வெளியீட்டின் குறிப்பிட்ட பிரதிகள் அரசின் பயனுக்காக தான் தீர்மானிக்கும் விசேட சலுகையான விலைக்கு வழங்க வேண்டும் என்று அச் செயலாளரால் விதிக்கப்படலாம்.

**தாபன விதிக்கோவை நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் அவற்றோடு தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் (தா.வி.கோ. அத்தியாயம் XIVII பிரிவு 8)**

1) அரச அலுவலர்கள் தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணம் அவற்றிற்கு காலாந்தரங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் காலாந்தரங்களில் வெளியிடப்படும் அரசாங்க நிர்வாக பொதுத் திறைசேரி சுற்று நிருபங்களுக்கும், அமைச்சர் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிற அலுவலர்களினால் முறைசாரா வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபங்கள், ஒழுங்கு விதிகள், நிலையியற் கட்டளைகள், நடைமுறைகள் கட்டளைகளுடனான மதியுரைகளுக்கும் அமைவாக அரச அலுவலர்கள் சகலரும் செயற்படல் வேண்டும்.

2) மேற்கூறிய விடயங்களை மீறி நடத்த அரச அலுவலகர் 1ம் அட்டவணையில் காட்டப்படுகின்ற குற்றமாக கருதி ஒழுக்காற்று நடவடிக்கைக்கு அத்தகைய உத்தியோகத்தர் ஆளாவார்.

3) அதிகாரி ஒருவர் தலையிட்டமையால் மீறி நடந்தேன் என அக்குற்றத்திற்கு காரணம் காட்ட முடியாது.

4) சட்டரீதியற்ற முறையில் தலையிட தூண்டிவிடும் அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை 1ம் அட்டவணை குற்றமாக கருதி எடுக்கப்படும்.

**அரச அலுவலர் அரசியலில் ஈடுபடல் (தா.பி.கோ. அத்தியாயம் XLVII பிரிவு 9)**

1) தாபன விதிக்கோவை தொகுதி 1 அத்தியாயம் XXXII இன் கீழ் அரசியல் உரிமைகளை அனுபவிக்க சிறப்புரிமை உள்ள உத்தியோகத்தர்கள் அவ்வேறுபாடுகளையும் எல்லைகளையும், மீறுவது பாரிய துர்நடத்தையாக கருதி அவ் உத்தியோகத்தருக்கெதிராக 1ம் அட்டவணையின் கீழ் தண்டிக்கப்படுவார்.

2) அவ் அத்தியாயம் XXXII இன் கீழ் அரசியல் உரிமை இல்லாது ஒழிக்கப்பட்ட அரச அலுவலரொருவர் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவது மிகப்பெரிய துர்நடத்தை இது இக்கோவையின் உள்ள தண்டிக்கக்கூடிய குற்றமாகும்.

**ஒழுக்காற்று நடவடிக்கை முறைபற்றிய விதிகளில் சில முக்கிய பிரிவுகள் (தா.வி.கோ. அத்தியாயம் XL VIII இன் சில முக்கிய பிரிவுகள்)**

1) பிரிவு 13 - ஆரம்ப புலனாய்வு

2) பிரிவு 14 - குற்றஞ் சாட்டப்பட்ட அலுவலர் ஒருவருக்கு குற்றப்பத்திரமொன்றை வழங்கல்.

3) பிரிவு 15 - குற்றஞ் சாட்டப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் குற்றப்பத்திரம் தொடர்பாக காரண விளக்கம் அளித்தல்.

4) பிரிவு 17 - முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையொன்றின் போது வழக்கைத் தொடுத்தல்.

5) பிரிவு 18 - முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையின் போது குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர்கள் சார்பில் தோற்றுதல்.

6) பிரிவு 19 - விசாரணை நியாய சபைகள் (திருத்தம் பொ.நி.அ. சுற்று நிருபம் இல.06/2004ம் திகதி 15/12/04 இல் சில உபபிரிவுகள்) திருத்தப்பட்டுள்ளது.

7) பிரிவு 21 - முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையொன்றை நடாத்துதல்.

8) பிரிவு 22 - ஒழுக்காற்று அதிகாரியின் கடமைகள்

9) பிரிவு 23 - ஒழுக்காற்று கட்டளைகள்

10) பிரிவு 24 - தண்டனைகள்

**குறிப்பு :**

தாபன விதிக்கோவையானது புதிய திருத்தத்துடன் இறுதியாக தொகுதி II ஆனது 1999ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதுவே தற்போதும் நடைமுறையில் உள்ளது. 15/12/2004ம் திகதி திருத்தமொன்று இதில் சில பிரிவுகளில் செய்யப்பட்டு பொ.நி.சுற்று நிருபம் இல. 06/2004 இல் வெளியிடப்பட்டுள்ளதை கவனத்தில் கொள்ளவும்.

# எங்களுக்கு தேவையான கல்வி



அறியாமை அகற்றும் அறிவுக்கல்வி
அவசியம் வேண்டியது அன்புக் கல்வி
ஆண்டவனைக் காட்டும் ஆன்மீகக் கல்வி
ஆற்றல் துளிரும் உபதேசக் கல்வி
உலகம் நிறைந்த ஞானக் கல்வி
ஏழைகளும் படிக்க எளிய கல்வி
ஏற்றம் அளிக்கும் ஒழுக்கக்கல்வி
எங்கும் நிறைந்த உண்மைக் கல்வி
ஏழ்மை வாழ்வை உயர்த்தும் கல்வி
சாதிகளைக்கடந்த சமத்துவக் கல்வி
சத்தியம் புகட்டும் சாஸ்திரக் கல்வி
என்றும் நிலைக்கும் தர்மக் கல்வி
சிந்தனை வளர்க்கும் தாய்மொழிக்கல்வி
தாய்மையுடன் கூடிய வாய்மொழிக்கல்வி
மனதில் நிலைக்கும் வெற்றிக்கல்வி
ஆனந்தம் தரும் ஆசான் கல்வி
மனிதம் ஓங்கும் மாண்புக் கல்வி
மூளை ஏற்கும் தெளிவுக் கல்வி
பண்பை உணர்த்தும் பரவசக் கல்வி
தமிழ் நாட்டில் எழுந்த சத்தியக்கல்வி
எம்மை உயர்த்தும் ஊக்கக் கல்வி
உயர் நிலை கூறும் வேதாந்தக் கல்வி.



ஆக்கம் : **K. தனுஜன்**
தரம் 9R

# குறித்த ஆண்டில் கொண்டாடப்படும் விழாக்கள்

| | | | |
|---|---|---|---|
| 1) 1ம் ஆண்டு | – | காகித விழா | (Paper) |
| 2) 2ம் ஆண்டு | – | பருத்தி விழா | (Cotton) |
| 3) 3ம் ஆண்டு | – | தோல் விழா | (Leather) |
| 4) 4ம் ஆண்டு | – | நூல் விழா (பட்டு) | (Silk) |
| 5) 5ம் ஆண்டு | – | மர விழா | (Wood) |
| 6) 6ம் ஆண்டு | – | இரும்பு விழா | (Iron) |
| 7) 7ம் ஆண்டு | – | செம்பு விழா | (Copper) |
| 8) 8ம் ஆண்டு | – | மின்சார விழா | (Electrical) |
| 9) 9ம் ஆண்டு | – | மட்பாண்ட விழா | (Pottery) |
| 10) 10ம் ஆண்டு | – | தகர விழா | (Tin) |
| 11) 11ம் ஆண்டு | – | உருக்கு விழா (எ∴கு) | (Steel) |
| 12) 12ம் ஆண்டு | – | சணல் நார்த்துளி விழா | (Lenen) |
| 13) 13ம் ஆண்டு | – | சரிகை விழா | (Lace) |
| 14) 14ம் ஆண்டு | – | யானைத் தந்த விழா | (Ivory) |
| 15) 15ம் ஆண்டு | – | படிகம் / பளிங்கு விழா | (Crystal) |
| 16) 20ம் ஆண்டு | – | பீங்கான் (சீனக்களிமண்) | (China) |
| 17) 25ம் ஆண்டு | – | வெள்ளி விழா | (Silver) |
| 18) 30ம் ஆண்டு | – | முத்துவிழா | (Peal) |
| 19) 40ம் ஆண்டு | – | செம்பு விழா / சிவப்பு கல் விழா | (Ruby) |
| 20) 45ம் ஆண்டு | – | நிலக்கல் விழா | (Sapphire) |
| 21) 50ம் ஆண்டு | – | பொன் விழா | (Gold) |
| 22) 55ம் ஆண்டு | – | மரகத விழா / பச்சைக்கல் விழா | (Emerald) |
| 23) 60ம் ஆண்டு | – | வைரவிழா | (Diamond) |
| 24) 75ம் ஆண்டு | – | பவளவிழா / பிளாற்றினம் விழா | (Platinum) |
| 25) 80ம் ஆண்டு | – | அமுத விழா | |
| 26) 100ம் ஆண்டு | – | நூற்றாண்டு விழா | (Conterary) |

**ஆக்கம் : ய. கீரன்**
2013 பிரிவு கணிதம்

# சிறுவர் உரிமைகளும் துஸ்பிரயோகங்களும்

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்களாக விளங்குவர். அந்த வகையில் இன்று சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது வளர்ந்த ஒவ்வொருவரினதும் கடமையாகும். ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமை சாசனத்தின்படி பல்வேறு உரிமைகள் வரையறுக்கப்படுகின்றன. சிறுவர்கள் என்போர் தாயின் கருவில் உருவான சிசு தொடக்கம் பதினெட்டு வயது வரையான சிறார்கள் வரை என வரையறுக்கப்படுகின்றது.

இன்று மாறிவரும் உலகில் சிறுவர்கள் பல்வேறு கொடுமைகளை அனுபவிக்கின்றனர். உறவினர்களால் துஸ்பிரயோகம் செய்யப்படுதல், கொடூரமாக நடாத்தப்படுதல், வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்படல், சிறுவர் தொழிலாளிகளாக ஈடுபடுத்தப்படுதல், பாலியல் அடிமைகளாக விற்பனை செய்யப்படல், சிறுவர்கள் போராளிகளாக ஈடுபடுத்தப்படல், சுற்றுலா கைத்தொழிலுக்கு பயன்படுத்தப்படல், அடிமைகளாக நடாத்தப்படல் போன்ற துன்பங்களை சிறுவர்கள் நாளாந்தம் அனுபவிக்கின்றமை கொடூரமான நிகழ்வாகும்.

ஒவ்வொரு சிறுவரும் நாட்டின் பொக்கிஷமாகக் காணப்படுகின்றனர். அவர்களுக்கு கல்வி வழங்க வேண்டியதும், அனைத்து விடயங்களிலும் சம வாய்ப்பு அளிக்க வேண்டியதும் ஒவ்வொரு அரசினதும் கடமையாகும். இன்று அனேகமான சிறுவர்கள் பல்வேறு உரிமைகளும் மறுக்கப்பட் நிலையில் வீதி ஓரங்களிலும், யுத்த களங்களிலும், சுற்றுலா விடுதிகளிலும், தெருவோர சிறார்களாகவும் வாழ்க்கை நடாத்துகின்றமை துன்பமான செயலாகும். எனவே இச்சிறுவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்கி அவர்களின் உரிமைகளைப் பேணவேண்டியது சமூக நலனில் அக்கறை உள்ளோரின் கடமையாகும்.

மாறிவரும் உலக ஒழுங்கில் சிறுவர்கள் மிக மோசமாக நடாத்தப்படுகின்றமை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாரியதொரு பிரச்சினையாகக் காணப்படுகின்றது. ஆபிரிக்கா கண்டத்தில் ஒன்றும் அறியாத 40 இலட்சத்திற்கும் அதிகமான பச்சிளம் பாலகர்கள் H.I.V வைரஸ் நோய் தாக்கத்திற்கு ஆளாகி உள்ளதாக யுனிசெப்பின் அண்மைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்தது. அதே ஆபிரிக்காவில்தான் சிறுவர்கள் ஆயுதப் படைக்கு அதிகம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனர். சோமோலியா, எரித்திரியா, தன்சான்யா, கொங்கோ போன்ற நாடுகளில் சிறுவர் போராளிகளாக இலட்சக் கணக்கான சிறுவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆசியாவில் இலங்கை ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் சிறுவர்களின் உரிமைகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக யுனிசெவ் நிறுவனமும், வேறு வெளிநாட்டு தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளன. ஆரம்ப காலத்தில் சிறுவர்களின் உரிமைகள், குல, மத, வர்க்க பிரதேச அடிப்படையிலேயே பறிக்கப்பட்டன. ஆனால் தற்போதைய உலகில் சிறுவர்களின் உரிமைகள் இயலாமையை கருத்திற் கொண்டே பறிக்கப்படுகின்றது. இயலாமை என்பதை குடும்ப இயலாமை மற்றும் உடல் உள ரீதியான இயலாமை என்று வேறுபடுத்திப்பார்க்க முடியும். குடும்ப இயலாமைக்கு வறுமை நிலையே காரணமாக அமைகின்றது. இதனால் சிறுவர்கள் சிறுவயதிலேயே வேலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். சிறுவயதில் வேலைக்குச் செல்லும் சிறுவர்கள் பாரிய இடர்பாடுகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

வேலைத் தளங்களில் அவர்கள் அடிமைகளாக நடாத்தப்படுவதுடன் பல்வேறு பாலியல் ரீதியான இம்சைகளுக்கு உட்படுத்தப்பட்டு சிறுவயதில் போதைப் பொருள்பாவனைக்கு உள்ளாகி அவர்களின் எதிர்காலமே சூனியமாகின்றது. அதேபோல் வீட்டுவேலைக்கு அமர்த்தப்படும் அவர்கள் எஜமானர்களினால் கொடூரமான முறையில் நடாத்தப்படுகின்றனர். மேலும் வறுமை நிலையினால் தாய் தந்தையர்கள் வெளிநாடு செல்லுதல் காரணமாக குழந்தைகள் பராமரிப்பின்றி நிர்க்கதிக்குள்ளாகி கல்வியைத் தொலைத்து விடுகின்றனர்.இன்று நாம் இலத்திரனியல் ஊடகங்களின் வாயிலாக அன்றாடம் அறிந்து கொள்ளும் விடயங்களில் தந்தையால், உறவினர்களால், தாயின் இரண்டாம் கணவரால் குழந்தைகள் துஷ்பிரயோகப் படுத்தப்படுதல் பற்றிய செய்திகளே அதிகம். மேலும் வெளிநாட்டு

வேலைவாய்ப்பு தேடிச்செல்லும்போது குடும்பத்தில் ஏற்படும் தகராற்றினால் குடும்பம் பிளவடைதல் தாய், தந்தை பிரிந்து வாழ்வது போன்ற காரணங்களினால் குழந்தைகள் கைவிடப்படுதல் என்பன நாம் தினமும் அறிந்து கொள்ளும் விடயங்களாகக் காணப்படுகின்றது.

மேலும் இயலாமைபற்றி நாம் குறிப்பிடும் போது விஷேட தேவைகளையுடைய அங்கவீனமான உடல், உளக்குறைபாடுடைய பிள்ளைகள் பற்றியதாகும். இக்குழந்தைகள் செய்த பாவம் பரம்பரைக் குறைபாட்டினாலும் தாயின் மருத்துவச் சீர்கேடுகளாலும் பூமியில் பிறந்தமையே. இக்குழந்தைகள் சமூகத்தில் மறைத்துவைக்கப்படுவதுடன் அவர்களின் அனைத்து உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. இதனால் சமவாய்ப்புடன் வாழவேண்டிய, மற்றும் கற்க வேண்டிய இவர்கள் இடை நடுவில் கைவிடப்படுவதும் சித்திர வதைகளிற்கு ஆளாவதும் நிகழ்கின்றது.

எமது இலங்கை நாட்டைப் பொறுத்தவரை சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய யுனிசெப் அறிக்கையில் (2006) வடகிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் 45000 சிறுவர்கள் சுற்றுலாக்கைத்தொழில் பிரதேசங்களில் கல்வியை இழந்து அலைவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. வடகிழக்கு யுத்தத்தில் 5000 சிறுவர் போராளிகள் காணப்படுவதாகவும் இவர்கள் யுத்த நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தப்படுவதாகவும் ஒவ்வொரு வருடமும் நூற்றுக் கணக்கான சிறுவர்கள் கடத்தப்படுவதாகவும் கூறப்பட்டிருந்தது. இதுபோன்று அண்மைய ஆய்வு அறிக்கையில் 3 இலட்சம் விஷேட தேவையுடையோர் அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ள நிலையில் காணப்படுவதாகவும் இதில் 45000 விஷேட திறன் கொண்டோர் சாதாரண பாடசாலைகளில் கல்வி கற்பதாகவும் கூறப்பட்டுள்ளது. அதேபோல் ஒவ்வொரு நாட்டிலும் இதேவிதமாகவே சிறுவர்களின் உரிமைகள் காணப்படுகிறது. இருப்பினும் ஒப்பீட்டு ரீதியாக விருத்தியடைந்த நாடுகளில் இந்நிலை குறைவாகவே காணப்படுகிறது. பலமான பொருளாதாரமும் அனைத்து உரிமைகளும் சிறப்பாக கடைப்பிடிக்கப்படுவதுமே இதற்கான காரணமாகும். மேலும் இந்நாடுகளின் அரசாங்கக் கொள்கைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டும் காணப்படுகின்றன.

சிறுவர்களின் உரிமைகள் பற்றிய மிகத்தெளிவான வரையறைகள் சிலவற்றையும் சட்டதிட்டங்களையும் UNO வகுத்துள்ளது.



- ✡ 1948ல் வரையப்பட்ட சிறுவர் உரிமை சாசனம்.
- ✡ 1989ல் உருவாக்கப்பட்ட சிறுவர் உரிமைப்பிரகடனம்.
- ✡ 1990 யாவர்க்கும் கல்வி.
- ✡ 1994 சலமந்தர் அறிக்கை
- ✡ 2000 உலகக் கல்வி செயற்பாட்டுச் சட்டகம்.
- ✡ 2001 உள்ளடங்கல் கல்வி.
- ✡ 2005 ஊனமுற்றோர்க்கான (முன்னேற்றப்பாதைகள்)

போன்ற ஐநாவின் அறிக்கைகளிலும் பிரகடனங்களிலும் சிறுவர்களினதும் விஷேட தேவையுடைய பிள்ளைகளினதும் உரிமைகளும் காப்புகளும் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று இலங்கை அரசினாலும் சில கொள்கைகள் உருவாக்கப்பட்டும் ஐ. நாவின் கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இலங்கை அரசினால் சிறுவர் உரிமைகளிற்கு பங்களிப்பு செய்வதற்காக வகுக்கப்பட்ட கொள்கைகளைப் பார்ப்போம்.

1) 1948 இலவசக் கல்வி.
2) 1960 கட்டாய கல்வி.
3) 1966 J.R. கென்மோர் அறிக்கை
4) 1975 பார்வையற்ற பிள்ளைகளிற்கான ஒன்றிணைந்த கல்வி.
5) 1990 யாவர்க்கும் கல்வி
6) 1997 5 - 14 வயது வரையானோர்க்கு கட்டாயக்கல்வி

போன்ற கொள்கைகளை வகுத்து கல்வி உரிமையை நிலைநாட்ட இலங்கை அரசாங்கம் பொறுப்புடன் செயலாற்றுகின்றது. அதுமட்டுமின்றி ஐ.நாவுடன் அதன் இணை நிறுவனங்களான யுனிசெப், வேள்ட்விஷன், சேவ் த சில்றன் போன்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்க பொறுப்புணர்வுடன் செயற்படுவதைக் காணலாம்.

மூன்றாம் மண்டல நாடுகளில் சிறுவர் உரிமை பற்றிய விடயங்களைப் பாதுகாப்பதிலும் அறிவுறுத்தல்கள், ஆலோசனைகளை வழங்குவதிலும் UNICEF நிறுவனத்தின் பங்களிப்பு அதிகமென்று கூறவேண்டும். ஒவ்வொரு ஆண்டிலும் சரியான தகவல்களைப் பெற்றும் இவ்வமைப்பு ஐ. நாவின் மனித உரிமைகள் சாசனங்களின் கவனத்திற்கு கொண்டு செல்வதனூடாக மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களினால் குறித்த நாடுகளிற்கான அறிவுறுத்தல்களும், ஆலோசனைகளும் உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

இங்கு நாம் வலியுறுத்த விரும்பும் விடயங்கள் பற்றி இனி ஆராய்வோம். ஐரோப்பிய நாடுகளிலும் சில அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் சிறுவர் உரிமைகள் நன்றாக அமுல்படுத்தப்படுவதுடன் எவ்வித குறைபாடுகளும் இன்றி முன்னெடுத்துச் செல்லப்படுவதைக் காணலாம். அதற்கு அவர்களின் பலமான பொருளாதாரமும், கலாசார விடயங்களும் துணை செய்கின்றன. ஆனால் எமது நாடுகளில் (3ம் மண்டல நாடுகள்) கலாசார பொருளாதார அரசியல் காரணிகள் இவ்வுரிமைகளை சிறப்பாக முன்கொண்டு செல்வதற்கு இடமளிப்பதில்லை. அதற்கான பலமான சட்டதிட்டங்களும் காணப்படுவதில்லை. எனவே இதனை அனைவரும் கருத்தில் கொண்டு சிறுவர்களிற்கான கடமைகளை தெளிவாக விளக்கி அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க முன்வரவேண்டும். அதாவது சிறுவர் உரிமை சாசனங்களின் பிரகாரம் அவர்களின் உரிமைகளை நிலைநிறுத்த அரசும் சமூகமும் ஏனைய தன்னார்வ நிறுவனங்களும் முன்வரவேண்டும்.

**ஆக்கம் : திருமதி. எழிலரசி பிரதாபன்** (ஆசிரியை)
மட்/சிவாநந்த வித்தியாலயம்

## இல்லை ! இல்லை! இல்லை!

சவுதி அரேபியாவில் நதிகள் இல்லை
ஆப்கானிஸ்தானில் ரயில்கள் இல்லை
மண்ணுண்ணி பாம்புக்கு கண்கள் இல்லை
வடதுருவத்தில் நிலப்பரப்பு இல்லை
வண்ணாத்துப்பூச்சிக்கு வாய் இல்லை
முதலைக்கு நாக்கு இல்லை
பாம்புக்கு செவி இல்லை
ஈசலுக்கு வாயில்லை
தவளைக்கு கழுத்தில்லை
நண்டுக்கு தலை இல்லை
யானையின் தும்பிக்கையில் எலும்பு இல்லை
சுண்டெலிக்கு வியர்ப்பதில்லை.
கோலா கரடி நீர் அருந்துவதில்லை
பாம்பின் கண்களில் இமை இல்லை
ஈக்களுக்கு பற்கள் இல்லை
யமுனை நதி கடலில் கலப்பதில்லை

**ஆக்கம் . ந. சுகிர்தன்**
தரம் 11அ



# முயற்சி



எந்த ஒரு செயலிலும் நாம் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமாயின் முயற்சி செய்து வாழவேண்டும். முயன்றால் முடியாதது எதுவும் இல்லை. முயற்சியுடன் வாழ்ந்தால் முயன்றவர் வளத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்வர்.

**"முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்", "முயற்சி திருவினையாக்கும்"** என்னும் முதுமொழிகள் முயற்சியின் அவசியத்தை நமக்கு விளக்குகின்றன. முயற்சியுடன் படித்தால்த்தான் மாணவர்கள் கூட வாழ்க்கையில் முன்னேறலாம்.

ஐந்தறிவுள்ள பறவைகள், மிருகங்கள் கூட முயற்சியில் ஈடுபட்டுப் பறப்பதையும், நீந்துவதையும் உணவைப் பெறும் முறையையும் நம் கண்ணால் காண முடியும். அத்துடன் பெரிய உடலும் கூரிய கொம்புகளும் உடைய யானையை இவ் இரண்டும் இல்லாத புலி முயற்சியுடன் தாக்கும் போது யானை புலியைக் கண்டு அஞ்சி ஓடிவிடும்.

ஐந்தறிவு உள்ள விலங்குகளே முயற்சியில் ஈடுபடும் போது ஆறறிவு படைத்த நாம் ஏன் சோம்பி இருக்க வேண்டும். கடலில் முழ்கி முத்தெடுப்போரையும், கடலில் வலை வீசி மீன் பிடிப்போரையும், வயலில் நெற்றி வியர்வை சிந்திப் பாடுபடும் விவசாயிகளையும் எண்ணிப் பாருங்கள்.

தற்காலத்தில் உலகிலே மிக வேகமாக ஓடக்கூடிய **"உசைன் போல்ட்"** கூட தன் கடுமையான முயற்சியின் பின்பே ஓட்டக் களத்தில் இறங்கி சாதனை படைத்தார். அவரின் சாதனைக்கு பக்க பலம் முயற்சியே ஆகும்.

அவர் மட்டுமல்ல முற்காலத்தில் தோமஸ் அல்வா எடிசன், ஸ்டீவென்சன் போன்ற விஞ்ஞானிகளும், நெற்போலியன் ஆபிரகாம் லிங்கன் போன்ற அரசியல் வாதிகளும் முயற்சியின் மூலம் உயர்ச்சி பெற்றோராவர். ஆகவே நாம் கொண்டுள்ள இலட்சியத்தை அமைய வேண்டுமாயின் தொடர்ந்து சோர்வின்றி முயற்சிக்க வேண்டும். தோல்வியைக் கண்டு பயப்பிடவோ மனம் தளரவோ ஆகாது. தோல்வியே வெற்றியின் முதற்படி எனக் கருத வேண்டும். உறுதியாக நாம் முயற்சியுடன் உழைத்தால் நம் இலட்சியத்தை இலகுவாக அடையலாம். ஆகவே முயற்சியை பயன்படுத்தி வாழ்க்கையில் வெற்றி பெறுவோமாக.

**ஆக்கம் : ந. லக்ஷணன்**
தரம் 9M

## பூக்கள்



எத்தனை எத்தனை அழகம்மா
எங்கள் முற்றத்துப் பூக்களம்மா
இறைவன் கொடுத்த வரங்களம்மா
இதயத்தைக் கவரும் பூக்களம்மா
மாலைகள் கட்டிச் சூடிடுவோம்
நறுமண வாசம் நுகர்ந்திடுவோம்
கல்வியை வேண்டி அர்ச்சிப்போம்.



## ?யோசி



உயிரை கருவாக்கி
உணவை மருந்தாக்கி
மனதை திடமாக்கி
மழலை உருவாக்கி
சோறூட்ட உன் பசிக்கு
நிலா காட்டினாள் உனை தூக்கி
பெருமை சேர்த்தாள் அவள் பெண்மைக்கு
இத்தனைக்கும் நீ என்ன செய்தாய்
உன் தாய்க்கு?

**ஆக்கம் : உ. ஸனுஸ்கர்**
தரம் 5R



# தாயின் வழிகாட்டல்



ஒரு பாடசாலையில் அரவிந்தன், முகுந்தன் எனும் இருவரும் இணைபிரியாத நண்பர்களாக தரம் 5 இல் கல்வி கற்றனர். இருவரும் படிக்கும்போதும், விளையாடும்போதும் ஒற்றுமையாகவே இருந்தனர். ஏனெனில் அவர்கள் இருவரும் ஒரே தெருவில் வசிப்பவர்கள். ஒரு நாள் அவர்கள் இருவரும் விளையாடுவதற்கு மைதானத்திற்கு செல்லும்போது ஒரு பயற்றந் தோட்டத்தைக் கண்டனர். அத்தோட்டம் மிகவும் செழிப்பாகவும், அழகாகவும் இருந்தது. அதைப் பார்த்ததும் களவெடுப்பது பாவமென்று அறியாமல் உள்ளே சென்று சுற்றும் முற்றும் பார்த்தனர். தங்களுக்கு தேவையான அளவு பயற்றங்காய்களை கொய்தனர். சிறிது தூரம் சென்று ஒரு மரநிழலில் வைத்து சிறிதளவு பயற்றங்காயை பச்சையாக உண்டனர். மிகுதியை இரண்டாக பிரித்து தங்களது தாய்மாரிடம் கொடுத்து சமைத்து சாப்பிடுவதாக முடிவெடுத்தனர்.

இருவரும் தங்கள் தங்கள் தாயிடம் கொடுத்தனர். அரவிந்தனின் தாய் படித்தவள். முகுந்தனின் தாய் படிக்காதவள். இருவரின் தாய்மாரும் களவெடுத்ததை ஏதோ ஒருவகையில் அறிந்து கொண்டனர். அரவிந்தனின் தாய் **"இப்படியே விட்டுவிட்டால் அவன் கள்வனாகி விடுவான்"** என்று உணர்ந்தாள். அரவிந்தனின் தாய் அரவிந்தன் கொண்டு வந்த பயற்றங்காய்களை சமைக்கும் போது பயற்றங்காயுடன், வேப்பிலைச் சாற்றையும் சேர்த்து சமைத்துக் கொடுத்தார். அரவிந்தன் சாப்பிடும் போது தன் தாயிடம் **"என்னம்மா கறி கசக்கிறது"** எனக் கேட்டான். அதற்கு அவனது தாய் **"களவெடுத்தவை எல்லாம் கசக்கும்"** என்றார் இதைக் கேட்ட அரவிந்தன் களவெடுத்தல் கெட்ட செயல் என்பதை உணர்ந்தான். அன்றுடன் திருந்தி நல்லவனாக நடந்தான். அவனின் தாயாரும் அன்றிலிருந்து தனது மகனின் நடத்தைகளை அவதானித்து வேண்டிய போதெல்லாம் புத்திமதி கூறி மகனை நல்வழிப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டாள். ஆனால் முகுந்தனின் தாயோ மகன் திருடிய பயற்றங்காய்களுடன் மாசிக்கருவாடும், மணச்சரக்குகளும் போட்டு வாய்க்கு சுவையாக சமைத்துக் கொடுத்தார். அதுமாத்திரமல்லாமல் **"வாய்க்கு நல்ல ருசியாக இருக்கிறது, இன்று ஒரு கறி வாங்கும் செலவும் மீதம்"** என்று மகனுடன் சேர்ந்து மகிழ்ச்சியாக சாப்பிட்டாள். இவ்வார்த்தைகள் முகுந்தனைத் தட்டிக் கொடுப்பது போல் அமைந்தன. முகுந்தனும் வெகு உற்சாகமாக, அடிக்கடி களவெடுத்தலை பழக்கமாக்கிக் கொண்டான். படிப்படியாக அரவிந்தனின் நட்பையும் குறைத்துக் கொண்டான்.

காலமாற்றத்திற்கேற்ப அரவிந்தன் தன் தாயின் புத்திமதிகளைக் கேட்டு நன்றாகப் படித்த ஒரு நீதிபதியாக கடமையேற்றான். தனது தொழிலில் நேர்மையானவன் என்ற பெயரும், புகழும் பெற்றான். ஒரு நாள் அரவிந்தனின் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு விசாரணைக்கு வந்தது. அதில் தனது நண்பன் முகுந்தன் குற்றவாளி கூண்டில் நிற்பதைக் கண்டு அரவிந்தன் அதிர்ச்சி அடைந்தான். இருந்தும், கடமை தவறாத நீதிபதியான அரவிந்தன் வழக்கை விசாரணை செய்து தனது நண்பனுக்கு 10 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கினான். இருந்தாலும் தனது ஓய்வு நேரங்களில் தனது நண்பனைச் சிறைச்சாலைக்குச் சென்று நலம் விசாரிக்கத் தவறுவதில்லை. அப்போதெல்லாம் முகுந்தன் தனது தாயார்தான் தன்னைக்களவு செய்ய தூண்டியதாகக் குற்றஞ்சாட்டினான். **"உனது புத்திமதியை கேட்டிருந்தால் இந்த நிலைக்கு ஆளாகியிருக்க மாட்டேன்"** எனவும் வேதனைப்பட்டு அழுவான்.

**ஆக்கம் : அ. சாகித்யன்**
தரம் 5K

## வெற்றிக்கு .

ஒருவர் உன்னை தாழ்த்திப் பேசும் போது
ஊமையாய் இரு . . .
புகழ்ந்து பேசும் போது
செவீடனாய் இரு . . .
எளிதில் வெற்றி பெறுவாய்.



**ஆக்கம் : ச. நிலந்த**
தரம் 9R

## நட்பு

ஒரு துளி கண்ணீரை
துடைப்பது நட்பு அல்ல . . . மறு
துளிவராமல் தடுப்பதுதான்
உண்மையான நட்பு . . .



# பரீட்சையில் வெற்றிபெற வேண்டுமானால் . . .



வெற்றி என்பது மனிதனின் ஊக்கத்தால் கிடைப்பதொன்று. எம்முடைய அனைத்து வாழ்க்கைச் சம்பவங்களிலும் வெற்றி என்பது மிக முக்கியமானது. பரீட்சையானது நமக்காகத்தான் பரீட்சைக்காக நாம் அல்ல என்பதனை உணர்ந்துகொண்டால் நிச்சயம் தேர்வில் வெற்றி பெறலாம். பரீட்சைக்கான விதிமுறையை அறிந்து கொண்டால் மிகவும் எளிதாக வெற்றிபெறலாம். எளிதாக வெற்றி பெற பயிற்சி, மனவிருப்பம், ஆர்வம் போன்ற நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

பரீட்சை என்பது கல்வியின் அளவுகோல் தேர்வில் வெற்றி பெற்றால்தான் பட்டம் பெற்று உயர்வான பதவிகளை வகிக்கலாம். தேர்வில் வெற்றி பெற்றால்தான் பட்டம் பெற்று அடிப்படைத் தேவையான ஒரு தொழிலைப் பெற்றுத்தரும். ஒன்றை அறிந்து கொள்ளவும், புரிந்து செயல்படவும் தான் கல்வியைக் கற்றுக்கொள்கின்றோம். "கல்வியின் வேர் கசப்பாக இருக்கும் ஆனால் அதன் பழமோ இனிப்பு" என்று கூறுகின்றார் கிரேக்க நாட்டு தத்துவவியலாளர் அரிஸ்ரோட்டில். கல்வியைக் கற்று அதற்கு ஒரு வரையறை தருவதுதான் தேர்வு. பரீட்சையில் வெற்றி பெறவேண்டுமானால் பின்வருவனவற்றைத் தன்வசம்கொண்டிருக்க வேண்டும்.

## படிப்பதில் ஆர்வம் வேண்டும் :

நம்முடைய மனமானது தூய்மையானதாக இருக்க வேண்டும். ஒருவன் "வெற்றிபெற்று விடுவேன்" என்று கூறிக் கொண்டே இருப்பதனால்மட்டும் எந்த பயனும் ஏற்படாது. படிக்காமல் இருந்தால் தேர்வில் எவ்வாறு வெற்றி கிடைக்கும். முதலில் படிப்பதற்கு மன உறுதி வேண்டும். 'வெற்றிபெறுவதற்கு அடிப்படை மனஉறுதி' என்று லூயி பாஸ்டர் கூறுகின்றார். மன உறுதியே நன்றாக படிப்பதற்கு முக்கியம் என மனோதத்துவ அறிஞர்கள் கூறிகின்றார்கள். எதனையும் செயலாக செய்து கொள்ளும் நம்முடைய மனஉறுதி படிப்பை மட்டும் அல்ல குணத்தையும் நடத்தையையும் செம்மைப்படுத்தும். நம்முடைய வருங்காலத்தை எண்ணிப் பார்த்து பெற்றோர் மேற்கொள்ளும் செயல்களையும் நினைத்து படிப்பில் விருப்பத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும். படிப்பில் சலிப்பு தோன்றும் போது பெற்றோரையும், வருங்காலத்தையும் நினைவில் வைத்தால் போதும் வெறுப்பு வெகுண்டு மறையும், விருப்பம் விரைவாகத் தோன்றும்.

## நம்பிக்கை இருக்க வேண்டும் :

எனது மனதில் எதிலும் முடியும் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும் முடியுமா? என்பதில் சந்தேகம் ஏற்படுமாயின் அதுவே தயக்கத்திற்கு வழிவகுக்கும். உள்ளத்திற்கு நம்பிக்கையையும் உறுதியையும் ஊட்டுகின்ற சிந்தனைகள் தான் ஆற்றலை அதிகப்படுத்தும். தன்னம்பிக்கை உள்ளத்திற்கும், உடலுக்கும் உறுதியைத் தந்து செய்கின்ற காரியத்தை செம்மையாக முடித்துத்தரும். எம்முடைய மனதில் எதிர்கால இலட்சியம் பற்றி சிந்தித்துச் செயற்பட்டால் நம்பிக்கை தானாகவே தோன்றும்.

## தெளிவாகப் படிக்கவேண்டும் :

புதிதாகப் படிக்கத் தொடங்கமுன் இதற்கு முன்பு ஏற்கனவே படித்து முடித்த பகுதியைப் பற்றி மௌனமாக சிந்திக்க வேண்டும். ஒரு பாடத்தை பலமுறை அதன் பொருள் விளங்கும்படி முழுச் செய்யுளையும் தெளிவாப் படிக்க வேண்டும். பின்னர் கருத்தினை அறிந்து மனப்பாடம் செய்ய வேண்டும். பின்னர் முழுமையான செய்யுளை பலமுறை படித்தும் சொல்லியும் பார்க்க வேண்டும். பின்னர் செய்யுளில் தெளிவு வரும்.

## களைப்பு ஏற்படாமல் படிக்க வேண்டும் :

நாம் படிப்பது நம்முடைய வாழ்வுக்காகத்தான். படிக்கும் நேரத்தை பிரித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேலைக்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும். படிப்பதற்கு அதிகாலை சிறந்தது. இந்நேரத்தில் ஞாபகசக்தி நன்றாக இருப்பதோடு எளிமையாகவும், இன்பமாகவும் இருக்கும். படிக்கும்போது சலிப்புத் தன்மைஏற்பட்டால் சற்று ஓய்வெடுக்க வேண்டும். எமது மனதிற்கு இடைஞ்சலாக இருக்கும் எதையும் எமது அறையிலிருந்து களைந்துவிட வேண்டும். படிப்பதற்குரிய சூழ்நிலையை நாமே உருவாக்க வேண்டும். மொத்தமாக சேர்த்து படிப்போம் என்ற எண்ணம் எம்மனதில் வரக்கூடாது.

ஓய்வுபெறும் போது மனம் மீண்டும் கற்கும் நிலைக்கு வந்துவிடும். ஊக்கம் இருப்பின் களைப்பு ஏற்படாமல் கற்கமுடியும் என்கிறார் அர்னல்ட் டாயம்பி என்கின்ற அறிஞர்.

## கூர்ந்து கவனிக்க வேண்டும்

ஐம்பொறிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவற்றால் அறிவைப் பெறமுடியும். செவி வழியாகப் பெறும் அறிவு அதிகம். நன்கு படிக்க வேண்டுமானால் கூர்மையாக கவனிக்க வேண்டும். எமது உடலும் உள்ளமும் சுறுசுறுப்பாக இயங்குவதற்கும் நம்முடைய சிந்தனையின் சக்தி தீவிரமாக வேலை செய்வதற்கும் கவனிப்பது என்பது அவசியமாகின்றது. படிக்கும் போது ஆழ்ந்து படிக்கவேண்டும். பாடக்குறிப்பு எடுத்து படிக்க வேண்டும். படிக்கும் பொழுது முக்கியமான கருத்துக்களை கோடு போட்டு படிக்க வேண்டும். படித்தவற்றை மற்றவர்களுடன் விவாதிக்க வேண்டும். இவை போன்றன இருந்தால் பரீட்சையில் சித்தி பெறலாம்.

## நினைவாற்றல் இருக்க வேண்டும் :

நினைவாற்றல் என்பது படித்ததையும் முன்பு ஏற்பட்ட அனுபவத்தையும் மனதில் பதிய வைத்து மீண்டும் தேவைப்படும் பொழுது அறிவதுதான் நினைவாற்றல். "**நினைவாற்றல் உள்ளவர்களால்தான் தலைவர்களாகவும், தளபதிகளாகவும் திகழ முடியும்**" என்கிறார் எட்கார்ஆலன்போ. படிப்பதும் படிப்பதை மூளையில் நிறுத்திவைப்பதும்கற்பதின்ஆரம்பம். மூளையில் நிறுத்திய செய்திகளை மறுபடியும் வரவழைப்பதும் படித்ததை படித்ததாக உணர்வதும் நினைவின் ஆற்றல். மனதில் படித்த பாடத்தை விடாமல் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்க்கவேண்டும். அப்பொழுதான் நினைவாற்றல் இருக்கும்.

## தொடர்புள்ள படிப்பு இருத்தல் வேண்டும் :

நாம் ஒன்றைப் படிக்கும் போது அது எம்முடைய மனதில் நிலைக்க வேண்டுமானால் எமக்கு விருப்பமான எதையாவது தொடர்புள்ளதாகப் எண்ணிப் படித்தால் அப்பாடமானது எளிதில் எம்மனதில் ஞாபகத்திற்கு வரும். எம்மனதில் உள்ள ஆர்வமான எண்ணங்களைக் கொண்டு தொடர்புள்ளதாகப் படித்தால் எளிதில் கற்கலாம்.

## இடைவேளை இருக்க வேண்டும் :

நீண்ட நேரம் அமர்ந்து பாடத்தை ஒரே தடவையாகப் படிப்பதை விட இரண்டு தடவை விட்டு விட்டு படிப்பதே மிகவும் பயனுள்ள முறையாகும். நாம் இடைவேளை எடுக்கும் போது எமது மனம் ஆறுதலடைவதோடு படித்தவற்றை சிந்திக்கவும் தூண்டுகின்றது. பாடத்தைப் பற்றி ஒன்றுமே புரிந்து கொள்ளாமல் படித்ததால் அதை மனப்பாடம் செய்யமுடியாது.

## தெளிவாய் இருக்க வேண்டும் :

நாம் கற்ற விடயங்கள் தெளிவாய் மனதில் இருந்தால் தான் ஞாபகம் இருக்கும். தெளிவு, பயிற்சி, சொல்லிப் பார்த்தல், சிந்தித்தல், இவையெல்லாம் நினைவில் வைப்பதற்கு உதவுபவை. கற்கும் பொருளில் தெளிவு இல்லாமல் கற்பது படிக்கும் போது மனதிற்கு சலிப்புத் தன்மையை தோற்றுவித்து வெறுப்பை உண்டாக்கி மறதி ஏற்படும். தெளிவான உள்ளத்தோடு படித்தால் மறதி ஏற்படாது.

## படிப்பு பழக்கம் இருக்க வேண்டும் :

பழக்கம் நல்ல பழக்கம், தீய பழக்கம் என இரண்டு வகைப்படும். இதனோடு உடற்செயலைச் சார்ந்து பழக்கம், மனச் செயலைச் சார்ந்த பழக்கம் என்பன உண்டு. படிப்பின் நோக்கத்தையும் பலனையும் புரிந்து கொண்டு கவனம் செலுத்திப் படிப்பதைப் பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். நாம் நாளாந்தம் படிப்பதை எமது உடல் உளத்தால் பழக்கமாக்கிக் கொண்டு கவனிப்பு என்னும் நற்பழக்கம் தேர்வில் மட்டும் இன்றி வாழ்க்கையிலும் வெற்றியைத் தரும்.

## உறுதியான மனத்தன்மை இருக்கவேண்டும் :

நாம் படிப்பது பரீட்சையில் சித்தி பெறுவதற்குத் தான் என்பதனை அறிய வேண்டும். எம்முடைய மனதில் உறுதியான தன்மை ஏற்படாவிட்டால் பயம் ஏற்பட்டு பரீட்சையில் தோல்வியடைய வாய்ப்பு உள்ளது. படிப்பில் மட்டுமல்ல எந்த விடயத்தில் உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும்.

**ஆசிரியரை மதிக்க வேண்டும் :**

ஆசிரியர்கள் ஆண்டாண்டு காலமாக போற்றப்பட வேண்டியவர்கள். அவருடைய வாயிலிருந்து வரும் மொழி கல்வியாக மாறுவதினால் அவரை மதிக்க வேண்டும். நம்மைவிட படிப்பவர்கள் ஆசிரியர்கள். அவர்கள் கூறுவதைக் கேட்க வேண்டும். இதனையே கற்றலில் கேட்பது நன்று என்று கூறப்படுகின்றது. ஆசிரியர் போதிப்பதைக் கவனமாகக் கேட்டால் சந்தேகம் ஏற்படாது. சந்தேகம் ஏற்பட்டால் ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

**சரியான விடை எழுத வேண்டும்.**

நாம் படிப்பவர்கள் எமது வேலை தகுந்த பாடத்தைப் படிப்பது. அதற்கிணங்க படித்தவற்றை கேட்கப்பட்ட வினாவிற்குச் சரியான அல்லது பொருத்தமான விடைகளையும் ஆசிரியருக்கு மகிழ்வூட்டக் கூடிய விடைகளையும் தெளிவாக அளிக்க வேண்டும். சரியான விடையை எழுதுதல், திருத்தமாக எழுதுதல், தெளிவாயும், அழகாகவும் எழுதுதல் விடைத்தாளை திருத்துவோரின் உள்ளத்தில் நல்ல எண்ணத்தை உருவாக்கும்.

**பரீட்சையில் வெற்றி :**

நாம் படித்தவற்றை அளவிடும் சட்டமே பரீட்சையாகும். நாம் படித்த பாடங்கள் எந்த அளவு உள்ளத்தில் இருக்கிறது என்பதனை அறிவதுதான் பரீட்சையாகும். நாம் பரீட்சையில் வெற்றி பெற முடியும் என்ற திடசித்தத்துடனும் உண்மையான உழைப்புடனும் செயலில் இறங்கினால் எப்பொழுதும் தோல்வி அடையமாட்டோம். நாம் மேற்கூறிய அனைத்தையும் கடைப்பிடித்து உண்மையான நம்பிக்கையோடு இருந்தால் பரீட்சையில் மட்டுமல்ல அனைத்து விடயங்களிலும் வெற்றி பெறலாம் என்பது உண்மையாகும்.



ஆக்கம் : M. அகிலேஸ்வரன்
(நூலக உதவியாளர்)

# எதிலும் வெல்ல . . .



- மிக அதிகமாக உணவு உண்ணாதீர்கள்.
- பட்டினி கிடக்காதீர்கள்.
- அதிக நேரம் உறங்காதீர்கள்.
- மிகக் குறைவாகவும் உறங்காதீர்கள்.
- பொறாமை கொள்ளாதீர்கள்.
- சந்தோஷமும் சஞ்சலமும் வெற்றியின் எதிரிகள். அவற்றை விரட்டி விடுங்கள்.
- சோம்பலை ஒழியுங்கள். உற்சாகமாக செயலாற்றுங்கள்.
- பேராசை கொள்ளாதீர்கள்.
- உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருங்கள்.
- முயற்சி செய்யுங்கள். இலக்கோடு பணிபுரியுங்கள்.
- நல்லவற்றையே நினையுங்கள். நல்லதை செய்யுங்கள்.

# இலங்கையின் இராசதானிகளில் முக்கியமான ஆட்சியாளர்கள்

**அனுராதபுர இராசதானி (கி.மு. 237 - கி.பி. 1017)**

1) பண்டுகாபயன்
2) மூத்தசிவன்
3) தேவநம்பியதிஸ்ஸ
4) உத்திய
5) மகாசிவன்
6) சூரதிஸ்ஸ
7) சேனன்குத்திகன் (தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர்கள்)
8) அசேலன்
9) எல்லாளன் (தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர்கள்)
10) துட்டகைமுனு
11) மகாரத்தக்க
12) கல்லாடநாகன்
13) வலகம்பா
14) தென்னிந்தியப் படைகளின் ஆட்சி (14 வருடம், பனையமாறன் பின்னயமாறன்)
15) வலகம்பா
16) வசபன்
17) மகாசேனன்
18) தாதுசேனன்
19) காசியப்பன்
20) முகலன்
21) மித்சேனன்
22) தென்னிந்தியப் படையெடுப்பு (தாடிகன், பீடீகன். புத்தபாசிந்த, 27 வருடம்)
23) 1ம் அக்போ
24) 2ம் அக்போ
25) 4ம் மகிந்தன் (இவனது ஆட்சியில் 3ம் கிருஸ்ணன் படையெடுத்து தோல்வி கண்டான்)
26) 5ம் மகிந்தன் (1ம் இராஜேந்திரன் படையெடுத்து 1017 - 1070 வரை ஆட்சி செய்தான்.

**பொலனறுவை இராசதானி (கி.பி. 1070 - 1215)**

1) 1ம் விஜயபாகு கி.பி. 1070
2) 1ம் பராக்கிரமபாகு
3) நிஸங்கமல்லன்
4) லீலாவதி
5) கல்யாணவதி
6) பராக்கிரம பாண்டியன் கி.பி. 1215

**தம்பதெனியா இராசதானி (கி.பி. 1233 - 1270)**

1) 3ம் விஜயபாகு
2) 2ம் பராக்கிரமபாகு
3) 4ம் விஜயபாகு
4) 1ம் புவனேகபாகு

**யாப்பகூவ இராசதானி (கி.பி. 1270 - 1300)**

1) 1ம் புவனேகபாகு
2) 3ம் பராக்கிரமபாகு
3) 2ம் புவனேகபாகு

## குருணாகல் இராசதானி (கி.பி. 1300 - 1341)

1) 2ம் புவனேகபாகு
2) 4ம் பராக்கிரமபாகு
3) 3ம் புவனேகபாகு
4) சவுலுவிஜயபாகு

## கம்பளை இராசதானி (கி.பி. 1341 - 1415)

1) 4ம் புவனேகபாகு
2) 5ம் பராக்கிரமபாகு
3) 3ம் விக்கிரமபாகு
4) வீரபாகு
5) வீரஅழகேஸ்வரன்
6) பராக்கிரம ஏபா

## கோட்டை இராசதானி (கி.பி. 1415 - 1597)

1) 6ம் பராக்கிரமபாகு
2) ஜயபாகு
3) 6ம் புவனேகபாகு (செண்பகப்பெருமாள் / சப்புமல்குமார)
4) 7ம் பராக்கிரமபாகு
5) 8ம் வீரபராக்கிரமபாகு (அம்புலுகல குமாரய)
6) 9ம் தர்மபராக்கிரமபாகு
7) 6ம் விஜயபாகு
8) 7ம் புவனேகபாகு
9) தர்மபாலன்

## யாழ்ப்பாண இராசதானி (கி.பி. 1261 - 1621)

1) 12 ஆரியர்களின் சக்கரவர்த்திகள் ஆட்சி
2) பரராஜசேகரன்
3) 1ம் சங்கிலி
4) பெரியபிள்ளை
5) புவராஜபண்டாரம்
6) எதிர்மன்னன்சிங்கம்
7) 2ம் சங்கிலி

## கண்டி இராச்சியம் (கி.பி. 1469 - 1815)

1) சேனாசம்மத விக்கிரமபாகு
2) ஜெயவீரபண்டார
3) கரலியத்த பண்டார
4) யமசிங்க பண்டார
5) 1ம் விமலதர்மசூரியன் (கோணப்புபண்டார)
6) செனரத்
7) 2ம் இராஜசிங்கன்
8) 2ம் விமலதர்ம சூர்ய
9) வீரபராக்கிரம நரேந்திரசிங்கன்
10) சிறி விஜயராஜசிங்கன்
11) சிறி கீர்த்தி சிறி இராஜாதி இராஜசிங்கன்
12) சிறி இராஜாதி இராஜசிங்கன்
13) விக்கிரம இராஜசிங்கன்

1521ல் 6ம் விஜயபாகுவின் ஆட்சியில் விஜயபாகு கொள்ளை இதன் காரணமாக கோட்டை 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டது.

1) கோட்டை

ஆட்சியாளன் : 7ம் புவனேகபாகு
தர்மபாலன்

2) சீதாவாக்கை :

ஆட்சியாளன் : மாயாதுன்ன
1ம் இராஜசிங்க (பண்டார)

3) றைகம

ஆட்சியாளன் : மத்துமபண்டார (றைகம பண்டார)

தொகுப்பு : வி. வசீகரன்

# கலை

கலை என்பது காலத்திற்குக் காலம் தன் பரப்பை விஸ்தரித்துக்கொண்டு செல்லும் இயல்புடையது. இது மட்டுமன்றி தன் எல்லைகளையும் மாற்றியமைக்கும் தன்மைகொண்டது. உதாரணமாக விளையாட்டு எனும் சொல் எவ்வாறு பல விதமான விளையாட்டுக்களை உள்ளடக்கிய பொதுச் சொல்லாக இருக்கின்றதோ, அதே போல கலை எனும் பதமும் பல்வேறு வடிவங்களை உள்ளடக்கும் ஒரு பொதுச் சொல்லாகும். கலை எனும் சொல் **"கலா"** எனும் சமஸ்கிருத வினையடியிலிருந்து தோற்றம் பெற்றது என்பர். கலை என்றால் என்ன என்பதற்குக் கிரேக்ககாலம் தொடக்கம் தற்காலம் வரை அறிஞர்கள் பல கருத்துக்களை முன் வைத்தனர். இவர்கள் கூறிய வரையறைகளை நோக்கும் போது அவற்றில் கருத்து முரண்பாடுகள் தெளிவின்மை போன்ற அம்சங்கள் இடம்பெறுவதை அவதானிக்கலாம்.

டோல்ஸ் ரோய் எனும் அறிஞர் **"மனித செயல்களில் ஒன்று ஒருவன் தான் அனுபவித்த உணர்வுகளை சில வெளிக்குறிப்புக்கள் மூலம் பிறருக்கு வெளியிட்டு அவர்களுக்கும் அந்த உணர்ச்சிகள் பரவி அவர்களும் அவனைப் போல் அனுபவித்தால் அது கலையாகும்"** எனக் கூறுகின்றார்.

R.G. கொலின்வூட் என்பவர் **"கலை என்பது மனித உணர்வுகளின் வெளிப்பாடே ஆகும்"** என்கிறார்.

அரவிந்தர் என்பவர் **"அழகைக் கண்டுபிடித்தலும் அதனை வெளிப்படுத்தலும் கலை"** எனக் கூறுகின்றார்.

எரிக் நியூட்டன் என்பவர் **"தான் பெறுகின்ற அனுபவத்தை பிறரும் அனுபவிப்பதே கலை"** எனக் கூறுகிறார்.

கொலிங்டன் என்பவர் **"கலை என்பது ஒரு உணர்வினை அனுபவத்தை வெளிப்படுத்துவதிலும் தொடர்புபடுத்துவதிலும் மனித திறன் வெளிப்படுத்தும் ஒரு முறையாகும்"** என வரைவிலக்கணப்படுத்துகின்றார்.

நெல்சன் குட்மன் என்பவர் கலையென்றால் என்ன என்று கேட்கும் வினா பொருத்தமற்றது என்கிறார். **"மாறாக ஒரு பொருள் எப்பொழுது கலையாகின்றது எனக் கேட்கும் வினாவே பொருத்தமுடையது"** எனக் கூறுகின்றார். இவர் கலை என்றால் என்ன என்பதற்கு பின்வரும் தகுதிகளை வரையறையாகக் கூறுகின்றார்.



1) மனிதனால் படைக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.
2) கற்பனைத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.
3) மீள் உருவாக்கம் செய்ய முடியாததாக இருக்க வேண்டும்.
4) கருத்து வெளிப்பாடு, புதியனவற்றை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

அடுத்ததாக பெரேரிகாட் என்பவர் **"மனிதத்திறன் தான் கலை"** எனக் கூறுகின்றார்.

எனவே ஒரு வகையில் கலை என்பது ஒரு மீள் உருவாக்கம் செய்ய முடியாதவை தான். அதாவது அனுபவத்தின் புற உருவாக்கம். அதாவது புற வாழ்க்கையில் பெறப்பட்ட அனுபவங்கள் அகத்தினுள் ஏற்படுத்திய அனுபவத்தின் உருவாக்கமே கலையாகும். மனித அனுபவம் மீளப்பெற முடியாதது.

இயற்கையில் காணப்படும் எல்லாம் கலையில்லை. அத்துடன் மனித முயற்சியினால் உருவாவதெல்லாம் கலையும் அல்ல. அத்துடன் மனித முயற்சியினாலேயே கலையும் கைவினையும் உருவாகின்றன. இதனால் மனிதத் திறத்தின் மூலம் உருவாவதெல்லாம் கலையா? என வினா எழுப்பும்போது அதற்கு விடையாக இல்லை எனப்படுகிறது.

கலைக்கு உள்ளடக்கம் காணப்படுகிறது. உள்ளடக்கம் கருத்துப்பரிமாற்றல் செய்கிறது. ஆகவே கலை என்றால் மனித முயற்சியின் அடிப்படையில் உருவாவது எனக் கூறப்படுகிறது. கலையின் குணாதிசயங்களாக ஒழுங்கு, உணர்வு, அழகு என்பன காணப்படுகின்றன. கலையில் உருவமும், உள்ளடக்கமும் முக்கியம் பெறுகின்றன. உருவம் ஊடகத்தின் அடிப்படையில் மாறுபடும் கலையானது செய்திப்பரிமாற்றம் கருத்துப் பரிமாற்றம் ஆகியவற்றைச் செய்கிறது. ஓவியத்தில் இதற்கு உதவியாக ஓவியமொழிகள் காணப்படுகிறன.

கலைகளை நுண்கலைகள், பயன்பாட்டுக் கலைகள் எனப்பாகுபாடு செய்யலாம். இவ்விதம்

பாகுபடுத்தப்பட்டாலும் அவற்றைக் கோடு கிழித்துப் பார்ப்பதற்கு வித்தியாசங்கள் மிக அருமையாகவே உள்ளன. ஏனெனில் நுண்கலைகள் பயன்பாடு அற்ற கலைகளல்ல. சிற்பமும், நடனமும் இன்னும் பிற கலைகளும் தமக்கேயான பல பயன்பாடுகளை கொண்டுள்ளன. அதே போலவே பயன்பாட்டுக் கலைகள் அழகற்றனவா? எல்லா பயன்பாட்டுக்கலைகளும் அழகற்றன எனக் கூறமுடியாது. எனவே பயன்பாட்டுக்கலை நுண்கலை எனப் பிரித்துப்பார்ப்பது கஷ்டமான அம்சமாகும். இவற்றைவிட கைவினைகள், கலைகள் எனப் பாகுபடுத்திக் கூறுவது பொருத்தமானதாகும். இங்கு கூட கைவினையையும் நுண்கலையையும் மிக மெல்லிய திரைதான் பிரிக்கின்றது.

எவ்வாறாயினும் கைவினை மீள் உருவாக்கம் செய்யக்கூடியது. பயன்பாட்டுக்கலை என்பது பயன்படுத்தல் எனும் நிலைப்பாட்டை முதன்மைப்படுத்தியது. அது அழகியல் அம்சத்தைவிட பயன்பாட்டிற்கு முதலிடம் கொடுக்கும் பயன்பாட்டை விட அழகியலிற்கு முதலிடம் கொடுப்பதால் நுண்கலை எனக் கூறும் போக்கும் உண்டு. அது உயர்மட்ட ஸ்தானத்தைக் கொண்டது. நுண்கலையில் நுண்மைத் தன்மை தாராளமாக இருக்கும். அழகியல் வெளிப்பாடு முதன்மை நோக்கமாகக் கொள்ளப்படுவதுடன் ஏனைய இலட்சியங்கள் இரண்டாவதாகக் காணப்படும்.

சாதாரணமாக கலைகளை அனுபவித்துப் பெறும் இன்பத்தைவிட நுண்கலை வடிவத்தினால் பெறும் பயன் நிச்சயமாக உயர்ந்ததாகும். இங்கு ஏதோ ஒரு வகையில் ரசிகனைத் தொடர்ந்து ஈர்க்கச் செய்து சிறந்த ஓர் கலை அனுபவத்தை அவனுக்கு கையளிக்கும் சக்தி வாய்ந்தனவே நுண்கலைகள் ஆகும்.

நுண்கலையாக்கத்தில் ஆக்குபவர் தனது கற்பனை வளத்தை அதன் வழிப்பட்டுவரும் உள்ளடக்கத்தை அதனூடாகச் செய்யப்பட்ட / பெறப்பட்ட அழகினை முதன்மைப்படுத்தியிருப்பர். பொதுவாக கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், இலக்கியம் என்பவை நுண்கலை வடிவங்களாக கொள்ளப்படும். சிற்பம், ஓவியம், நடனம், இசை என்பன சாஸ்திர ரீதியான விதிமுறைக்குட்பட்டதாகக் கூறப்படுகின்றன. இது மட்டுமன்றி உயர் மரபுக் கலையாகவும் கொள்ளப்படுகின்றது. இவையே நுண்கலைகளெனும் பதப்பிரயோகத்தினுள் அடங்குகின்றன. எனவே நுண்ணியதாக, உயர்தரமானதாக, தெளிவானவையாக, மென்மையானவையாக பளிச்செனப் புலப்படும் வகையில் அழகாக உணர்ச்சிகளை வெளிப்படுத்துவனவாக இருப்பவைகளே நுண்கலைகளாகும்.

நுண்கலைகளின் சிறப்பான இயல்புகளை நோக்கும்போது அதன் முக்கிய அம்சமாகக் காணப்படுவது மீள் உருவாக்கம் செய்யமுடியாத தன்மையாகும். உதாரணமாக டாவின்சியின் ஓவியம் போன்று வேறொருவர் வரைய முடியாது. அதே நேரம் அவ் ஓவியத்தை வரைந்த அதே கலைஞனாலும் கூட மீண்டும் அவ் ஓவியம் போல் வரைய முடியாது. காரணம் அனுபவம் கற்பனை கணத்துக்கு கணம் மாறும். நுண்கலைகளில் அடுத்த சிறப்பம்சமாக காணப்படுவது உருவம். உள்ளடக்கம் கொண்டு விளங்கும் தன்மையாகும். எடுத்துக்காட்டாக ஓவியத்தின் வடிவத்தை கோடுகள், வர்ணங்கள், கோலங்கள் போன்றவற்றைக் கொண்டு அறியமுடியும். அதனூடே வைக்கப்பட்ட செய்தியையும் அது கொண்டிருக்கும். இதுபோன்று நாடகத்தை எடுத்துக்கொண்டால் மேடை நடிப்பு, அசைவு என்பவற்றின் மூலம் அதனூடு பொதிந்துள்ள செய்தி சபையோருக்கு வெளிப்படும்.

நுண்கலைகள் தொடர்பாடல் சாதனங்களாக இருக்கும் தன்மை கொண்டவை. உதாணரமாக ஓவியம், திரைப்படம் என்பவை அவை செய்தியை பார்ப்போருக்குக் கூறும் சாதனங்களாகும். இது அடுத்த சிறப்பு குறியீட்டு மொழியாகும். ஓவியத்தில் குறியீட்டு மொழியாக்கம், அதன் வர்ணம், கோடு, தளம் என்பனவாகும். அறிவு மட்டுமல்லாது அழகியல் வெளிப்பாட்டுத் தன்மையோடு காணப்படுவது இன்னோர் தன்மையாகும். ஓர் இலக்கியத்தைப் படிக்கும் போது அறிவு ரீதியான செய்தி மட்டுமே புலப்படும். அவ் இலக்கியக்காட்சி கலை ஓவியத்தினூடு வெளிப்படுத்தும் போது அழகியலோடு அறிவும் இணைந்து விளங்கும் தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது.

நுண்கலையில் கற்பனைத் தன்மை முக்கிய இடம்பெறுகின்றது. ஒரு கலைஞன் ஒரு கலைப்படைப்பை படைக்கும்போது அப்படைப்பு மீள் உருவாக்கம் செய்யப்பட முடியாது. காரணம் அக்கலைஞனின் கற்பனைத் தன்மையாகும். நுண்கலை உயிர்த்துடிப்பு உள்ளதாக அமைய வேண்டுமாயின் கலை ஈடுபாடு அனுபவம் கற்பனைத் தன்மை என்பன காணப்பட வேண்டும்.

எனவே தொகுத்து நோக்கும் பொழுது கலை என்பது மனிதமுயற்சியின் அடிப்படையில் உருவாவதும் மீள் உருவாக்கம் செய்யமுடியாதவையாகவும் காணப்படுகிறது. இவ்வாறாக நாம் கலை எனப்படுகின்ற எண்ணக்கருவைத் தெளிவுபடுத்தலாம்.

**ஆக்கம் : சி. கதாரதன்** (ஆசிரியர்)
மட்/சிவாநந்த தேசிய பாடாசலை

# விடுகதைகள்

1) எரிப்பான் ஆனால் எரியாதவன் அவன் யார்? சூரியன்
2) ஒலி கொடுத்தால் பதில் கிடைக்கும் அது என்ன? தொலைபேசி
3) சூடுபட்டவன் கட்ட உதவுகிறான் அவன் யார்? செங்கல்
4) இரவெல்லாம் பூக்காடு பகலெல்லாம் வெறுங்காடு அது எது? வானம்
5) வேகாத வெயிலில் வெள்ளையவன் விளைகிறான் அவன் யார்? உப்பு
6) நாலுமூலை பெட்டி நடுவே ஓடும் குதிரைக் குட்டி அது என்ன? அம்மி, குழவி
7) உண்ணாமலே வளர்வான் நோயில்லாமலே இளைப்பான் அவன் யார்? நிலா
8) செய்வதை திரும்பச் செய்யும் குரங்கல்ல, சிங்காரிக்க உதவும் சீப்புமல்ல அது என்ன? கண்ணாடி
9) அருகருகே அண்ணன் தம்பி ஆனாலும் ஆயுள் வரை சேரமாட்டார்கள் அவர்கள் யார்? மின்சாரம்
10) ஆயிரம் பேர்கள் அணிவகுத்துப் போனாலும் வந்த சுவடு தெரியாது அவர்கள் யார்? எறும்பு
11) இரட்டையாகப் பிறந்தவர்கள் ஒருத்தி மேலே ஏறினால் மற்றையவள் கீழே இறங்குவாள் அவர்கள் யார்? தராசு
12) இனிப்பு பொட்டலத்திற்கு எண்ணாயிரம் பாதுகாவலர்கள் அது என்ன? தேன்கூடு
13) இரவு பகல் விழித்திருக்கும் எப்போதும் ஒலிந்திருக்கும் அது என்ன? இதயம்

**தொகுப்பு : சு. விதுஷன்**
தரம் 9K

# *சிரிப்புகளின் வகைகள்*




1) தற்பெருமையோடு சிரிப்பவன் - கோழை
2) வெற்றியோடு சிரிப்பவன் - வீரன்
3) தெரியாது சிரிப்பவன் - நடிகன்
4) துன்பத்தில் சிரிப்பவன் - மனிதத்தன்மை உள்ளவன்
5) கண்ணடித்து சிரிப்பவன் - கபடன்
6) நல்ல நினைவோடு சிரிப்பவன் - அறிவாளி
7) கோபத்தில் சிரிப்பவன் - சிந்தனைவாதி
8) கொடுக்கும் போது சிரிப்பவன் - சூழ்ச்சிக்காரன்
9) கற்பனையில் சிரிப்பவன் - கஞ்சன்
10) இன்பத்தில் சிரிப்பவன் - ஏமாளி
11) இடம் பார்த்துச் சிரிப்பவன் - எத்தன்
12) ஓட விட்டுச் சிரிப்பவன் - வஞ்சகன்
13) ஓயாமல் சிரிப்பவன் - பைத்தியகாரன்



**ஆக்கம் : க.விதுசன்**
தரம் 3

# இரைப்பை அழற்சி

இன்றைய காலகட்டத்தில் நாம் அனைவரும் இந்த இரைப்பை அழற்சி நோயாகியுள்ளோம். அதுமட்டுமன்றி எவரும் இதைப் பற்றிய தெளிவின்றி தாங்களே தங்களுக்கான வருத்தத்தை ஏற்படுத்துகிறோம்.

தினமும் நாம் உண்ணும் உணவை சமீபாடடைய செய்வதற்காக 2*l* HCl (Hydrochloric acid) என்னும் அமிலம் உதரசாற்றில் உண்டாகிறது. நாம் உணவை எடுக்கும்போது அது ஐதாக்கப்படுகிறது. அதாவது இரைப்பையின் உட்புற சுவரில் ஒரு சளியடை காணப்படுவதாலும் நொதியங்கள் உயிர்ப்பற்ற நிலையில் சுரக்கப்படுவதாலும் சுவர் HCl ஆல் பாதிக்கப்படுதல் தடுக்கப்படும். இவ்வாறு இல்லாமல் உதர சுரப்பி தூண்டப்பட்டு மேலதிக HCl சுரக்கப்படுவதன் காரணமாகவே சளியபடை பாதிக்கப்பட்டு இரைப்பை சுவரில் காயம் அல்லது புண்கள் தோன்றுவதே இரைப்பை அழற்சி எனப்படும்.

**பின்வரும் செயன்முறைகளால் மேலதிக HCl சுரத்தல் நடைபெற்று அல்சர் உண்டாகிறது.**

- காலை உணவை நாம் வேளைக்கு உட்கொள்ளாமை இதில் முக்கியபங்கு வகிக்கிறது.
- Alcohol பருகுதல்.
- உணர்ச்சிவசப்படுதல், கோபம், கவலை போன்றவை (உளரீதியான காரணிகளால்).
- விரதம் மூலம் நீண்ட கால பட்டினி.
- கசநோய், சிபிலிசு போன்ற நோய்களால் பீடிக்கப்படுத்தல் போன்றவை சில உதாரணமாகும்.

**இதிலிருந்து நாம் தப்பிப்பதற்கு பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.**

- காலை எழுந்தவுடன் நீர் பருகி இரைப்பையில் உள்ள உதரச் சாற்றை (HCl) ஐதாக்கல் வேண்டும்.
- உரிய வேளையில் காலை உணவை உண்ணல்.
- மது அருந்தலை நிறுத்தல்.
- காலையுணவை தினமும் தவிர்ப்பதை நிறுத்தல்.
- கவலையை மறக்க பொழுது போக்குகளில் ஈடுபடவேண்டும்.

**குறிப்பு :** நாம் தினமும் நன்றாக நீர் அருந்துவதன் மூலம் எமது உடலை பல நோய்களில் இருந்து பாதுகாக்கலாம். தினமும் குறைந்தது 2*l* நீர் பருக வேண்டும்.

**ஆக்கம் : வ. இனோஜன்**
தரம் 13 (விஞ்ஞானம்)

# கவிதை



பழமரம் நடுவோம்
பலன் பல பெறுவோம்
உடல் பலம் பெறுவோம்
உற்சாகமாய் திரிவோம்
நோயின்றி நாமும் நாளும்
வளமான வாழ்வு வாழ்வோம்.

**ஆக்கம் : ம. நரேஸ்மன்**
தரம் 1K

## நிலவொளி வீசுதே

கருநிறம் சூழ்ந்த இரவினிலே
கண்ணின் மணிகள் உறங்கையிலே
அமைதி எங்கும் நிலவையிலே
வண்ணப்பூக்கள் எல்லாம் வாடயிலே
மக்கள் கனவில் வாழயிலே
சூரியவெப்பம் தணிகையிலே
நிலவொளி வீசுதே.



நிலவொளி வீசுதே
மனதெலாம் குளிருதே
காரிருள் விலகுதே
அமைதி எங்கும் நிலவுதே
மழலை அழுகை கேட்குதே – அதனுடன்
தாயின் தாலாட்டும் கேட்குதே – அந்த
இன்னிசையில் அயலவர் கண்கள்
மயக்கத்தில் மௌனமாய் உறங்குதே.

அம்மா காட்டி சோறூட்டும் போது – இந்நிலவு
உன் கண்ணிற்குள் வந்தது
அப்பா காட்டி நீ ரசிக்கும் போது – இந்நிலவு
உன் மனதிற்குள் வந்தது
அக்கா காட்டி ஔவையைப் பார்த்த போது – இந்நிலவு
உன் அறிவிற்குள் வந்தது – இன்று
தனியே நீ ரசிக்கும் போது
உன் கண்ணில் நீர் வந்தது.

**ஆக்கம் : மு. ஆதித்தன்**
கலை (2014 பிரிவு)

## நூலகம்

நல்ல நல்ல நூல்களாம்
நமது சிறந்த நண்பராம்
அல்லும் பகலும் அவற்றையே
அறிந்து கற்றல் நல்லதாம்

கல்வி தன்னில் சிறந்திட
கலைகள் பலவும் அறிந்திட
நல்ல நூல்கள் உதவிடும்
நாளும் கற்று உயருவோம்!



பல நூறு நூல்களை
நூலகத்தில் காணலாம்
ஆசை தீரப் படிக்கலாம்!
அறிவு பெற்று வளரலாம்

நல்ல நூல்களைப் படித்திட
நமக்கு உதவும் நூலகம்
நாமும் நூல்கள் படித்திட
நாடிச் செல்வோம் நூலகம்.

**ஆக்கம் : க. கொவீதா** (ஆசிரியை)
மட்/சிவாநந்த வித்தியாலயம்

## ஏழை மனிதன்

கூட்டுக்குள் இருக்கும் கிளி போல
கூலியாக இருக்கும் ஏழைகளே
சிந்திக்க முடியவில்லையா உங்களுக்கு
வீண் செலவு செய்வது எதற்கென்று

மரத்திற்கு நீர் ஊற்றுவதுபோல
முதலாளி முன் பணம் கொடுப்பது அதற்கு
காய்ப்பது மரத்திற்குச் சொந்த மில்லை
நீ உழைப்பது உனக்குச் சொந்தமில்லை.



அழுக்கான சுரிக்குள் இருந்து
அழகான தாமரை வெளியே மலரும் போது
மனிதா உன் வறுமையில் இருந்து
நீ ஏன் வெளியேற முடியாது

விழித்திரு விழித்திரு மனிதா
நீ விழித்தெழுந்தால் ஏழைஇல்லை மனிதா
உழைத்திடு உழைத்திடு மனிதா
உன் உழைப்பால் உயர்ந்திடுவாய் மனிதா!

**ஆக்கம் : உ. பவித்திரன்** - தரம் $9^R$

# ENVIRONMENTAL POLLUTION

The environment has drawn the attention of all the scientists and environmentalists of the world today. Special branches of study and research have been set up protect the environment from pollution. Pollution of the environment arises chiefly from heavy industrialization and other human activities. Such pollution renders the environment unsuitable and dangerous for human habitation. Therefore it is necessary to take remedial measures to conserve our environment from pollution.

In Sri Lanka the government has set up separate ministry to deal with environment and pollution. It is the duty of each one of us to keep our environmet clean and free from pollution. Our atmosphere land and water have to be maintained free from pollution. Global warming is an important environmental issue in the world at present. It is caused due to the increasing amount of carbondioxide in the atmosphere.We could observe many environmental impacts such as drought for a long period, heavy raining etc., due to global warming.

Batticaloa is famous for singing fish. We have a beautiful lagoon. Unfortunately, the lagoon is polluted by dumping of garbage. Aquatic organisms as well as human beings are affected due to this activity.

Healthy growth and free from diseases requires a healthy environment. Therefore, it is necessary to preserve our environment from pollution.

*By* : **S.Charan**
Grade 8M

# Love

Love is a gentle caring.
a quiet concern
deeply hidden in the heart
A presence always felt
everybody, every minute, every hour
love is a gentle embrace
between body and soul
A quiet fresh of the hand
a soft hug by warm arms
a coreness of two souls
love is a great passion
between hungry hearts
The intimate exchange
between mind, body and soul
have is always caring
always growing
always being there
love is a wonderful gift
shared by two blessed souls
experiencing heaven on earth.

*By* : **R. Hemaraj**
Grade 11R



# பிள்ளைகளின் ஆளுமையை வளர்ப்பதற்கான நுட்பங்கள் சில . . .



- ☺ சிறு பிள்ளைகள் தவறிழைக்கும்போது பழிப்பதை / அவமானப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- ☺ சிறுவர்களுக்கு தொடர்ச்சியாக இம்சை கொடுப்பதை விட்டுவிடுங்கள்.
- ☺ மாணவர்களுக்கு அடிக்கடி கசப்பான அல்லது மனதை உறுத்தும் வார்த்தைகளை உபயோகிப்பதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- ☺ ஒரு பிள்ளையைப் புறக்கணித்து, மற்றொரு பிள்ளைக்கு முக்கியம் கொடுப்பதை விட்டுவிடுங்கள்.
- ☺ ஒரு பிள்ளையைத் தனிமைப்படுத்தி, ஒதுக்கி, மனமுடையச் செய்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- ☺ பிள்ளையை நீண்டகாலம் பெற்றோரிடமிருந்து பிரித்து வைக்காதீர்கள்.
- ☺ பெற்றோர் மத்தியில் நடக்கும் பிரச்சினைகளை, முரண்பாடுகளை பிள்ளைக்கு முன் வெளிப்படுத்தாதீர்கள்.
- ☺ பிள்ளைக்கு எப்போதுமே உற்சாகமளியுங்கள்.
- ☺ உங்கள் பிள்ளைகளையே எப்போதும் புகழ்ந்து கொண்டிருப்பதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- ☺ தண்டனைகளை அதிகமாகவோ, அடிக்கடியோ கொடுப்பதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- ☺ அதிகமான ஒழுக்க நெறிகள் பிள்ளைகளைப் பாதிக்கக் கூடும். பிள்ளை தனது தவறை உணர்ந்து, திருந்த சந்தர்ப்பமளியுங்கள். தண்டனை என்பது மிகக் கடைசி முயற்சியாக இருக்கட்டும்.
- ☺ பெற்றோர் பிள்ளைகள் மேல் அதிக எதிர்பார்ப்புக்கள் வைக்காமல் அவர்களின் திறன்கள், சாதனைகள், விருப்புக்கள், வெறுப்புக்கள் என்பவற்றிற்கு உட்பட்டு யதார்த்த நிலைக்கு அமைய செயற்படவிடுங்கள். இல்லையெனில் இது அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு பாதகமாக அமையக்கூடும்.

**ஆக்கம் : செல்வி. அனிற்றா பாலசிங்கம்** (ஆசிரியை)
மட்/சிவாநந்த வித்தியாலயம்

# பாட இணைச்செயற்பாட்டில் சாரணீயம்

இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவரும் உலகைப் பற்றிய அறிவைப் பெற்றவராக இருத்தல் வேண்டும். வேகமாக மாறிவரும் உலகில் ஏற்ற வாழ்க்கையை வாழவேண்டியது அவசியம். அத்துடன் சிறந்த ஆரோக்கியத்தையும் திறமை, தன்னம்பிக்கை, அழகியல் உணர்வு போன்றவற்றையும் கொண்டிருக்க வேண்டும்.

மேலும் நல்லொழுக்கத்தையும் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ளக் கூடியவராகவும், சமூகப்பொருத்தப்பாடு உடையவராகவும் பிள்ளைகள் வளர்ச்சியடைவதற்கு சமூக விழுமியங்களுடன் கூடிய கல்வியை அளிக்க நாம்விரும்புகின்றோம்.

இதற்கு **"பாடசாலை"** எனும் சமூக நிறுவனத்தை உருவாக்கி இதனூடாக கற்றல், கற்பித்தல் நிகழ்வுகளை வழங்குகின்றோம். எனவே தற்கால மாணவருக்கு அளிக்கப்படும் கல்வி மாணவர்களின் பௌதீக வளத்தையும் மனவளத்தையும் விருத்தி செய்யக்கூடியதாக இருத்தல் அவசியம்.

பாடசாலையில் கல்வி இரு செயற்பாடுகளினூடாக வழங்கப்படுகின்றது. அதாவது

1) பாடச் செயற்பாடுகள் (Curricular Activities)
2) பாட இணைச் செயற்பாடுகள் (Co - Curricular Activities)

ஒரு பாடசாலையின் பாட இணைச்செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1) சாரணீயம்
2) விளையாட்டு உடற்பயிற்சி
3) சமய, சமூக விழாக்கள்
4) மன்றங்கள்
5) பொருட்காட்சி
6) சுற்றுலா



பாட இணைச்செயற்பாடுகளில் சாரணீயம் முக்கிய இடம்வகிக்கின்றது. வாழ்க்கை பற்றிய விரும்பத்தகுந்த மனப்பாங்குகளின் உருவாக்கம், பயிற்சி இடமாற்றம், உடல் உள செயற்பாடுகளின் கற்றல் ஆகியன தொடர்பாக நவீன உளவியலாளர்கள் வெளியிட்ட கருத்துக்களுக்கு இணங்க சாரணீயம் அமைந்துள்ளது என சாரணீயத் தந்தை **"பேடன்பவல்"** அவர்கள் கூறியுள்ளார்.

சமூகத்திற்குப் பொருத்தமான நற்பிரசைகளை உருவாக்குவதற்கு சாரணீயத்தின் அவசியத்தை கல்வியறிஞர்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

மாணவப் பருவத்திலேயே சமுதாயப் பொருத்தப்பாடுள்ள சிறந்த வாழ்க்கை முறையை மாணவர்களுக்கு சாரணீயம் வழங்குகின்றது. எனவேதான் சாரணீயம் கல்வித்துறை சார்ந்த இயக்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. சேவை மனப்பான்மை, ஒற்றுமை, குழுவுணர்வு, தலைமைத்துவப்பண்பு, கீழ்ப்பணிவு, சகிப்புத்தன்மை, முதலுதவி, நுண்ணறிவு, கலையுணர்வு போன்ற சமூகவாழ்வுக்கு அவசியமான பண்புகளை எல்லாம் சாரணீயம் வழங்குகிறது.

கல்விச் சிந்தனையாளர் யோண்டுயி அவர்களின் கல்விச்சிந்தனையின்படி அனுபவங்களை அனுபவங்களினூடாக கல்வியை வழங்குவதற்கும் கல்வியைப் பெறுவதற்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சாரணீயம் துணை நிற்கின்றது. ஏனெனில் பாடசாலை வளாகத்தினுள் மட்டுமல்லாது சமூகச் சூழல்களிலும் பிள்ளைகள் நேரடி அனுபவம் பெறுகின்றனர். எதை எப்படி எப்போது பெறலாம் என்பதை மாணவர்களுக்கு சாரணீயம் உணர்த்துகின்றது. இதற்கு வருடாவருடம் நடாத்தப்படும் **"சாரணர் வேலைவாரம்"** உதவுகிறது. எதையும் திட்டமிட்டு நடத்தும்போது வெற்றியும் உயர்வும் கிடைப்பது உறுதி.

மனிதர்களைப்பற்றியும் மனிதனுடைய பௌதீக, சமூகச் சூழல்கள் பற்றியும் அவற்றுக்கிடையே உள்ள இணைப்பையும் சாரணீயம் விளக்குவதால் மிகச்சிறந்த பொருத்தப்பாடுள்ள சாரண மாணவர்கள் உருவாக்கப்படுகின்றனர். சாரணர்கள் சமூகவாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை உணர்ந்து அவற்றுக்குரிய தீர்வுகளை கண்டுபிடிப்பதற்கு உதவியாக இருக்கின்றனர்.

அறிவும், திறனும் மட்டும் நற்பிரசைகளை உருவாக்கும் எனக் கூறமுடியாது. அறிவும், ஆற்றலும் மிக்கவர்கள் தவறான மனப்பாங்கு காரணமாக வாழ்க்கையை வீணாக்கியுள்ளனர். இதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உண்டு. எனவே கல்விச்சான்றிதழ்கள் மட்டும் சிறப்பான வாழ்வுக்குப் போதுமானதல்ல, சிறந்த மனப்பாங்கும் அவசியம். இது தொடர்பாக சாரணீயம் இளஞ்சிறார்களுக்கு செயற்பாடுகளுடன் கூடிய அறிவை வழங்குகின்றது.

சாரணீயத்தில் உள்ள சிறப்பான அம்சம் யாதெனில் வெட்டவெளி வாசமாகும். இந்த வெட்டவெளிப்பாசறை வாழ்க்கை சாரணர்களுக்கு ஒரு புத்துணர்ச்சியையும் சுதந்திரத்தையும் வழங்குகின்ற அதே நேரத்தில் கட்டுப்பாடான வாழ்க்கை முறையையும் கற்பிக்கின்றது. இதற்கு ஏற்ப சாரணர் சத்தியப்பிரமாணமும், சாரணர் விதிகளும் அமைந்துள்ளன.

**சாரணர் சத்தியப்பிரமாணம் :**

என்னால் கூடுமான வரையில் எனது சமயம், தேசம் ஆகியவற்றுக்கு என் கடமைகளைச் செய்யவும், எக்காலத்திலும் பிறருக்கு உதவிபுரியவும், சாரணர் விதிகளுக்கு பணிந்து நடக்கவும் என் கௌரவத்தின்மீது சத்தியம் செய்கின்றேன்.

**சாரணர் விதிகள் :**

1) சாரணர் நம்பத்தகுந்தவன்.
2) சாரணன் பற்றுறுதி உடையவன்.
3) சாரணன் நேரமும், மரியாதையும் உடையவன்
4) சாரணன் மற்றெந்த சாரணனுக்கும் சகோதரன்
5) சாரணன் தைரியம் உடையவன்.
6) சாரணன் பிராணிகளின் தோழன்.
7) சாரணன் ஒத்துழைப்பவன்.
8) சாரணன் மனமகிழ்ச்சியுடையவன்.
9) சாரணன் சிக்கனமானவன்.
10) சாரணன் சிந்தனை, சொல், செயல்களில் தூய்மையானவன்.



இந்த பத்து விதிகள் மூலம் சாரண சத்தியப்பிரமாணத்தினூடாகவும் உலக சாரணர்கள் அனைவரும் **"சகோதரர்கள்"** எனும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரப்படுவதால் ஒற்றுமையும், புரிந்துணர்வும், பண்பாகப்பழகும் தன்மையும் சாரண மாணவர்களுக்கு ஏற்படுகின்றது.

அத்துடன்

1) குருளைச்சாரணர்களுக்கு (Cub Scouts) (7 - 11 வயது) "இயன்றவரை திறமையாகச் செய்" எனவும்,
2) சாரணர்களுக்கு (Scouts) (11 - 18 வயது) "தயாராயிரு" எனவும்,
3) திரிசாரணர்களுக்கு (Rovers) (18 - 24 வயது) "சேவை செய்வோம்" எனவும் மகுட வாக்கியங்கள் (Mottos) உள்ளதால் எல்லா வயதினரும் எப்போதும் சாரணர்களாக தொழிற்பட முடியும்.

சாரணர்கள் எல்லோரும் **"சகோதரர்கள்"** என்ற உணர்வு ஊட்டப்பட்டு வளர்க்கப்படுவதால் இன, மத, சாதி, நிற வேறுபாடுகள் அற்ற ஒரு சமுதாயத்தை சாரணீயம் உருவாக்குகின்றது. மாணவர்கள் தனக்கும் பிறருக்கும் பிரயோசனமுள்ளவர்களாக மாற்றப்படுகின்றனர்.

அத்துடன் சாரணீயம் பாடத்திட்டத்தில் தன்னியல்பாகவே உள்ளடக்கப்பட்டுள்ள விளையாட்டு, ஆடல், பாடல், கோஷங்கள், நடிப்புகள் போன்றவற்றினால் தான் மகிழ்வும், தன்னைச் சூழ்ந்துள்ளவர்களை மகிழச்செய்யவும் கற்றுக்கொள்கின்றான். அதே நேரத்தில் வாழ்க்கைத்திறன்களும் கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கப்படுகின்றது.

அத்துடன் சாரணீயம் மாணவர்களின் கல்வியைப் பாதிக்கக்கூடியது என்ற தவறான அபிப்பிராயம் பெற்றோர்கள் மத்தியில் உள்ளது. இது முற்றிலும் தவறானது. ஏனெனில் சாரணீய இயக்கச் செயற்பாடுகள் இது தொடர்பான நிகழ்வுகள் அனைத்தும் பாடசாலைநேரம் தவிர்ந்த நேரங்களிலும் விடுமுறை காலங்களிலும் நடாத்தப்படுவதால் இத்தவறான அபிப்பிராயம் பெற்றோர்கள் மத்தியில் இருந்து அகல வேண்டும்.

எனவே பாடசாலைச்சூழலில் மட்டுமல்லாது இயற்கைச் சூழல்களிலும் அனுபவங்களையும், ஆற்றல்களையும் பெற்று சமுதாய இசைவாக்கமுள்ள நற்பிரசைகளை உருவாக்கக்கூடியது. சாரணீயத்தை ஆசிரியர்களாகிய நாம் கைக்கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய வசதிவாய்ப்புக்களை பாடசாலைகளில் உருவாக்க முன்வருதல் வேண்டும்.

சூரியன் பிறருக்கு ஒளி கொடுக்கின்றது.
காற்று பிறருக்காகவே வீசுகின்றது.
மரங்கள் கூட பிறருக்காகத்தான் வளர்ந்து.
பூத்துக், காய்த்து, பழுத்துக் குலுங்குகின்றது.
ஆனால் மனிதன் மட்டும் தனக்காக வாழ விரும்புகின்றான்.
உன் வாழ்க்கை எப்படி ? . . . .

ஆக்கம் : **திரு. க. இராசலிங்கம்** (ALT)
மட்/சிவாநந்தா தேசிய பாடாசலை

# எனது வீட்டுத்தோட்டம்

என் வீட்டுத் தோட்டம் பச்சைக் கம்பளி போன்றது
என் வீட்டுத்தோட்டத்தில் சிவப்பு ரோஜா பூத்தது
விரலு போன்ற வெண்டிக்கா மற்றும் நல்ல கத்தரிக்கா
எல்லாம் இங்கு உள்ளது மிளகாய் கூட பழுத்தது
இங்கு மாமரமும் பழுத்தது, பலாமரமும் சிரிக்குது
செலவும் இங்கு குறையுது
மனமும் இங்கே நிறையுது.

ஆக்கம் : ஏ. ரட்சகன்
தரம் 6R

# சிறந்த தென்னங் கன்று ஒன்றை முறையாக நாட்டி பாதுகாப்போம்.



## [மேல்ஆண்டு மாணவர்களுக்கானது]

| | |
|---|---|
| தென்னங் குழியின் அளவு : | கடின மண் (அடி (x 4 x 4))<br>இளகிய மண் (அடி(3 x 3 x 3) |
| குழிக்கு இடும் பசளை : | வரண்ட பிரதேசம் YPM - D கி.கி. 01, டொலமயிட் கி.கி.01<br>ஈர அல்லது இடைப்பட்ட வலயம் YPM - W கி.கி. 1.3, டொலமயிட் கி.கி. 01 |
| தென்னங் குழி நிரப்புவதற்கு தேவையானவை : | மேல் மண், பசளை, பொச்சு (உரிமட்டை) |

**குழி நிரப்பும் போது அங்கு உரிமட்டை படை இரண்டு அதன் தும்பு பகுதி மேல் இருக்கும் வண்ணம் அடுக்குக.**

| | |
|---|---|
| கறையான் அழிப்பு : | கிளோரொபயிரிபொஸ் 40 மி.லீ 10 லீ<br>(கலவை செய்த பாத்திரத்தில் கன்றின் தேங்காயை அமிழ்த்தி 5 நிமிடம் வைக்கவும்.) |
| கன்று நடுதல் : | தரை மட்டத்திலிருந்து 6" - 9" ஆழத்தில் நடுக.<br>நீர் தன்மை அமையும் தரை மட்டத்தில் நடுக.<br>தேங்காயை மண் மட்டத்தில் நடுக. |
| ஈரத் தன்மையை : | உக்கிப்போகும் பொருட்களால் கன்றைச் சுற்றிப் பத்திரக் பாதுகாப்பதற்கு கலவை இடுதல்.<br>கன்றைச் சுற்றி உரிமட்டை புதைத்தல். |
| கன்றைச் சுற்றி உரிமட்டை புதைக்கும் போது : | கன்றிலிருந்து 1 மீற்றர் (3 அடி) தூரத்தில்<br>மீற்றர் 0.6 (2 அடி) அகலம்<br>மீற்றர் 0.6 (2 அடி) ஆழம்<br>} அரைவட்டக் கா ணி ல் மட்டையை புதைக்கவும் |
| நீர் பாய்ச்சுதல்  : | 1 கன்றுக்கு 20 லீற்றர் நீர் (5 கலன் மட்டில்) கிழமைக்கு இரு தடவைகள் வரட்சிக் காலத்தில்<br>குடம் நீர் பாய்ச்சுதல்<br>கசிவு நீர் பாய்ச்சுதல் |
| முட்டி (குடம்) நீர் : | கன்றிலிருந்து 2 1/2 அடி தூரத்தில் ஒரு பக்கம் மை பூசிய 4 பாய்ச்சுதலின்போது கலன் கொள்ளளவு கொண்ட குடம் தரைக்குள் புதைக்கவும். |

### கருவண்டு தாக்கம் ஏற்படாமல்

- ❖ தென்னம் மட்டைகளுக்கு தார் அல்லது எரிந்த என்ஜின் எண்ணெய் பூசுதல்.
- ❖ குருத்துக்குள் செல்லா வண்ணம் கவனமாக செலுத்துக.
- ❖ தென்னை மட்டை உள்ளுக்குள் சுத்தமான மண் கொண்டு நிரப்புக.
- ❖ தென்னை மட்டை இடைவெளிக்குள் பூச்சி உருண்டை (கபுரு போல) இடவும்.
- ❖ காபோயியுரான் (குரேட்டர்) துணி முடிச்சு கட்டி மட்டை இடைக்குள் வைக்கவும்.

### பிலசிஸ்பா ரய்வஸ் வண்டின் தாக்கம்.

- ❖ தென்னங் கன்றின் புதிதாக வரும் குருத்திலே கபில நிறமான கருகிய பகுதிகள் தோன்றும்.
- ❖ இளம் ஓலை முழுவதும்காய்ந்த (கருகிய) பகுதிகளாகி கன்று இறக்கும். காபோசல்பான் EC 20 மி.லீ 03, நீர் லீற்றர் 01 அல்லது க்ளோரோபய்ரிபொஸ் மி.லீ 03, நீர் லீற்றர் 01 கலந்த கலவையை குருத்துப் பகுதி நன்கு நனையும் படி விசிறுக.

### கன்றுகளுக்கு பசளை இடுதல்.

பயன்தரும் கீழ்வரும் பிரமானப் படி 6 மாதங்களுக்கு 1 தடவை இடவும்.

### வயது பிரகாரம் கன்றுக்கு பசளை இடும் கிராம் அளவு.

| கன்று நாட்டிய தினத்திலிருந்து வயது | YPM- W ஈர/இடை வலயம் (கிராம்) | D ஈர/வரண்ட வலயம் (கிராம்) | டொலமையிட் (கிராம்) | கன்றிலிருந்து பசளை இடும் வட்டத்தின் அளவு (அடி) |
|---|---|---|---|---|
| 6 மாதம் | 640 | 525 | 500 | 1 |
| 1 வருடம் | 765 | 630 | 500 | 2 |
| 1 1/2 வருடம் | 765 | 630 | 500 | 2 |
| 2 வருடம் | 1020 | 840 | 500 | 3 |
| 2 1/2 வருடம் | 1020 | 840 | 500 | 3 |
| 3 வருடம் | 1275 | 1050 | 500 | 4 |
| 3 1/2 வருடம் | 1275 | 1050 | 500 | 4 |
| 4 வருடம்முதல் பயலன் தரும் வரை | 1530 | 1260 | 500 | 5 |

### பசளை இடும் முறை

மண்ணில் ஈரம் இருக்கும் போது குறிப்பிட்ட பசளை அளவு பசளை வட்டம் முழுதும் நிரம்பும் வண்ணம் விசிறவும். பின் மண்ணுடன் கலக்கவும். அத்துடன் இந்த வட்டப் பிரதேசத்தை காய்ந்த தென்னை ஓலை அல்லது உக்கும் பொருட்கள் கொண்டு நன்கு பத்திரக் கலவை இடவும்.

**தொகுப்பு : க. ரவிச்சந்திரன்**
தென்னைப் பயிர்ச்செய்கை சபை,
மட்டக்களப்பு பிராந்தியம்.

# விசேட கல்வியின் இன்றைய சமூக முக்கியத்துவம் ஒரு கல்வியியல் நோக்கு

**அறிமுகம் :**

இன்று உலகமயமாதல் (Globalization) தொடர்பாகப் பரவலாகப் பேசப்படுகிறது. உலகமயமாகி வரும் சமூகக் கோலங்கள், பண்பாட்டியல் அம்சங்கள், அரசியல் பொருளாதாரப் பூட்கைகளுக்கு நிகராகக் கல்வித்துறையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருவதனை நாம் அவதானிக்கலாம். சமூகமாற்றத்திற்கான உந்துவிசையாகத் திகழும் கல்வியானது, மறுபக்கத்தில் சமூக ஒப்புரவு, சமூக நீதி, நிலைபேறான அபிவிருத்தி, சமூகக் கட்டொருமைப்பாடு என்பவற்றுக்கும் வழிசமைக்க வேண்டியது இன்றியமையாததாகும். ஏனெனில், சனநாயகப் பண்புகளுக்கு முதன்மை வழங்கப்பட்டுவரும் சமகால உலகில் கூட, தனிநபர் வேறுபாடு, சாதியம், வர்க்கம், பால்நிலை, வயதுத்தொகுதி ஆகியவற்றின் பெயரால் உலகில் எங்காவது ஒரு மூலையில் பாரபட்சம் இழைக்கப்படுவதனைக் காண்கிறோம். இந்நிலையில், இயற்கையாகவே தனிநபர்கள் உடல், உளவளக் குறைபாடுகளுடன் பிறக்கின்றனர். இவர்களுக்கான ஒரு வரப்பிரசாதமாக அமையும் விசேட கல்வியின் (Special Education) வரலாறு, அதன் சமூக முக்கியத்துவம், உபாயங்கள், இத்துறை சார்ந்து வேண்டப்படும் சீர்திருத்தங்கள் என்பவற்றை சுருக்கமாக இக்கட்டுரையில் பரிசீலிப்போம்.

## விசேட தேவையுடைய பிள்ளைகளை இனங்காணல்:-

ஐம்புலன்களாலும் புற உலகோடு தொடர்பாடலை மேற்கொள்ளும் மனிதர்களுக்கு, இயற்கைக்கும் அப்பாற்பட்ட நிலைமையில், சில குறைபாடுகள் ஏற்படவே செய்கின்றன. பார்வைக்குறைபாடு, செவிப்புலன் இழப்பு, உடல் அங்கங்களின் இழப்பு அல்லது குறைநிலை என்பன மனித ஜீவிகளின் வாழ்வியலுக்கே பெரும் சவாலாக அமைந்து விடுகின்றன. சில குறிப்பிட்ட குழந்தைகளின் மருத்துவ வரலாற்றின் மூலம் அவர்களின் விசேட தேவை தொடர்பாக இனங்காண முடியும். தமது சமவயதுக் குழுக்கள் சார்ந்த சிறார்களுடன் ஒப்பிடும்போது பாடசாலை வேலை (School Work), தொடர்பாடல் (Communnication), நடத்தைக்கோலங்கள் (Patterns of behaviour) உணர்திறன், கிரகித்தல், வெளிப்பாட்டுத்திறன் சார்ந்து அதிகளவிலான சிரமப்பாடுகளை எதிர்கொள்ளும் சிறார்களே விசேட தேவையுடையவர்கள் என்பதாக வரையறுக்கப்படுகிறது.

இந்த வகையில் விசேட தேவை உடைய ஒரு பிள்ளை பின்வரும் விடயங்களில் அசாதாரணமான அல்லது தனித்துவமான வகையில் பிறரின் உதவிகளை நாடலாம்.

1) பாடசாலை சார் தொழிற்பாடுகள்.
2) வாசித்தல், எழுதுதல், எண்களுடன் தொடர்பான தொழிற்பாடு (Number work), மற்றும் தகவல்களை விளங்கிக்கொள்ளுதல்.
3) தம்மைத்தாமே வெளிப்படுத்தல் அல்லது பிறர் சொல்வதனைப் புரிந்து கொள்ளுதல்.
4) நண்பர்களுடன் நட்புக் கொள்ளுதல் அல்லது வளர்ந்தோருடன் உறவு கொள்ளுதல்.
5) தாம் வாழும் உலகையும், சுற்றாடலையும் விளங்கிக்கொண்டு எதிர்வினை புரிதல்.
6) பாடசாலைச் சூழலில் சீரான நடத்தையை வெளிப்படுத்துதல்.
7) தம்மைத்தாமே ஒழுங்கமைத்துக் கொள்ளுதல்.
8) அழகியல்சார் தொழிற்பாடுகளில் ஈடுபடுதல்.

## விசேட தேவைகளின் வகைப்பாடுகள் :

வளர்ந்து வரும் இன்றைய நவீன உலகில் பிள்ளைகள் தொடர்பான குறைபாடுகளும் புதிய பரிமாணங்களை எடுத்துவருவதனை அவதானிக்கலாம். அவ்வகையில், கல்வியியலாளர்களினால் பின்வரும் குறைபாடுகள் இனங்காட்டப்படுகின்றன.

1) ஓட்டிஸம் (Autism)

2) குருட்டுத்தன்மை மற்றும் கட்புலக்குறைபாடுகள். (Blind/Vision Impaired)

3) செவிப்புலக் குறைபாடு (Deaf/Hard of Hearing)

4) Down Syndrome

5) Epliepsy

6) Feeding Issues

7) மூளைவளர்ச்சிக் குறைபாடு

8) Mitochondrial Disorders

9) உணர்வு சார் குறைபாடுகள் (Sensory Disorders)

10) பேச்சு சார் குறைபாடுகள் (Speech Disorders)

பொதுக்கல்வி (General Education)யின் இயல்பு, கட்டமைப்பு, கற்பித்தல் நுட்பங்கள், பாடவிதான முறைமை என்பவற்றிலிருந்து விசேட கல்விக்குரிய முறைகளும், நுட்பங்களும் பெருமளவில் வேறானவை என்பதனையும் நாம் மனங்கொள்ளல் வேண்டும்.

## தனியார் தேவைகள் (Individual Needs):

பொதுக்கல்வியின் பால் முன்னெடுக்கப்படும் நடைமுறைகள் ஆனவை, வள ஒதுக்கீடு. மதிப்பீட்டுமுறைகள், நடத்தை, விழுமிய விருத்திச் செயற்பாடுகள் அநேகமாக கணிசமான எண்ணிக்கையை உள்ளடக்கியுள்ள ஒரு மாணவர்திரளுக்காக (Mass of the students) கூட்டாக முன்கொடுக்கப்படலாம். மாறாக, விசேட கல்வியானது ஒவ்வொரு தனியாள் மாணவனையும் விசேடமாகக் குவிமையப்படுத்த வேண்டிய கட்டாயத்தை உட்கொண்டுள்ளது. எனவே, விசேட தேவையுடன் காணப்படும் ஒவ்வொரு மாணவரது சுட்டிப்பான பலங்கள் மற்றும் பலவீனங்களையும் (Specific Strengths and weaknesses), அவர்களின் கற்றல்/கிரகித்தல் துலங்கலிலான ஸ்தானம் (placement), வளங்கள், மற்றும் இலக்குகள் என்பவை துல்லியமாக மதிப்பிடப்படுவதும் அவசியமாகிறது. இந்நிலையில், விசேட கல்வித்துறையின் கீழான பாடவிதானங்கள் கூட காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம். விசேடமான பௌதீக நலன் சார்ந்த அல்லது விசேட தேவைகளோடு இணைந்ததாக கொள்ளப்படும் தகவமைப்பு சார் உபகரணங்களின் வழங்கலும், ஆசிரியரின் கூர்மையான, தனியார் மையமிட்ட அவதானிப்பும் இம்மாணவர்கட்கு ஓரளவு பூரணமானதும், திருப்திகரமானதுமான கற்றல் சூழ்நிலையை (Learning Environment) ஏற்படுத்திக்கொடுப்பதனைச் சாத்தியப்படுத்துவதாகக் கல்வியியலாளர்கள் எடுத்துரைக்கின்றனர். உதாரணமாக, தனது கையினால் எழுத்துப் பயிற்சியை மேற்கொள்வதற்கு இயலாதிருக்கும் மாணவனுக்குப் பாடசாலை நிர்வாகமானது மடிக்கணனியை வழங்கலாம். நிதிப்பற்றாக்குறை நிலவுமிடத்து, கல்வியமைச்சு, சமூகசேவைகள் திணைக்களம், இதர தொண்டர் நிறுவனங்களின் துணையை நாடலாம்.

## விசேட கல்வி வழங்கலின் வகைப்பாடுகள்

பாடசாலைகள் விசேட கல்வி வழங்கும் நடவடிக்கை சார்ந்து பின்வரும் கட்டமைப்புகளைப் பின்பற்றலாம்.

**1) உள்ளீர்ப்பு (Inclusion)** : இவ்வணுகுமுறையின் கீழ் ஓரளவு ஏனைய பொதுநிலை மாணவரோடு ஒத்திசைந்து இயங்கத்தக்க சிறிய இடர்பாடுகளை எதிர்கொள்ளும் மாணாக்கரைக் கற்றற் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம். பாடசாலை நாளில் பொதுவகுப்பறைகளிலும் இத்தகையோரை உள்ளீர்க்கலாம். எவ்வாறாயினும், சாதாரண வகுப்பறைக்கும் அப்பாலான தீவிர கண்காணிப்புக்கும், நெகிழ்ச்சியான கற்பித்தல் நடவடிக்கைக்கும் வாய்ப்பான சிறிய விசேட வகுப்பறைகளையும் பயன்படுத்தலாம். அத்தகைய வகுப்பறைகளில் பேச்சு / மொழிப்பயிற்சிகள், உடற்பயிற்சி, மற்றும் அந்தரங்கமான உளவளத்துணையும் வழங்கலாம்.

**2) மையநீரோட்டமாக்கல் (Mainstreming) :** சாதாரண மாணவரோடு விசேட கல்வித் தேவை கொண்ட மாணவர்களையும் ஒன்று கலந்து கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு திறன் மதிப்பீட்டினை நிகழ்த்துதல்.

**3) பிரிவுபடுத்துதல் . துண்டாடல்முறை (Segregation) :** விசேட தேவை கொண்ட மாணவர்களுக்காகவே பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வகுப்பறைகள், பாடசாலைகளில் விசேடித்த நுட்பங்களின் ஊடாக கற்பித்தலை முன்னெடுத்தல். வேறு பிரிக்கப்பட்ட மாணவர்கள் ஒரே பாடசாலைக்குச் சமுகம் அளித்தாலும், தமக்கான கற்றற் பயிற்சிகளை பிரத்தியேக வகுப்பறையில் மேற்கொள்வர். இத்தகைய விசேட தேவை கொண்ட மாணவர்கள், சாதாரண மாணவர்களுடன் உணவு உட்கொள்ளல், சுற்றுப்பயணம் செய்தல், கலைச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்பவற்றின் மூலமாக சமூக ஒருங்கிசைவிற்கான (social Integration) வழிவகைகளும் இவ்வணுகுமுறையின் கீழ் நல்கப்படும்.

**4) வெளிப்போந்தநிலை** (Exclusion) : எந்தவொரு பாடசாலையிலும் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட இயலாத மாணவன் "விடுபடுதல் நிலைமையினை" எதிர்கொள்வார். வரலாற்று ரீதியில் அநேகமானவர்கள் விசேட தேவையைக்கோரி நிற்போர் - பாடசாலைக் கல்வி முறைமையினின்றும் புறமொதுக்கப்பட்டே வந்துள்ளனர். இத்தகைய மாணவர்களின் உலகளாவிய எண்ணிக்கையானது அண்ணளவாக 23 மில்லியன் என்பதாக யுனிசெப் (UNICEF) அறிக்கை மூலம் தெரியவருகிறது. இத்தகு மாணவர்களில் அநேகர் வறிய, கிராமிய, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பின்புலத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர். இத்தகைய மாணவர்கள் தனித்தனியாக அல்லது குழுநிலையில் அறிவுறுத்தப்படலாம். எனினும் இவர்களுக்கான கல்விப்போதனையானது அதிகளவு சவால்களை எதிர்கொள்வதாகவே அமையும்.

## விசேட பாடசாலைகள் - ஒரு நோக்கு

"நடத்தையியல் பிரச்சினைகள், பௌதீக / உடல்சார் இயலாமைகள் / குறைகள், கற்றல் தொடர்பான இடர்பாடுகளுடன் (Learning difficulties) காணப்படும் விசேட தேவை / உதவியை நாடி நிற்கும் மாணவர்களுக்கே உரித்தான வகையில் விசேட கல்வியை வடிவமைத்து வழங்கும் பாடசாலையே விசேட பாடசாலையாகும்". இத்தகு விசேட பாடசாலைகள், விசேட பயிற்சி பெற்ற ஆசிரிய ஆளணிகள், தகவமைப்பு சார் புதிய கற்றல் உபகரணங்கள், வளங்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். அத்துடன் தனியாள் நிலைப்பட்ட கற்பித்தலுக்கு இங்கு வாய்ப்பளிக்கப்படும். மென்பாங்கான விளையாட்டு மைதானங்கள் (soft Play ground / areas) உணர்திறன் அறைகள் (sonsory rooms), நீச்சல் தடாகங்கள், தொடுதிறனுக்கு தூண்டலான/ வாய்ப்பான பொம்மைகள், மரச்சட்டங்கள் என்பவற்றையும் இப்பாடசாலைகள் கொண்டிருக்கலாம். எனினும், இலங்கைச் சூழலில் நாம், விசேட கல்வித்துறையில் இன்னும் நெடுந்தூரம் பயணிக்க வேண்டியவர்களாகவே உள்ளோம். விசேட மாணவர்களுக்கு இயைபான கட்டிட அமைப்புகள், விசேட கற்பித்தல் நுட்பங்கள், வள ஒதுக்கீடுகள், விசேடமாகப் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரிய வளம் என்பனவெல்லாம் பற்றாக்குறையாகவே உள்ளமை கவனிக்கற்பாலது.

## போதனை உபாயங்கள் - ஒரு நோக்கு

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் முயற்சி சாமான்யமான ஒரு விடயமன்று. அது நீடித்த பொறுமை, அர்ப்பணிப்பு, ஈடுபாடு, துறைசார்புலமை, உளவியல் புலமை, ஆழமான / உண்மையான அவதானிப்பு, உள்ளார்ந்த மானுடநேயம் முதலான பல்வேறு விசேடித்த திறன்களையும், குணாம்சங்களையும் கோரி நிற்பதாகும். இம்மாணவர்களுக்கான போதனை சார் நுட்பங்களைப் பொதுவில் இருவகையாக நாம் நோக்கலாம் :

1) இருத்துதல் அல்லது இடம் வழங்குதல் (Accommodations)
2) மாற்றியமைத்தல் (Modifications)

இவற்றுள் இடம் வழங்குதல் என்பது அறிக்கைசெய்தல் (Presentation), எதிர்வினை (response), தயாரித்தல் / சீர்ப்படுத்தல் (setting), முறைப்படுத்தல் (Sheduling) என்பன சார்ந்து மேற்கொள்ளப்படும் மாற்றங்களைக் குறிப்பதாகும். பின்வரும் உதாரணங்களை நாம் மாற்றியமைத்தல் சார்ந்து முன்வைக்கலாம்.

1) ஒப்படைகளை எளிமைப்படுத்துதல்.

2) சிறிய எளிதான ஒப்படைகளை வழங்கி மதிப்பிடுதல்.

3) மேலதிக துணை உபகரணங்களைப் பயன்படுத்துதல்.

4) பாடவேளையை அதிகரித்தல்.

கீழே குறிப்பிடப்படும் எடுத்துக் காட்டுகளூடாக. இடம் வழங்கல் எனும் நுட்பத்தை விளங்கிக் கொள்ளலாம்.

1) எதிர்வினை சார்ந்த இடம் வழங்குதல் (Response accommodation) - கையெழுத்தை தவிர்த்து தட்டச்சு அல்லது கணனிப் பொறியில் ஒப்படைகளைப்பெறுதல்.

2) அறிக்கை சார் இடம்வழங்கல் - (Presentation accommodation) அச்சிடப்பட்ட வாசிப்புப் பயிற்சி நூல்களை தவிர்த்து செவிப்புல நூல்களை (Audio Books) பயன்படுத்துதல். இவ்விடத்தில் விசேட தேவை சார் மாணவர்களுக்கான செவிப்புல நூல் தயாரிப்பில் ஈடுபட்டுப்பணி புரியும் ஐக்கிய அமெரிக்க நாட்டின் Recoring Institution for the Blind and Dysiexic, USA மற்றும் ஐக்கிய இராட்சியத்தின் RNB National Libirary Service என்பவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய வசதி வாய்ப்புக்கள் நவீன கற்றல் துணை சாதனங்களின் கிடைப்பனவும், அவற்றுக்கான செலவீடும் எமது நாட்டு விசேட மாணவர்களுக்கு இன்னும் எட்டாக்கனியாகவே உள்ளது. எனினும் அத்தகைய வசதிவாய்ப்புகளில் ஒரு சில அத்தியாவசிய சாதனங்களையேனும் பெற்றுக் கொடுக்க நன்முயற்சி மேற்கொள்ளப்படல் அவசியமே.

## இலங்கையில் விசேட கல்வி ஒரு பார்வை

மாற்றுத் திறனாளிகள் மீதான கரிசனை தொடர்பில் இலங்கை மிக நீண்ட வரலாற்றினைக் கொண்டுள்ளது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவிலேயே உடல் ஊனத்துடன் இடருறும் மக்களின் நலனின் பொருட்டாக கலிங்க மன்னனான (பௌத்த) அசோகச் சக்கரவர்த்தி ஒரு மகாநாட்டைக் கூட்டியதாக வரலாற்றுக் குறிப்புண்டு. இலங்கை மன்னனான புத்ததாச, பின்வந்த நூற்றாண்டிலே இலங்கையில் அசோகன் மரபை அடியொற்றியதாகவும் வரலாறு கூறுகிறது. கட்புலனற்றவர்க்கும் கால் நடக்கவியலாதோர்க்கும், இதர உடற்குறைபாடு மிக்கோர்க்கும் அம்மன்னன் தீவின் பல்வேறு இடங்களில் புகலிடங்களை ஸ்தாபித்திருந்ததாகவும் வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. (ஆதாரம் : Geiger, 1929 P13 - 14)

நவீன காலகட்டத்தில், இந்நிலைமையில் மாற்றம் ஏற்படுவதனை நாம் அவதானிக்கலாம். மாற்றுத்திறன் மிக்க மாணவர்களுக்கு எவ்வகையில் கல்வி வழங்குவதென்பது தொடர்பில் இலங்கையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கூட தெளிவான சிந்தனைகள் நிலவி இருக்கவில்லை. பின்னர் படிப்படியாக கட்புலன், செவிப்புலன் இழந்தவர்களுக்கான விசேட பாடசாலைகள் இரத்மலானை, (யாழ்ப்பாணம்) கைதடி முதலான இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன.

இப்பயணத்தில் ஒருகுறிப்பிடத்தக்க முன்னேற்றப்படி நிலையாக இரு வருடங்களை உள்ளடக்கிய விசேட ஆசிரியப் பயிற்சி நெறியானது, 1960களுக்குப் பின் நடைமுறைப்படுத்தப்பட்டது. குறிப்பாக கட்புலனிழந்தோருக்குரிய ஆசிரியப்பயிற்சி 1960 களிலும், செவிப்புலன் இழந்தோர் தொடர்பான ஆசிரியப் பயிற்சி நெறியாளனது 1970களிலும், மூளைவளர்ச்சி குன்றிய மாணவர்க்குரிய பயிற்சிநெறியானது 1980 களிலும் தொடங்கப்பட்டது.

இவ்வகையில் தேசிய கல்வி நிறுவகத்தினால் குறிப்பிடத்தக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. விசேட கல்வியை முழுதளவில் சாத்தியப்படுத்தும் படியான ஆசிரியஆளணி (விசேட) ஒன்று 1986இல் அமைக்கப்பட்டது. கொத்தணி முறைமையின் (Clustor System) கீழ், பாடசாலை விடுமுறைக்காலங்களில் போது, பொதுநிலை ஆசிரியர் குழாத்தினருக்கு விசேட கல்வி தொடர்பான விழிப்புணர்வு ஊட்டப்பட்டது. (Lopoz, 1989) தற்போது இந்த விசேட புலமைத்துவ ஆசிரிய ஆளணியானது, ஒவ்வொரு மாகாணக்கல்வித் திணைக்களத்துடனும் இணைக்கப்பட்டுள்ளது.

பின்வந்த காலகட்டத்தில் மேற்குறிப்பிட்ட ஆளணியினரில் அநேகர், இலங்கைப் பல்கலைக்கழகங்களில் விசேட கல்வி உள்ளடங்கலாக முறைமையுடன் கற்பிக்கப்பட்ட கல்விமாணிப்பட்டதாரி (Bachelor of Special Education) என்னும் தகைமையைப் பெற்றுக்கொண்டனர். 1994 அளவில் எட்டு மாகாணக் கல்வித்திணைக்களங்களும் இத்தகைய ஆளணியின் தொகுதியை உடைய மையக்குழுக்களை (Coro - Toams) பெற்றுக்கொண்டன.

இறுதியாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம், இலங்கையில் 10.6% மானவர்கள் அங்கவீனராக உள்ளனர். புதிய மில்லேனியத்தின் பின் இலங்கையில் விசேட கல்வி தொடர்பாக புத்தெழுச்சியுடன் கூடிய விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதனை அவதானிக்கலாம். அரச கல்விச் சேவைக்கும் புறம்பாக சமய, சமூக நிறுவனங்களின் பிரத்தியேக நிர்வாகத்தின் கீழும், பல விசேட பாடசாலைகள் இயங்கி வருகின்றன. மட்டக்களப்பு கல்லடி "தரிசனம்" விழிப்புலனற்றோர் பாடசாலை, மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ "வாழ்வோசை", திஹாரிய அங்கவீனர் பாடசாலை, மட்டக்களப்பு வண்ணத்துப்பூச்சிப் பாசறை, சத்துருக்கொண்டான் ஓசானம், யாழ்ப்பாணம் "வாழ்வகம்" முதலானவை குறிப்பிடற்பாலன.

## விசேட கல்வியின் சமூக அவசியப்பாடு

உடற்குறைபாடு மிக்க எல்லா மாணவர்களுக்கான கட்டாயக் கல்வி பெறும் உரிமையினையும் ஐ.நா அமையத்தின் சிறுவர் உரிமைச் சாசனமானது (CRC), 1990, செப்ரெம்பர், இரண்டாம் நாள் ஏற்று அங்கீகரித்துப் பிரகடனப்படுத்தியுள்ளது. இப்பொருத்தனையில், இலங்கையானது 1991 ஆம் ஆண்டு, அங்கீகரித்துக் கையொப்பம் இட்டுள்ளது. உடன்படிக்கையின் 28, 29 மற்றும் 31 ஆம் ஷரத்துகள் எல்லாச் சிறாரதும் விசேட தேவையுடைய சிறாரதும் கற்றல், பண்பாட்டு, ஓய்வுசார் உரிமைகள் பற்றி விரிவாகப் பேசுகின்றன.

குறிப்பாக உறுப்புரை 23 மிகத் தெளிவாக விசேட கல்வியினைப் பெற்றுக்கொள்வதற்காக சிறுவர்களின் அடிப்படை உரிமையை வலியுறுத்துகிறது. தெளிவு நோக்கி அவ்வாசகங்களை நாம் ஆங்கில மூலத்தில் எடுத்தாளலாம்.

"Recognizing the special needs of a disabled child .. . shall be designed to ensure that the disabled child has efleetive access to and receives education, training. health are services, rehabilitation service, preparation for employment and recreation opportunities in a manner conductive to the child's achieving his or her cultural and spiritual development (article 23)".

இதன் வாயிலாக பாதிக்கப்பட்ட எல்லாச் சிறுவர்களுக்கும் அவர்களின் தனியாள் நிலைப்பட்ட, சமூக பண்பாட்டு, ஆன்மீக விருத்தியை உறுதி செய்வதற்குரிய கற்றல் பயிற்சி, சுகாதார சேவைகள், புனருத்தாபன சேவைகளை ஒவ்வொரு அரசாங்கமும் திடமானதோடும், அர்ப்பணிப்போடும் உத்தரவாதப்படுத்துவதன் அவசியம் புலனாகிறது.

விசேட கல்வி தொடர்பான உலகளாவிய பயணத்தின் ஒரு மைற்கல்லாக விசேடதேவை சார் கல்வி தொடர்பான உலக மகாநாடு, (The world Conference on Special Needs Education) ஸ்பெயின் நாட்டில் (Salamanca, Spain), 1994 ஆம் வருடத்தில் இடம்பெற்றமையைக் குறிப்பிடலாம். இதனை விட, அம்மகாநாட்டு இறுதியின்போது, "எல்லா அரசாங்கங்களையும் விசேட தேவைமிக்க மாணாக்கரையும் இயலாற்றலுடன் உள்ளீர்த்துக்கொள்ளும் சட்டவாக்கம் அல்லது கொள்கை வகுப்பில் அர்ப்பணிப்போடு ஈடுபடுமாறு அழைப்பு விடுக்கிறோம்" என்று அறிக்கையிடப்பட்டதனையும் குறிப்பிடலாம்.

இவற்றுக்கும் அப்பால் "சீடா" அமையம் (Swadish international development Agency) யுனெஸ்கோ ஸ்தாபனம் (UNESCO) உலக சுகாதார அமையம் (WHO) என்பனவும் இவ்விடயம் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றன.

சமூக நிலையில் இன்னும் இடர்பாடுகள், வளப்பற்றாக்குறைகள், தவறான புரிதல்கள், புறக்கணிப்புகள் நிலவுவதனையும் நாம் அவதானிக்கலாம். எனவே விசேட கல்வியின் பால் பெற்றோர், கல்விச் சமூகத்தினர் சமூக அபிமானிகள் யாவரும் இதயசுத்தியுடன் கூடிய தமது கரிசனையினை வெளிப்படுத்துவதும், விசேட கல்விக்கான சமூகத்தின் குரலை ஓங்கி ஒலிக்க வேண்டியதும் இன்றியமையாத கடப்பாடாகிறது. தொடர்ச்சியாக எமது தேசத்தைப் பீடித்த யுத்த அவலங்களால் இயற்கைக் காரணிகளுக்கும் அப்பால் கால் இழந்த, கண்பார்வை இழந்த பல்லாயிரம் சிறார்களும் இன்று சவால் நிறைந்த எதிர்காலத்தை எதிர்நோக்குகின்றனர். பல்வேறு உடற்குறைபாடுகளுடன் பிறந்தாலும், ஆன் சலிவர் என்னும் அர்ப்பணிப்பும், கருணையும், பொறுப்புணர்வும் வாய்ந்த ஆசிரியையின் திடசித்தத்தாலும், அற்புத உழைப்பாலும், வாழ்வில் ஒளிபெற்ற ஹெலன் ஹெல்லரை நாம் வரலாற்றில் சந்தித்துள்ளோம். எமது நாட்டிலும் விசேட கல்வியின் வரப்பிரசாதத்தினால் இருண்ட மூலையை விட்டு, வெளியுலகில் வந்து, அறிவொளி பெற்றுப் பட்டதாரிகளாய், எழுத்தாளர்களாய், இசைக்கலைஞர்களாய், சட்டவாதிகளாய், அருமையான ஆசிரியர்களாய், அரச

நிர்வாகிகளாய் மிளிரும் பலரையும் இன்று காண்கின்றோம். சட்டத்தரணி மகாதேவா, சார்ள்ஸ் ராஜ்குமார், மங்களராணி, சுப்பிரமணியம், பரமேஸ்வரன் என்று வாழும் சாட்சிகளாய்ப் பலர் வாழ்க்கைச் சவாலை எதிர்கொண்டு முன்னோடிகளாய் மிளிர்கின்றனர்.

எனவே, கல்வி அடிப்படை உரிமை எனில் விசேட தேவையுடையவர்கட்கு அது உயிர்போன்றது என்னும் உண்மையை உளங்கொண்டு, முழுமையான, இயங்காற்றல் மிக்க, தாக்குதிறன் கொண்ட, சமகால உலகுக்கேற்ற விசேட கல்வி வாய்ப்புக்கான அர்ப்பணிப்பை நாம் அனைவரும் உறுதியாகப் புலப்படுத்தி ஒளிபடைத்த சமூகத்திற்கு அடித்தளம் இடுவோம்.

"ஊனம் உள்ளத்தில் எழுவதில்லை, ஊனத்தினால் வாழ்வின் வசீகரமும், வசந்தமும் வற்றிவிடுவதில்லை"

**உசாத்துணை :**


1) அகவிழி, இதழ் 75, நவம்பர், 2010 மற்றும் ஜுன் 2012 விழுதுகள் ஆற்றல் மேம்பாட்டு மையம், கொழும்பு.

2) Ainscow, M&Tweddle, D.A.(1988),Encouraging Classroom Success, London; Fulton.

3) Altman,B.M.(*1981) Studies of a attitudes toward the handihapped : The need for a new direction, Social problems, P321-327.

4) Coleridge,P(1993)Disability, Liberation and Development.UK and Ireland ; Oxfram publication.

5) Dissanayake, D. (1982) Socio-Cultural and Conomic factors in childhood disability. In P.A. Kgosana(ed) childhood disability:Report of the Developemnts of a Discusion group, Sri Lanka : UNICEF.

6) Geiger, W(1929) Culavamsa, Being the more recent part of the Mahavamsa, part I, London; pali text society.

7) Hegarthy, S. (1993), Meeting special needs in ordinary schools (2nd Edition), London; cassell.

8) Lopz, I (1988) Final Report Consultancy period, 1994 - 1998, Sri Lanka; Stockholm; SIDA.

9) National Education Commission,Sri Lanka (draft eport, 1996), Colombo.

10) Tomlinson, S(1982) A Sociology of Special Education, London; Routledge.





**கட்டுரையை வரைந்தவர் : ஸ்ரீமதி. கிறிஷாந்தி சசீதரன்** (ஆசிரியை)
மட்/சிவாநந்த வித்தியாலயம்




☞ அழுத பிள்ளை பால் குடிக்கும்.
☞ அக்கரைக்கு இக்கரை பச்சை.
☞ அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
☞ ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
☞ அடியாத மாடு படியாது.
☞ அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
☞ அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
☞ அடாது செய்பவர் படாது படுவார்.
☞ ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு.
☞ இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
☞ காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
☞ நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
☞ நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
☞ கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.
☞ குறைகுடம் தளும்பும் நிறை குடம் தளும்பாது
☞ ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது.
☞ ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
☞ வளரும் பயிரை முளையிலே தெரியும்.
☞ இரக்க போனாலும் சிறக்கபோ.
☞ அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.
☞ அக்கர காரத்தில் செத்தாலும் அடக்கம் சுடு காடு.
☞ ஆனைக்கும் அடி சறுக்கும்.
☞ யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வரும்.
☞ இமைக் குற்றம் கண்ணுக்கு தெரியும்.
☞ காற்றுள்ள போது தூற்றிக் கொள்.
☞ சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.
☞ அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
☞ எறும்பு ஊர கல்லுத் தேயும்.
☞ உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
☞ குப்பையில் போட்டாலும் குன்று மணி மங்காது.



**ஆக்கம் : ப. சித்தாத்**
தரம் 3

# தரம் 9 வகுப்புகளுக்கான பாடசாலை மட்ட சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்ற சிறுகதை

## முயற்சி திருவினையாக்கும்.

விழுப்புரம் ஓர் அழகிய கிராமம். இங்கு வாழும் மக்கள் படிப்பறிவு குறைவான மக்கள் மிகவும் வறுமையானவர்கள். இப்படி ஒரு வறுமையான குடும்பத்தில் தந்தையை இழந்த விதவைத்தாய் சாரதாவின் வளர்ப்பில் வளர்ந்து வரும் ஒரு ஏழைச்சிறுவன். இவன் பெயர் குமரன்.

குமரன் வறுமையில் இருந்தாலும் படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். ஆனால் என்ன செய்வது குமரனை படிக்கவைக்க குமரனின் தந்தை இல்லையே. இருந்தாலும் குமரனின் தாய் சாரதா எப்படியாவது மகனைப் படிக்கவைக்க வேண்டுமென நினைத்தாள்.

சாரதா அல்லும் பகலும் கஷ்டப்பட்டு வீட்டுவேலைகளை செய்தும் வீதிகளை சுத்தம் செய்தும் அதனால் கிடைக்கும் சம்பளத்தை கொண்டு குமரனின் படிப்புச் செலவுக்கும் வீட்டு தேவைகளுக்கும் பயன்படுத்தினாள். இதனை எல்லாம் பார்த்து குமரன் மிக வேதனையடைவான்.

விழுப்புரத்தில் பாடசாலைகள் இல்லாததனால் குமரன் அயல் ஊரிலுள்ள பாடசாலைக்கு காலில் செருப்பும் கையில் புத்தகமுமாக நடந்தே செல்வான். குமரன் வறுமையான மாணவன் என்றாலும் யாரிடமும் கையேந்தி நிற்கமாட்டான். நண்பர்களுடன் சேர்ந்து கெட்ட செயல்களைச் செய்யமாட்டான். தனது தாயின் கஷ்டத்தையும் தன் வறுமையையும் நினைத்தானோ என்னவோ மிக நன்றாக படித்தான்.

பரீட்சைகள் நடந்தாலும், வேறு இணைப்பாடவிதான செயற்பாட்டுப் போட்டிகள் நடந்தாலும் குமரனே சித்தியடைவான். இதனை எல்லாம் பார்க்கும் குமரனின் தாய் சந்தோஷப்படுவாள். குமரனின் ஆசிரியர்களும் குமரனின் திறமைகளைப் பாராட்டி சில படிக்க தேவையான சில உபகரணங்களையும் பரிசாகக் கொடுப்பார்கள். இதனை நினைத்து குமரன் பெருமகிழ்ச்சியடைவான்.

நாட்கள் பல சென்றன. குமரன் இப்போது கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் கல்வி பயின்று வருகிறான். பரீட்சைக்கு இன்னும் சில நாட்கள் இருக்கின்றன என குமரன் படிக்கும் பாடசாலை அதிபர் கூறினார். இதனைக் கேட்டகுமரன் பயப்படவில்லை. பரீட்சைக்காக அதிகம் கண்விழித்து படிக்கவுமில்லை. வழமைபோலவே படித்தான். பரீட்சையும் தொடங்கியது. குமரன் நன்றாக பரீட்சை எழுதினான். "பெறுபேறுகள் வருவதற்கு சில மாதங்கள் செல்லுமே இந்த இடைவெளியில் என்ன செய்யபோகின்றாய்?" என குமரனின் அதிபர் கேட்டார். அதற்கு குமரன் "**நான் எப்படியாவது இப்பரீட்சையில் சித்தியடைந்துவிடுவேன். பின் நான் உயர்தரம் படிக்கும்போது தேவைப்படும் பணத்தை இவ் இடைவெளியில் உழைத்துச் சம்பாதிப்பேன்**" என கூறினான். இதனைக் கேட்ட அதிபர் குமரனின் எண்ணத்தை நினைத்துப் பாராட்டினார். குமரன் அதேபோல் உழைத்து தேவையான பணத்தை சம்பாதித்தான்.

நாட்களும் சென்றன. பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. குமரன் மிகவும் உயர்ந்த சித்தியான 9A சித்தியைப் பெற்று தனது ஊருக்கும், பாடசாலைக்கும் முக்கியமாக தன் தாய்க்கும் பெருமை சேர்த்தான். இதனை அறிந்த குமரனின் தாய் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்.

இந்த செய்தியைக் கேட்ட ஊரில் வசதிபடைத்த ஒருவர் குமரனின் உயர்தர படிப்பிற்கு உதவிசெய்ய முன்வந்தார். உயர்தர பரீட்சையும் நெருங்கியது. குமரன் உயர்தர பரீட்சையை விஞ்ஞானப் பிரிவில் சிறப்பாக எழுதினான்.

சிறிது காலத்தில் முடிவுகளும் வந்தன. குமரன் விஞ்ஞானப் பிரிவில் அதிகூடிய சித்தியைப் பெற்றான். வைத்தியதுறை படிப்பு படிக்க வேறு ஒரு நகரத்திற்கு செல்லவேண்டி இருந்தது. இதனை அறிந்த குமரனின் தாய் வேதனையடைந்தாள்.

இதற்கு குமரன் சொன்னான் "அம்மா நீங்கள் கவலைப்படாதீர்கள். நான் மீண்டும் இவ்வூருக்கு திரும்பி வரும்போது ஒரு வைத்தியராகத்தான் வருவேன்" என்று கூறி நகரத்தை நோக்கி பஸ்வண்டியில் சென்றான். இதனை கண்டு சாரதா மனதை சற்றுத் தேற்றிக்கொண்டாள்.

வருடங்கள் கடந்தன. ஒரு நாள் விழுப்புரத்திலுள்ள குமரனின் வீட்டிற்கு முன் ஒரு கார் வந்து நின்றது. வெளியே வந்து சாரதா பார்த்தபோது, காரிலிருந்து குமரன் ஒரு வைத்தியராக இறங்கினான். இதனைக் கண்ட குமரனின் தாய் சாரதாவிற்கு சொல்லமுடியாத ஆனந்தம். உடனே குமரனைக் கட்டி தழுவினாள். குமரன் ஆனந்தத்தில் கண்ணீர் சொரிந்தான். தாய் சாரதாவும் தமது கஷ்டம் வறுமையெல்லாம் தீர்ந்தது என எண்ணி கண்ணீர் சொரிந்தாள்.

குமரன் தனது வெற்றியை நினைத்து கடவுளுக்கு நன்றி கூறினான். பின் அந்த ஊரிலே ஒரு பெரிய மாடி வீட்டைக் கட்டி குடியேறினான். தன் தாயின் கஷ்டங்களையெல்லாம் போக்கியதை நினைத்து ஆனந்தமடைந்தான்.

எனவே கல்விக்கு வறுமை ஒரு தடையல்ல.

**ஆக்கம் : ப. நவீந்திரன்**
தரம் 9M

---


*என் சிந்தனையைத் தூண்டியது . . . .*

## எண்ணங்களை ஒரு நிலைப்படுத்துவதே தியானம்!



மனம் சாமானியமாய் உங்கள் கட்டுக்குள் அடங்காது. எங்கெங்கோ தாவும் மனதை ஒரு முகப்படுத்த ஓர் எளிய வழி இருக்கிறது. உங்களுக்கு விருப்பமான மலர் அல்லது நீங்கள் நேசிக்கும் பொருள் அல்லது நீங்கள் வழிபடும் தெய்வத்தை உங்கள் மனக்கண் முன் நிறுத்துங்கள். உங்கள் எண்ணங்கள், இதன்மேல் குவியட்டும். காலப்போக்கில் அந்த பொருள் உங்கள் மனக்கண் முன் நில்லாமல் மறைந்து விடும். மனம் ஒரு நிலைப்பட்டுவிடும்.

இதற்கு ஓர் எடுத்துக்காட்டு சொல்ல வேண்டுமானால் பால்லோவ் என்ற மனவியல் அறிஞர் ஒரு நாயின் முன் இறைச்சித் துண்டை வைத்தார். அதே சமயம் ஒரு மணியையும் ஒலிக்கச் செய்தார். இந்நிகழ்ச்சி பலநாட்கள் நடைபெற்றது. அதற்குப் பின் மணி ஓசை மட்டுமே கேட்டது. இறைச்சித்துண்டு வைக்கப்படவில்லை. ஆனால் நாயின் வாயில் வழக்கம் போல் உமிழ்நீர் சுரந்தது. இப்படித்தான் உங்கள் மனமும், காட்சிப் பொருள் இல்லாமலேயே கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். தியானம் செய்யும் போது ஜெபித்தலில் தவறொன்றும் இல்லை. "ம்" என்று உச்சரிக்கும் போதும் "ன்" என்று உச்சரிக்கும் போதும் உங்கள் உடலிலும் மனதிலும் மாற்றங்கள் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.



**தொகுப்பு : அ. கவீராஜ்**
தரம் 9S

# நட்பிற்குள் ஏன் வேலி?



மூன்றெழுத்தில் முடிந்து விட
நட்பென்ன நாடகமா?
இல்லையெனில்
ஆயுள் வரை தொடர்கின்ற
காவியமா?



ஆணுக்கும் பெண்ணுக்கும்
உள்ள நட்பிற்கு
ஏன் வேலி . . ?
ஆராய்ச்சி செய்து பேசாதீர்
வீண் கேலி.

பெண்ணோடு ஆனொருவன்
நட்பாகப் பழகினால்
காதல் என்று கைதட்டி
கரைகின்ற காகங்கள்.

ஆணுக்கும் பெண்ணுக்கும்
ஆயிரம் உறவிருக்கும்
ஆனாலும்
நட்பிற்குள் நம்பிக்கை இருக்கும்.

என்னவென்று சொல்வது
சமூகத்தின் பதிவேட்டை
சிந்தித்துப் பார்த்திடுங்கள்
சீர்கெட்ட இந்த உலகத்தை



**செல்வி. க. நிவேதினி** (ஆசிரியை)
மட்/சிவாநந்த தேசிய பாடசாலை

---

# இலங்கை

அரிது அரிது இலங்கை திருநாட்டில்
பிறப்பது அரிது
இனிது இனிது செங்கதிரவன் உதித்தெழும்
கிழக்கு மாகாணத்தில் பிறப்பது இனிது
அரிது அரிது மீன்பாடும் தேன்நாடாம்
மட்டு நகரில் பிறப்பது அரிது
இனிது இனிது வித்தகர் விபுலாநந்தர் அமைத்த
மட்/சிவாநந்தா வித்தியாலயத்தில்
மனமுகந்து செழுப்புற வாழ கல்வி
பயில்வது இனிது

**ஆக்கம் : ஜோ. தனஜெயன்**
தரம் 9K

யார் நேர்மையாக இருந்தாலும் அவரோடு இணைந்து கொள்ளுங்கள், அவர் நேர்மையோடு இருக்கும் வரை அவருடன் இணைந்து இருங்கள். அவர் நேர்மையிலிருந்து விலகினால் அவரைப் பிரிந்து விடுங்கள்.

**- ஆபிரகாம் லிங்கன் -**

# Our Principals



| NAME OF OUR PRINCIPAL'S | PERIOD OF SERVICE |
|---|---|
| 1) Mr. A. Balasubramaniyam | 1929 |
| 2) Mr. S. Shanmugam | 1929 |
| 3) Mr. P. Ramachandran | 1931 |
| 4) Swami Vipulanandar | 1931 |
| 5) Mr. M. Menan | 1932 |
| 6) Swami Vipulanandar | 1933 |
| 7) Mr. S. Ampalavanar | 1937 |
| 8) Mr. M. Ragupathi | 01-05-1954 - 31-08-1955 |
| 9) Mr. K. Kanapathipillai | 01-09-1955 - 23-05-1969 |
| 10) Mr. K. Thiyagarajah (Mayor) | 23-05-1969 - 13-11-1977 |
| 11) Mr. V. C. Kandiah | 14-11-1977 - 28-07-1978 |
| 12) Mr. K. Kunaretnam | 28-07-1978 - 01-07-1981 |
| 13) Mr. S. Paramsothi | 01-07-1981 - 26-07-1982 |
| 14) Mr. S. Maheswaran | 26-08-1981 - 26-07-1982 |
| 15) Mr. K. Thiyagarajah (Mayor) | 26-07-1982 - 19-07-1984 |
| 16) Mr. M. Selvarajah | 20-07-1984 - 19-08-1988 |
| 17) Mr. K. Balachandran | 19-08-1988 - 31-12-1989 |
| 18) Mr. K. Thiyagarajah | 15-01-1990 - 10-10-1992 |
| 19) Mr. K. Vijayaretnam | 10-10-1992 - 01-06-1995 |
| 20) Mr. N. Rajaretnam | 01-06-1995 - 03-04-1998 |
| 21) Mr. E. P. Anandarajah | 03-04-1998 - 12-04-2009 |
| 22) Mr. T. Anantharuban | 13-04-2009 - 30-11-2009 |
| 23) Mr. T. Raveendramoorthy | 01-12-2009 - 11-06-2012 |
| 24) Mr. K. Manoraj | 11-06-2012 upto - date |

# BATTLE OF THE GOLDS
# BIG MATCH

இம் மாபெரும் கிரிக்கெட் போட்டியானது எமது பாடசாலைக்கும் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் இடையில் வருடந்தோறும் இடம்பெற்று வருகின்றது. முதன்முதலில் 1993 திருகோணமலை இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வருடம் 2012இல் நடைபெற்று முடிந்த மாபெரும் கிரிக்கெட் ஆட்டத்துடன் 19 ஆண்டுகளை கடந்துநிற்கின்றது என்பது இரு பாடசாலைகளும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

1வது போட்டி மட்டும் மென்பந்து கிரிக்கெட் போட்டியாக நடைபெற்றது. அதன்பின் நடைபெற்ற சகல போட்டிகளும் வன்பந்து போட்டியாக அமைந்திருந்தன.

இப்போட்டியை ஆரம்பிக்க காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் நினைவு கூரப்படவேண்டியவர்கள்.

| | | |
|---|---|---|
| அமரர் கந்தையா தியாகராஜா | - | முன்னாள் மாகாணக் கல்விச் செயலாளர் வட கிழக்கு மாகாணம். |
| அமரர் குணரெத்தினம் | - | முன்னாள் பணிப்பாளர் |
| அமரர் கவிஜயரெத்தினம் | - | முன்னாள் அதிபர் - சிவாநந்த வித்தியாலயம். |
| திரு. சி. தண்டாயுதபாணி | - | முன்னாள் அதிபர் - திருமலை இந்துக் கல்லூரி |

இவர்களுடன் அக்காலத்தில் செயற்பட்ட OBA, SDS, ஆசிரியர் குழாத்தினரும் நினைவு கூரவேண்டியவர்களாவர்.

இரண்டு பாடசாலைகளின் கொடிகளிலும் பொன்மஞ்சள் நிறம் காணப்படுவதனால் இப்போட்டிக்கு Battle of the Golds எனப் பெயரிடப்பட்டது. இரண்டினதும் ஒத்திசைவுத் தகுதியை நோக்கினால் இரண்டு பாடசாலைகளுமே தேசிய பாடசாலை அந்தஸ்து உடையவை, இரண்டுமே இராமகிருஷ்ண மிசனினால் நிர்வகிக்கப்பட்டவை, ஆன்மீக வழியில் மிகுந்த ஈடுபாட்டுடன் தொழிற்படுபவையாகும்.



இம்மாபெரும் கிரிக்கெட் ஆட்டம் பாரிய நிதிச் செலவுக்கு மத்தியில் நடாத்தப்பட்டாலும் தோற்பந்து விளையாட்டு எமது பாடசாலையில் விருத்தியடைந்துள்ளதை அவதானிக்கமுடிகிறது. எமது பாடசாலையிலிருந்து பலர் தேசிய பயிற்சியைப் பெற அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். மாவட்ட மட்டத்தில் போட்டிகளுக்கு தலைமை தாங்குகின்றனர். பலர் நடுவர்களாக பயிற்சி பெற்றுள்ளனர். இவை அனைத்தும் மாபெரும் கிரிக்கெட் போட்டியினால் பெறப்பட்ட அனுகூலங்களாகும். இப்போட்டிகளை நெறிப்படுத்திய அதிபர்களை நோக்கினால்

சிவாநந்த வித்தியாலயம்

| | |
|---|---|
| 1) 1993 - 1996 | அமரர். க. விஜயரெத்தினம் |
| 2) 1997 | திரு. K. இராஜரெட்ணம் |
| 3) 1998 - 2008 | திரு. E. P. ஆனந்தராஜா |
| 4) 2009 | திரு. T. அனந்தரூபன் |
| 5) 2010 - 2012 | திரு. T. ரவீந்திரமூர்த்தி |

தற்போது போட்டி நடைபெற்று முடிந்தபின் கடந்த June மாதத்திலிருந்து திரு. க. மனோராஜ் அதிபராக பொறுப்பேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமலை இந்துக்கல்லூரி

| | |
|---|---|
| 1993 - 2003 | திரு. சி. தண்டாயுதபாணி |
| 2004 - 2010 | திரு. M. இராஜரெட்ணம் |
| 2011 - இன்றுவரை | திரு. R. புவனேந்திரன் |

அணியின் முகாமையாளர்களை நோக்கினால்

சிவாநந்த வித்தியாலயத்தில் திரு. ச. மணிவண்ணன் - 1998 - 2008 வரை 15 ஆண்டுகளும், திரு. T. கிருபாகரன் 2009, 2010 ஆகிய ஆண்டுகளிலும், திரு. T. ரவீந்திரமூர்த்தி (அதிபர்) 2011, 2012 ஆண்டுகளிலும் சிறப்பாக தொழிற்பட்டனர்.

இதேபோன்று திருமலை இந்துக்கல்லூரியில்

திரு. பசீர் அமீர் 1993 - 2010 வரையான 17 ஆண்டுகளிலும். திரு. R. புவனேந்திரன் (அதிபர்) 2011, 2012 ஆண்டுகளிலும் சிறப்பாக தொழிற்பட்டடுள்ளனர்.

இவ்போட்டியின் சிறப்புற பங்கெடுத்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களான திரு. எம். குருகுலசிங்கம் (தற்போது உதவிக்கல்விப் பணிப்பாளர்), திரு. K. இரவீந்திரன் (கனடா), திரு. V. மோகனகுமார் (தற்போது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - விரிவுரையாளர்) ஆகியோரின் அர்ப்பணிப்புகள் என்றும் மறக்கமுடியாதவை.



தற்போது திரு. D.R. மரியசெல்வம், திரு. K. சதாசிவம், திரு. N. செந்தூரன் ஆகியோர் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்படுவது பாராட்டத்தக்கதாகும். தொடர்ச்சியாக 2010, 2011, 2012 ஆகிய ஆண்டுகளில் திரு/கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, மட்/சிவாநந்த வித்தியாலயம் ஆகிய விளையாட்டு மைதானங்களில் இப்போட்டிகள் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. இவ் போட்டிகளில் தொடர்ந்து மூன்று முறையும் எமது பாடசாலையான மட்/சிவாநந்த வித்தியாலமே வெற்றிபெற்றது.

2010 இல் 126 ஓட்டங்களாலும், 2011 இல் 24 ஓட்டங்களாலும், 2012 இல் 18 ஓட்டங்களாலும் வெற்றி பெற்று, இப்போட்டிக்கான கிண்ணத்தையும் தனதாக்கிக் கொண்டுள்ளது என்பதனை பெருமையுடன் கூறுகின்றேன். இந்த வெற்றியானது எமது பாடசாலை விளையாட்டு வீரர்களின் விடாமுயற்சியினையும், விளையாட்டுத்துறை ஆசிரியர்களின் அயராத ஊக்குவிப்பினையும் பறைசாற்றி நிற்கின்றது.



திரு. N. செந்தூரன் மாணவனாக இருக்கும்போது இப்போட்டிகளில் இரண்டு தடவைகள் அணித்தலைவராக செயற்பட்டவர். தற்போது இப்பாடசாலையின் ஆசிரிய குழாத்தில் இணைந்திருப்பது எதிர்காலத்தில் இப்போட்டி சிறப்பான தோற்றத்தை எடுக்கும் என எண்ணுகின்றேன்.




எதிர்காலத்தில் இருதரப்பு மாணவர்களும் பாடசாலைகளின் கௌரவம், அந்தஸ்து ஆகியவற்றை மனதிற்கொண்டு நட்பு ரீதியாக போட்டியில் ஈடுபட்டால் காலமுள்ளவரை இது தொடரும்.

தொகுப்பு : ச. மணிவண்ணன்
பகுதித்தலைவர் - உயர்தர விஞ்ஞானப்பிரிவு
முன்னாள் அணி முகாமையாளர்

## Battle of the Golds - Big Match - Bt/RKM Shivananda Vidyalaya Vs Tri/RKM Sri Koneswara Hindu College

| Year | Venue | Captain | | Results | | Winning Team |
|---|---|---|---|---|---|---|
| | | Shivananda | HinduCollege | Shivananda | Hindu College | |
| 1993 | Trinco | K. Nilaxan | R.M. Fowmy | 59 all out | 60 for 3 wickets | Hindu College |
| 1994 | Batticaloa | K. Nilaxan | R.M. Fowmy | 62 for 2 wickets | 61 all out | Shivananda |
| 1995 | Trinco | S. Thanapalan | S. Umashankar | 1st innings 80 all out<br>2nd innings 83/05 wickets | 121 all out | Hindu College<br>(1st innings score) |
| 1996 | Batticaloa | S. Thanapalan | S. Umashankar | 137 for 07 wickets | 136 for 9 wickets | Shivananda |
| 1997 | Trinco | N. Kajenthiran | S. Umashankar | 140 all out | 142 all out | Hindu College |
| 1998 | Batticaloa | S. Thanapalan | B. Sivendran | 194 all out 34.5 overs | 115 all out 39.1 overs | Shivananda |
| 1999 | Trinco | V. Vijitharan | P. Sutharsan | 96 all out 30.3 overs | 183 all out 40 overs | Hindu College |
| 2000 | Batticaloa | K. David Sheperd | K. Suthakar | 120 all out 33 overs | 211 for 9 wickets 40 overs | Hindu College |
| 2001 | Trinco | R. Jeyamohan | K. Suthakar | 94 all out 40 overs | 153 all out 38.2 overs | Hindu College |
| 2002 | Batticaloa | T. Thayalan | G. Pratheepan | 133 all out 34.5 overs | 112 all out 37.5 overs | Shivananda |
| 2003 | Trinco | T. Thayalan | P. Thiluxan | 73 all out 25 overs | 90 all out 25.5 overs | Hindu College |
| 2004 | Batticaloa | N. Senthuran | P. Thiluxan | 157 all out 44.3 overs | 178 all out 38.3 overs | Hindu College |
| 2005 | Trinco | N. Senthuran | P. Thiluxan | 112 all out 20.3 overs | 116 for 4 wickets 30.2 overs | Hindu College |
| 2006 | | **Big Match could not be played due to the conflict situation of Batticaloa.** | | | | |
| 2007 | Batticaloa | M. Kanistan | K. Sakthi Branavan | 144 all out 41.4 overs | 171 all out 41.5 overs | Hindu College |
| 2008 | Trinco | M. Kanistan | S. Arunprashath | 150 all out 49.5 overs | 117 all out 28.3 overs | Shivananda |
| 2009 | Batticaloa | M. Kanistan | S. Arunprashath | 179 all out 49.5 overs | 117 all out 28.3 oves | Hindu College |
| 2010 | Trinco | M. Sathiyarooban | V. Devavithuran | 199 all out 42.1 overs | 73 all out 17.2 overs | Shivananda |
| 2011 | Batticaloa | C. Thavakeesan | S. Prashanth | 149 all out | 125 all out | Shivananda |
| 2012 | Trinco | M. Dikshan | S. Prashanth | 174 50 over 9 wicket | 156 in 47.3 overs all out | Shivananda |

# இணைப்பாடவிதானம் - 2011

| மாணவர் பெயர் | போட்டி | இடம் |
|---|---|---|
| 1) 1) R. ஜனகன்<br>2) C. சந்திரமதன்<br>3) K. மையூரவேள் | விவாதம் (மாகாணமட்டம்) | 2ம் இடம் |
| 2) M. புருசோத்மன் | இசை (தனி)<br>பிரிவு 4 (மாகாண மட்டம்) | 2ம் இடம் |
| 3) T. திலக்ஷன் | றோயல் கல்லூரி தமிழ்<br>நாடக மன்றம் நடத்திய நாடகத்திறன்<br>காண்போட்டி (தனிநடிப்பு தேசிய மட்டம்) | 2ம் இடம் |
| 4) P. நிரோசன் | கணித வினாவிடைப் போட்டி<br>(மாகாண மட்டம்) | 2ம் இடம் |
| 5) K. பிரஸ்நேவ் | தேசிய கணித ஒலிம்பியாட் போட்டி | |

# இணைப்பாடவிதானம் - 2012

| மாணவர் பெயர் | போட்டி | இடம் |
|---|---|---|
| 1) 1) M. புருசோத்மன்<br>2) I. திவானுஜன்<br>3) R. ஜெயச்சந்திரன்<br>4) G. கிஷோகாந்<br>5) S. கஜதுஷ்யன்<br>6) S. ஹரிசுதன்<br>7) A. நுவேந்தன் | வில்லுப்பாட்டு<br>(மாகாண மட்டம்)<br>(தமிழ்மொழி திறன்) | 2ம் இடம் |
| 2) R. ஜனகன் | ஆங்கிலமொழித்திறன்<br>(பேச்சு) மாகாணமட்டம் | 1ம் இடம் |
| 3) 1) T. தக்ஷன்<br>2) N. பிரசன்னா | ரெஸ்லிங்<br>(தேசிய மட்டம்) | 3ம் இடம் |

# மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகள் - 2011

| மாணவர் பெயர் | விளையாட்டு | பிரிவு | இடம் |
|---|---|---|---|
| 1) P. சிவோஜன்<br>2) B. திவாகரன்<br>3) T. ஷாஷாங்கன்<br>4) P. கோகுலதாஸ்<br>5) A. கேகேஸ்வரன்<br>6) T. கோகுலப்பிரியன் | மேசைப்பந்து | 19 வ.கீ | 1ம் இடம் |
| 7) A. கேகேஸ்வரன்<br>8) R. துவாரகன்<br>9) M. பிரியந்த | Badminton | 19 வ. கீ | 2ம் இடம் |
| 10) K. சதீஸ்<br>11) C. கிஷோகாந்<br>12) S. பிரியந்தன்<br>13) G. சாத்வீகன்<br>14) R. துவாரகன்<br>15) P. மயூரன்<br>16) P. புருஷோத்<br>17) P. சிவோஜன்<br>18) P. நிவோஜன்<br>20) S. சசிதரன்<br>21) T. சுகிர்தரன்<br>22) Y. மிதுஷன்<br>23) N. அஜிதன்<br>24) B. திவாகரன் | கூடைப்பந்து  | 19 வ.கீ | 2ம் இடம் |



"இரவு நேரத்தில் பல நட்சத்திரங்களை வானத்தில் பார்க்கிறாய். ஆனால், சூரிய உதயத்துக்குப் பின்பு அவை தெரியவில்லை. அதனால், பகல்பொழுதில் வானத்தில் நட்சத்திரங்கள் இல்லை என்று கூறமுடியுமா? மனிதனே, அறியாமையில் உள்ள நீ கடவுளை அறியமுடியாததால் "கடவுள் இல்லை" என்று கூறாதே"

– இராமகிருஷ்ண பரமஹம்ஸர் –

# மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகள் - 2012

| மாணவர் பெயர் | விளையாட்டு | பிரிவு | இடம் |
|---|---|---|---|
| 1) V. இனோஜன்<br>2) R. நிதுஷன்<br>3) T. கோகுலப்பிரியன்<br>4) P. கோகுலதாஸ்<br>5) T. தனோச்குமார்<br>6) A. ஜெயந்தன் | மேசைப்பந்து | 19 வ.கீ | 1ம் இடம் |
| 7) V. விதுஷன்<br>8) S. சுதேசகவி<br>9) A. பிர்விராஜ்<br>10) L. வினிஸ்டன்ஜோய்<br>11) T. ஜதுகாந்<br>12) L. ஹரிபிரசாத் | மேசைப்பந்து | 15 வ. கீ | 2ம் இடம் |
| 12) E. டினோதரன்<br>13) A. சதுஸ்மன்<br>14) S. கோகுலநந்தன்<br>15) T. ஜதுகாந்<br>16) P. கோகுலதாஸ்<br>17) T. கோகுலப்பிரியன்<br>18) M. தனீகுமார்<br>19) L. லேந்தன்<br>20) C. அனுஜன்<br>21) T. பிரதீபன்<br>22) P. பிரியதர்ஷன்<br>23) V. விதுஷன்<br>24) S. சுதேசகவி<br>25) Y. இனேஸ்காந்த்<br>26) T. தனேஸ்காந் | கூடைப்பந்து  | 19 வ.கீ | 3ம் இடம் |
| 27) S. யசோதரன் | Kata | 15 வ.கீ | 1ம் இடம் |
| 28) S. மதுராந்தகன் | Team Kata | 19 வ.கீ | 1ம் இடம் |
| 29) S. மதுராந்தகன் | Kata | 19 வ.கீ | 2ம் இடம் |
| 30) P. பிரியதர்ஷன் | Team Kumite | 19 வ.கீ | 1ம் இடம் |
| 31) P. பிரியதர்ஷன் | Kumite | 15 வ.கீ | 2ம் இடம் |
| 32) A.M.A. சிராஜ் | Kata | 17 வ.கீ | 2ம் இடம் |
| 33) A.M.A. சிராஜ் | Team Kata | 19 வ.கீ | 1ம் இடம் |
| 34) A.M.A. சிராஜ் | Team Kumite | 19 வ.கீ | 1ம் இடம் |
| 35) A.M.A. சிராஜ் | Kumite | 15 வ.கீ | 3ம் இடம் |
| 36) S. டரிபிரசாத் | Team Kata | 19 வ.கீ | 1ம் இடம் |
| 37) S. டரிபிரசாத் | Kata | 15 வ.கீ | 3ம் இடம் |

# ஸ்தாபகர் தினப்போட்டி முடிவுகள் — 2012

| | | | |
|---|---|---|---|
| பிரிவு 1 (தரம் 4, 5) | பேச்சுப்போட்டி | 1ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் | அ. சுரேஸ்காந்<br>ர. துஷாந்தன்<br>கோ. ஸருபன் |
| பிரிவு 1 (தரம் 4,5) | கட்டுரைப்போட்டி | 1ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் | கோ. திவ்ஷாத்<br>வ. யுதர்ஷன்<br>து. கபிலன் |
| பிரிவு 2 (தரம் 6, 7, 8) | பேச்சுப்போட்டி | 1ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் | நா. சொரூபன்<br>கி. அஜீந்திரா<br>அ. தினேஸ்காந் |
| பிரிவு 2 (தரம் 6, 7, 8) | கட்டுரைப்போட்டி | 1ம்இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் | சு. சுவேஸ்<br>வி. விமல்<br>நா. தமிழ்க்குமரன் |
| பிரிவு 3 (தரம் 9, 10, 11) | பேச்சுப்போட்டி | 1ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் | வி. சதிஸ்குமார்<br>ஞா. மங்களன்<br>க. டிதுசன் |
| பிரிவு 3 (தரம் 9, 10. 11) | கட்டுரைப்போட்டி | 1ம்இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் | அ. விதுஜன்<br>து. ஜெசிதரன்<br>சீ. சுஜிஷ்காந் |
| பிரிவு 4 (தரம் 12,1 3) | பேச்சுப்போட்டி | 1ம் இடம் | த. பிரசன்னா<br>2014 கலைப்பிரிவு |
| பிரிவு 4 (தரம் 12, 13) | கட்டுரைப்போட்டி | 1ம் இடம்<br>2ம் இடம்<br>3ம் இடம் | ச. வினோத்<br>உ. சங்கீத்<br>பி. கபிசாந் |

## வித்தியாலயத்திற்கு பெருமை சேர்த்தோர் 2011- 2012



**R. ஜனகன்**
ஆங்கிலமொழித்திறன் பேச்சு
தேசிய மட்டம்



**T. தக்ஷன்**
ரெஸ்லிங்
தேசிய மட்டம்



**N. பிரசன்னா**
ரெஸ்லிங்
தேசிய மட்டம்



**S. தக்ஷன்**
தரம் 5 புலமைப்பரிசில்
2011 இல் கூடிய புள்ளி 173



**K. சஞ்ஜய்**
தரம் 5 புலமைப்பரிசில்
2012 இல் கூடிய புள்ளி 180



**N. ரஜீவன்**
க.பொ.த.சா/த 2011இல்
9 பாடங்களில் A சித்தி

# Bt/Shivananda Vidyalaya Teachers Details

| | |
|---|---|
| Mr. K. Manoraj (Principal) | - B.A, Dip in Education, Trained Social studies, School Management |
| Mr. S. Thayaparan (D.P) | - B.A, Diploma in Education |
| Mrs. R. Raveendramoorthy | - B.Com., Diploma in Education |
| Mrs. H. Navaretnam | - G.C.E.A/L, Tamil Trained, B.Ed Tamil |
| Miss. L. M. Barethlot | - G.C.E.A/L, English Trained |
| Mrs. A. Mahendran | - B.Ed., Social Trained |
| Mrs. V. Saravanapavan | - G.C.E.O/L, Science Trained |
| Mr. S. Manivannan | - B.Sc., Bio Science, Diploma in Education |
| Mr. S. Kamalanathan | - B.A. (Special), Diploma in Education |
| Mr. K. Rajalingam | - G.C.E.A/L. Diploma in Agriculture |
| Mrs. C. A. Jebaretnam | - G.C.E.A/L, Science Trained |
| Mr. K. Rasanayagam | - B.Sc. Physical Science, Diploma in Education |
| Mrs. M. Thevasingam | - G.C.E.A/L, English Trained |
| Mrs. Y. Nithiyananthan | - B.A, Diploma in Education |
| Mr. K. Premanandarajah | - B.Sc. (Agri), Diploma in Education, M.A., (Hons. - Sociology) |
| Miss. C. Sebanayagam | - Diploma in Education, M.Phil., B.A, (Hons) |
| Mrs. M. Keerthinathan | - B.A, (Hons) Diploma in Education, SP.Trained in Science |
| Mrs. V. Pulendran | - B.A, Diploma in Education |
| Mr. D.S Selvarajah | - G.C.E.A/L, English Trained |
| Mrs. A. N. Selvarajah | - G.C.E.A/L, Maths Trained |
| Mrs. P. Chandralingam | - B.Sc., Dip in Education |
| Mr. R. Nithyananthan | - B.Com., P.G.D.E, Diploma in Education |
| Mr. K. Vijayarajah | - B.Com., Dip in Education |
| Mr. T. Kuharaj | - B.A, National Dip in Teaching (Science), Dip in Education |
| Miss. P. Theiventhi | - B.A (Hons), Diploma in Education |
| Mrs. T. N. Raveendrarajah | - B.A, Dip in Education |
| Mrs. E. Prathapan | - B.A, Diploma in Education |
| Mrs. V. J. Selvarasu | - G.C.E.A/L, Trained RC |
| Mr. J. Jeyakanthan | - B.A, Diploma in Education, Med, National Dip in Primary |
| Mrs. K. Premkumar | - G.C.E.A/L, National Dip in Education Maths |

| | |
|---|---|
| Mr. M. Balakrishnan | - B.Sc, Physical Science, Dip in Education, M.Sc in science Education |
| Mrs. V. Mohanathas | - B.Sc, Physical Science, Dip in Education |
| Mr. K. Sathasivam | - G.C.E.A/L, PT Trained |
| Mrs. K. Hudson | - B.A, National Dip in Education (Agriculture) |
| Mr. M. Visvanathan | - G.C.E.A/L, National Dip in Education Primary |
| Mr. R. Arulraj | - G.C.E.A/L, National Dip in Education Primary |
| Mrs. K. Sasikumar | - B.A, National Dip in Education Primary |
| Mr. N. Nirojan | - G.C.E.A/L, National Dip in Education Primary |
| Mrs. M. Satheeskanthan | - G.C.E.A/L, National Dip in Education Primary |
| Mrs. S. Muthukrishna | - B.A, National Dip in Education Primary |
| Mr. P. Suvendrarajah | - B.A, N. Dip in Education Teaching (Design & Technology) |
| Mrs. N. Subaharan | - B.A (Maths), National Dip in Education |
| Mrs. P. Jeyakumar | - B.A, Dip in Education |
| Mrs. C. Navayuvan | - B.A, Teacher Trainee |
| Mr. A. F. Anantharajan | - B.A, Dip in Education |
| Mrs. S. Theivendrarajah | - B.A |
| Mrs. S. Mangaleswaran | - B.Sc (Hons), Dip in Education |
| Mrs. S. Krishanthy | - B.A, National Dip in Education Primary, Dip in Education |
| Mrs. A. Mohanakumar | - G.C.E.A/L , National Dip in Education Drama & Theatre |
| Mrs. M. Kunarajah | - B.A, Dip in Education |
| Mrs. K. Vimalendran | - B.A, National Dip in Education Primary, Dip in Education |
| Mrs. J. Rajayogeswaran | - G.C.E.A/L, National Dip in Education Primary |
| Mrs. V. Ravindran | - B.A. (Hons - Tamil), Dip in Education |
| Mr. D. R. Mariyaselvam | - G.C.E.O/L, PT Trained |
| Mrs. N. Pratheepan | - G.C.E.A/L, National Dip in Education Art |
| Mr. A. Ariyathurai | - B.A, Dip in Education |
| Mr. A. Arulkanthan | - B.A, Dip in Education |
| Mrs. P. Vijayasegar | - B.FA |
| Miss. S. Sansika | - G.C.E.A/L, National Dip in Education Science |
| Mr. S. Shanthakumar | - G.C.E.A/L, National Dip in Education Art |
| Mrs. J. Kalaruban | - G.C.E.A/L, National Dip in Education Primary |
| Mrs. S. Mahendran | - B.A, Dip in Education |
| Mrs. K. Vivekanandan | - B.Sc |
| Mrs. S. Pusparani | - G.C.E.O/L, Tamil Trained |
| Mrs. J. Kalingeshwaran | - B.FA |

| | |
|---|---|
| Mrs. A. Sivanadesh | - G.C.E.A/L, National Dip in Education Science |
| Miss. S. Subangi | - G.C.E.A/L, National Dip in Education Music |
| Miss. S. Ranjini | - G.C.E.A/L, National Dip in Education Christianity |
| Mr. N. Senthuran | - G.C.E.A/L, National Dip in Education Drama & Theatre |
| Mr. T. Senthan | - G.C.E.A/L, National Dip in Education Design & Technology |
| Mrs. L. Giritharan | - B.A English, Dip in Education |
| Miss. K. Kovitha | - G.C.E.A/L, National Dip in Education Hindusim |
| Miss. B. Anittra | - G.C.E.A/L, National Dip in Education Christianity |
| Miss. K. Nivethini | - G.C.E.A/L, National Dip in Education Music |
| Miss. R. Darsika | - G.C.E.A/L, National Dip in Education ICT |
| Mr. S. Puvanendran | - B.A (Hons) Political Science |
| Mr. T. Naganathan | - B.A, National Dip in Education |
| Mr. S. Katharathan | - B.FA, (Art & Design Special Degree) |
| Miss. K. Tharshika | - B.A |
| Mr. G. Gopi | - B.A |
| Mr. V. Kamalanathan | - B.A, National Dip in Teacher |
| Miss. M. Mary Magret | - G.C.E.A/L, National Dip in Education (Food Technology) |
| Miss. S. Kupintha | - G.C.E.A/L, National Dip in Education (Social Science) |
| Miss. V. Yalini | - G.C.E.A/L. Diploma in Education Agriculture |
| Miss. A. L. F. Imrana | - G.C.E.A/L, National Dip in Tamil |
| Miss. S. Sivathanujini | - G.C.E.A/L, National Dip in Education Social Studies |

# NON ACADEMIC STAFF

| Name | Designation |
|---|---|
| Mr. M. Ranjithan | Labour |
| Mr. A. Paskaran | School Labour |
| Mr. T. Naguleswaran | Watcher |
| Mr. S. Sritharan | Lab Assistant |
| Mr. K. Peremadas | Watcher |
| Miss. K. Kalaivani | Library Assistant |
| Mr. T. Jeevathas | Library Assistant |
| Mr. R. Lingeswaran | School Labour |
| Mr. M. Ahileswaran | Library Assistant |
| Mr. S. Sureshkumar | School Labour |
| Mrs. V. Sutharsananth | Library Assistant |

## Bt/Shivananda Vidyalaya - Past Students Association

| | | | |
|---|---|---|---|
| **President** | : | Mr. K. Kurunathan | |
| **Secretary** | : | Mr B. Sasekaran | |
| **Treasurer** | : | Mr. T. Thayalan | |
| **Vice Presidents** | : | Mr. G. Baskaran<br>Janab. S. M. Ibralebbe | |
| **Vice Secretary** | : | Mr. S. Vijayakumar | |
| **Editor** | : | Mr. S. Ruthiramoorthy | |
| **Sports Secretary** | : | Mr. S. Ravindran | |
| **Principal** | : | Mr. K. Manoraj | |
| **Committee Members** | : | Mr. I. Elilvalavan<br>Mr. T. Sriskantharajah<br>Mr. S. Thangavel<br>Janab. A. H. A. M. Wahhab | Mr. K. Yogarajah<br>Mr. S. Vipulananthararajah<br>Mr. V. Thiruselvam<br>Mr. S. Akileshwaran |
| **Auditors** | : | Mr. Kantharaj | Mr. S. Piranavasothy |
| **Advisers** | : | Mr. C. Punniyamoorthy | Mr. K. Ganeshanantham |

## Bt/Shivananda Vidyalaya - Past Students Association (U.K)

| | | | |
|---|---|---|---|
| **Patron** | : | Mr. T. Vijayaratnam | |
| **Chairman** | : | Mr. T. Sunthararajah | |
| **Vice Chairman** | : | Mr. S. Parameswaran | |
| **General Secretary** | : | Mr. C. Kathirkamanathan | |
| **Assistant Secretary** | : | Mr. P. Ketheaswaranathan | |
| **Treasurer** | : | Mr. V. Govi | |
| **Assistant Treasurer** | : | Mrs. K. Varathanathan | |
| **Cultural Secretary** | : | Mr. S. Thavajothi | |
| **Sports Secretary** | : | Mr.G. Kiritharan | |
| **IT Officer** | : | Mr. C. Kaspathy | |
| **Committee Members** | : | Mr. S. Suman<br>Mr. A. Sritharan<br>Mr. G. Sureshkumar<br>Mrs. S. Sureshanandan<br>Mr. V. Sayanthan | Mr. S. Ragavan<br>Mr. P. Selvarajah<br>Mr. P. Hariharanathan<br>Mr. S. Thanushananthan |
| **Honorary Auditor** | : | Mr. S. Sugumar | |

## Bt/Shivananda Vidyalaya - Old Students Association Canada Branch

| | | |
|---|---|---|
| **President** | : | Mr. S. Sivapakkiyarajah |
| **Vice President** | : | Mr. S. Navaneethan |
| **Secretary** | : | Mr. T. Vasanthakumar |
| **Assistant Secretary** | : | Mr. K. Chandran |
| **Treasurer** | : | Mr. S. Nithiyanandarajah |
| **Assistant Treasurer** | : | Mrs. T. Karunailingam |
| **Committee Members** | : | Mr. V. Vaheesan<br>Mr. K. Karunailingam<br>Mr. N. Anuratharan<br>Mr.P. Vijayakumar<br>Mr. K. Thangavadivel<br>Mr. P. Kamalanathan<br>Mrs. S. Alakuthaurai<br>Mr. V. Sivasegaram<br>Mr. T. Kamalachandram |

## Bt/Shivananda Vidyalaya - Old Students Association Australia Branch

| | | |
|---|---|---|
| **President** | : | Mr. S. Silvester |
| **Vice President** | : | Mr. K. Ramaiyah |
| **Secretary** | : | Mr M. Muththaiyah |
| **Treasurer** | : | Mr. S. Srineelavannan |
| **Assistant Treasurer** | : | Mr. M. Rukman |
| **Adviser** | : | Mr. J. Meharajah |
| **Committee Members** | : | Mr. K. Jana Balachandran<br>Mr. T. Mahendran |

## Special Awards - Grade 5 Scholarship Results - 2010

| | |
|---|---|
| 1) N. Sorupan | 176 |
| 2) P. Anuragan | 174 |
| 3) J. Thatparan | 168 |
| 4) P. Lingotpavan | 164 |
| 5) S. Prathees | 161 |
| 6) G. Thamilkumaran | 149 |
| 7) M. Harushraj | 149 |
| 8) K. Sarvaloshanan | 147 |
| 9) S. Jathimenan | 147 |
| 10) P. Mayuran | 146 |
| 11) S. Sajeev | 143 |
| 12) S. Hishan | 143 |

## Best Result in G.C.E.O/L - 2010 Tamil Medium

1) Kunasegaram Manokanth - 8A 1C

## Best Result in G.C.E.O/L - 2010 English Medium

1) Panchatcharam Kokulathas - 5A 1B 2C 1S

## Best Result in G.C.E.A/L - 2010

| | | | | |
|---|---|---|---|---|
| **Physical Science** | Pooranakumar Anojan | 1B | 2C | |
| **Bio Science** | Kopalapillai Gowthaman | 2B | 1C | |
| **Commerce** | Kamalendran Chandrakumar | 2A | 1B | |
| **Arts** | Mokanasingam Kokulamuralitharan | 1A | 1B | 1C |

## University Entrance - 2010

| | | |
|---|---|---|
| **Quantity Surveyring** | - | Pooranakumar Anojan |
| **Computer Science** | - | Kanapathypillai Suwarnakumar |
| **Physical Science** | - | Senaratnam Gowthaman<br>Tharmalingam Mayuran<br>Sinnathamby Arultharan |
| **Bio Science** | - | Kopalapillai Gowthaman |
| **Management** | - | Kamalendran Chandrakumar<br>Thurayappa Dirojan<br>Aarumugam Dimaleshwaran<br>Sithamparapillai Krishnakumar<br>Pathmanathan Nitharshan |
| **Arts** | - | Pakiyarajah Rupanithan<br>Yogarajah Dineshkumar |

## Special Awards - Grade 5 Scholarship Results - 2011

| | |
|---|---|
| 1) Sivalingam Dakshan | 173 |
| 2) Pathmanathan Sajimithan | 172 |
| 3) Krishnamoorthy Ajeeinthira | 171 |
| 4) Shanthalingam Tharicsan | 170 |
| 5) Jawferhan Jumailahamed | 170 |
| 6) Loganathan Kopimenan | 169 |
| 7) Supramaniyam Nithushagan | 165 |
| 8) Pathmanathan Asath | 165 |
| 9) Jayakunar Tharmeeghan | 165 |
| 10) Ekalaivan Radsaran | 163 |

## Best Result in G.C.E.O/L - 2011 Tamil Medium

| | | | | |
|---|---|---|---|---|
| 1) Nagalingam Rajeevan | - | 9A | | |
| 2) Manickaretnam Subanhithan | - | 8A | 1B | |
| 3) Thevarasa Lingajanan | - | 8A | 1C | |
| 4) Thamilvanan Pranavan | - | 8A | 1C | |
| 5) Prabakaran Mithusan | - | 7A | 2B | |
| 6) Mekanathan Praveen | - | 7A | 2B | |
| 7) Ponnampalam Nivojan | - | 7A | 1B | 1C |

## Best Result in G.C.E.O/L - 2011 English Medium

| | | | |
|---|---|---|---|
| 1) Keerthinathan Brunthan | - | 8A | 1C |
| 2) Paskaran Sathees | - | 7A | 2B |

# G.C.E.O/L - Analysis

## G.C.E.O/L - 2010 Tamil Medium

| Subject | No. Sat. | % |
|---|---|---|
| Saivasim | 136 | 98 |
| R.C | – | – |
| N.R.C | – | – |
| Islam | – | – |
| Tamil Lang. | 136 | 93 |
| English | 136 | 38 |
| Science | 136 | 89 |
| Maths | 136 | 79 |
| History | 136 | 95 |
| Tamil Lit. | 57 | 79 |
| Drama & Theatre | 47 | 100 |
| Music | 5 | 80 |
| Art | 10 | 100 |
| Agriculture | 57 | 100 |
| Commerce | 45 | 89 |
| Building Cons. | 10 | 100 |
| ICT | 12 | 92 |
| Developing Studies | 5 | 100 |
| Health & Phy. Edu. | 53 | 100 |
| Geography | 19 | 95 |
| Civics | 72 | 97 |

## G.C.E.O/L - 2011 Tamil Medium

| Subject | No. Sat | % |
|---|---|---|
| Saivasim | 117 | 100 |
| N R C | 7 | 100 |
| RC | 5 | 60 |
| Islam | 3 | 100 |
| Tamil | 133 | 87 |
| English | 133 | 53 |
| Science | 133 | 83 |
| Maths | 133 | 67 |
| History | 1334 | 86 |
| Commerce | 38 | 76 |
| Civics | 88 | 94 |
| Geography | 66 | 100 |
| Music | 7 | 85 |
| Art | 20 | 95 |
| Tamil Lit | 26 | 77 |
| Drama | 67 | 100 |
| I C T | 14 | 93 |
| Agriculture | 63 | 88 |
| Designed & Tech. | 20 | 90 |
| Health Science | 36 | 100 |

## G.C.E.O/L - 2010 English Medium

| Subject | No. Sat | % |
|---|---|---|
| Saivasim | 9 | 100 |
| Tamil | 9 | 100 |
| English | 9 | 100 |
| Science | 9 | 100 |
| Maths | 9 | 100 |
| History | 9 | 100 |
| Commerce | 9 | 100 |
| Tamil Lit. | 2 | 100 |
| English Lit. | 7 | 43 |
| Health cience | 2 | 100 |
| ICT | 7 | 100 |

## G.C.E.O/L - 2011 English Medium

| Subject | No. Sat | % |
|---|---|---|
| Religion | 12 | 100 |
| Islam | 1 | 100 |
| Tamil | 13 | 100 |
| English | 13 | 100 |
| Science | 13 | 100 |
| Maths | 13 | 92 |
| History | 13 | 100 |
| Commerce | 10 | 90 |
| Geography | 1 | 100 |
| Civics | 2 | 100 |
| Tamil Lit. | 6 | 100 |
| English Lit. | 4 | 75 |
| Drama | 3 | 100 |
| Health Science | 10 | 100 |
| I C T | 3 | 100 |

# G.C.E.A/L - Analysis

## G.C.E.A/L - 2010

| Subject | No. Sat | % |
|---|---|---|
| Physics | 39 | 46 |
| Chemistry | 40 | 50 |
| Agriculture Science | 2 | 50 |
| Biology | 23 | 57 |
| Combained Maths | 18 | 50 |
| Economics | 55 | 7 |
| Geography | 10 | 80 |
| Political Science | 16 | 81 |
| Logic & Scientific Method | 39 | 72 |
| Business Studies | 54 | 78 |
| Accounting | 55 | 60 |
| Hindusim | 9 | 78 |
| Art | 1 | 100 |
| Drama & Theatre | 30 | 97 |
| Tamil | 38 | 74 |
| English | 136 | 9 |

## G.C.E.A/L - 2011

| Subject | No. Sat | % |
|---|---|---|
| Physics | 56 | 64% |
| Agriculture | 1 | – |
| Chemistry | 57 | 55% |
| Biology | 21 | 80% |
| Combained Maths | 36 | 58% |
| Economics | 55 | 88% |
| Geography | 22 | 71% |
| Political Science | 36 | 67% |
| Logic | 55 | 83% |
| Business Studies | 55 | 82% |
| Accounting | 55 | 41% |
| Hindusim | 10 | 100% |
| Hindu Civilization | 5 | 100% |
| Art | 2 | 100% |
| Dance | 1 | 100% |
| Drama & Theatre | 27 | 100% |
| Tamil | 44 | 57% |
| General English | 178 | 13% |


# Year 5 Scholarship Examination - 2012

| Student's Name | Marks |
|---|---|
| 1) Kirupaharan Sanjay | 180 |
| 2) Ahilen Sureshkanth | 178 |
| 3) Ambiharathinam Sahithyan | 176 |
| 4) Ravichandran Kapilan | 174 |
| 5) Gobinath Thivshath | 174 |
| 6) Mahenthiranathan Dinoj | 170 |
| 7) Jeyakantharajh Koshikan | 166 |
| 8) Sathiyamoorthy Mokeethan | 165 |
| 9) Rajenthiran Shanojan | 164 |
| 10) Chandrakumar Harishihan | 163 |
| 11) Parameswaran Rameshkanth | 157 |
| 12) Puvanesasingam Janansajan | 157 |
| 13) Ravichandran Ragunth | 157 |
| 14) Ravianandan Kirisshoban | 157 |
| 15) Sathananthanmoorthy Ganadshathan | 156 |
| 16) Kanakaraja Ajeethkumar | 155 |
| 17) Muhamed Fareed Muhamad Akram | 154 |
| 18) Pathmasri Tishansan | 153 |
| 19) Sriharan Lirugshigan | 153 |
| 20) Uruthiramoorthy Shanuskar | 151 |
| 21) Balachandran Shopithan | 150 |
| 22) Sivakumar Kowtham | 147 |



மாணவர் தலைவர்கள்

பாண்ட் வாத்தியக்
குழுவினர்





சாரணர் இயக்கக்
குழுவினர்

குருளைச் சாரணர்
குழுவினர்




# பாடசாலையின் நிகழ்வுகள்

பரிசளிப்பு விழா - 2011



இரத்த தான நிகழ்வின்போது




சரஸ்வதி ஆலய கும்பாபிஷேகத்தின் போது






புதிய அதிபரின்
வருகையும்
பழைய அதிபரின்
பிரியாவிடையின்
போது



2012ம் ஆண்டு
உயர்தர பிரிவு
மாணவர்களின்
பிரியாவிடையின்
போது



தாபகர் தினம் 2012

# ஆசிரியர்தின விழா - 2012













# விளையாட்டுத் துறையில் ஈட்டிய சாதனைகள் 2011 - 2012



கிரிக்கட்
குழுவினர்கள்
15 வயதினர்

உதைபந்தாட்டக்
குழுவினர்கள்
17 வயதினர்





உதைபந்தாட்டக்
குழுவினர்கள்
19 வயதினர்



மல்யுத்த வீரர்கள்
19 வயதினர்



கராத்தே குழுவினர்
15 - 17 வயதினர்



மேசைப்பந்து
19 வயதிட்குட்பட்ட
அணியினர்



கூடைப்பந்து
19 வயதிட்குட்பட்ட
அணியினர்

# நன்றி நவிலல்

இவ்விதழ் சிறப்பான முறையில் வெளிவர ஆசிச் செய்தியை வழங்கிய கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் தலைவர் சுவாமி கபாலீஸானந்தா ஜீ மகராஜ் அவர்களுக்கும்,

சிவாநந்த வித்தியாலய சரஸ்வதி ஆலய பிரதம குரு சோ. கிரிதர்ம சர்மா அவர்களுக்கும், வாழ்த்துச் செய்திகளை வழங்கிய கௌரவ மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (பா.உ) அவர்களுக்கும், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. A.M.E. போல் அவர்களுக்கும், வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. S. பவளகாந்தன் அவர்களுக்கும், கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. க. டேவிட் அவர்களுக்கும், பாடசாலை பழைய மாணவ மன்றத்தின் அனைத்துக் கிளையினருக்கும், ஸ்ரீ சித்தி விநாயகர் பேச்சியம்மன் ஆலய தலைவர் திரு. தி. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களுக்கும்,

நீண்ட இடைவெளியின் பின்பு இச்சஞ்சிகையின் தோற்றத்திற்கு ஆக்கமும், ஊக்கமும், ஒத்தாசையும் நல்கிய அதிபர் திரு. க. மனோராஜ் அவர்களுக்கும், பிரதி அதிபர் திரு. ச. தயாபரன் அவர்களுக்கும்,

மலர் சிறப்பான முறையில் வெளிவர திருத்தங்களை மேற்கொண்டு உதவியும், ஆலோசனையும் புரிந்த சிரேஸ்ட ஆசிரியர்களான திருமதி. H. நவரெட்ணம், திருமதி. C.A. ஜெபரெட்ணம், செல்வி. L.M. பாத்லட், திரு. S. மணிவண்ணன் அவர்களுக்கும், அட்டைப்படம் வரைந்த ஆசிரியர் திரு. S. சுதாரதன் அவர்களுக்கும், கணனி வடிவமைப்புச் செய்த திருமதி. P. வரதகுமார், திரு. M. அகிலேஸ்வரனுக்கும், ஏனைய மலர்க்குழு உறுப்பினர்களுக்கும்,

ஆக்கங்களைத் தந்துதவிய மாணவர், ஆசிரியர்களுக்கும் தமது வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் சிரமம் பாராது பெறுமதி வாய்ந்த கட்டுரைகளை வழங்கிய வைத்திய நிபுணர்களுக்கும், பேராசிரியர்களுக்கும், கல்விமான்களுக்கும்,

இந்த இதழ் 4 வெளிவர எங்களுக்கு முகம் சுளிக்காது நிதி உதவியினை அள்ளி வழங்கிய பழைய மாணவர் மன்ற கிளையினருக்கும்,


இந்த சஞ்சிகையினை அழகுற அச்சுப்பதித்துத் தந்த "எவகிறீன்" அச்சகத்தினருக்கும்

எமது இதயபூர்வமான நன்றிகளைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

Mr. K. MANORAJ
Principal
BT/ Shivananda Vidyalaya
(National School)
Kallady-Uppodai
Batticaloa.

Mr.K.MAN RAJ
Principal
BT/ Shivananda Vidyalaya
(National School)
Kallady-Uppodai
Batticaloa.



Evergreen Printers , Batticaloa. 065-2222607